நச்ச வளையம்



தமிழண்ண

அன்புடன்,
தமிழண்ணல்
23.4.82.

நச்சு வளையம்

தமிழக அரசின் பரிசு
பெற்றது

தமிழண்ணல்

சோலை நூலகம்

சதாசிவநகர் ○ மதுரை - 625020

முதற்பதிப்பு: சூன் 1979
உரிமை செறிவு
© தமிழண்ணல்

நச்சு வளையம்
(The Vicious Circle)
by
Thamizhannal
Dr. Rm. Periakaruppan
Madurai Kamaraj University
Madurai—625021

விலை ரூ. 10

Published by:
Solai Noolagam
Sadasivanagar, Madurai 625020

அச்சும் அமைப்பும்
அகரம்
2 சிவன்கோவில் தெற்குத் தெரு
சிவகங்கை 623560

தற்சிறப்புப் பாயிரம்

பாயிரமே எதற்கென வினவுபவன் தற்சிறப்புப் பாயிரத்தை எழுதுகிறேன். ஆம், இங்கு அது தேவைப்படுகிறது. அதனுல் எழுதுகிறேன். இனிய நண்பர்கள் சிலர் 'நீங்கள் நாவல் எழுதும்போது அவரைப்போல் எழுதவில்லையே; இவரைப் போல் எழுதவில்லையே, என்று கேட்கிருர்கள். நன்றி! நான் என்னைப் போல் எழுதுவதைத்தான் விரும்புகிறேன். அதை இனங்கண்டு கொள்ள வைத்திருந்தேனென்ருல் அது எனக்குப் போதுமானது.

'வாழ்வரசி'யைப் படித்த பலரும் அதன் கதைகூறும் போக்கைப் பெரிதும் ஏற்றனர். சுவை குன்ருமல், எடுத்த புத்தகத்தை வைக்க விடாமல், விறுவிறுப்போடு கதை செல்வதாகக் கூறினுர்கள். அத் திறனை இதிலும் கையாண்டுள்ளேன், சற்று வித்தியாசத்தோடு! இதில் தத்துவத்தை விட்டு நான் விலக விரும்பாததால், கருத்தை நோக்கிய கடினம் சிறிது தோன்றும். ஆனுலும் கதைப் போக்கைக் கட்டமைப்போடு, விறுவிறுப்புக் குறையாமல் கொண்டு சென்றிருப்பதால், சுவையை நோக்கிய இனிமையும் தோன்றும்!

'இன்னும் எளிமையாக எழுத வேண்டும்' என்கிருர்கள். சற்றே உயர்ந்த நடையென்று மதிப்பீடு செய்கிருர்கள். என வாசகர்கள் என்னைத் தொட்டு வரக்கூடியவர்களே என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது!

ஆங்கில நாவல்களை இவர்கள் படித்ததில்லைப் போலும்! அங்கு உயர்ந்த நாவல்களெல்லாம் ஒரே நடையில் அமைந்தவையல்ல. சில நாவல்கள் அவை சொல்லும் கருத்து வளத்தினாலேயே உலகப்புகழ் பெற்றுள்ளன. அங்கெல்லாம் 'நாவல் வகை'கள் பல்கியுள்ளன. ஒவ்வொன்றையும் ஒவ்வொன்றிற்காக ஏதேனும் அதிலமைந்துள்ள ஒரு சிறப்பிற்காக உலகம் ஏற்கிறது. என்னுடைய நாவல்கள் தமிழில் ஒரு 'வகைமை'யைத் தோற்றுவிக்க வல்லனவாயின் எனக்கது மகிழ்ச்சி தரும்.

'நச்சுவளையம்' முழுக்க முழுக்க ஒரு தத்துவ நாவல். ஒரு சித்தாந்தத்தைக் கதையாகச் சொல்வது மிக மிகக் கடினம். அதிலும் சுவையான கதையாகச் சொல்வது அதைவிடக் கடினம். விறுவிறுப்புக் குன்றாமல் சுவையோடு இக் கதையை நடத்தியிருக்கிறேன். கதையை முடிக்கும்போது ஒரு செய்தியை (message) உங்களுக்கும் எனக்கும் இந்த உலகத்திற்கும் இன்று இந்த வேளையில், இக் கணத்தில் இன்றியமையாது தேவைப்படும் ஒரே ஒரு செய்தியை — இனிமையோடு காதோடு காதாக, கருத்தோடு கருத்தாக, நுட்பமாக, அடிமனத்தில் இழையோடிப் புரியும் படியாகச் சொல்லியுள்ளேன்.

சைவசித்தாந்தத்தில் 'வினைக்கோட்பாடு' பற்றிய கருத்துக்கள் ஓர் அறிவியற்கோட்பாடனையன. சைவப் பெரியோர்கள் க. வச்சிரவேலு முதலியாரும் முரு. பழ. இரத்தினம் செட்டியாரும் எழுதிய நூல்களைக் கற்றும் அவர்களுடைய பேச்சுக்களைக் கேட்டும் என் மனங்கொண்டவை இவண் கதையுருப்பெற்றுள்ளன.

'செலச்சொல்லுதல்', 'உணர விரித்துரைத்தல்' என்ற திருக்குறட் தொடர்களுக்கு ஒப்ப, வினைக் கோட்பாட்டைப் படிப்பவர் மனம் தானே உள்முகமாக உணர வைத்துள்ளேன்.

> வினையை மாற்றவோ, மறைக்கவோ, அகற்றவோ முடியாது. வினை ஒவ்வொன்றுக்கும் நிச்சயமாக விளைவொன்றுண்டு. எங்கேனும் ஏதேனும் விளை வொன்று கண்டால், அதன் விதையொன்று எங் கேனும் இருந்திருக்கத்தான் வேண்டும்.

அழுத்தம் திருத்தமாகச் சொல்லியுள்ளேன் இதனை. அதனால் 'எதையும் சிந்தித்துச் செயற்பட, நல்லதை நாட' ஒரு மனப் போக்கு ஏற்படுதற்கு இக் கதை இங்கு வித்திடுகிறது!

சொல்லவேண்டிய ஒன்றைச் சொல்ல வேண்டிய முறைப்படி சொல்ல வேண்டிய அளவிற்குச் சொல்லியாக வேண்டும் என் பது என் அவா. அம் முயற்சியை இந் நூலிற் காணலாம்.

திருமுருகாற்றுப் படையை இயல்தோறும் தலைப்பில் பயன் படுத்தியுள்ளேன்.

திருக்குறளும் பகவத்கீதையும் திருமுறைகளும் சிவஞானபோத மும் அதன் விரிவுரையும் ஆங்காங்குக் கைகோத்துதவியுள்ளன.

தவிர்க்க முடியாத காரணத்தால், சிற்சில எழுத்துப் பிழைகள் நேர்ந்துவிட்டன. என்றாலும் கதைப்போக்குத் தடைப்படவில்லை என்பதைக் கூறித் தங்களின் பொறுமையை வேண்டுகிறேன்.

ஹெர்மன் ஹெஸ்ஸேயின் *சித்தார்த்தா*வைப் படித்த காலம் முதல், இத்தகைய தத்துவ நாவல் புனையும் ஆர்வம் என்னுள் முண்டதுண்டு.

அங்கு சித்தார்த்தன் பிறிதொரு தத்துவத்தைப் படிக்கிறான், அத் தத்துவத்திற்காக வாழ்கிறான். அது வேறு.

இங்கு சரவணர் தம் வாழ்வாலும் வாக்காலும் ஒரு மெய்ப் பொருளுண்மையை மிகத் துல்லியமாக, மிகத் தெளிவாக வெளிப்படுத்துகிறார். சொல்லும் முறையில் அதனிலும் இங்கு வளர்ச்சிநிலையுண்டு.

அரிதாகக் காணப்படும் ஆற்றல்மிக்கவர்களில் ஒருவர் சரவண அடிகள்; அன்றாடம் காணப்படுபவர்களுள் ஒருவன் ஆண்டி. பால் திரிந்ததும் புழைக்கடையில் கழுநீர்ப் பானையில் கொட்டப் படுவது போல், வாழ்வை இழந்தவள் பொற்கொடி; குளிர் சாதனப் பெட்டியில் வைத்துப் பாதுகாக்கப்படும் ஆவின்பால் அனையவள் மலர்க்கொடி. உலகை வளைத்து உலையிற்போடு பவன் நல்லுசாமி; ஒரு நன்றியை உயிருள்ளவரை மறவாதவர் பூவண்ணர். இப்படி எத்தனையோ மாந்தர்களை நீங்கள் இக் கதையில் சந்திக்க இருக்கிறீர்கள். அவர்களை ஒரு காரியத்திற் காக (purpose) உங்களுக்கு அறிமுகப் படுத்துகிறேன்; பொழுதுபோக்கிற்காக அன்று!

மதுரை-20
27-5-79

தமிழண்ணல்

ஒன்று:

பயிர்

''பார்முதிர் பனிக்கடல் கலங்கஉள் புக்குச்
சூர்முதல் தடிந்த சுடரிலே நெடுவேல்''

1

காவிரிக் கரையோரம் மாலே நேரத்துச் சூரிய ஒளியால் பொன்னிறம் பெற்றுத் திகழ்ந்தது. வானமெங்கும் பொன்னே உருக்கித் தண்ணீராக ஓடவிட்டிருந்தது.

தலே நீட்டி நிமிர்ந்து நின்ற பன்னீர்மரங்களிலிருந்து மல ரம்புகள் நான்கு திசைகளிலும் பறந்துகொண்டிருந்தன. தழல் போன்ற ஒளிக்கீற்றுகள், சுற்றுப்புறமனைத்தையும் குருதிச் சிவப்பாக்கிவிட்டன.

சரவண அடிகளார் என்ற காசிச் சாமிகள் கரையோரமாக மாலே நடைக்கென வந்தவர், அன்று தம்மை மறந்து சற்றுத்தூரம் தள்ளியே வந்துவிட்டார். அங்கிருந்த சிறு பாறைமேல் ஏறி அமர்ந்திருந்த அடிகளார் கண்களே மூடித் தியானத்தில் ஆழ்ந்தார். தலேப்பாகை ஒன்றை வைத்துவிட்டால் அக்காட்சி விவேகானந்தரைப் பார்த் தது போலவே இருக்கும். வழக்கமாக ஓதுகின்ற திருமுரு காற்றுப் படையை மனத்திற்குள் சொல்லத் தொடங்கி ஞர். திருப்பரங்குன்றப் பகுதியில் மனம் இலயித்து நின் றது. 'நன்னர் நெஞ்சத்து இன்னசை வாய்ப்ப, இன்னே

பெறுதிநீ முன்னிய வினையே' என்று மனம் ஓடிக்கொண்டிருந்தது. இடையில், மூடிய கண்களை அவர் சற்றே முகிழ்த்தபோது, ஒளியை இருள் கவ்வத் தொடங்கியிருந்தது. மாலைப்பொழுது புறமுதுகு காட்டிவிட்டது; இரவு வெற்றிநடையிடத்தொடங்கியது.

...சரவணர் சுற்றுமுற்றும் காணப்பட்ட இயற்கை அழகில் தம்மை ஈடுபடுத்துகிறார். இரவு நேரத்தில் வயலிலுள்ள தாமரை மலர்களில் தங்கியிருந்து புறப்பட்ட வண்டுகள் வைகறையில் நெய்தற்பூக்களில் தேனுண்டு, விடியற் காலத்தே மலர்ந்த சுனைப்பூக்களில் ரீங்காரம் செய்யும் காட்சி திருப்பரங்குன்றப் பகுதியில் வருகிறதல்லவா? திருமுருகாற்றுப் படையின் அப்பகுதி, அப்போது அவர் நினைவில் ஓடுகிறது. காவிரிக்கரை நெடுகிலும் கண்களைச் சுழற்றிப் பார்க்கிறார். எத்தனை செடிகள்? எத்தனை மரங்கள்? எண்ணத் தொலையாத வண்ணமலர்கள்! அந்த மலர்களைப் பார்க்கும் போதெல்லாம் 'முள்தாள் தாமரை', 'கள் கமழ் நெய்தல்', 'கண்போல் மலர்ந்த காமர் சுனைமலர்', என்ற முருகாற்றுப்படை வருணனையோடு, அவர் நினைவு இழையோடுகிறது! 'அஞ்சிறை வண்டின் அரிக்கணத்து ஒலியில்' அவர் பரங்குன்றச் சூழலை மனத்திற்குள் உணர்கிறார். அவர் சிந்தனை சுழல்கிறது... "இந்த மண்மடந்தைக்குத்தான் எவ்வளவு ஆற்றல்? எத்துணை திறமை? தன்னுள்ளிருந்து ஒவ்வொரு விதையையும் கிளையையும் கருவுயிர்க்கும் அழகைப் பார்த்தால் இவள்தான் கண்கண்ட கற்பகமோ, காமதேனுவோ, அமுதசுரபியோ என்று நினைக்கத் தோன்றுகிறது. இவளிடமும் ஒரு நியதி, ஓர் ஒழுங்குமுறை இருக்கிறது. அவரை போட்டால் அவரையைத் தருகிறாள்; துவரை போட்டால் துவரையைத் தருகிறாள். மாற்றுவதே இல்லை. விதையை ஒரு மனிதன்தான் விதைக்கின்றான். ஆனாலும் விதையை அவனா விளைவிக்கின்றான். அவனால் முடியுமா? அதைச் செய்பவள் நிலமகளே. அவன் உழைப்பின் அளவுக்கும் திறமைக்கும் ஏற்ப அவள் பயன்தருகின்றாள் என்பதுதான் உண்மை".

சுற்றுப்புறத்தை இங்ஙனம் வளையவந்த சரவணர் பார்வை அடிவானத்தைத் தொட்டு, மேல்நோக்கி நிமிர்கிறது. "கன்னங்கரிய முகில்கள் அங்கே! கணக்கற்ற வடிவங்களாய்க் கணத்திற்குக் கணம் மாறிக்கொண்டும் இடம் பெயர்ந்துகொண்டும் இருக்கின்றன. அவை காற்றுயிர் கொண்டு மேற்றிசை நோக்கி அசைந்தாடுகின்றன!''

அடுத்த கணம் சரவணர் பார்வை எதிரே ஓடிய நீரோட்டத்தில் விழுகிறது. "காவிரி ஓடிக்கொண்டேயிருக்கிறது. நீரோட்டம்தானே அதற்கு உயிர். மனிதனுக்கு உடலில் உயிர் ஓடிக் கொண்டிருப்பது போல, 'ஜீவநதி'களிலும் நீர் ஓடிக்கொண்டிருக்கிறது! சின்னச் சின்னக் கிளை நதிகளின் நீர்கள், ஊற்று நீர், மழைநீர் எல்லாமே அதில் உண்டு. கரையோரத்தில் நுரையிருக்கும்; மக்கள் பயன் படுத்துவதால் கலங்கியும் இருக்கும். நடுவே ஓடும் நீரில் தெளிவிருக்கும்; அமைதியுமிருக்கும். கடல், குளம், ஆறு, ஏரி, கண்மாய், கிணறு என எத்தனை வடிவங்கள் இந்த நீருக்கு? குமிழி, சுழி, அலை, துளி, திவலை என எத்தனை பிறவிகள் இதற்கு? அமைதி, இரைச்சல், அழகு, ஆற்றல் எல்லாம் உண்டு அதிலே! எப்போதும் ஒரு விரைவு; முடிவை நோக்கிய வேகம், ஓடுகிற தண்ணீரிலே காணும் வேறுபாடுகள் போன்றவைதான், மனித வாழ்க்கையில் காணும் வேறுபாடுகளும்! பணக்காரன், ஏழை; படித்தவன், முட்டாள்; உயர்ந்தவன், தாழ்ந்தவன் இப்படி எத்தனையோ வேறுபாடுகள்? ஆனாலும் கடைசியில் முடிவென்ன? எல்லாம் ஓடுகின்றநீரின் கதைதான். அப்பப்பா, மனிதன் நினைத்தால், ஓர் ஊழிக்கால மனித வாழ்வை, ஒரு மணி நேர நீரோட்டத்தில் கண்டு தெளியலாம்.''

சரவண அடிகளார் நினைவு, ஆற்று வெள்ளத்தோடு இங்ஙனம் இணைந்து கரைந்து கலந்து ஓடுகிற வேளையில்... ''அதோ! காவிரியின் கரைமேலே...சற்றே ஒதுங்கி நிழல்போல ஒரு பெண்ணின் உருவம் தெரிகிறதே! அது ஏன் தண்ணீரில் தாவுகிறது? தற்கொலை முயற்சியா?

சாகப் போகிருளா? இவ்வளவு சேய்மையில், தனிமையில், இருள் சூழ்ந்த சமயத்தில் எகிறிக் குதிக்கிருளே? அடபாவமே!'' ...அடிகளார் திடுக்கிட்டு எழுகிருர். அவர் உள்ளத்தில் பேரதிர்ச்சி விழுகிறது. உடல் நடுநடுங்குகிறது. யாரோ சம்மட்டி வைத்து அவர் அடிமனத்தில் தாக்கித் தகர்ப்பதுபோல் ஓர் உணர்வு. தாங்க முடியாத மனச்சுமையையும் வலியையும் தாங்கிக்கொண்டு சரவணர் ஆற்றை நோக்கி ஓடுகிருர்.

○

கரையை ஒட்டி ஒரு விளக்குக் கம்பத்தருகே, தன் உயிருக்குப் போராடிக்கொண்டிருக்கும் சிறு மின்விளக்கு ஒளியின் கீழ் அப்பெண்ணைக் கொண்டு வந்து தரையில் படுக்க வைத்தார் சரவணர். நல்ல வேளையாக உயிருக்கு எதுவும் ஆபத்து நேர்ந்துவிடவில்லை. அவர் தொப்பு தொப்பென்று நனைந்துவிட்டிருந்தார். அப்பெண் கிடந்த இடத்தைச் சுற்றிச் சிறு கூட்டம் கூடிவிட்டது.

அவள் விழுந்தவுடன் பாய்ந்தோடி வெள்ளத்தில் குதித்தார் அவர். தம்மை நோக்கி ஓடிவரும் வெள்ளத்தில் மிதந்து வந்த அவளைத் தக்க சமயத்தில் தூக்கிக் காப்பாற்றி விட்டார். அங்குக் கூடிநின்ற மக்கள் அவரைச் சற்று வியப்புடன் நோக்கினர். ''இந்த சாமிக்கு நல்லா நீஞ்சத் தெரியும்போலிருக்கு. தண்ணியில் நல்லபழக்கமா இருக்கும். இல்லாட்டி முடியுமா? சமயம் பார்த்து, எப்படிப் பாஞ்சு காப்பாத்திஞர்? கொஞ்சம் தப்பியிருந்தால் பிணங்கூடவில்லை ஆப்பிட்டிருக்காது!"—இவ்வாறு அவர்களில் சிலர் பேசிக்கொண்டனர். பசளைக் கொடிபோல் நெளிந்த அப்பெண் சிறிது பருமனைக் காணப்பட்டாள். ஏதோ காவிரியில் தலை முழுகிவிட்டு வந்தவள்போல் கிடந்தாள். அங்கு நின்றவர்கள் தம்மால் இயன்றவரை முதலுதவி செய்தனர். அவள் உடலில் ஆங்காங்கு சிறு சிறு சிராய்ப்புக் காயங்கள் இருந்தாலும், வேறென்றும் அஞ்சும்படியாக எதுவும் ஆகிவிடவில்லை.

அடிகள் நல்ல உடற்கட்டோடு காணப்பட்டார். சிறிது வயதான தோற்றம் இழையோடினுலும் நல்ல முகக்களை யுடன் திகழ்ந்தார். முகத்திலும் நெற்றியிலும் அழுத்த மாக விழுந்து கிடந்த அம்மைத் தழும்புகள் பொன்னிறத் திற்கு ஆங்காங்கு பழுப்புநிறப் பொட்டு வைத்ததுபோல் பரவிக் கிடந்தன. கருகருவென வளர்ந்து வெண்ணிறக் கோடு தவழ்ந்ததாடி, அம்மைத்தழும்புகளை மறைத்து ஒரு பெருமிதத்தோற்றத்தை நல்கியது. நெற்றிப்புருவங்களில் புதர் போன்ற மயிரடர்த்தி, தோளைத் தொட்டுச் சுருள் சுருளாகதொங்கும் தலைமுடி, கூர்மையான நீண்ட மூக்கு, துருவும்விழிகள், வணங்கத்தூண்டும் நெடிய பெரிய உரு வம்! முழுவதும் நனைந்தும் துவட்டிக்கொள்ளும் நினைப் பின்றியே, சற்றுஒதுங்கி நின்று கொண்டிருந்த அடிகளை மக்கள் வியப்போடும் பயபக்தியோடும் திரும்பித் திரும் பிப் பார்த்துக் கொண்டிருந்தனர். "என்ன இருந்தாலும் துணிச்சக்காரரு இவரு. இந்த வயசிலே ஓடுற வெள் ளத்திலே குதிச்சு ஒரு உசிரைக் காப்பாத்திட்டாரே! நடுக் கிற குளிர் அதிகமா இருக்குது. அதான் ஒரு மாதிரியா இருக்காரு?'' என்று அவர்கள் தமக்குள் முணுமுணுத்துக் கொண்டார்கள்.

○

...சரவணர் தம் எதிரே இருட்படலம் உலகையே வளைத் துக் கிடப்பதைக் காண்கிருர். மனம் சுழன்று சுழன்று அந்தக் காலத்து நினைவுகளிலேயே வளைய வருகிறது. பிறந்ததிலிருந்து முப்பதைந்து ஆண்டுகளுக்குமேல்— வெளிநாட்டிற்குப் படிக்கப் போயிருந்த ஐந்தாண்டுகள் தவிர—அவர் இந்த ஊரிலேயே பழமும் தின்று கொட் டையும் போட்டவர். அவர் இங்குச் செய்யாத பாவங்கள் ஏதாவது உண்டா? இப்போதோ அவர் அப்பழுக்கற்ற, ஆயிரக்கணக்கானவர்களுக்கு அறவுரை பகர்கிற தூய துறவி. அவர் உள்ளமே அவரை நகையாடுகிறது! புற வெளியில் எங்கெங்கோ கண் சிமிட்டும் சிறுசிறு தாரகை

கள்; ஆங்காங்கு ஒளியுமிழும் சிறுசிறு மின் விளக்குகள். அதுபோல அவர் மனம் என்ற இருட் குகையிலும் பழைய நினைவுகள் என்ற மின்விளக்குகள் எரிந்தெரிந்து அணை கின்றன....

அவர் அச்சப்பட்டுத் தம்மை நோக்கியே அருவருக்க லானார். அவருடைய அடிமனத்தில் முற்கால நிகழ்ச்சிகள் உருண்டோடி வந்து எகிறிப் பாய்ந்தன. சற்றுமுன் வரை, பதினொரு மாதமாகத் திருச்சியில் அவர் பழைய நினைவு எதுவுமின்றியே இருந்து வந்தார். புதிய பிறப்பெடுத்தவர் போல் எவ்விதச் சலனமும் இன்றி வாழ்ந்துவந்தார். இப்போது இந்த நிகழ்ச்சியைக் கண்டதும் அவர் தேள் கொட்டிய திருடன்போல் துடியாய்த் துடித்தார்; வாய் விட்டு அழமுடியவில்லை. எல்லோரும் தம்மை இனங் கண்டுகொண்டால் என்னவது எனத்திகைப்பு ஏற்பட்டு நடுங்கத் தொடங்கினார்.

பட்டுடுத்திப் பொட்டிட்டுப் பூச்சூடி, மாலையிட்டு வந்த மனைவியைக் கட்டித் தூக்கி வந்து, கரையில் நின்று வெள் ளத்தில் வீசி எறியச் செய்துவிட்டு ஊரைவிட்டே ஓடியதும் அதற்குக் காரணமாக இருந்த பழைய நிகழ்ச்சிகளும் முறை மாறி, முன்பின்னாகக் கண்ணெதிரே நிழலாடிக் கொண்டிருந்தன. ''கூடாது ஒரு இம்மியளவு கூட நாம் யாரென்பது யாருக்கும் தெரியக்கூடாது. தெரிந்தால் அதைவிடக் கேவலம் பிறிதில்லை, ஊரே கை கொட்டிச் சிரித்துவிடும். இப்போது உலகம் நமக்குத் தருகிற மதிப் பும் மரியாதையும் ஈடு இணையற்றது. நம் பழைய கதை தெரிந்துவிட்டால், இந்தச்சாமியார் வேடத்தையுமல்லவா உலகம் பழித்துப் பேசும்...கூடாது...கூடவே கூடாது!'' —அடிகள் மனம் ஏதேதோ எண்ணியது; மருண்டது; உருண்டது. அவருக்குத் தம் சொந்த வாழ்வின் நிழல் தம் மீதே படர்வது போன்ற ஒரு நினைவு. எதைவிட்டு விலகி விட்டதாகவும் ஓடிவிட்டதாகவும் எண்ணினாரோ, அதுவே முன்னர் வந்து நிற்பதாக ஒரு தோற்றம். திடீரென்று,

அந்த நிழல் தம்மைத் துரத்தி, ஓடிவந்து தம் காலைக்கவ்வி விட்டதாக ஒரு கற்பனை. கண்களைக் கசக்கிக் கொண்டார்; கால்களை உதறிக் கொண்டார்; கைகளை நெறித்துக் கொண்டார்.

...அடிகள் கணப்பொழுது கண்களை மூடிக்கொள்கிறார். அவர் காலடியிற் கிடந்த நிழல் நீள்கிறது; நீண்டு கொண்டே போகிறது. வானத்துக்கும் பூமிக்குமாக விசுவ ரூபம் எடுக்கிறது. அவர் அதன் எதிரே ஒரு சிறு புழுப் போல, எறும்பு போல நிற்கிறார். பயந்து ஓடுகிறார்; பரக் கப் பரக்க, இளைக்க இளைக்க ஓடுகிறார். ஆனாலும் என்ன பயன்? அவரை அது தன் கையை நீட்டித் தூக்குகிறது. தோளோடு, கழுத்தோடு சேர்த்துப் பிடித்துத் தூக்கிக் கசக்கி நசுக்குகிறது. 'ஐயோ!' என்று அரற்றுகிறார்... இவ் வாறு சரவணர் மனம் அல்லோலகல்லோலப் படுகிறது. என்ன முயன்றும் நினைவை அவரால் மாற்ற முடியவில்லை. அப்பெண் இருக்கும் பக்கமாக ஏறிட்டுப் பார்க்கிறார். அவ ளுக்குச் சூடாகத் தேநீர்வாங்கிக் கொடுத்துக் கொண்டிருக் கிறார்கள். அவளைத் தூக்கிவந்து கரையில் போடும்வரை அவர் ஒரு 'வெறியோடு' செயற்பட்டார். பழைய நினை வில் திகைப்புண்டதனால், அதற்கப்புறம் அவர் ஒதுங்கி நின்று கொண்டார். பலரும் அவளைக் காப்பாற்ற முயன் றதனால்,அவர் எங்கோ படர்ந்த நினைவில் மூழ்கிப்போய்க் கிடந்தார். வெள்ளத்தில் மூழ்கியவளைக் காப்பாற்றிய அவர், பழைய வினைவெள்ளத்தில் மூழ்கித் தத்தளித்துக் கொண்டு, கரையேற மாட்டாமல் தவித்தார். இப்போது அப்பக்கம் திரும்பியதும் அவள் முகம் தெரிந்தது: ''அதே வட்ட முகம்; நேர்வகிடு எடுத்த தழைத்த கூந்தல்; வண்டு போல் சுழலும் வட்டக் கருவிழிகள்; எப்போதும் சிரித்துக் கொண்டிருப்பது போன்ற முகத்தோற்றம்...என்ன இது? அன்று நான் முன்னின்று தூக்கி எறிந்தவளையே, இன்று தோள்மீது சுமந்து வந்தேனா? அவள்தான் என்னைப் பழி வாங்க இப்படிப் பேயாக வந்திருக்கிறாளா? மாலை மங்கிய நேரங்களில் இப்படிப்பேய்கள் நடமாடும் என்பார்களே?''

—அடிகளின் அடிமனத்தில் கல் ஒன்று பலமாக விழுந்து விட்டது. இப்போது அந்த நினைவுக் குளத்தில் வட்டவட் டப் பேரலைகள் தோன்றித்தோன்றி மறைந்தவண்ணம் இருக்கின்றன. அதிலே அவர் மனைவி பொற்கொடி வந்து போகிருள்; மகள் கற்பகவல்லி காட்சி தருகிருள்; மூத்த மகன் கனகசபை தோன்றுகிருன்; அவன் மனைவியும் வரு கிருள்; கடைசி மகன் மாணிக்கம் விளையாடித் திரிகிருன்... திருச்சி... சென்னை... திருச்சி... காசி... எனக் காட்சிகள் மாறி மாறி மறைகின்றன!

சரவணருக்கு 'ஏன் திருச்சிக்கு வந்தோம்?' என்றிருந்தது. காசியிலிருந்தபடியே இமயமலைச் சாரலுக்கும் கயிலாயத் திற்கும் போய் விடுவது என்று முதலில் போட்ட தம் திட் டத்தைப் பிறகு மாற்றிக் கொண்டு, திருச்சிக்கு வந்ததற் காக அவர் மிகவும் வருந்தினர். தமக்கு அம்மை போட்டுச் செத்துப் போய்விட்டதாகவே நிலைமை முற்றி உயிர் பிழைத்த பிற்பாடு, தம்மைப் பார்த்தவர்கள் எல்லாம் 'அடையாளமே தெரியாமல் மாறிப்போய் விட்டதாக'த் தம்மிடம் கேட்டது அவர் நினைவிற்கு வந்தது. அந்த மனத் தைரியத்தில்தான் அவர் திருச்சிக்கு வந்தார். அது போலவே அவரை யாராலும் இனம் கண்டுகொள்ள முடிய வில்லை. ஒரு கடுகளவு கூட அவரை யாரும் சந்தேகப் படவில்லை. இப்போது, எந்தக் காவிரிக்கரையில் ஒரு கொடிய பாவத்தைச் செய்துவிட்டு அவர் ஓடினரோ, அதே கரையில் அவர் தம் பழைய நிழல் படிவதை ஆழ உணர்ந்தார். யாருமே தம்மைக் கண்டு பிடிக்க முடியாத நிலையிலிருந்தாலும், தாம் செய்த வினையே தம்மைத் தேடிக் கண்டு பிடித்து விட்டதோ என எண்ணி அவரது ஆழ்மனம் படாதபாடுபட்டது. அது தம்மைத் தொடர்ந்து வந்துவிட்டது என அவர் மயங்கினர்.

திருமுருகாற்றுப் படையை அவர் நெஞ்சம் ஓதத் தொடங் கியது...... ''உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு, பலர் புகழ் ஞாயிறு கடற் கண்டா அங்கு, ஓஅற இமைக்கும்

சேண்விளங்கு அவிரொளி....'' எப்போதும் சரவணருக்கு ஒரு பழக்கம் உண்டு. வாய் ஓர் அருட்பாவை ஓதிக்கொண்டிருக்கும் பொழுது, மனம் அதில் வரும் காட்சிகளில் ஈடுபட்டு நிற்கும். அதில் உள்ளும் புறமும் ஒன்றித்துப் போவார் அவர். இப்போது அவர் மனக்கண்ணில் உலகளாவிய பேர் ஒளியையும், தாளிணையும், தடக்கையினையும் உடைய தெய்வயானை கணவன்—கார்காலத்துப் பூக்கும் கடம்ப மலர் மாலையணிந்த முருகன்—அடி முதல் முடிவரை அழகுடன் ஆடிப்பாடும் சூரர் மகளிர்—சூரனைத் தடிந்த சுடர்வேல் எல்லாம் வரிசையாக வந்து வந்து மறைந்தன. மனத்திற்கு ஒரு தெம்பு வந்தது. தம்மை யாரும் கண்டுகொள்ள முடியாமலே வாழ்ந்துவிட முடியும். மன உறுதிதான் பெரிது. இன்னும் விழிப்பாக, மேலும் எச்சரிக்கையாகச் செயற்பட்டால் யார், என்ன செய்ய முடியும்? வீண் சலனம் வேண்டாம். இனியும் சில சமயங்களில் குடும்ப விவரம் தெரியவரலாம்; பழைய உறவினர்கள் எதிர்ப் படலாம். அப்போதெல்லாம் பராமுகமாக இருந்து விட்டாற் போகிறது. அவரிடம் ஒரு புத்துணர்வு பொங்கியது. மீண்டும் சரவணர் ஆனார். எழுந்து, அங்கிருந்து புறப்படலாமா என்று சுற்றுமுற்றும் பார்த்தார். கூட்டம் மிகவும் குறைந்திருந்தது. அப்பெண்ணும் எழுந்து நடக்கும் தெம்புடன் காணப்பட்டாள். அவர் நகரை நோக்கி நடக்கத் தொடங்கினார். அவளும் பின் தொடர்ந்தாள்.

மலைக் கோயிலின் மேலே, உச்சிப் பிள்ளையார் கோயிலில் ஒளி வீசிக் கொண்டிருந்த சிறு மின் விளக்குக் கலங்கரை விளக்குப் போல் கைகாட்டிக்கொண்டிருந்தது. இருவரும் ஒருவர் பின் ஒருவராக ஒற்றையடிப் பாதையில் நடந்து, பாலத்தின் அடியில் வந்து, பக்கவாட்டில் மேலே ஏறித் திருச்சி நகர் நோக்கிப் பெரிய பாட்டையில் நடக்கத் தொடங்கினார்கள்.

உள்ளத்தில் கொந்தளித்த ஆர்வத்தை மூடிமறைக்க முயன்ருலும், இட்டளிச் சட்டிக்குள் எழுந்த ஆவிபோல், அது வெளியில் பீறிட்டுவரவே முயன்றது. 'இவ்வளவிற்கு உயிரைக் கொடுத்துக்காப்பாற்றியவர் ஒரு ஆறுதல்கூடச் சொல்லவில்லையே' என்று அப் பெண் நினைத்து விட்டால் என்ன செய்வது? அதனல் சரவணர் ஏதாவது பேசி வைப்போமே என்று வாய் திறந்தார். ''யாரம்மா நீ? இப்படியெல்லாம் நடந்துக்கிறது உன் போன்ற பெண்களுக்கு அழகா?''

''உயர்ந்த குடும்பத்தில் பிறந்தவதான் நான். என் பாட்டனுர் இந்த ஊருக்கே பெரிய மனிதர். நாகலிங்கம் பிள்ளைு ஊரே கையெடுத்துக் கும்பிடும் சிவபுண்ணிய சீலர் அவர். ஆனல் எங்களைப் பெத்தவரும் எங்கம்மாவும்...... அவங்களை நினைச்சாலே அருவருப்பா இருக்குது. இந்தக் காவேரியிலதான் விழுந்து செத்தாக ரெண்டு பேரும். அம்மாவின் உடலாவது அகப்பட்டுது. அப்பா சடலம் கிடைக்கவே இல்லை. அந்தப் பிணத்தைத் தின்ன மீன்களுக்குக் கூடப் பாவம் தொடர்ந்திருக்கும் மூணு பிறவிக்கு......! அவ்வளவு கெட்டவர் அவர்!''

பச்சைக் கொடியென்று தொடப்போய், அதிலிருந்து பத்துப் பாம்புகள் சீறிப் பாய்ந்தது போல் ஆயிற்று, சரவணருக்கு. எல்லாமே தம்மைக் கொத்துவதற்கா தாவிப் பாயவேண்டும்? நல்ல வேளையாகத் தம்மையும் ஆற்றில் விழுந்து செத்துப்போய் விட்டதாக உலகம் நம்பியிருக்கிறது என எண்ணி அவர் ஆறுதலடைந்தார். 'நாகலிங்கம் பிள்ளை' என்ற தம் தந்தையின் பெயரைக் கேட்டதும், அவர் மலைபோல் வளர்த்து வைத்திருந்த குடிப் புகழைத் தாம் தூள்தூளாக்கித் தரைமட்டமாக்கி விட்டதை எண்ணி அவர் உள்ளம் கசிந்தது. அவர் கண்களில் நீர் மூட்டம் போட்டது. திவலையிட்டு உருண்டு அங்குமிங்கும் அலைபாய்ந்து தாரைதாரையாய்க் கொட்டத் தொடங்கியது. இரவு நேரமாக இருந்ததால், முகத்தைத் திருப்பிக்

கொண்டு அவரால் தப்பிக்க முடிந்தது. எங்கோ வெறித்துப் பார்த்துக் கொண்டும் தொண்டை கரகரக்கச் செருமிக் கொண்டும் அவர் நடந்தார். குரல் மிகவும் தளு தளுத்ததாயினும், குளிர்காற்று வீசியதால் 'அதுதான் காரணமோ?' என எண்ணும்படி இருந்தது.

'தம் மகள் தாஞ இவள்? அதுதான் அம்மாவையே உரித்து வைத்ததுபோல் இருக்கிருள்' என எண்ணியதும் அவர் மனம் அவரையும் மீறிக்கொண்டு, அன்போடு அவளை நோக்கியது. அவர் கேட்டார்:

''இப்போ உனக்கு என்ன துயரம் வந்ததம்மா?''

"பெற்ற தாயும் தகப்பனும் மோசமாப் போனுங்க. கூடப் பிறந்த அண்ணனும் தம்பியும் சரியில்லே. பெத்தவுங்க தொலேஞ்சு எத்தனேயோ வருசம் ஆகப் போகுது. ஆனல் இன்னம் என்னே இழிவாப் பேசருங்க. என் கணவருக்கு எடுத்ததுக்கெல்லாம் என் மீது சந்தேகம். வாய்க்கு வந்த படி திட்டித் தாய்மாதிரி தப்பிலின்னு பேசருரு. 'நொம்மா மாதிரி நீ ஒரு வேசி, கூத்தி'—இதுதாங்க வாயிலே வருற வார்த்தை. வேறே எதுவுமே கிடையாது. எத்தனே நாளேக்குங்க கேட்டுக்கிட்டிருக்கலாம். போதாக் குறைக்கு என் மாமியாரு, நாத்தனுரு எல்லாருமே என்னே ஏள னமாப் பேசிச் சிரிச்சா எனக்குக் கோவம் வராதா? அவுங்க தான் செத்துத் தொலேஞ்சிட்டாகளே!'' அவள் அழுது புலம்பினுள். அவர் நெஞ்சம் அலேபாய்ந்தது.

சரவணருக்கு அவள் சொல்லிய ஒவ்வொரு சொல்லும் பழுக்கக் காய்ச்சிய இரும்பினுல் சூடு போடுவது போலவே இருந்தாலும் அவர் மிக்க மன அழுத்தத்தோடு அதைத் தாங்கிக் கொண்டார். 'அவங்கதான் செத்துத் தொலேஞ் சுட்டாங்களே' என்பதில் அவருக்குப் பெரும் மன அமைதி. தாம் உண்மையிலேயே செத்துப்போய் விட்டதாகவும் இது மறுபிறவி என்பதாகவும் முன்னேய பிறவிக்குப் பிறகு இப்போது தாம் தூயசிந்தனேயும் அற ஒழுக்கமும் உடைய

மேலோராக ஆகிவிட்டதாகவும் நினைப்பதில் அவர் ஆறுதல் கண்டார். அந்தச் சரவணன் இறந்து விட்டதாக உலகமே நம்பட்டும். பேசட்டும்; அது முடிந்த முடிபாகட்டும். இனி ஒரு முறை அந்தப் பாழும் பிறவி திரும்ப வேண்டாம்; அந்தப் பழக்க வழக்கம் மீள வேண்டாம். சரவணர் ஏதோ தம்மையே பார்க்கக் கூசியவர்போல முகத்தைத் திருப்பிக் கொண்டார், தான் தந்த குழந்தையைத் தாங்கிவந்த மேனகையின் முன் அதைப் பார்க்கக் கூசிய விசுவாமித்திரர்போல! ஆனாலும் கற்பக வல்லி இயல்பாகப் பேசியப் பேச்சு, அவரை நேராகக் குறிவைத்து எய்யப்பட்ட அம்பு போல, அவரது பழைய வாழ்க்கையை நோக்கியே பாய்ந்து கொண்டிருந்தது.

''என்னைக் கட்டிக் கொடுத்தபோது, லட்சலட்சமாக் கொடுத்து நகையெல்லாம் பூட்டி நல்லாத்தான் கொடுத்தாங்க. அதுக்கப்புறம் என் கெட்ட காலம் எங்க குடும்பத்திலே ஒருத்தருமே நல்லா இல்லே. அதுக்கு நான் என்ன பண்றது? என் பாட்டனார் செத்ததுமே அப்பா கெட்டு முட்டி தூக்கியிட்டாரு. அதுக்காக இவங்க என்னை ஒரு வேசைமாதிரி, தீண்டப்படாதவ மாதிரி நடத்துறாங்க. என் நாத்தனாருக்குக் கலியாணம். அதுக்கு எனக்கு மட்டும் ஒரு வேலைக்காரிக்கு மாதிரி புடவை எடுக்கிறாங்க. நல்லா இல்லே, மாத்திக்கிறேன்னு அதுக்கு என்னைப் படுத்துற பாடு..... ஏன் சாமி நீங்க என்னைக் காப்பாத்தினீங்க. இனி 'நொம்மா மாதிரி தற்கொலை பண்ணிக்கப் போனியா'ன்னு காறித் துப்புவாங்க, அடிப்பாங்க! அதை விட நிம்மதியாச் செத்திருக்கலாம். நீங்க என்னைக் காப்பாத்தியே இருக்கப்படாது சாமி!''

அவளால் பேச்சை நிறுத்த முடியவில்லை; சரவணரால் அதைத் தொடர்ந்து கேட்க முடியவில்லை. அவர் கண்களைத் துடைத்துக் கொண்டார்: அடிக்கடி செருமிக் கொண்டார். தன் கதை சாமியாரை என்னவோ செய்கிறது என்பதை உணர்ந்த அவள் ''ஏதோ என் தலையெழுத்து. இதுக்கு நீங்க வருத்தப்பட்டு என்ன ஆகப்

போகுது சாமி! அவங்க விழுந்து செத்த ஆத்திலேயே நானும் விழுந்து சாக நினைச்சேன். கெடுத்துப்பிட்டீங்களே சாமி!"

அடிகளால் அவளை எவ்வாறு அமைதிப் படுத்துவது என்று விளங்கவில்லை. அவர் தம் நிலை கலங்கிப் போயிருந்தார். சற்று நேரம் மௌனமாக நடந்ததும் சரவண மடம் வந்துவிட்டது. அவள் சாமியாரைத் தொடர்ந்து மடத்தினுள் காலடி எடுத்து வைக்கும் கட்டத்தில். ''கற்பகம்!" என்ற ஆங்காரச் சத்தம் தெருவிலிருந்து கேட்டது. தன் கழுத்தை நெட்டி இழுப்பது போல் உணர்ந்து திரும்பிய அவள், அங்கே தன் கணவன் வருவதைக் கண்டாள். அடிகள் தம் மருமகன் செல்லமுத்து விரைந்து வருவதை இனங்கண்டு கொண்டார். அவர் மெய் நடுங்கிக் கால் தளர்ந்து வியர்த்து விறுவிறுத்துப் போனார்.

தழற்போற் சுழன்ற செல்லமுத்துவின் கண்கள் சாமியைக் கண்டதும்மின்சாரம்தடைப்பட்ட விளக்குபோல் ஒளியிழந்தன. அவன் கட்டு மீறிய சினத்தை அடக்கிக் கொண்டு, தலைகுனிந்து பேசினான். ''மன்னிச்சுக்குங்க சாமி! இவளை எங்கேயெல்லாம் தேடறது? நாளை என் கடைசித் தங்கைக்குக் கலியாணம். இவ பகட்டித் திரிய நாங்க எடுத்த பட்டுப்புடவை போதாதாம். அப்படி திரிஞ்சுதான் இவ அம்மா ஊரே காறித் துப்பும்படியாப் போனாள்......அது என்ன சாமி! நீங்க கண்ணைத் துடைச்சிக்கிறீங்க. இவங்களுக்கு இரக்கப்படவே கூடாது சாமீ! இவங்க கதை முழுசும் உங்களுக்குத் தெரியாது. தெரிஞ்சாக் கொஞ்சம் கூட இரக்கப்படவே மாட்டீங்க!''

கற்பகத்தின் கண்கள் அருவியாயின. சாமிகள் பல்லைக் கடித்துக்கொண்டு, தம் உணர்ச்சிகளை மறைக்கத் தவித்தார். அவர் அடிமனம் அலறியது...... ''அட பாவிங்களா! எல்லாப் பாவத்துக்கும் கற்பகவல்லியைப் பெத்தவன்தான் காரணம். அவன் கதை முழுவதும் தெரிஞ்சா

உலகமே காறித்துப்பும் என்பது உண்மைதான். ஆனால் அவன்தான் உங்க கணக்குப்படி செத்துத் தொலைஞ்சிட்டானே. இன்னும் ஏண்டா அவளை விட்டுட்டு உரலை இடிக்கிறீங்க? செத்த பிணத்தை அறுத்துக் கண்டம் கண்டமாச் சுடுறீங்க?"...... ஆனாலும் வெளியில் சலனம் அற்றவர் போல் காட்டிக் கொண்டு, சிறு செருமலுடன் அவர் வாய் விட்டுப் பேசினார்: ''ஒருத்தருடைய குத்தங் குறையைச் சுட்டிக்காட்டிக்கிட்டே இருக்கிறதிலே என்ன லாபம்?உன் மனைவிக்குப் புத்திமதி சொல்லியிருக்கிறேன். வீட்டுக்கு அழைச்சுக்கிட்டுப் போ. இனி ஒண்ணும் சண்டை வேண்டாம், பொறுமைக்கு மிஞ்சின தருமம இல்லை. எல்லாம் சரியாப் போகும்."

''இவளை எங்கே சாமி, பார்த்தீங்க.''

"காவிரிப் பக்கம் உலாத்தப் போனேன்''

''அங்கே தற்கொலை பண்ணிக்கப் போயிருப்பாள். பரம்பரைப் புத்தி எங்கே போகும்? முன்னேடும் வாய்க்கால் தானே பின்னேடும். ஒருத்தன் காலைக் கூட வெட்டி எடுத்துப்பிடலாம்; நிழலை வெட்டி எறிய முடியுங்களா? இவ அப்பனும் அம்மாவும் ஆத்திலே விழுந்து செத்தவுங்க தான் சாமி!......இவளாவது சாகிறதாவது, சும்மா ஏமாத்து. இவளுக்கு நீந்தத் தெரியும். அப்படி விழுகிறமாதிரி விழுந்து, நீந்தி வந்திருப்பாள். இவளை அடிச்சு உதைச்சுக் கொன்னு மூட்டை கட்டித் தூக்கி எறிஞ்சாத் தான் சாமி, இவளெல்லாம் சாவா!''

அடிகளுக்கு இம் மணிமொழிகளைக் கேட்கக் கேட்க மாரடைப்பு ஏற்படும் போல இருந்தது. 'அடிச்சு உதைச்சுக் கொன்னு மூட்டை கட்டி'—"சேச்சே, பொற்கொடியைக் கொன்று போட்டதை அப்படியே ஒப்பிப்பதுபோல் இவன் பேசுகிறானே'', என்று அவர் மனச்சான்று இடித்தது. நல்லவேளையாக அவருடைய அறை வந்துவிட்டது. விடுவிடென்று நடந்து போய், ஆசனத்தில் அமர்ந்து கண்களை மூடிக்கொண்டு, தியானத்தில் ஆழ்பவர்போல் ஆனார்.

கற்பகவல்லி அடிகளின் பாதங்களில் விழுந்து கும்பிட்டு எழுந்தபோது, அடிகள் அவளுடைய கைகளில் திருநீற்றை அள்ளியிட்டார். செல்லமுத்துவும் வணங்கித் திருநீறு பெற்றுக்கொண்டான். இருவரும் புறப்பட்டுச் செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்த அடிகளுக்கு, அவர்கள் இருவரையும் புதுமணமக்களாக அன்றொரு காலத்தில் அனுப்பிவைத்த காட்சி நினைவிற்கு வந்தது. செல்வச் செழிப்பிற்கு ஏற்பப் பதினேழு வயதிலேயே திருமணமாகி அன்று அவள் புக்ககம் போனாள். இப்போதும் அவள் தன் தாயைப் போலவே இளமை குன்றாது காட்சியளித்தாள். ஆனாலும் மனத்தில் அமைதியின்றி வாடுகிறாளே. அதற்குத் தாமே காரணம் என நினைத்து அவர் உள்ளம் வெதும்பினார். ஒரு கணம் அவர் மனம் தம்மைப் போன்ற கொடியவர்கள், துறவுக்கோலம் பூண்டு உலகத்தை ஏமாற்றக் கூடாது என்றும் உடனே தலையை மழுங்க மொட்டையடித்துக் கொண்டு, மடத்தை விட்டு வெளியேறி விடவேண்டும் என்றும் எண்ணியது. மறுகணம் காசிக்குப் போய், இமயமலைச் சாரலுக்கே, முன்பு திட்டமிட்டபடி போய் விட வேண்டும் என அது சிந்தித்தது. ஆனால் உடனே எவ்வாறு புறப்படுவது? முன்பு காவிரிக்கரையிலிருந்து, ஒருவருக்கும் தெரியாமல் ஓடிவிட்டதைப் போல, மீண்டும் ஓடிவிட முடியுமா? இப்போதுதான் சீரங்கம் போகும் வழியில் அம்மா மண்டபச் சாலையில் ஐந்து ஏக்கர் பரப்புள்ள தோப்பு ஒன்றை வாங்கி, ஆர்வலர் பலர் கூடிச் சரவண மடத்தை உருவாக்கி வருகிறார்கள். எல்லாம் தம் மீது உள்ள பற்றுதலாலும் மதிப்பினாலும் நடைபெறுகின்றன. இந்நிலையில் ஓடுவதென்பது இயலும் காரியமா? அவர் சொற்பொழிவுகளைச் செவ்வாய், வெள்ளி, ஞாயிற்றுக்கிழமைகளில் ஆயிரக்கணக்கானவர்கள் கேட்டு மகிழ்கிறார்கள். சிவநெறி மெய்ப்பொருள் உண்மைகளை அவர் மெய்கண்டார் வழிநின்று விளக்கி வருகின்றார். தோத்திர நூல்களிலிருந்து நல்ல பல எடுத்துக் காட்டுக்கள் தந்து அவர் மிகப் புதுமையாய் மிக எளிமையாய்ச் சித்தாந்

தத்தை விளக்குகின்ருர் என்று நற்பெயர் ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலேயில் எல்லாவற்றையும் விட்டுவிட்டு ஓடினுல் இதைவிட மோசமாகவல்லவா ஊருலகம் தூற்றும்? எனவே தமக்கு வரும் இடர்ப்பாடுகளேத் தாமே தாங்கிக் கொள்வதென அவர் முடிவு செய்து கொண்டார். குறிப்பிட்ட ஒரு காலத்திற்குப்பிறகுக் கயிலாய யாத்திரை போவதாகப் புறப்பட்டு, இமயமலேச் சாரலுக்குச் சென்று, அங்கேயே தங்கிவிடுவது எனத் தம் மனத்திற்குள் அவர் தீர்மானித்துக் கொண்டார்.

இரவு நேரமாதலால், தம்மை யாரும் கவனிக்கவில்லே என உறுதி செய்துகொண்டு, நிலேக்கண்ணுடி எதிரே போய்த் தம்மையே உற்றுற்றுப் பார்த்துக்கொண்டார், சரவணர். அவர் முகத்திலும் நெற்றியிலும் படிந்து கிடந்த தழும்புகளேத் தடவிப் பார்த்துக்கொண்டார்; தம் இடது கண்ணில் விழுந்து கிடந்த வெண்ணிறப் பூவை உற்றுப் பார்த்துக்கொண்டார்; தலேமுடியைப் பின்புறமாகத் தடவிவிட்டுக்கொண்டு, வலது காற் பாதத்தில் நரம்பொன்று தளர்வுற்றதாலேற்பட்ட வளேவையும் நோட்டமிட்டார். காவி உடையோடு, தம்மை அழகு பார்ப்பவர்போல் பலமுறை திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டு நின்ற அவர், தம்மை அந்த இறைவனே வந்தாலும் 'நீதான் அந்தப் பழைய சரவணன்' என்று மெய்ப்பித்துவிடமுடியாது என நினேந்து, உள்ளூற மகிழ்ந்துகொண்டார். சுந்தரரிடம் அப் பழைய மன்ருடி வழக்காடி வென்றதுபோல், தம்மிடமும் சோதனே செய்ய வருவதாக ஒரு நினேவு ஓடியதை, அவர் உடனே மாற்றிக்கொண்டார்.

''என்ன? கற்பகவல்லிதான் ஒரு வருசத்திற்குள் தட்டுப் பட்டுவிட்டாள்; இனி ஒருவேளே மற்றவர்களும் நம் கண்ணுக்குத் தட்டுப்படக்கூடும். ஆனுலும் நம்மை யாரென்று யாராலும் தெரிந்துகொள்ள முடியாதல்லவா? அது போதும். நம்மைக் காப்பாற்றிக்கொண்டால், உணர்ச்சி

களை அடக்கிக்கொண்டால் யார் என்ன செய்ய முடியும்? முழுவதும் செம்மையுடையவனாய், உலகமே போற்றும் படியான நிலையிலிருக்கும்போது நமக்கு என்ன குறை வந்துவிட முடியும்? வழிபாடும் மெய்ப்பொருள் ஆராய்ச்சியும் நமக்கு உறுதுணையாயுள்ளன. காசிக்குப் போய்க் கருமத்தைத் தொலைத்துவிட்டுப் புத்தம் புதிய பிறப்பெடுத்து, வந்துவிட்ட பிறகு என்ன துன்பம்? என்ன கவலை?''

சரவண அடிகள் மன அமைதியைத் தேடிப் பிடித்தவர் போல், மரக்கட்டையால் செய்து புலித்தோல் போர்த்திய தம் இருக்கையில் போய் அமர்ந்தார். சிவஞானபோதம் இரண்டாம் சூத்திரத்தை எடுத்து வைத்துக்கொண்டு, அதில் விட்ட இடத்திலிருந்து அவர் படிக்கத் தொடங்கினார். இரண்டாம் அதிகரணம், முதல் எடுத்துக்காட்டு வெண்பா அது.

உள்ளதே தோற்றம் உயிர்அணையும் அவ்வுடலின்
உள்ளதாம் முற்செய்வினை உள்ளடைவே—வள்ளலவன்
செய்பவர் செய்திப் பயன்விளக்கும் செய்யேபோல்
செய்வன் செயலணையா சென்று

மூன்று முறை வெண்பாவை ஓதினார். அவர் உள்ளம் அவர் அறியாமல், ''(வினை) உள்ளதே தோற்றம்; உயிர் (மூலமாக) அவ் உடலின் அணையும்; முன் செய்தவினை உள்ளடைவே உள்ளதாம்; செய்பவர் (உழவர்) செய்திக் (உழவு) கு ஏற்ப பயன்விளைப்பது செய்யாகிய நிலமே. (அதற்கேற்ப) வள்ளலவன் செய்வன் (வினைப்பயனை ஊட்டுவான்). செயல் (தானே) அணையாது சென்று" என்று பாட்டைக் கொண்டுகூட்டிப் பொருளுணரத் தொடங்கியது, ஆனாலும் அந்த நேரத்திற்கு அது அவருக்கு மனக்கவலையை அதிகரித்ததே தவிரக் குறைக்கவில்லை. எனவே அவர் போதத்தை மூடிவைத்தார்; ஆற்றுப்படையை மனத்துள் ஓத முற்பட்டார்.

காவிரிக்கரையில் பரங்குன்றப் பகுதியை அவர் நினைவு கூர்ந்தார் அல்லவா? அதன் தொடர்ச்சி இப்போது அவருக்கு இழை ஓடியது. "பார்முதிர் பனிக்கடல் கலங்கஉள் புக்குச் சூர்முதல் தடிந்த சுடரிலை நெடுவேல்'' என அடிகளின் உதடுகள் இழை பின்னத் தொடங்கின. அவுணர்கள் கூடி ஆரவாரிக்கும் போர்க்களம்—சூர பதுமனின் குதிரைமுகமும் மனித உடலுமுடைய இருபேர் உருவங்கள்—பனிக்கடலை ஊடுருவிச் சென்று, முருகன் வேற்படையை எய்து அவனைக்கொல்லுதல்-பேய்மகள் அச்சந்தரும் தோற்றத்தோடு துணங்கை ஆடுதல்—மா வாகி நின்ற சூரனை வேரறக் களைந்ததைக் கொண்டாடும் வெற்றி மகிழ்ச்சி இப்படியே உதடுகள் அசைய அசைய உள்ளம் சூரசம்மாரத்தை வெள்ளித் திரையிட்டுக் கொண்டிருந்தது. கற்பகவல்லியைச் சந்திக்க நேர்ந்ததை எண்ணிய சரவணர் உள்ளம், சுழியிலகப்பட்ட துரும்புபோல் தத்தளித்துக் கொண்டிருந்ததாகையால் இத் திருமுருகாற்றுப்படை வரிகள் அவ்வெதும்பிய உள்ளத்திற்குச் சற்று இதமளித்தன. தம் உள்ளத்திலும் ஒரு சூரன் நின்று போராடுவதாக அவர் உணர்ந்தார். அந்த வினைப் பயனாகிய சூரனை வெல்வதற்கு, முருகனின் 'சூர்முதல் தடிந்த சுடரிலை நெடுவேலின்' துணையை அவர் உள்ளம் நாடியது.

○

''ஒருமுகம்
குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்
மடவரல் வள்ளியோடு நகை அமர்ந் தன்றே''

2

சரவணன் இளமைக் காலத்தில் மிகவும் கவர்ச்சியான தோற்றப் பொலிவுடன் திகழ்ந்தான். அவன் பார்வை கூர்மையானது; பேச்சு எவரையும் கவர்ந்துவிடும். அவனிடம் அப்படி ஒரு தனிச்சிறப்பு ஒளி வீசியது. அவனிடம் பழகுபவர் எதற்கும் பணிந்துபோவர்; பேசுகிறவர் எப்பொழுதும் அவன் வசமாவர்! இதனுல் பிறர் மிக அரிதென்று நினைக்கின்றவற்றையும் அவன் மிக எளிதில் முடித்துவிடுவான். அவனுடைய ஆளுமை யாரையும் சென்று ஈர்க்கும் ஆற்றலுடையது; சராசரி மனிதனைவிட அவன் சிறிது மிகைப்பட்ட ஆளுமையுடையவனுகவே திகழ்ந்தான் எனலாம். 'புருவவளைவும் கண்களின் கூர்மையும் அவனுக்குக் கண்கட்டி வித்தையைக் கற்றுத் தந்திருந்தன. சுற்றுப்புறத்தைச்சூழலைத் தம்வயமாக்குவதில் அவன் ஒரு சூரன். அவன் ஒரு அதிசயப் பிறவி என்றே பலரும் வியந்தனர். நெருங்கிப் பழகியவர்கள் அவனுடைய மிகை உணர்வுகளை அறிவர். அவனுக்குக் கோபம்

வந்தாலும் தாங்காது; தாபம் பிறந்தாலும் தாங்காது. பொற்கொடி சரவணன் திருமணத்தின் போது, இப்படிப் பட்ட இணையை எங்கும் காணவியலாது என்றே எல்லோரும் பாராட்டினர். அன்று சரவணன் கோட்டும்சூட்டு மாக வெள்ளைக்காரனைப் போலவே இருந்தான். இலண்டனில் போய் பாரிஸ்டருக்குப் படித்துவிட்டு வந்தவனல்லவா? கோடீசுவரர் வீட்டுத் திருமணமாதலால் திருச்சி நகரமே அதிர்ந்து, ஆரவாரத்தில் மூழ்கியது. ஊர்வலத்தினைப் பார்த்துக் கண்கொள்ளாக் காட்சி எனக்களிப்புற்றவர்கள் தொகை ஏராளம்; பெருமூச்செறிந்தவர்கள் எண்ணிக்கை மிகுதி!

'பெண் என்றால் இப்படிப்பட்ட பெண்ணை அல்லவா தேர்ந்தெடுக்கவேண்டும்' என்று பலரும் பாராட்டினார்கள். சரவணனின் அப்பா நாகலிங்கம்பிள்ளைதான் தம் மருமகளைத் தேர்ந்தெடுத்தார். தங்கள் சமீன் செல்வத்துக்கு இந்த இடம் ஈடாகாதே என்று அவர் தடுமாறவில்லை. அழகும் குணமும் அறிவும் மிக்க, திருமகளே போன்ற பெண்தான் முக்கியமே தவிரப் பணம் முக்கியமில்லை', என்று அவர் முடிவு கட்டிவிட்டார்.

திருமணமான புதிதில் சரவணன் வாழ்வு தேவலோகத்துக் கந்தருவர் வாழ்வுபோல இருந்தது. ஒருகணம், ஒரு பொழுது தன் மனைவியைப் பிரியவேண்டுமே! அவள் நிழல் போல ஒட்டிக்கொண்டிருந்தான் அந்த இளைஞன். நேர்வகிடு எடுத்த அந்த வட்டமுகமும் நிலவையே நினைப்பூட்டும். அவள் புன்னகைக்கும்போது கன்னம் குழிவிழும். அவள் பேசுவது, சிறு குழந்தை அவிநயம் பிடித்து மழலை பேசுவது போலவே இருக்கும். மஞ்சள் முகத்தில் செந்நிறப்பொட்டு அமைந்து, அப்பொன்னிற மேனிக்குப் பொலிவூட்டும்.

ஒவ்வொரு முறை சரவணன் அவள்நவநாகரிகமாகவேண்டும் என விழைவான். அவள் உதட்டுச்சாயம் பூசவேண்டும்; மஞ்சளைக் குறைத்து மாப்பூச்சை மிகுதியாகத் தடவ

வேண்டும்; குதிஉயர்ந்த செருப்பணியவேண்டும்; குதிரை வால் சடை போடவேண்டும். இன்னும் அவள் கவுன் அணிந்தோ, கைவைத்த சட்டையணிந்தோ 'புதுமைப் பெண்'ணாக வேண்டும். இவ்வாறெல்லாம் அவன் என்ன விரும்பினாலும் அவள் எளிதில் இசைவதில்லை. இருந்தாலும் அவன் அவள்மீது வைத்த பிரியம் குறையவில்லை. அவளிடம் இந்நாட்டு மண்ணுக்கு ஏற்ற ஒரு புனித அழகு இருந்தது; அவன் மேனாட்டில் பார்த்துவிட்டு வந்த 'நவ நாகரிக'ச் சாயல் இல்லை. அந்த அழகே அவனை வசப் படுத்த வல்லதாய் இருந்ததால், இப்'புதுமை' மோகம் அவர்கள் வாழ்க்கையை எதுவும் சீர்குலைத்து விடவில்லை. அவன் கொஞ்சம் கொஞ்சமாக அவள் வழியிலே சென்று கொண்டிருந்தான்.

எப்போதும் இருவரும் ஒன்றாகவே காட்சியளிப்பார்கள். அவன் காரோட்டிச் செல்லும்போது, அவளும் முன்பக்கத்தில் தோகை விரித்த மயில்போல உடனிருப்பாள். அவன் உலவப் புறப்பட்டால் அப்பச்சைக்கிளியனையாள் அவன் தோளைத் தொத்திக்கொண்டு வருவாள். விளையாட்டுத் திடல்களில் இவ் இணைப்புறாக்கள் உடனமர்ந்து சுவைக்கக்காணலாம். திரைப்பட அரங்குகளின் வாயில்களில் கலைமானும் பிணைமானும்போல இம் மணமக்கள் உட்புகப் பார்க்கலாம். ஏன்? கோயில்களுக்குக்கூட அந்த இளங் காளையை அழைத்துக்கொண்டு இச்சாயல் அழகி செல்வதைக் காணக்கூடும்!

○

சரவணர் எதிரே மெய்ப்பொருள் விளக்க நூல் விரிந்து கிடந்தது. அவர் எண்ணமோ முப்பது, முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால், இதே திருச்சிநகரில் அவர் இன்பத்தில் திளைத்துக் கிடந்த காலத்திற்கு ஓடியது. சன்னியாசியான பிற்பாடு, இத்தகைய பழைய நினைவுகள் அவரிடம் தலை நீட்டியதில்லை, இன்று, அவரால் அந்நினை

வைத் தடைசெய்ய முடியவில்லை. இதை மாற்றுவதற் கென்றே அவர் திருமுருகாற்றுப்படையை நினைவுகூரத் தொடங்கினர். திருச்செந்தூர்ப் பகுதி அவர் நினைவி லோடியது, ''வைந்நுதி பொருத வடுவாழ் வரிநுதல், வாடாமாலை ஓடையொடு துயல்வரப் படுமணி இரட்டும்'' —அவர் இதழ்கள் பா அடிகளை நெய்யத் தொடங்கின. அங்கே மணியோசை மாறி மாறி ஒலிக்க முருகன் யானை மீது அவர் மனக்கண்ணெதிரே பெருமிதமாய் வரத் தொடங்கினன்: ஒளிவீசும் அவனுடைய ஆறு முகங்களை யும் அவர் எண்ணிப் பார்க்கத் தொடங்கினர்: ''ஒருமுகம் ஒளிவீசுகிறது; ஒருமுகம் ஆர்வலர்களுக்கு வரம் தருகின் றது; மற்றொருமுகம் அந்தணர் வேள்வியைக்காக்கின்றது; பிறிதொரு முகம் திங்கள் போலத் திசை அனைத்தையும் விளக்குகிறது; ஒரு முகம் பகைவரை வென்று சினங் கொண்ட மனத்தோடு களவேள்வி செய்கிறது; ஆருவது முகம் குறவர் மகளாம் வள்ளியுடன் சிரித்துப் பேசி மகிழ்ச்சியடைகிறது!'' 'குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின், மடவரால் வள்ளியொடு நகையமர்ந்தன்றே' என்ற அடிகளில் அவர் உள்ளம் தோய்ந்து, அங்கேயே இனிப்புக் கண்ட எறும்பு போலச் சுற்றிச் சுற்றி வரலா யிற்று. மீண்டும் அந்த நாள் நினைவுகளுக்கு அவர் ஆட் படலானர்.

○

''சும்மா இருங்க. யாராவது பார்த்தால் என்ன நினைப் பாங்க? சூச்சூ...இப்படியா? எனக்குக் கூச்சமாயிருக்கு. கன்னத்தைக் கிள்ளினது போதும். கையை எடுங்க...ஐய, அறையில்தான் ஆடுவாங்க; அம்பலத்திலேயா ஆடு வாங்க!''

பொற்கொடி எத்தனை முறை தடுத்தாலும் சரவணன் மன மும் கையும் சும்மாஇருப்பதில்லை. அவன்தான் எதிலும்ஒரு 'மிகை' ஆயிற்றே! கொஞ்சம் கூடுதலாகத்தான் அவன் பழக்கம் பார்ப்பவருக்குப்படும். அவள் கன்னத்தைக்

கிள்ளுவதும் கூந்தலைப் பற்றி இழுப்பதும் சேலைத் தலைப்பை ஒழுங்குபடுத்துவதும் முதுகுப்புறமாக முட்டித் தள்ளுவதும் அலைக்கழிப்பதும் வேடிக்கை காட்டுவதும் அவனுக்கு மகிழ்ச்சி தரும் செயல்களாகும். அப்போது அவள் கூசுவதும் நாணுவதும் சிணுங்குவதும் முகம் சிவப்பதும் ஒரே சிரிப்பாய்ச் சிரித்துக் கொட்டுவதும்...! அப்பப்பா! அவள் கலகலப்பு அக்கம் பக்கத்தையெல்லாம் கலகலக்கவைக்கும்.

○

வையை அணைக்கட்டில் அவள் நின்றதையும் நடந்ததையும் சிரித்ததையும் எல்லாம் படம் பிடித்தான் சரவணன். அவர்கள் கண்ணன்பாடி அணைக்கட்டிற்குப் போனபோது, படகில் செல்லுகையில், அவளை வெள்ளத்தில் தள்ளிவிடுவதாக அவன் அச்சுறுத்தினன். அப்போது அவள் கண் கலங்க, அவன் அவளைப் பலர் முன்னிலையில் அரவணைத்துக்கொண்டதும் பின்பு இருவரும் விலகியிருந்து வெட்கத்தில் மூழ்கியதும்... பிருந்தாவனப் பூங்காவில் ஒவ்வொரு படிக்கட்டிலும் அவளை ஒவ்வொரு கோணத்தில் நிற்கவைத்து அவன் ஒளிப் படங்களை எடுத்தான். பெரியார் நீர்த்தேக்கத்தில், மாலம்புழாவில் எல்லாம் அவர்கள் ஆடிப்பாடிய சாகசங்கள் எத்தனை எத்தனையோ? எங்கே போனாலும், யாரானாலும் இந்தக் காதல் ஜோடிகளைச் சற்றே நின்று கவனித்துவிட்டுத்தான் போவார்கள். அந்த அளவு எல்லோரையும் ஈர்க்கும் கவர்ச்சியுடையவர்கள் இருவரும்! நாடகத்திலோ, திரைப் படத்திலோ வருபவர்கள்கூடத் தோற்றார்கள் என்றுதான் சொல்லவேண்டும்!

○

கனகசபையை—முதல் மகவை அவள் கருவில் சுமந்த போது, சரவணன் அவளுக்குச் செய்த உபசரிப்பு; போற்றிப் பேணிய முறை! கண்ணை இமைகாப்பது போல்

காத்து வந்தான். சிறிது அவள் பெருமூச்சு விட்டால் அவன் 'இச்சிச்சு' என்பான். தள்ளாடினால் கைகொடுத்துப் பொற்கொடியைத் தாங்கும் கொழுகொம்பாவான்! செருமினால் கழுத்தைத் தடவிக் கொடுப்பான்; சோர்ந்தால் முதுகைத் தடவிக் கொடுப்பான்; அயர்ந்தால் உற்சாகமாகப் பேசி உவகை ஊட்டுவான்!

முதற் பேறு பெற்று முப்பது நாள் ஆகவில்லை. தாயையும் சேயையும் தன் வீட்டிற்குக் கூட்டிக்கொண்டே வந்தாக வேண்டும் என்று அடம்பிடித்துக் கூட்டி வந்துவிட்டான். 'பிள்ளைத்தாய்ச்சி உடம்பென்று' அவள் கெஞ்சினாலும், அவன் அப்பால் இப்பால் போவதில்லை. ''எங்கேயாவது போய்த் தொலையுங்களேன்!'' என்று அவள் சிரித்துக் கொண்டே அலுத்துக்கொள்வாள்! 'போனால் வரமாட்டேன்' அவன் பொய்யாகஎச்சரிப்பான். 'அவ்வளவு மோசமாகப் போய்விடுவீர்களா?' அவள் செல்லமாகச் சினப்பாள். 'உன்னை விட்டுவிட்டுப் போவதென்றால், உலகத்தைவிட்டே போனால்தான்' என்பான் அவன். அந்த உள்ளன்பை மதித்து அவள் ஆறுதலடைவாள்.

சும்மா இருக்கிற அவளை, 'இன்னிக்குச் சினிமாவுக்கு வரப்போறியா, இல்லையா?' என்று வம்புக்கு இழுப்பான் அவன். அவள் கெஞ்சினாலும் கூத்தாடினாலும் விடமாட்டான். சினிமாப் பார்த்துவிட்டு வந்தபிறகுதான் அவன் அமைதியடைவான். இல்லையென்றால் அவளுக்கு ஒவ்வொரு கணமும் தொந்தரவுதான்; நச்சரிப்புத்தான். குழந்தையை 'ஆயா'விடம் ஒப்படைத்துவிட்டுத் தன் கணவனுடன் வேண்டா வெறுப்பாக ஊரைச் சுற்றுவாள் பொற்கொடி.

ஒரு நாள் அவளிடம் அவன் ஒரு கனவு கண்டதாகக் கூறினான். 'அது என்ன கனவு?' என்று அவள் மிக்க ஆர்வத்தோடு கேட்டாள். அவன் சொல்ல முடியாதென்று, முரண்டு பிடித்து, அவள் கன்னத்தைச்சிவக்கவைத்தான். கடைசியில் அவள் அழுதுவிடுவாள் போல் இருந்தது,

அவன் சுருக்கமாகக் கனவைக் கூறினன்: "நீ செத்துப் போகிருய்; நான் சாமியாராகப் போகிறேன்.''

"பொய் பொய் இது கனவு கண்டதில்லே. பொய்!''

''ஏன்?''

''நீங்களாவது சாமியாராப் போறதாவது. நான் செத்துப் போனல் நீங்களும் கூடவே செத்துப் போவீங்க. உண்மையா, அப்படித்தான் கனவு கண்டிருப்பீங்க!''

''இல்லே...இல்லே'' என்று அவன் கத்தவே, அவளுக்குச் சிரிப்பு வந்தது. இருவரும் சேர்ந்து சிரித்தார்கள். விளேயாட்டாகச் சிரித்தாலும் அவள் கண்களில் அத்தனே பனித்துளிகள்—கண்ணீர் மணிகளாகக் குலுங்கி நின்றன!

○

'நான் செத்துப் போனல், நீங்களும் கூடவே செத்துப் போவீங்க' என்ற அந்த அன்றிலின் குரல், அவர் அடிமனத்தில் கிரீச்சிட்டுக்கொண்டேயிருந்தது. சரவணர் உயிருக்கு உயிரான அவளேக் கொலேசெய்து, தூக்கி எறிந்ததை நினேத்து உள்ளுக்குள் புலம்பினர். மனிதவாழ்வு மிக அற்பமானதென்றும் 'அன்பு' என்பதெல்லாம் ஏமாற்று வித்தை என்றும் அவர் சிந்தனே கூறியது. ஒரு நிகழ்ச்சி, இன்றைக்கு அவரைப் பழைய உலகத்திற்கு முற்றிலும் அழைத்துப்போய் விட்டது. அவருடைய மனத்தில் சூரன் கொடூரமாக மாறியும் திசைமாறியும் ஏமாற்றிப்போரிட்டுக் கொண்டிருந்தான். வானத்தில் ஒருகணம் காட்சியளித்த அவன், அடுத்த கணம் நடுக்கடலில் மாமரமாக மாறி நின்ருன். ஒருமுறை சிம்ம முகமாகத் தோற்றியது; மறுமுறை குதிரை முகமாகக் காட்சியளித்தது. அவனேக் கொல்ல அவர் வேலேத் தேடினர். அது கைக்கு எட்டவில்லே. அங்கே சூரன் கொக்கரிக்கின்ருன்; அவர் வேலொன்றைக் கைப்பற்றுகிருர். முருகன் எதிரே

கை அமர்த்தி, அபயம் காட்டுகிருன். நனவுபோல் கனவு நீள்கிறது.

சரவணருக்குக் காலே மூன்று மணி அடிப்பது கேட்டது. ஐம்புலனும் உள்ளமும் அடிமனமும் அயர்ந்தபோதுதான் அவர் சிந்தனேச் சுழற்சி தடைப்பட்டது.

○

''உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீர்
அலைவாய்ச் சேறலும் நிலைஇய பண்பே''

3

பழைய நினைவுகளே வராமல் தடுப்பதென்று சரவணர் ஒரு முடிவு செய்துகொண்டார். காவிரிக்கரை நிகழ்ச்சிக்குப் பிறகு ஒரு மாதம் ஓடிவிட்டது. இப்போது எதுவும் அவர் நினைவுக்கு வருவதில்லை. இப்படியே, நினைவை வேரோடு களைந்துவிட்டால்தான் தம் துறவற வாழ்வின் தூய்மை நிலைபெறும் எனஅவர் நம்பினார். அதனால் அவர் மெய்கண்டாரின் சிவஞான போத ஆய்வில் மிகவும் ஈடுபட்டார். அதில் வரும் கருத்துக்களையும் சிவஞான முனிவரின் உரைக் கருத்துக்களையும் மிக எளிமைப்படுத்தி, நடைமுறைத் தன்மையோடு, வாழ்க்கையில் வைத்து விளக்க அவர் முற்பட்டார். அதிலேயே அல்லும் பகலும் தம் நினைவைச் செலுத்தினார். இரத்தின சாமிகளிடம் காசியில் கேட்ட சித்தாந்தப்பாடம் அவருக்கு மிகவும் உதவியது.

அம்மா மண்டபச் சாலையில் புதிதாகக் கட்டிக் குடியேறிய மடத்தில் கூட்டம் நிரம்பி வழியத் தொடங்கியது. அடிகள் பேசிய கூட்டங்களுக்கு, முதலில் ஒரு சிலரே வந்ததால் வகுப்பு நடத்துவது போல் இருந்தது. நாளுக்கு நாள் கூட்டம் அதிகரித்து, இப்போது ஒலிபெருக்கி வைத்துப் பேசவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அங்கு மா

மரங்களும் தென்னை மரங்களும் செடி கொடிகளுமாய்ச் சோலைபோல் விளங்கிய சூழ்நிலை மிகக் குளுமையாக இருந்தது. சிறு மண்டபமாக முதலில் மடம் கட்டப்பட்டது. ஓரிரு மாதங்களுக்குள்ளாகவே பேச்சுக் கேட்க வரும் மக்கள் தொகை பெருகியதால், மண்டபத்தைச் சுற்றி அகன்ற தென்னோலைக் கொட்டகைகள் போடப்பட்டன. மேலும் மடத்தை விரிவுபடுத்திக் கட்டவும் திட்டமிடப்பட்டது.

பொதுமக்களும் பெரும் செல்வர்களும் கூடிக் காணிக்கைகளைக் குவித்தார்கள். வெள்ளிக்கிழமைகளில் அடிகள் கூட்டு வழிபாடு நடத்தினார். அவரது தோற்றம், நடைமுறை, சமயப்பற்று, மெய்ப்பொருள் விளக்கம் எல்லாமே மக்களைக் கவர்ந்தன. காசிச் சாமிகளைக் கண்டு அவர் கையால் திருநீறு பூசப்பெற்றால் எந்த நோயும் நீங்குகிறது என்றும் பேய்பிசாசுப் பில்லி சூனியக் குற்றங்கள் ஓடுகின்றன என்றும் பலமான வதந்தி எங்கும் பரவி விட்டது. அவர் வாழ்த்துப் பெற்றவர்களுக்கு வாணிகம் செழிக்கிறதென்றும் திருமணத்தில் வந்து மணமக்களை அவர் 'ஆசீர் வதித்தால்' குழந்தைப்பேறு வாய்க்கிறது என்றும் இவ்வாறு எத்தனையோ நன்மைகளைப் பற்றிப் பலரும் பேசத் தலைப்பட்டார்கள். இதனால் கூட்டம் மிகுந்து, காணிக்கை அளவின்றிப் பெருகியது. சரவண மடத்து வரவு செலவைக் கவனிக்கவென்று தனி அலுவலகம் திறக்கப்பட்டது.

ஒருநாள் வெள்ளிக்கிழமை. அடிகள் 'வினைத்தொடர்ச்சி' பற்றி விளக்கத் தொடங்கினார். மண்டபம், சுற்றுக்கூடங்களில் மட்டுமன்றி. தோப்பு முழுவதுமே மக்கள் திரண்டிருந்தார்கள். அடிகள் சொற்பொழிவாற்றிய மேடைக்கு எதிரே பல சாமியார்கள், பாதிரிமார்கள், தமிழ் தெரிந்த வெள்ளைக்காரர்கள், வட இந்தியர்கள், சைனர்கள் எனப் பலரும் ஆடவரும் மகளிருமாய் அமர்ந்திருந்த காட்சி, காசிச் சாமிகளின் பெருமையை மிக உயர்த்திக் காட்டி

யது. சிவஞான முனிவரின் விரிவுரையுடன் கூடிய, சிவ ஞானபோதம் அடிகள் எதிரே திறந்து வைக்கப்பட்டிருந் தது. அதில் இரண்டாம் சூத்திரத்தை அவர் இப்போது விளக்கிக் கொண்டிருந்தார். இரண்டாம் அதிகரணத் தைத்தொட்டு, எடுத்துக்காட்டு வெண்பாவைப் பண்ணோடு படித்துவிட்டு, அவர் விளக்கத்தில் மூழ்கினார். இவ்வளவு பெரிய கூட்டமிருந்தும் குண்டூசி விழுந்தாலும் கேட்கும் படியான அமைதி நிலவியது. ஒரே குரல், காசிச் சாமிகள் என்ற அடிகளின் குரல், அந்தத் தோப்பு முழுவதும் எதி ரொலித்துக் கொண்டிருந்தது.

''...வினையைச் செய்த உயிர்தான் அதன் பயனை நுகர வேண்டும். இது கடவுளின் ஆணை.

தரையில் ஓங்கி அடித்தால் அங்ஙனம் அடித்த கை வலிக் கிறதல்லவா? ஒவ்வொரு வினைக்கும் பயனுண்டு என்பது இதனால் விளங்குகிறதல்லவா?

வினைத் தொடர்ச்சி என்பது காரண காரியத் தொடர்பு உடையது. காரணமின்றிக் காரியம் இல்லை. காரணம் தெரியவில்லை என்பதற்காகக் காரணமே இல்லையென்று மறுக்கமுடியாது. நாம் தெரிந்து கொள்ள முடியாத கார ணங்கள் முற்பிறவியிலிருந்தும் தொடரக்கூடும்.

வினைகள் வன்மை மென்மைக்கேற்ப, செய்யும் உயிர் களின் தன்மைக்கேற்ப முன்பின்னாகக் கூடுதல் குறை வாகப் பயனை விளைவிக்கும். கடையில் தின்பண்டம் திருடு பவன் உடனே அடிபடக்கூடும். கள்ளக் கணக்கு எழுதிக் கறுப்புப் பணம் சேர்த்தவன் தப்பித்துப் போக, அவன் வழியினர் அத்துன்பத்தை நுகரக்கூடும். சில வினைகள் வெளிப்படப் பயனை விளைவிக்கும்; சில மறைமுகமாக விளைவிக்கும். சில செய்தவனை மட்டும் பாதிக்கும்; மற்றும் சில அவன் சமூகத்தைப் பாதிக்கும்; வேறு சிலவோ நாட் டினையே முழுவதுமாகப் பாதிக்கக் கூடும்; பிட்டுக்கு மண் சுமந்த சொக்கர் பெற்ற அடிபோல, நாட்டு மக்கள் ஒவ் வொருவரையும் சென்று தாக்கக்கூடும்.

ஒருவன் வினை அவனை நிழல் போலத் தொடரும். அது அவன் பெற்ற கடனாகும். அதிலிருந்து அவன் தப்ப முடியாது, வட்டியும் முதலுமாக வாய்ப்பு வரும்போது, பயனை விளைவித்தே தீரும். மறுபிறவிக்கும் அது தொடரக்கூடும். ஒருவனே ஒரு நாளைக்கு ஓராயிரம் வினைகள் செய்கிறான். இவற்றுள் அப்போதே பயன் தந்து தீர்ந்தன; பிறிதொரு நல்வினையால் சமப்பட்டு ஒழிந்தன; மறுநாளும் தொடர்வன; ஆழப்பதிவன; பிறர் வினையால் மறுப்புண்டன; முன்பு செய்து தணலாய்க் கிடந்து இப்போது பற்றி எரிவன எனக் கோடியும் ஆகும். இவற்றின் வேறுபாடு-செயற்பாடு விளங்காமையாலேயே வினை இல்லை என்று கூறிக் குழப்பத்தைத் தவிர்த்துவிட முடியாது...''

அடிகள் இடையிடையே தண்ணீர் மட்டும் குடித்துக் கொண்டார். கேட்பவர்கள் முகத்தை அடிக்கடி சுற்று முற்றும் பார்த்துக்கொண்டு, அவர்கள் மனங்கொள்ளும் படி பேசினார்.

''...நாம் செய்து சேமிக்கும் வினைகள் கணக்கில. அவை எல்லாமே உடனுக்குடன் பயனை விளைவிப்பதில்லை. மண்ணில் போட்ட கீரை மறுநாளே தலைகாட்டுகிறது; நெல்லுக்குப் பல நாள்கள் ஆகிறது. பயனைத்தராமல் சேமிக்கப்பட்ட வினைகளுக்குச் சஞ்சிதம் என்று பெயர். அது ஒரு வினைக் களஞ்சியம். அது நுண்பொருளாய் மறைந்து, நம் புத்தி தத்துவத்தில் பொருந்தி, வாசனையாக உறைந்து நின்று ஒருவனுடைய இயல்பாய்ப் பண்பாய்க் கூடி நின்று நாளையோ, மறுநாளோ, மறுபிறவியிலோ பயனை விளைவிக்கும்.

வினைகள் பயனை விளைவிக்கப் பக்குவப்பட்டுக் காலமும் சூழலும் அமையும் போது அப்பயனை ஊட்டுகின்றன. எப்போதோ செய்து, நுண்பொருளாய் நம் புத்தி வாசனையில் பொருந்தி நின்று இன்று பயனை ஊட்டுவனவும், நேற்றுச் செய்து இன்று பயனை விளைவிப்பனவும், சற்று

முன் செய்து இக் கணத்தில் பயனைக் காட்டுவனவும் என அவை பல திறப்படும். பயனை விளைவிக்கும்போது அதனைப் பிராரத்தம் என்பர். நாம் ஊழ், தலைவிதி என்பன எல்லாம் அதுவே.

உயிர்கள் பழைய வினையை அனுபவிக்கும்போதே புதிய வினைகளைச் செய்கின்றன. இவை 'ஆகாமியம்' எனப்படும்.

வினையெல்லாம் ஒன்றுதான். அதற்கு நிகழ்காலமே உண்டு. நாம் நம் விளக்கத்திற்காகப் பிரித்துப் பார்க்கிறோம். ஆகாமியம் சஞ்சிதமாகிப் பக்குவப்பட்டுப் பிராரத்தமாக நுகரும்போதே ஆகாமியம் பெருகிச் சஞ்சிதம் மீண்டும் பெருக, இப்படியே நம் வினை நச்சு வளையமாக, நம்மை வளைய வளைய வருகிறது. மூட்டைப் பூச்சியை நசுக்கினால் ஒன்று பத்தாகும். செம்பாச்சை ஒன்றை அடித்து நசுக்கினால் அதிலிருந்தே பல பாச்சைகள் உருவாகி விடும். வினையின் நிலையும் இதுதான். இதனால் தான் வினையை 'நாசோற்பத்தி' உடையதென்பர். வினை நாசமாகும் போதே, ஒன்று பலவாகப் பல்குவதை இது சுட்டுகிறது. வழிபாடு, நோன்பு, தவம் என்பன வினையின் ஆற்றலைக் குறைக்கவல்ல நற்றுணைகள் ஆகும்.

'வினையை வெல்ல முடியாதா?' என்று கேட்க நினைப்பீர்கள். வெல்லமுடியும். ஒருவன் செய்த வினையை மற்றவன் வெல்கிறான் அன்றோ? அதுபோல ஒருவன் செய்த வினைகளே ஒன்றையொன்று வெல்லும். ஊழை வெல்வதென்பது கடவுளை வெல்வதன்று. நம் முன்வினையைப் பின் வினையால் 'வெல்கிறோம்'. அவ்வளவே! வினைகள் செய்த ஒழுங்கிலேயும் வந்து பயன்தரும்; வன்மை மென்மைகளுக்கு ஏற்ப முன் பின்னாக வந்தும் பயனைத்தரும். 'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்' என்பது காலை மாலைக்கும் பொருந்தும்; முற்பிறவி மறுபிறவிக்கும் பொருந்தும்!

வினைப் பயன் தராமல் ஒழியவே ஒழியாது. உருள் கம்பி என்பது முழுவதும் நீட்டினால் தான் விடுபடும்; நூற்கண்டை முழுவதும் நீட்டினால்தான், அனைத்தும் முடிவு

றும்; வினையும் எவ்வளவு பெரிய சுருளாயினும் முழுவதும் விடுபடும் வரை செய்தவனை விடாது. மீண்டும் சுருள் கூடாதிருக்க, முன்னைய சுருள் எளிதில் விடுபட, அதன் பலனை மென்மைப் படுத்த வழிபாடு பயன்படும். வினைப் பயனை மென்மைப் படுத்த—தாக்கத்தைத் தாங்கும் வன்மைபெற—வழிபாடு உதவுமே தவிர—வினைமுழுதும் தீர்வெழுதப்படுவதில்லை. தவத்தின் வலிமை மிகமிக வழிபாட்டின் ஆற்றல் கூடக்கூட அவையும் முன் செய்த வினைக்கும் பின்செய்யும் வினைக்கும் ஏற்படும் போட்டி போலத்தான். ஒன்றையொன்று வெல்வதென்பது அவ் வவற்றின் வன்மை மென்மைகளைப் பொறுத்தது. வினை யினின்றும் தப்பிப்பது என்பது கடுகளவும் இயலாது. வினை தன்பயனை விளைவித்தே தீரும்.

நாற்சந்தியில் ஒரு போலீசுக்காரர் நின்று வழிகாட்ட, ஆயிரக்கணக்கான வாகனங்கள், ஊர்திகள் குறுக்கும் நெடுக்குமாகப் போவதை உற்று நோக்கியுள்ளீர்களா? வினைத் தொடர்ச்சிக்கு அதனை ஒரு சிறிது ஒப்பிடலாம். யார் தவறினாலும் அவருக்குத் துன்பம் நேரும். தவறு செய்யாமல் உடன் வந்தவருக்கும் தீங்கு நேரலாம். அங் ஙனம் சார்பு நிலையில் வர நேர்ந்து, தீமைக்காட்படநேர்ந் ததற்கு முன்னைய காரணம் ஏதோ ஒன்று இருக்கத்தான் வேண்டும். உலக வினைகள் என்பன இங்ஙனம் பின்னிப் பிணைந்து, கூடிமறுகி, வெள்ளமும் எதிர் வெள்ளமுமாய்ப் போனாலும் தாய்ப்பசுவைக் கண்டடையும் கன்று போலத் தன்னைச் செய்தவனையே ஒரு வினை சென்றடைகிறது...''

மக்கள் இப்பொழிவினைச் செவிமடுத்த பிறகு முட்டை கொண்டு மேட்டு நிலம் சேரும் சிற்றெறும்புகள் போல, அந்த மடத்திலிருந்து சிந்தனை வளத்தோடு வெளியேறி நடக்கத் தொடங்கினார்கள். எவ்வளவு நேரமானாலும் களைப்பு என்பதே இல்லாமல், மக்கள் ஏற்கும் வகை யறிந்து குட்டிக்கதைகளுடனும் வாழ்க்கைக் குறிப்புகளுட னும் பேசும் சரவண அடிகள் அனைவர் உள்ளத்தையும் ஒரு

சேர ஈர்க்கும் ஆற்றலுடையவராய்க்காட்சிதந்தார். மடத்துக்கென வைக்கப்பட்ட காணிக்கைஉண்டியல்கள் நிரம்பி வழியத் தொடங்கின. மன அமைதி தேடும் பெரும் செல்வர்கள் பலரும் அங்கு தொடர்ந்து வருகின்றனர் என்றும் நூறு ரூபாய்க் கட்டுகள் போன்ற பெரும் தொகைகளை—கணக்கில் சேராத பணக் 'கத்தைகளை' உண்டியல்களில் போடுகிருர்கள் என்றும் பேச்சு எழுந்தது. எங்ஙனமாயினும் சரவணமடம் பெரும் செல்வமடமாக வளர்ந்து கொண்டுவந்தது.

சரவணரின் மனத்திற்குள் இவ்வளர்ச்சி எவ்வித மகிழ்ச்சியையும் தரவில்லை. உண்மையிற் சொல்லப்போனல், அவர் செல்வம் சேராத வெறும் ஆண்டிமடமாக இருப்பதையே விரும்பினுர். செல்வம் சேரச் சேரப் பலரும் சரவண மடத்தில் அக்கறை காட்டினர்; சரவணரும் உற்று நோக்குதற்கு உரியவராயினுர். இது தம்மை எங்கு கொண்டுபோய் விடுமோ எனச் சரவணர் அஞ்சினுர். மேலும் உண்டியல் பெருகப் பெருக, கணக்கு வழக்குகள் பெருக, வங்கி அலுவல் வளர, 'வளமுடைய பார்வை'யே அம்மடத்தை வளையவந்தது. இதனுல் சரவணர் மீதுள்ள பக்தியும் மதிப்பும் மரியாதையும் மிக வளர்ந்தனவாயினும், அதை அவர் சற்றும் விரும்பவில்லை. அந்நகரத்துப் பெரும் செல்வர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் முதல் நகர் மன்றத்துப் பெருமகனுர் வரை அனைவரும் அவரைக் காண வரலாயினர். திருச்சிச் சுற்று வட்டாரத்தில் யார் விட்டில் திருமணம் என்ருலும் 'காசிச் சாமிகளை' அழைத்துப் போய், மணமக்களுக்கு வாழ்த்துக் கூற வைப்பதும் அவருக்குத் தமக்குகந்த காணிக்கையை அளிப்பதும் அங்கு ஒரு வழக்கமாயிற்று.

வினைத் தொடர்ச்சி பற்றிப் பேசிவிட்டுத் தம் அறையில் போய் அமர்ந்த சரவணர், அக் கோட்பாட்டிற்குத் தாமே ஒரு நல்ல எடுத்துக் காட்டாக இருப்பதாக எண்ணினுர். 'எங்கே தம் வாழ்க்கை மேலும் மேலும் இதுபோல வெளிப்

பட்டுத் தம் மனத்தை அலைக்கழித்து விடுமோ?' என அவர் நெட்டுயிர்த்தார். கற்பகவல்லி போல் மற்றவர்களும் எதிர்ப்பட்டு, 'எங்களைப் பெற்றவன் ஓர் ஒழுக்கக் கேடன்' எனச் சுட்டெரிக்கும் வார்த்தைகளினால் இடித்துரைத்தால், எவ்வாறு தாங்கிக் கொள்ள முடியும் என அவர் தேம்பினார். உடனே அவருக்குக் காசியில் வாழ்ந்த வாழ்க்கை நினைவிலோடியது. அந்தப் புனிதமான சூழல், நாள்தோறும் வேலை தவறாத வழிபாடு, தியானம், நற்சிந்தனை, நோன்புகள் எல்லாம் அவர் மனத்திரையில் ஓடின. திருச்சியில் வாழ்ந்த மிக மோசமான வாழ்க்கையைச் செலவு கலத்தில் எழுதினால், காசியில் வாழ்ந்த மிக நல்ல வாழ்க்கையை வரவு கலத்தில் எழுத வேண்டும். அவ்வாறு செய்தால், கணக்குச் சரியாகிறது என்று அவர் மனம் எண்ணித் தெம்புபெற முயன்றது.

முருகனின் பன்னிரு கைகளின் செயல்களையும், நக்கீரர் வரிசைப் படுத்திக் கூறுகிற நினைவு அவர் மனக் கண்ணிற்குப் புலனாயிற்று. ஒரு கையை இடுப்பில் வைத்து, மறு கையை வாழ்த்தும் வகையில் ஏந்தி நிற்கும் முருகன் அழகில் அவர் ஈடுபட்டார். ''ஒரு கை மார்பொடு விளங்க; ஒரு கை தாரொடு பொலிய; ஒரு கை கீழ்வீழ் தொடியொடு மீமிசைக் கொட்ப...'' அப்படியே பன்னிரு கைகளையும் நினைந்து போற்றி, அவற்றால் தாம் அரவணைக்கப் படுவதாக எண்ணி மகிழ்ந்தார். அவர் மூடிய கண்களின் முன்னே யானை மீதமர்ந்த முருகன் வருகின்றான். வாச்சியங்கள் முழங்குகின்றன. சங்கு ஒலிக்கிறது. மயிற்கொடி வெற்றிக் கொடியாக மேலிருந்து அசைவுகிறது. வான வழியாக முருகன் சென்று கொண்டிருக்கிறான். அலை ஓசை தவழும் திருச்செந்திலில், கடலருகே, உலகமே புகழுமாறு அவன் நிலைபெற்றிருக்கிறான்...சரவணர் கைகளைத் தலைமேலேற்றித் தொழுகிறார். அவர் கண்கள் பனிக்கின்றன...மடத்தில் யாரோ பணியாள் வரும் காலடி ஓசை கேட்டு, அவர் சிந்தனை கலைந்தது.

○

> ''காமமொடு
> கடுஞ்சினம் கடிந்த காட்சியர்; இடும்பை
> யாவதும் அறியா இயல்பினர்''

4

திருச்சிராப்பள்ளிச் சுற்றுவட்டாரத்தில் அடிகளின் பேரும் புகழும் எங்கும் பரவிக்கிடந்தது. கிராமத்து மக்களும் 'காசிச்சாமிகளை'ப்பார்க்க,வெள்ளிக்கிழமைகளில் திரண்டு வந்தனர். செல்வர்கள் தம் வீட்டில் திருமணம், சிறப்பு, விழா என எது நடந்தாலும் அடிகளை அழைத்துப்போய், அதில் கலந்துகொள்ளச் செய்தார்கள். அடிகள் வரவில்லை யென்ருல் அவர்களுக்கு அது பெரும் மனக் குறையாக இருந்தது. அடிகளோ இதைச் சற்றும் விரும்பவில்லை. மடத்தில் சொற்பொழிவாற்றுவதோடு, மற்றைய நேரங் களில் எல்லாம் அடிகள் அனைவரையும் விட்டு விலகியிருக் கவே விரும்பினர். அதுவும் கற்பகவல்லியைக் காவிரிக் கரையில் காப்பாற்ற நேர்ந்த நாளிலிருந்து, அவர் 'எந்தப் புற்றிலிருந்து எந்தப்பாம்பு கடிக்குமோ' என்பதுபோல அஞ்சத் தொடங்கினர். தம் பழைய வாழ்வையோ, பழைய உறவையோ அவர் திரும்பிப்பார்க்கச் சற்றும் விரும்ப வில்லை. தம் பழம் பிறப்பை அடிமனத்தின் ஆழத்திலும் இல்லாமல் போட்டுப் புதைத்துவிட்டுத் தமது புதுப்பிற வியை அப்பழுக்கு இல்லாமல் காப்பாற்றிக் கொள்ளவேண் டும் என்று அவர் ஆசைப்பட்டார். திருச்சிக்கு வந்ததே

தவறு என அவர்மனம் சிலசமயம் சஞ்சலப்படும். தம்மைப் பிறருக்குத் தெரியவில்லையென்ருலும் தமக்கு மற்றவர்களை அடையாளம் தெரியும் போது, மனம் பழைய உறவுகளில் ஆழ்ந்து சித்திரவதைப் படுகிறதே என அவர் நைந்தார். இதனுல் அண்மைக் காலமாக அவர் யாரையும் ஏறிட்டுப் பார்ப்பதுகூட இல்லை. ஒருக்கால் யாரேனும் ஒருவர் தம்மையும் அடையாளம் கண்டுவிட்டால், ஐயப்பட்டு விட்டால்... அவரால் மேற்கொண்டு நினைக்கவே முடியவில்லை. மனமும் உடலும் கிடுகிடென நடுங்கின. 'சே, அப்படி நடக்கவே நடக்காது' என்று அவர் தமக்குள் அடிக்கடி உறுதி செய்து கொண்டார்.

அடிகள் மக்களைவிட்டு இவ்வாறு விலகியிருக்க விரும்பிய வேளையில்தான், மக்கள் அவரை மிக அதிகமாக விழைந்து தம்மிடையே அடிக்கடி வரவழைக்க ஆசைப் பட்டார்கள். அவரை அழைத்துச் சென்று, நிகழ்ச்சியைச் சிறப்பிக்கச்செய்து, கடைசியில் காலில் விழுந்து கும்பிட்டு காணிக்கை கொடுத்து வழியனுப்பி வைப்பது என்பது ஒரு வழக்கமாகிவிட்டது. ஒருநாள் பெரிய கடைத் தெருவை ஒட்டிய குறுக்குத்தெரு ஒன்றில், அல்லிமால் தெருவிற்கு அருகில், பெரும் செல்வர் ஒருவர் வீட்டில் அவர் திருமணம் ஒன்றிற்காக அழைக்கப் பட்டிருந்தார்.

உண்மையில் அவ்வீட்டார் அடிகளுக்கு ஒரு வகையில் உறவுக்காரர்களே. ஊரோடு இருந்திருந்தால் குடும்பத்தோடு வந்திருக்க வேண்டியவர் அவர். இப்போது துறவியாக, வாழ்த்துரைக்க வந்திருந்தார்.

பெரிய படகு போன்ற காரில் அழைத்து வந்தார்கள். வாசற்படியில் வந்திறங்கியதும் மேளதாளங்கள் முழங்கின. முன்னே சிறிய மேசைப் பலகை போட்டிருந்தார்கள். பக்கத்தில் பூரண கும்பத்தில் தண்ணீர் இருந்தது. வீட்டுத் தலைவர் அடிகளின் பாதங்களை அப் பலகையின் மேல் வைக்கச் செய்து, குடத்து நீரை ஊற்றிப் பாத

பூசைசெய்தார். அடிகள் இதையெல்லாம் விரும்பவில்லை; ஆனால் இதை அவரால் முற்றிலும் மறுக்கவும் முடிய வில்லை.

திருமணம் நிறைவெய்தியதும் வாழ்த்துக் கூட்டம் நடை பெற்றது. அதில் முன்னதாகப் பேசிய ஓர் அரசியல் தலை வர், ''தெய்வமே நேரில் வாழ்த்த வந்திருக்கிறது. அடி கள் வேறு யாருமல்ல. அவர் ஒரு தெய்வம். அவர்வாக்கு தெய்வ வாக்கு. அவர் வாழ்த்தும்போது மற்றவர்கள் எல் லாம் ஏன் வாழ்த்த வந்துள்ளார்கள் என்றே எனக்குப் புரி யவில்லை'' என நயமாக நடித்து அடிகளிடம் குழைந்தார். அடிகள் 'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும் எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலை' என்ற திருஞான சம்பந்தர் பதிகத்தைப் பாடி, திருக்குறளி லிருந்து மேற்கோள் காட்டி வாழ்த்தினார். 'குழல் இனிது யாழ் இனிது என்ப தம் மக்கள் மழலைச் சொற் கேளாத வர்' என்ற திருக்குறளுக்கு ஏற்ப இனிய மக்களைப்பெற்று வாழ வாழ்த்திய அவர் 'குடும்பக் கட்டுப்பாட்டையும் வற் புறுத்திய அழகு பலருக்கும் புதுமையாய் இருந்தது. '' 'குழல் இனிது, யாழ் இனிது' என்று ஏன் இரண்டு உவமைகள் சொன்னார் திருவள்ளுவர் தெரியுமா? பல் வகை வாச்சியமும் இனிதென்று அவர் கூறவில்லையே? குழலைவிட இனிமையுடைய ஓர் ஆண் மகவையும் யாழை விட இனிமையுடைய ஒரு பெண்மகவையும் பெற்றுக் குடும்பத்தைத் திட்டமிட்டு நல்வாழ்வு வாழ வேண்டு மென்பதற்காகவே, இரண்டு உவமைகளை மட்டும் அடுக் கினார் அவர்'' என அவர் பேசியபோது, கைதட்டல் ஒலி யால் கூட்டமே அதிர்ந்தது. "நம் காசிச் சாமிகள் அந்தக் காலத்து மனிதரல்லர்; புதுமைகளை போற்றுபவர்; நமக் குப் புரியும்படி எதனையும் விளக்கவல்லவர்', என்று அங்கு கூடியிருந்த மக்கள் தங்களுக்குள் கிசுகிசுத்துக்கொண்டார் கள். மணமக்கள்வந்து அவர் பாதங்களில் வீழ்ந்து வணங் கியபோது, அவர்கள் நெற்றியில் திருநீற்றைப் பூசி நெஞ்

சாரவாழ்த்தினுர் அடிகள். பின்பு மணமக்களின் உற்ருரும் பெற்ரேரும் மற்றவர்களுமாக அனைவரும் அவரைவணங்கி வணங்கி எழுந்தனர். எல்லோருக்கும் திருநீற்றை அள்ளிக் கொடுத்து, வாழ்த்தினுர். கற்பகவல்லி தன் பிள்ளைகளுடன் வந்து வணங்கினுள். அவளைச் சுற்றி நண்டானும் சுண்டானுமாய் ஓடிவந்த பிள்ளைகள், சற்றுமுன் அடிகள் பேசிய பேச்சுக்கு மறுதலையாக அவள் குடும்பம் வளர்ந்திருப்பதைக் காட்டியது. அவள் கணவனும் திருமணத்திற்கு வந்திருந்ததால், அடிகள் முன்வந்து கும்பிட்டு நின்ருன். 'எல்லோரும் நலம்தானே' என்று அடிகள் கேட்டபோது, அவன் 'ஆமாம்' எனத் தலையசைத்தான். தன் மனைவியைப் புன்னகையோடு அவன் அழைத்துக் கொண்டு சென்றதிலிருந்து, அவர்கள் குடும்பம் இப்போது அமைதியாக இருப்பதறிந்து அடிகள் மனத்திற்குள் அமைதி கொண்டார்.

அடிகள் வெளித் திண்ணையில் வந்தமர்ந்தார். அங்கிருந்த பலரும் அடிகளைக் கண்டதும் எழுந்து நின்று மரியாதை செலுத்தினர். பழந்தேங்காய் பூவுடன் ஆயிரத்தொரு ரூபாய் வைத்து, அவருக்குக் காணிக்கை கொடுத்தனர். மணமக்கள் மீண்டும் ஒருமுறை விழுந்து கும்பிட்டு அக்காணிக்கையைச் செலுத்தினுர்கள். அடிகள் அதன் பிறகு இரண்டு வாழைப் பழமும் ஒரு குவளை பாலும் மட்டும் அருந்தினுர். மடத்திற்கு வெளியே அவர் வேறு எதுவும் உண்பதில்லை.

அடிகளிடம் ஒரு பொலிவு தெய்வ ஒளி அருட்பார்வை திகழ்ந்தது. பெருமிதமான தோற்றம், ஆளுமைநிறைந்த சாயல், அறிவு ஒளி வீசும் சொற்கள் ஆகிய இவை எல்லோரையும் வணங்க வைத்தன. திண்ணையில் அவர் அமர்ந்ததும் அங்கே ஓர் அமைதி நிலவியது. அவருக்கெதிரே சில ஊதுபத்திகள் பற்ற வைக்கப்பட்டு, எங்கும் நறுமணம் இழையோடிக் கொண்டிருந்தது. அடிகளின் மனம் எப்போதும் எதிரேயுள்ள ஒன்றில் ஈடுபட்டுவிடுவது

வழக்கம். அதுவும் அவர் மனத்திற்கு ஒத்ததாயின், அதி லேயே அது இலயித்துப் போய்விடும். அவர் மற்ருெரு உலகத்துக்குப் போய்விடுவார். அவரைப் பிறகு கூவி யழைத்தோ, கையைத் தட்டியோதான் நிகழ்கால உல குக்குக் கூட்டி வரவேண்டும்.

அடிகளின் எதிரே ஊதுபத்தி கொத்தாக எரிந்து கொண் டிருந்தது. காற்றுக்கு வடிவமில்லே, நிறமில்லே, மண மில்லேதான். ஆனல் ஊதுபத்தி அந்தக் காற்றுக்கு ஒரு நூல்போல் இழையோடி எழுந்தோடும் வடிவத்தை, சாம் பல் நிறத்தை, நறுமணத்தைத் தருகிறது. சற்று நேரம் தான் இந்த வாழ்க்கை! பிறகு காற்று மெள்ள மெள்ள அந்த மணத்தினே விடுகிறது; வடிவம் உதிர்கிறது; நிறம் மறைகிறது. காற்றுப் பழைய காற்ருகிறது. காற்று எடுக்கும் இத்தகைய பிறவிகள் கணக்கிலடங்கா.

திருமண வீட்டில் நல்லுசாமி என்ற அவருடைய இள மைக்கால நண்பன் உள்ளே நுழைந்து கொண்டிருந் தான். நேரம் கடந்து வந்த அவனுக்கு பலத்த வரவேற்பு இருந்ததை வைத்து அவனிடம் நிறையப் பணம் ஊடாடு கிறதென அடிகள் ஊகித்துக் கொண்டார். அவன்கூட அவர் இளமை முதல் எத்தனேயோ ஆண்டுகள் ஒன்ருக உண்டு, ஒன்ருகவே உறங்கி வாழ்ந்திருக்கிருர். 'எங்கே இந்த நல்லுசாமி நம்மை அடையாளம் கண்டு கொள் வானே, என அவர் அடிமனம் ஒரு கணம் அசைந்தது. ஆனலும் அவன் அடிகளேப் பார்த்தும் பாராது போற் போனதிலிருந்து, தமக்கொன்றும் ஆபத்தில்லேயென அடிகள் முடிவு செய்து கொண்டார்.

எல்லோருக்கும் சுவைநீர் கொடுத்தார்கள். அடிகள் எதி ரேயும் ஒரு குவளேச் சுவை நீரை அன்பர் ஒருவர் வைத்து விட்டுப் போய்விட்டார். அடிகள் அதைப் பருக மாட்டார்; ஆயினும் அவர் நினேவுகள் நீர்மை வடிவெடுத்து அச் சுவை நீருடன் கலந்தன. நீர் தான் சார்ந்த ஒன்றின்

நிறத்தை, மணத்தை, சுவையை அடைகிறது. மீண்டும் ஆவியாகிப் பழைய தூய நிலையை அடைந்தாலும், மீண் டும் மீண்டும் பல நீர்ப் பிறவிகளை எடுக்கவே செய்கிறது. அடிகளின் பார்வை எதிரே காணிக்கையுடன் கொணர்ந்து வைத்த பழத்தட்டிற் படிந்தது. மண்கூட இப்படித்தான் பல பிறவிகளை எடுக்கிறது. பாகைக்காயாகிக் கசப்பதும் மண்தான்; மாம்பழமாகி இனிப்பதும் அதுதான்! ரோஜா மலராகிச் சிரிப்பதும் அதுதான்; எருக்களம் பூவாகி விரிவ தும் அதுதான்! பயிராகி, உயிராகி உடலெடுத்தும் மீண் டும் மண்ணோடு மண்ணாகியும் போவதால் இம் மண்ணின் மறு பிறவிகளையும் எண்ணி முடியாதென்பது அறியப்படு கிறது. எல்லோரும் அடிகள் தியானத்தில் இருப்பதாக நம்பினார்கள். அதனால் தான் அவர் அரைக் கண்களை மூடிய நிலையில் இருப்பதை, அனைவரும் பயபக்தியுடன் பார்த்தது பார்த்தபடி இருந்தனர். அடிகள் பெரும்பாலும் மௌனமாக இருந்தே பழகிவிட்டவர். மடத்தில் சொற் பொழிவாற்றும் நேரம் தவிர மற்ற நேரங்களில் அவர் பேசுவதில்லை. ஏதேனும் இரண்டொரு சொற்களோடு அவர் யாவற்றையும் முடித்துக் கொள்வார். அவரது அமைதி இப்போது அனைவரையும் ஊமையாக்கிவிட்டது.

அனைவரின் கவனத்தையும் கலைத்துக்கொண்டு வெளியில் பெரும் இரைச்சல் கேட்டது. தமிழ்நாட்டிற்கே உரிய வழக்கப்படி, ஒரு பந்தி சாப்பாடு முடிந்ததும், எச்சில் இலைகளை ஒரு தகரத் தொட்டியிலிட்டுத் தூக்கி வந்து, வெளியே கொட்டியிருக்கிறார்கள். உள்ளூர்க் குறவர்கள், நரிக்குறவர்கள், பிச்சைக்காரர்கள் எல்லோரும் ஒரே சம யத்தில் அச் 'செல்வத்தை'ப் பங்கு போட்டுக்கொள்ள ஓடி யதால், அது ஒரு போர்க்களமாக மாறியிருந்தது. அர சியல்வாதிகளிற் சிலர் பதவிக்கு வெறிகொண்டு அலை வதைப் போலக் கொடுமையுடையதாக இருந்தது அக் காட்சி. சிலர் எச்சில் இலைகள் கொட்டப்படும்போது, அவை கீழே விழுமுன்பே எவ்விப் பிடித்துக் கொண்டார் கள். மற்றவர்கள் அதைப் பறிக்க முயன்றார்கள். இவர்

களுடன் இரண்டு சொறி நாய்களும் போட்டியிட்டன. நாய்களுக்கும் இந்நாட்டு மன்னர்களுக்கும் சண்டை; நாய்களுக்குள்ளேயே வெறித்தனம். அதனுல்தான் அங்கு அத்தனை ஆரவாரம், கூக்குரல், இரைச்சல்!

அவர்களிடையே இளையவன் ஒருவன், கட்டான உடலுடையவன்; நல்ல பொன்னிற மேனி முழுவதும் புழுதி படிந்து கருத்துச் சிறுத்துக் கசங்கிய ஓவியம் போலானவன் சண்டையில் மும்முரமாக நின்முன். எல்லோரும் அவனையே வேடிக்கை பார்த்தனர். அவனுக்குத் தலை முடி பரட்டை படிந்து கிடந்தது; ஒன்றிரண்டு சடைகள் கூடத் தெரிந்தன. அறையில் ஒட்டிக் கிடந்த சிறு கந்தலில் அரை அங்குலக் கனத்திற்குப் புழுதி படிந்திருந்தது. உடம்பில் முழங்கால், முழங்கை போன்ற இடங்களில் சீழ்வடியும் புண்கள் கண்ணராவியாக இருந்தன. எச்சில் இலையைப் பிடுங்கிக் கொள்ள அவனுக்குச் சாமர்த்தியம் போதவில்லை. மனிதர்களோடு மல்லாட முடியாத அவன், ஒரு சொறிநாய் வாய்வைத்து, மனிதர்களை விரட்டிவிட்டு இழுத்து வந்த எச்சில் இலையை உருவப் போனுன். அந் நாய்க்கும் அவனுக்கும் கடும் போராட்டம் தொடங்கியது.

திருமணத்திற்கு வந்து திண்ணையிலிருந்த பலருக்கும் இது வேடிக்கை பார்க்கத்தக்க கண்காட்சியாக இருந்தது. அடிகள் பார்வையும் அங்கே போய் நிலைகுத்தி நின்றது. நாய் அவன் அயர்ந்த சமயத்தில் இலையைக் கௌவ, அவன் ஓங்கிய கைகளால் அதை விரட்டிவிட்டு இலையைத் தொட 'அந்தத் தருமயுத்தம் நல்ல வேடிக்கையாக இருந்தது. ஒரு சமயம் அவன் ஆத்திரமாய் இலையை இழுத்தபோது. அது அவனுடைய இடது முழங்காலில் எவ்வி விழுந்து, வலது முன் கை விரல்களைப் பிருண்டி விட்டது. பல்பட்டு அங்கெல்லாம் இரத்தம் கசிவது தெரிந்தது. நாய்க்கு இலை போய் விட்டது. அவனே கையையும் காலையும் அசைத்து ஆனந்த தாண்டவம் ஆடினுன். வலி தெரியாது அப் பைத்தியம் ஆடியதைப்

பார்த்து 'இரசிகர்கள்' கைதட்டி ஆரவாரம் செய்தார்கள். அவன் சிரித்தபடி சிந்துபாடிக் கொண்டிருந்தபோது, அங்கே நாய் சாப்பாட்டைச் சுவைத்துக்கொண்டிருந்தது. அந்நாய் வெறும் இலையைப் போட்டுவிட்டு ஓடியதும், பைத்தியம் ஓடிப்போய் அதை எடுத்துக் கொண்டு ஆடினன். 'சரியான பைத்தியம்' என்று எல்லோரும் சிரித்தார்கள்!

அடுத்த கணம் அந்தப் பைத்தியம் திருமணவீட்டு வாசற் படிக்கு ஓடிவந்து, அங்கு நின்ற தொந்திவயிற்றுக் கோமான் ஒருவரிடம் சோறுகேட்டு நடித்தது. மிகவும் பரிதாபமாக இருந்தது. அவர் அவனை அதட்டி விரட்டினர். "போடா சனியனே! நீ கிட்டே வந்தாலே கெட்ட நாத்தமா நாறுது! அங்கே தான் எச்சிலிலை கொண்டுவந்து கொட்டுவாங்க! இங்கே ஏன் முந்தி முந்தி வர்றே. மூக்கைத் தொளைக்கிது. போ! ஓடு ஓடு! வாசலுக்கு வராதே!" அவர் என்ன சொல்லியும் பைத்தியம் விலகவில்லை. அவர் ''டே! மூக்கா இவனை அப்பாலே இழுத்துப்போடா" என்று ஆணையிட, குறவன் வந்து அடித்து நையப்புடைத்த பிறகு தான் பைத்தியம் இடத்தைவிட்டு நகர்ந்தான். அந்தச் சமயத்தில் திருமண வீட்டிற்குள் நுழைந்த வயதான அம்மையார் ஒருவர், ''டேய்! மாணிக்கம்! உன் தலைவிதி இப்படியாடா போக வேண்டும். இந்தத் திண்ணையிலே உட்கார்ந்து விருந்து சாப்பிட வேண்டியவன், இப்படி அடிபட்டுச் சாகிறியே,'' என்று துக்கப்பட்டுக் கொண்டே உள்ளே போனர்கள்.

'மாணிக்கம்' என்ற சொல் காதில் விழுந்ததும் ஆயிரம் தேள் கொட்டியது போல் அடிகள் மனம் துடியாய்த் துடித்தது. அவர் கண்கள் வெளியே மாணிக்கத்தைக் கூர்மையாய்த் துழாவின. பற்றற்ற துறவி என்ற நிலை பறிபோய், 'பாசம்' கொண்ட உள்ளம் அழ ஆரம்பித்தது. சகல நரம்புகளும் தாறுமாருகத் தெறித்து விடப்பட்ட வீணை போல, அவர் உள்ளம் நடுநடுங்கிக் கொண்டிருந்தது.

தெருவிலே நின்ற பைத்தியத்தின் மீதே அவர் பார்வை திரும்பித் திரும்பி அலைபாய்ந்தது. 'மாணிக்கம்' என்ற பெயர் மணி ஓசைபோல் அவர் செவிகளில் பறையடித்த வண்ணமிருந்தது. அவர் மார்பு படபடத்தது; நெஞ்சம் நெகிழ்ந்தது; கண்கள் கனத்தன; உள்ளம் அழுதது. அங்கே ஒரு காவிரியே நுங்கும் நுரையுமாய்க் கங்கு கரை யில்லாமல் ஓடிக் கொண்டிருந்தது. அப்போது திண்ணை யிலிருந்த ஒருவர் மற்றொருவரிடம் கூறிக்கொண்டிருந் தது, கிணற்றுக்குள்ளிருந்து கேட்பது போல், அவர் செவி களின் மேல் வந்து விழுந்தது: ''அஞ்சு வயசு வரை இந்தப் பயல் எப்படி வளர்ந்தான் தெரியுமா? ஒவ்வொரு பிறந்த நாளும் ஒரு பெரிய திருவிழாவாகக் கொண்டாடப் பட்டது. முதல் ஆண்டு பிறந்த நாளன்றைக்கு இவன் தாத்தா இந்த ஊரையே கூட்டி விருந்து போட்டார். இன் றைக்கு எச்சில் சோத்துக்கு நாயோட சண்டை. மனித வாழ்க்கை எப்படி மாறுது பார்த்தீங்களா?''

எங்கோ மூலையிலிருந்த வயதான பெரியவர் ஒருவர் அதற்குப் பதில் கூறினர்: ''அதுக்கு என்ன ஐயா பண் றது? அவனோட அப்பன் பொழைச்ச பொழைப்பு அப்படி. இவனோட தாத்தா இவனைப் பெத்தவனை வெளி நாட் டுக்கு அனுப்பிப் படிக்க வெச்சார். என்ன பயன்? அவன் அங்கே போயிக் குடியையும் கூத்தியையும் படிச்சிட்டு வந்தான். கோடிக் கணக்காப் பணமிருந்தது. நிலமும் புலமும் கொஞ்சமா இருந்தது. காவிரிப் பாசனத்தைப் பொன் விளையும் பூமிப்பாங்க! இவனுங்க வீட்டிலேதான் பொன்னைக் குவிஞ்சு கெடந்துச்சு. எல்லாத்தையும் குடிச்சே கெடுத்தான் பாவி. அந்தப் பாவம் பாருங்க, அவன் பிள்ளை இப்போ எச்சில் இலைக்கு நாயைக் கடிக் கிறன்.'' இதைக் கேட்டு எல்லோருமே சிரிக்க ஒரு சிறுவன் குறுக்கிட்டு ''நாய்தான் அவனைக் கடிச்சிது; அவனு நாயைக் கடிச்சான்'' என்று ஒரு திருத்தம் கொண்டுவர அந்தச் 'சபை' முழுவதும் கொல்லென்ற சிரிப்பொலி எழுந்தது!

ஒரு பெரியவர், இதையெல்லாம் கண்டு கொண்டும் கேட்டுக்கொண்டும் மௌனமாக இதுவரை இருந்தவர் மனம் வருந்திப் பேசினர்; ''ஏண்டா சிரிக்கிறீங்க, அவன் நம்ம உறவுக்காரண்டா. இங்கே விருந்து தின்னுட்டு, இந்தத் திண்ணையிலே உட்கார்ந்து ஒங்க மாதிரி வெட்டிப் பேச்சுப் பேச உரிமையுள்ளவண்டா! ஊரு அரைப் பைத்தியத்தை முழுப் பைத்தியமாக்கிட்டுது. அவங்க பாட்டனர் இந்தத் திருச்சியிலேயே பெரிய ஜமீந்தாருடா! இந்த ஊருக்கு கவர்னரே வந்தாலும் அந்த நாகலிங்கம் பிள்ளை வீட்டிலேதாண்டா தங்குவாரு, அப்பன் கெட்டுக் குட்டிச் சுவராப் போயிச் செத்தான். அம்மையும் அவனேடே கெட்டுச் செத்தாள். இந்தப் பயல் அனதையாகிப் பைத்தியமாப் போனன். இவனுக்கு ஒரு அண்ணன் இருக்கிருன். அவனும் கடனைக்கிடனை வாங்கிப்பிட்டுச் சொல்லாமேக் கொள்ளாமே மதருசுக்கு ஓடிட்டான். அக்காவீட்லே கொஞ்ச நாள் சாப்பாடு போட்டாங்க...... இவனுக்கு நல்ல இங்கிலீஸ் படிப்பு...தெரியுமோ? இங்கிலீஸ் அவ்வளவு அருமையாப் பேசுவான். இந்த நிலையிலேயும் நீங்க அவன்கிட்டே பேசிப்பாருங்க. சரளமாப் பேசுவான். தலை விதி!"

"அப்புறம் எப்படிப் பைத்தியம் பிடிச்சுது?''—அந்தச் சிறுவன் ஆவலோடு கேட்டான். பெரியவர் தொடர்ந்தார். ''கான்வெண்டிலே படிச்சான். இவன் அப்பனும் அம்மையும் செத்த பிறகு கூட, ஒரு ரெண்டு வருசம் அங்கேயே குருமார்கள் இவனுக்காக இரக்கப்பட்டுத் தொடர்ந்து படிக்க வெச்சாக. குலப்புத்தி எங்கே போகும்? இவன் மத்தவங்க உடைமையை ஆஸ்டல்லே திருடி, அதை வித்துச் செலவு செய்ய ஆரம்பிச்சானும். ரொம்ப சாமர்த்தியமாத் திருடுவானும். பலநாள் திருடன் ஒருநாள் எக்கச்சக்கமா மாட்டிக்கிட்டான். அப்புறம்...அன்னைக்குத் தெருவிலே விரட்டிவிடப் பட்டவன் தான்...திருடனை யாருங்க வேலைக்கு வச்சுக்குவா...பைத்தியமும் பிடிச்சுப் போச்சு...யாரு கவலைப்படுருங்க...பணமிருந்தால் திருத்த

வாவது முயல்வாங்க. பந்தம் பாசம் சொந்தமெல்லாம் பணமிருந்தால்தான்...''

அடிகளுக்குப் பெரிய படகுக்கார் வந்து நின்றது. மனச் சுமை அழுத்தத் தள்ளாடிய நடையுடன் அவர் அந்த வண்டிக்குள் ஏறி அமர்ந்தார். கார் புறப்படும் சமயம் அவர் கண்கள் அவரை அறியாமல் வெளியே அலைபாய்ந்தன. தம்மை வழியனுப்ப நின்ற கூட்டத்தை அடிகள் கையெடுத்துக் கும்பிடவும், வண்டி நகர்ந்தது. ஒரு சிறிது சென்றதும் வலது திசையில் அவர் முகத்தைத் திருப்பிய போது, அங்கே மாணிக்கம் நடனமாடும் முத்திரையுடன் பெரும் இலாவகமாக அந்தக் காருக்கு 'டாடா' காட்டிக் கொண்டிருந்தான்.

அவன் சிறுபிள்ளையாக இருந்தபோது, தாதி கைவண்டியில் அவனை உட்கார வைத்துத் தள்ளிக் கொண்டு போவாள். எங்கோ அவசரமாகப் போக, சரவணர் தம் மனைவியுடன் அலங்கரித்துக்கொண்டு புறப்படும் சமயம், அவன் இப்படித்தான் தன் பிஞ்சுக் கரங்களால் 'டாடா' காண்பிப்பான்.

அடிகள் மடத்திற்குப் போகும்வரை அடிக்கடி செருமிக் கொண்டும், கண்களையும் நெற்றியையும் துடைத்துக் கொண்டும் இருந்தார். உடன் சென்ற பணியாள் அடிகளுக்கு உடல்நலமில்லை என்று தானே கற்பித்துக் கொள்ள, அச்செய்தி அவன் வாயிலாக மடம் முழுவதும் பரவிவிட்டது. அன்று முழுவதும் அடிகள் தம் அறையை விட்டு வெளியில் வரவில்லை.

○

மலையுச்சியில் ஏறியிருந்த வாழ்க்கை ஒன்று, மடுவில் விழுந்து தத்தளிக்கும் வாழ்க்கை ஒன்று. எதை எண்ணிப் பார்ப்பது? அடிகளுக்குக் கற்பகத்தின் மனத்துயரும் மாணிக்கத்தின் சீர் குலைவும் தெரிந்த பிறகு மன அமை

தியே போய் விட்டது. இப்போது திருச்சியை விட்டே ஓடிவிடுவதுதான் நல்லதென்று பட்டது அவருக்கு. 'முன்பொருமுறை ஓடியது போதாதா? சே... ஏன் நாம் திரும்பி வந்தோம் திருச்சிக்கு. எல்லாவற்றையும் ஒரு வழியாக ஒழித்துவிட்டுப் போய்' இருபது, இருபத்தைஞ்சு வருடங்கள் காசியிலேயே கழித்து விட்டு, நிம்மதியாக இருந்தோம். பேசாமல் கைலாய அடிவாரத்திற்குப் போயிருக்க வேண்டும். நம் நிழல்தான் நம்மை விட வில்லே. இல்லேயென்ருல் திருச்சிக்கு வர வேண்டும் என்ற எண்ணம் வந்திருக்குமா? அம்மை நோய் தான் போட்டதே. இரண்டு நாள் செத்தே தொலேந்துவிட்டது போல் கிடந்த போது, அப்படியே கதை முடிந்திருக்கக் கூடாதா? பிழைத்து எழுந்து, ஆளே உருமாறிப்போய், அந்தத் தைரியத்தில் திருச்சி வந்து, இப்போது 'புதையல்' எடுப்பதுபோல்ஒவ்வொன்ருய்ப்பழையகதைவெளிப்பட்டு.. மாணிக்கம் இப்போது எந்தத்தெருவில் அலேந்து கொண் டிருக்கிருனே? யாரிடம் அடிபட்டுக் கொண்டிருக்கிருனே? பேசாமல் சடை முடியை அறுத்தெறிந்துவிட்டு, வெள்ளே வேட்டியைக் கட்டிக்கொண்டு வெளியேறிவிட வேண்டி யதுதான்... ஊராரிடம் போய்த் தெருத்தெருவாய் 'நான் தான் சரவணன்! நான் தான் சரவணன்! நான் சாமி யாரில்லே! என்னே நம்பாதீர்கள்' என்று கூவினுல்தான் மனம் ஆறுதலடையும். செய்த பாவங்களேயெல்லாம் நான் தான் அனுபவிக்க வேண்டும். திருடியவன் தப்பித்துக்கொண்டு, மற்ருெருவனேக் காட்டிக்கொடுத்து விட்டு, வேடிக்கை பார்ப்பது போல் நான் வேடிக்கை பார்ப்பதா? சேச்சே... நான் உயிரோடு இருக்கிறேன். நான் சாக வில்லே. நான் செய்த பாவ மெல்லாம் என்னேத்தான் சார வேண்டும். என் பிள்ளே களேப் போய் அவை ஏன் தாக்க வேண்டும்?---' அடிகள் தலேயைப் பிய்த்துக்கொண்டார். மறுகணம் திருச்சியில் வாழ்ந்த தம் வாழ்வின் ஒவ்வோரசைவும் தம் முன் நிழலாடுவதைப் பார்த்து, படத்தை ஒடுக்கிக் கொண்ட

பாம்பு போல, அவர் தம் நினைவைக் கீழே போட்டு விட்டார். "உன்னை நீயே வெளிப் படுத்திக் கொண்டால் ஊரார் அனைவரும் ஒன்றாகக் கூடி, உன்னைக் காறித் துப்பு வார்கள்" என்று உள்மனம் அவரை இடித்துரைத்தது.

அடிகள் தலைவைத்துப் படுத்திருந்த பலகை இது வரை பஞ்சு போல் அவருக்குப்படும், இன்றோ கல்லைவிடக் கடிதாகப்பட்டது. அதன் கீழிருந்த சாயத்துண்டு, நனைந்துபோய்விட்டது. கற்பகத்தைத் திட்டுபவர்கள், அவரைப் பார்த்ததும் அவரிடம் பாய்ந்து வருகிறார்கள். மாணிக்கத்தின் மீது அடிக்க ஓங்கியவர்கள், அவரை அடிக்க ஓடி வருகிறார்கள். யார் வீட்டின் எதிரிலேயோ தாமே கையேந்திப் பிச்சை கேட்பதாக ஒரு பிரமை. சொறி நாய்க்கும் தமக்கும் பெரும் சண்டை மூண்டு தெருத் தெரு வாக ஓடுவதுபோல் ஒரு கனவு... கனவு கண்டு எழுந்து உட்காருவார், பிறகு மீண்டும் படுப்பார், அனலில் மெழு காய் உருகித் தூண்டிற் புழுவாய்த் துடித்துப் பொறியி லகப்பட்ட எலி போல் இரவு முழுவதும் அலமந்து சுழன் றார் அடிகள்!

○

‘‘விழுமிய
உறுகுறை மருங்கில்தம் பெறுமுறை கொண்மார்
அந்தரக் கொட்பினர் வந்துடன் காண...’’

5

காசிச் சாமிகள் மேலும் மேலும் நுட்பமாகச் சித்தாந்தக் கருத்துக்களை விளக்கினார். வாழ்க்கை அனுபவத்தோடும் நடைமுறைக் கண்ணோட்டத்துடனும் அவர் பேசினார். அறிவியல் செய்தி ஒன்றைக் காரண காரியத்தோடு எடுத்து மொழிவதுபோல், சமயவுண்மைகளைப் பருப் பொருளாக்கிக் காட்டுவது போல் அவர் வாழ்க்கை நிகழ்ச்சிகளிலேற்றி ஒவ்வொரு சிறு கூறையும் விளக்கினார். இவரல்லவோ ‘சிவநெறிச் செம்மல்’ என மக்களனைவரும் ஒரு முகமாக அவரைப் பாராட்டினர்.

வெளியுலகில் அடிகளின் புகழ் வளர்ந்த வண்ணமிருந் தாலும் அவர் தம் மனவுலகிற்குள் புழுங்கிச் செத்துக் கொண்டிருந்தார். ஒவ்வொரு வேளையும் அவர் பழைய அனுபவங்களால் உந்தப்பட்டு நிலை தடுமாறிக் கொண் டிருந்தார். அடிகள் பெரும் பகுதி மௌனமாகவே இருந்தார். மாலை வேளைகளில் சமயச் சொற்பொழி வாற்றுவது தவிர, அவர் ஒரு வாக்கியமாக, தொடராகக் கூட எதையும் பேசுவதில்லை. எல்லாம் சைகை மொழி தான், ஓரிரு சொற்கள்தான்! அவர் மனச் சிந்தனையோ

முடிவற்ற கலவை வாக்கியமாக நீண்டுகொண்டே சென்றது. வினைமுற்றே வந்த பாடில்லை; பயனிலை வந்தாலல்லவா, தமிழ்மரபுப்படி வாக்கியம் முடியும். அவர் சிந்தனையோட்டம் பல துணை வாக்கியங்களாய், வினையெச்சங்களாக நீண்டபடி இருந்தது. அவருடைய ஆற்றலுக்கு அப்பாற்பட்டு, அவரது சிந்தனை காற் புள்ளிகளையே பெற்றுப் பெற்று ஓடிக் கொண்டிருந்தது. முற்றுப்புள்ளி ஏற்படுகிற நம்பிக்கையே எழவில்லை.

''இது ஒரு புது அனுபவமாக இருக்கிறது. யாருக்கும் இப்படி ஏற்படுவது, இவ்வளவு நேரடியாக அமைவது அரிது. நம் வாழ்க்கைப் படம் நம் கண்ணெதிரிலேயே ஓட்டப்படுகிறது. ஏதோ படச் சுருள்களாக எடுத்து வைத்திருந்து, திரையிடுவது போல் நம் பழைய வாழ்வின் பயன்கள் நம்மை எதிர்ப்படுகின்றன. எல்லோருடைய வாழ்க்கையிலும் அவர்கள் செய்த வினையின் பயனை எப்போதோ, எங்கோ, எப்படியோ அனுபவிப்பார்கள். தாங்கள் முன்பு போட்ட சத்தத்தின் எதிரொலி அது என்று அப்போது அவர்களுக்கு அது புரிவதில்லை. எப்போதோ போட்ட விதை, இப்போது விளைகிறது என அவர்கள் பழைய நினைவைத் தேடுவதில்லை. எல்லாம் கடவுளால் உண்டாவதாகப் பேசி விட்டுப் போய் விடுவார்கள். இந்த இடத்தில் நாத்திகவாதியின் அறிவியலறிவுதான் உண்மையானது. முன்பு செய்த வினையின் பயனாகத் தான் ஒன்று ஏற்பட முடியுமே தவிர, 'இல்லாதது பிறவாது! வள்ளுவரும் 'நினைக்கப்படும்' என்றாரே! காரணம் தெரியாதபோது அதுபற்றிச் சிந்திக்க வேண்டுமே தவிரக் காரணமே இல்லை என முடியாது. எனவே மறதியால், முனைப்பால், ஏமாற்றும் திறத்தால் ஒருவன் பழைய வினையை விட நினைத்தாலும் அது அவனை மறப்பதில்லை; விடுவதில்லை! வினையின் சுழற்சியைத் தெளிவாகக் காட்டக் கூடிய வகையில் நம்வாழ்க்கைதான் உருவாகி வருகிறது. இது ஒரு வியப்பான செய்திதான்! முன்பு செய்த சிறு செயலின் விளைவைக் கூடவா, கண்ணெதிரே காட்ட

வேண்டும். முற்பகல் செய்தது, பிற்பகல் விளையும் என்பதைப் பலரும் பல சமயங்களிலும் அனுபவித்து அறியத்தான் செய்கிறார்கள். ஆனால், இப்படியா? ஒவ்வொன்றிலும் அதன் எதிரொலியைக்கேட்கும்படி செய்வது? முறையாக, அணுக்கமாக, நெருக்கமாக வினை தன்னைத் தொடர்வதை ஒரு மனிதன் உணர்வதில்லை. மாறுவேடத்திலிருக்கும் புலனாய்வுத் துறை அதிகாரிக்கு எதிரே, ஒரு கொலையாளி செயற்படுவதைப் போல மனிதர்கள் கவலையின்றிச் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த வினை நம்மை மட்டும் நேரே பின்தொடர்ந்து, ஒரு காவல் துறைக் கண்காணிப்பாளர் நேரே உடுப்போடு, கையில் துப்பாக்கியோடு, அச்சுறுத்தியபடி தொடர்வது போல வருகிறது. மற்றவர்களுக்கு வினைவருகிற திசைகூடத் தெரிவதில்லை. நமக்கு அதையும் புலனாக்கிச் சித்திரவதை செய்வது கொடுமையல்லவா?

என்ன செய்வது? நம் வாழ்க்கை அப்படி அமைந்து விட்டது! நாம் மிகப்பெரிய செல்வக் குடும்பத்தில் பிறந்து, பெரும் பட்டங்கள் பெற்று, உலகமே கொண்டாடத் திருமணம் செய்துகொண்டு, ஊரறியப் பெருவாழ்வு வாழ்ந்து நாடறியப் பெரும் பழிபாவங்களில் ஈடுபட்டு—இப்படியே மிகவுயர்ந்த துறவற வாழ்வும் வாழ்ந்து வந்ததனால் வினையையும் விளைவையும்உடனுக்குடன் காணும்வாய்ப்பு நமக்குக் கிடைத்திருக்கிறது. மற்றவர்கள் அடுத்த பிறவியில் மட்டுமே காணக்கூடியவற்றை, நாம் இப் பிறவியிலேயே கண்டு அனுபவிக்கிறோம். அதுக்கு என் செய்வது! திருச்சி வாழ்க்கை ஒருபிறவி–'ஊதாரிமகன்' வாழ்க்கை!! காசிவாழ்க்கை ஒரு பிறவி—மிகவுயர்ந்த தவ வாழ்க்கை!! கடைசியாகத் திருச்சிக்கு நாம் வந்தநேரம்...விதைத்து விட்டுப் போனவன் அறுவடை நேரத்திற்கு வந்ததுபோல் ஆகிவிட்டது. கல்லணையைத் திறந்து விட்டு வந்தவன், வயலுக்கு மடையைத் திறக்க வேண்டிய நேரத்திற்கு வந்து சேர்ந்தது போல் நடந்துவிட்டது. மனத்தை விட்டுச் சொல்லவும் முடிய வில்லை; விழுங்கவும் முடியவில்லை;

நல்லவேளை, 'போதத்'தை எடுத்து நடத்தத் தொடங்கினோம். திருமுருகாற்றுப்படையை ஓதத் தொடங்கினோம். இல்லையென்றால் இன்னேரம் மாரடைப்பால் மாண்டிருப்போம்."

அடிகள் சிந்தனையோட்டம் எதனாலும் தடைபடுவதில்லை. இத்தகைய சமயங்களில் 'சாமிகள் நிட்டையில் ஆழ்ந்துவிட்டார்' என்றும் 'தியானத்தில் மூழ்கிவிட்டார்' என்றும் 'மனக் கண்ணால் கடவுளைக் கண்டு பேசிக் கொண்டிருக்கிறார்' என்றும் பலவாறு மக்கள் எண்ணத் தொடங்கினார்கள்.

'காசிச் சாமிகள்' கடவுளுடன் அடிக்கடி பேசிக் கொள்வதாக, நாடெங்கும் பெரும் வதந்தியே பரவிவிட்டது. அவரோ ஒவ்வொரு கணமும் வேதனைப்பட்டு, நைந்து, செத்தும் போகாமல் வாழவும் மாட்டாமல் துடியாய்த் துடித்துக் கொண்டிருந்தார்.

○

ஒருநாள் மாலை சொற்பொழிவை முடித்துவிட்டு, வழக்கம் போலப் பொதுமக்களைப் பேட்டி கண்டு 'அருள்வாக்கு'ச் சொல்வதற்காக அடிகள் தம்பீடத்தில் போய் அமர்ந்தார். இரவு 7 மணிக்குச் சொற்பொழிவு முடியும். 7–30 முதல் 8-30 வரை, வரிசையில் மக்கள் வந்து அவரை வணங்கிச் செல்வர். சிலருக்குத் திருநீறு இட்டுக் சைகை மட்டும் காட்டுவார்; மற்றும் சிலருக்கு ஓரிரு சொற்கள் கூறுவார். வருகின்ற ஆர்வலர்களோ அடிகளுக்கு ஏதாவது கையுறை கொணர்வதும் உண்டு. தங்கள் துன்பங்களை அவர்கள் சுருக்கமாக விவரிப்பார்கள். அவர் கண் பட்டாலும் கையில் தொட்டுத்தரும் விபூதியைப் பூசினாலும் நோய் நொடி நீங்குவதாக மக்களுக்குள் ஒரு நம்பிக்கை பரவியிருந்தது. அவருடைய அருள்வாக்கு நல்வாழ்வு தரும் என்றும் புன்னகையே பொன்னை அள்ளித்தருமென்றும் அவர்களுக்குள் ஒரு எண்ணம் வேரூன்றிவிட்டது. அன்று

வரிசையில் நின்றவர்கள் நூறுபேர் இருக்கும். மற்றவர்கள் எல்லாம் போய்விட்டனர். அடிகள் இருந்த அறைக்குள் ஒவ்வொருவராக அனுப்பப்பட்டனர். உலகம் எத்தனை விதம்? எத்தனை நிறம்? எத்தனை வேறுபாடு? என்பதை அடிகளுடன் இருந்தால், அந்த ஒருமணி நேரத்தில் நன்கு கண்டு தெளியலாம்.

அடிகளின் முன்னர், மானுட வெள்ளம்போல், ஒவ்வொருவராக ஒருவழியில் வந்து, மறுவழியில் மக்கள் போய்க் கொண்டிருந்தார்கள். நாட்டுடைமை ஆக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில், வேலை பார்க்காமலே சம்பளம் வாங்கிப் பிழைக்கும் ஓர் அதிகாரி தம் மனைவியுடன் வந்து, தம் குழந்தைக்குச் சரியான நேரத்தில் மருத்துவ உதவி பெற மாட்டாமல் அது இறந்து விட்டதற்காக மிகவும் வருந்தி அழுதார். அடிகள் 'கடமையைச் செவ்வனே செய்யுங்கள்' என்று அவருக்கு ஆறுதல் கூறினர். இவர் கடமையைச் செய்யாததால் எத்தனை குடும்பங்கள் உரிய காலத்தில் உதவி பெருமல் அல்லற்பட்டிருக்கும் என்பதை அது சுட்டிக்காட்டுவது போல் இருந்தது. பாலியல் பற்றிப் பச்சை பச்சையாகப் பேசும் மஞ்சட் கதைகளைச் சிவப்பு விளக்குப் பகுதி எனப் போட்டு, நாட்டைக் கெடுத்துவரும் ஓர் இதழாசிரியர் தம் மகள் ஒரு நடிகனை மணந்து கொண்டு, ஏமாந்துவிட்டதாக வந்து வருந்தியதைக் கேட்ட அடிகள் 'உலகத்தைக் காத்தோம்புவதே ஒரு எழுத்தாளனின் முதல் அறம்; காசு சேர்ப்பதல்ல' என்று வாழ்த்தி வழி அனுப்பினர். அடிகள் அதிகம் பேசுவதில்லை; பேசுவது நறுக்குத் தெறித்தாற் போலிருக்கும். ஓர் அரசியல் வாதி தம்மை மிகவும் குழைந்து கும்பிட்ட போது, 'வளையாதே' நழுவாதே, உண்மையாய் இரு' எனப் பொட்டிலடித்தாற் போல் வாழ்த்தினர். அவர் ஒருவரை வாழ்த்துவது மற்றவருக்குத் தெரியாது. ஒருவர் அறையைவிட்டு வெளியே போனபிற்பாடுதான் மற்றவர் உள்ளே அனுமதிக்கப்படுகிருர். கலப்பட மன்னரின் மகன், தவருன ஊசி போடப்பட்டு உயிர்போனது; கற்பழிக்கப்பட்ட பெண்ணின்

அவல நிலை; திருட்டுக் குற்றத்திற்காக வேலையை இழந்தவன் துயரம் எல்லாமே அவரிடம் முறையிடப்பட்டன. அவர் சொற்களே அவை பலவற்றிற்கு மாற்றாய், மருந்தாய் விளங்கின. எதுவும் குற்றம் குறைகள் அறியாதவர்களாய்ப் பெருந் துன்பங்களுக்கு ஆளானவர்களைக் கண்டால், அவர் கண் கலங்குவார்.

வினையென்பது ஒருமுறை செய்துவிட்டுப் பிறகு ஆர அமர அதை அனுபவிப்பது போன்றதன்று. வினை செய்வது, பயன் விளைவது என்பனவெல்லாம் தொடர்ந்து நடைபெறுகின்றன. ஒன்றை அனுபவிக்கும் போதே மற்றொன்றைச் செய்கிறோம். எது முந்துகிறது? எது பிந்துகிறது. எதற்கு எது மூலம்? எதற்கு எது பயன்? இவ்வாறு சிக்கலெடுக்க வராமல் இழை பின்னிய நூற்கண்டு போன்றதே வினைத்தொகுதி என்பதை அடிகள் நன்கு உணர்ந்தார்.

சொற்பொழிவு முடிந்து, அருள்வாக்கும் முடிந்து, பாலும் பழமும் சாப்பிட்டு முடிந்த நேரம். எல்லோரும் உறங்கிப் போய்விட்டார்கள். அடிகள் திருமுருகாற்றுப் படையை எடுத்து வைத்துப் படித்துக் கொண்டிருந்தார். அது திருவாவிநன்குடிப்பகுதி. பழனியில் முருகன் தன் துணையுடன் இணைபிரியாமல் இருப்பதாக நக்கீரர் கற்பனை செய்கிறார். அப்போது முருகனை வணங்கக் கியூ வரிசையிற் போலத் தேவர்களும், திருமாலும், சிவபெருமானும், இந்திரனும், நான்முகனும், ஆதித்தர் உருத்திரர் என அனைவரும் உற்ற குறை நீக்கி, வரம் பெற்று மகிழவென்று முண்டியடித்துக் கொண்டு வருகிற காட்சி அவர் நெஞ்சத் திரையில் நகர்ந்து நிழலிட்டுச் சென்றது. பாடலைப் படித்துத் தம்மை மறந்திருந்த அடிகள் அங்கிருந்து எழுந்து சற்றே உலவலானார்.

○

இரவு *11* மணி அடிக்கும் ஒலி கேட்டது. அடுக்களைப் பக்கம் விளக்கெரிந்து கொண்டிருந்தது. அங்கு சென்ற

அடிகள் சமையற்காரனும் எழுத்தர் ஏகாம்பரமும் ஏதோ பேசிக் கொண்டிருப்பதைக் கூர்ந்து கேட்டார். அவர்கள் பேச்சில் இருந்த ஒரு சில சொற்கள் அவரை அப்படியே நிலைகுத்தி நின்று, அதை முழுவதும் கேட்கவேண்டும் என்ற ஆர்வத்தைத் தூண்டிவிட்டன. அடிகள் அனைய ஒருவர் எதைச் செய்யக் கூடாதோ அதை அவர் அங்கு செய்து கொண்டு—அஃதாவது ஒட்டுக் கேட்டுக் கொண்டு நின்றார்.

''இந்தக் கனகசபை இந்த ஊர்க்காரன்தான். சென்னைக் குக் குடும்பத்தோடு ஓடிப்போனவன். இப்போ சிறையிலே மாட்டிக்கிட்டான்'' இது சமையற்காரன் குரல்.

ஏகாம்பரம் குரல் தொடர்ந்து கேட்டது: "இவன் எத்தனை கேசிலே தப்பினான் தெரியுமா? இவன் பலே கைகா ரண்டா? இவன் அப்பன் மானத்துக்கோசரம் ஆத்திலே விழுந்து செத்தான், வாங்கின கடனைக் கட்ட முடியாமே. இப்போ இந்தப் பயல் என்னடான்னா ஒரே சொத்தைக் காட்டி அஞ்சு பேரை ஏமாத்திக் கடனை வாங்கி ஏப்பம் விட்டிருக்கான். அஞ்சு பேருமா ஏமாறுவான். அதிலே ஒருத்தன் பிடிச்சுட்டான் வசமா. இப்போ கம்பி எண்ணப் போறான்."

''திருச்சிமணி நல்லா விக்குதடா. இப்படிச் செய்திகளைச் சுடச்சுடத் தருறதினாலே, இப்ப இதுக்கு நல்ல பேரு. படம் போட்டிருக்கான் பார்த்தியா படம்.''

''அப்பனைப் பார்த்தியா...சினிமா நடிகர் மாதிரி இல்ல. அம்மாவைப் பாரு. எவ்வளவு பவ்வியமா...பயலைச் சின்ன வயசிலே எடுத்தபடமுடா". அவர்கள் மேலும் ஏதேதோ பேசிக் கொண்டிருந்தார்கள். அடிகளுக்கு ஐயம் தீர்ந்து விட்டது. சன்னல் வழியாக எட்டிப் பார்த்தார். பிறகு திரும்பிவிட்டார். திருச்சிமணியில் தம் மூத்த மகன் கனக சபை கைதான செய்தி ஒன்று படத்துடன் வந்திருப்பதை அவர் யூகித்துக் கொண்டார். இரவு மணி பனிரெண் டுக்குப் பிறகு, அவர் ஒரு முறை அடுக்களைப் பக்கம்

போனபோது அவர்கள் விளக்கை அணைத்துவிட்டு நன்கு உறங்கிக் கொண்டிருந்தார்கள். அங்கு மின்விசிறிச் சுழற்சியில் தாளம் போட்டுக் கொண்டு, ஒரு மூலையில் சுருண்டு கிடந்த 'திருச்சிமணி'யை அவர் எடுத்துப் பார்த்தார். அதில் தாமும் தன் மனைவியும் கனகசபையும் கற்பகவல்லியும் இருப்பதைக் கண்டு ஒரு கணம் துடித்துப் போனார் அவர். கனகசபை சீட்டுக் கம்பெனி தொடங்கிப் பலரை ஏமாற்றிவிட்டு, ஓடிவிட்டதாக அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. கனகசபையின் மூத்தமகன் சினிமாவில் நடிக்கப் போய், முதற்படமே படுதோல்வியாகி, இப்போது ஒப்பனை செய்யும் 'மேக்கப்பு மேனக'ப் பிழைப்பு நடத்துகிறானாம். மகள் எம்.பி.பி.எஸ். படிக்கிறாளாம். மனைவி பட்டதாரியாம். அவள் வெளிநாட்டுப் பயணிகளுக்கு வழிகாட்டியாக வேலை பார்த்து, அதனால் குடும்பம் நடைபெறுகிறதாம். செய்தியின் முடிவில், ''கனகசபை திருச்சியில் மிகவுயர்ந்த குடும்பத்தில் பிறந்தவன் என்பது குறிப்பிடத்தக்கது' என்று குறிப்பிட்டிருந்தார் 'நமது நிருபர்.' அது சரவணர் உள்ளத்தே ஈட்டி போல் தைத்தது.

சமையற்காரன் ''இப்படிப் பட்டவனுங்க நம்ம காசிச் சாமி பேச்சைக் கேட்டாலாவது கொஞ்சம் திருந்துவானுங்க," என்று கடைசியாகக் கூறியது, அடிகள் காதில் இப்போது ரீங்காரமிட்டுச் சுழன்றது. அவர் உதடுகள் விரிந்து, புன்னகை அரும்பியது. ''அடிகளின் பேச்சைக் கேட்டால் உலகம் திருந்தக்கூடும், ஆனால் அதே உலகம் அவருடைய வாழ்வைப் பார்க்க நேர்ந்தால்,'' என்று எண்ணிய போது, அவர் தம்மைத் தாமே காறி உமிழ்பவர் போல் அருவருத்துக் கொண்டார்.

அடிகள் புரண்டு புரண்டு படுத்தார். இமை ஒட்ட மறுத்தது. விதி என்ற கொடிய பாம்பு மேலே ஊர்கிறது. கருநாகத்தின் நெளிவு அவரைப் புல்லரிக்க வைக்கிறது. அது கடித்துத் தொலைத்தாலாவது ஒரேடியாக ஒழிந்து தொலைக்கலாம், வாயைப் பிளக்கிறது; கிட்ட வருகிறது;

சீறுகிறது. ஆனால் திரும்பி ஓடி விடுகிறது. அடிகள் தம் நல்வினைக்கும் தீவினைக்கும் ஒரு போராட்டம் நடப்ப தாக எண்ணி நைந்தார்.

''ஒருவன் செய்த வினை அவனை விட்டு விட்டு, அவனு டைய பரம்பரையை, பிள்ளை குட்டிகளைத் தாக்குவது முறையா? இதில் ஏதோ தவறிருக்கிறது," என்றெல்லாம் அவர் மனம் மயங்கினார். இறுதியில் ''எல்லா நிகழ்வு களுக்குமே ஒரு இயைபு இருக்கிறது; காரண காரியத் தொடர்ச்சி இருக்கிறது; அதன் அளவு, கால்நிலை, உந்துதலின் ஆற்றல் போன்றவற்றை யாராலும் கணிக்க முடியவில்லை", என்று தம்முள் தாமே மறுகினார்.

"இப்போது நாம் செய்வது முறையாகுமா? நாம் யாரென் பதைப் பொய்த்து, ஏமாற்றி வாழ்கிறோம். ஆனால் நாம் நம்மளவில் இப்போதைககு உத்தமரென்றே நம் மனம் வாதிடுகிறது. உண்மையில் இது ஒரு பெரிய மோசடி யே. அறம் என ஒன்றை முழுவதும் நம்பினால், ஒருவன் தலைமறைவாய்ப் பிறரையெல்லாம் ஏமாற்றி நடிப்பதை எவ்வாறு முறையென்று ஏற்கமுடியும்? இவ்வாறுதான் ஒவ்வொருவனும் தான் தான் செய்வதை முறையென்று நம்பிவிடுகிறான். தன்னை வைத்தே அவன் உலகை அளக்கிறான். 'தான்' என்ற பலகணி மூலமே அவன் உலகைப் பார்க்கிறான். அதில் உண்மை தெரியாது. எனவே ஒரு வழியில் நாம் இத்தண்டனையை மனமகிழ்ச்சி யோடு ஏற்கவேண்டும். செய்ததற்குத்தான் விளைவுண்டு. நாம் விதைத்ததையே அறுவடை செய்ய நேர்வதனால், அதனை மிக்க பொறுமையுடன், ஏற்பதே நெறியும் முறை யுமாகும்'', என இவ்வாறு அடிகளின் சிந்தனை ஓடிக் கொண்டிருந்தது.

வினையைப் படைத்தவன் அதனையும் தனித்தன்மையுடன் படைத்துள்ளான். அது செய்தவனை, செய்த அளவிற்கு செய்தவன் உள்ளும் புறமும் மனத்திலும் செயலிலும் தோன்றி வெளிப்பட்ட அளவிற்கு ஏற்பச் சென்று படர்

கிறது. தம்மையும் வினையையும் இயக்குகிற, கொண்டு கூட்டுகிற இறைவன் ஆணையை நினைந்து அடிகள் கண்ணை மூடிக்கொண்டார். அங்கே யானை மீதமர்ந்த முருகனைக் கண்டார், தெய்வயானையுடன் அமர்ந்து தேவர்க்கும் மூவர்க்கும் யாவர்க்கும் வரிசை வரிசையாக அருள் பாலிக்கும் அவனது முகப்பொலிவும்பெருமிதமும்முன்னே வந்து நின்றன. சிறிது மன அமைதி கண்டவராய் அப் பின்னிரவுப் போதினிலே சிறிது கண்ணயர்ந்தார் அவர்.

O

''நாவியல் மருங்கின் நவிலப் பாடி
விரையுறு நறுமலர் ஏந்திப் பெரிதுவந்து
ஏரகத் துறைதலும் உரியன்''

6

மாலையிலும் ஒரு முறை அடிகள் நீராடுவது வழக்கம். தூய, தாமே துவைத்த காவியுடை அணிந்து, பொன்னிற மேனி எங்கும் வெண்ணிறத் திருநீறு துலங்க, அவர் மாலை ஐந்தரை மணிக்கெல்லாம் தம் இருக்கைக்கு எழுந்தருளுவார். நறும்புகை எழுந்து, மடமும் சுற்றுப் புறமும் மணங்கமழும். அடிகள் தம் மனத்திற்குகந்த திருமுருகாற்றுப்படையை, மனத்திற்குள் ஓதுவார். கண்ணை மூடித் தியான நிலையில், மோனமாகவே பாடலடிகள் ஓடிச் செல்லும். அவர் மனத் திரையில் முருகக் காட்சிகள் ஒளி வீசும். வானுக்கும் பூமிக்குமாய் வளர்ந் தோங்கும் ஒளியுடனே, நீலக்கடலில் எழும் செஞ் ஞாயிறு என, மயில்மீது முருகன் காட்சியளிப்பான். அவன் தோற்றம், உடனிருக்கும் தெய்வானை அழகு யாவும் கட் புலனுகும். கவின்மிக்க சூரரமகளிர் பலர், மலையுச்சியிற்கூடி, சேவற்கொடியை வாழ்த்தி ஆடிப்பாடுவர். பனிக்கடல் நடுவே சூர்முதல் தடிந்த நெடுவேலை, அச்சத் தைத்தரும் பேய்மகள் பாடித் துணங்கைக் கூத்தாடுவாள். அவனிடம் நல்ல நெஞ்சமுடைய இரவலர்கள் நாடிச் சென்று, பாடி நின்று எண்ணிய எண்ணியாங்கு எய்துவர்.

அவனே இயற்கை அழகு மிக்க திருப்பரங்குன்றத்தில் வீற்றிருப்பான். அங்கு சென்றால் 'மாடம் மலி மறுகிற் கூடலின் குடவயின், அஞ்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும் அக் குன்றினில் கண்டு, மகிழலாம். அஃதல்லா மலும் பன்னிருகையும் பாற்பட இயற்றி, மூவிரு முகமும் முறை நவின்று, வாச்சியம் முழங்க மயிற்கொடி அகவ, திருச்சீரலைவாய் எனப்படும் திருச்செந்தூரிலும் அவன் வீற்றிருக்கக் காணலாம். மூவரும் தேவரும் வரிசையில் வந்து, உறுகுறை மருங்கில்தம் பெறுமுறை கொள்வதற் காக, வான வழியாக வந்துடன் காண ஆவிநன்குடி எனப்படும் பழனியிலும் அவன் எழுந்தருளியிருப்பான். இருபிறப்பாளராம் அந்தணர்கள், புலராக் காழகம் புலர உடுத்தி, மணமுறு நறுமலர் ஏந்தித் தொழ ஏரகத்தின் கண்ணும் அவன் வீற்றிருந்து காட்சிநல்குவான். அஃதல் லாமலும் குன்றங்கள் தோறும் வேலன் கானவர்களுடன் குரவை ஆட, தானும் மகிழ்ந்து மான்பிணை போலும் மகளிரைத் தழுவிக்கொண்டு ஆடுகின்ற காட்சி கண் கொள்ளாக் காட்சியாகும். குறமகள் வெறியாடு களம் வகுத்துக் கொண்டாடும் இடத்திலும், ஊரூர் கொண்ட சீர்கெழு விழாவிலும் காட்டிலும் காவிலும் ஆற்றிடைக் குறையிலும் ஆற்றிலும் குளத்திலும் சதுக்கம், சந்தி, புதிய கடம்பமரம், மன்றம், பொதியில், கந்து எனப்படும் மரத்தூண் நட்ட இடம் ஆகிய அனைத்து இடங்களிலும் அவன் காணப்படுவான். அருவிகள் ஒலித்து ஓடி வரும் சிலம்பாற்றின் கரையில், பழமுதிர்சோலையிலும் அவனைக் காணலாம். வேண்டுநர் வேண்டியாங்கு எய்தி வழிபட, அவன் ஆண்டாண்டு உறைகின்ற அழகே அழகு. அவனை முந்துறக்கண்டு முகன் அமர்ந்து வணங்குவார், பெறலரும் பரிசில் பெறுகின்ற சிறப்பு அனைத்தும் கண் எதிர் வந்து ஆறுதல் தரும்; வாழ்விலோர் நம்பிக்கை பிறக்கும்!

அடிகள் 5-59 க்குத்தான் கண் திறந்து, அந் நெடுங் கூடத்தை நோக்குவார். அப்போது அக் கூடம் முழு

வதும், ஆங்கொருவர் ஈங்கொருவராகத்தலைகள் தெரியும். ஆறு மணிக்கெல்லாம் அவர் 'முருகனே . . . செந்தில் முதல்வனே... மாயோன் மருகனே...... ஈசன் மகனே ஒரு கை முகன் தம்பியே!' என்றுகடவுள் வாழ்த்துக்களைப் பாடத்தொடங்குவார். 6-05 வரை அவர் பாடி முடிக்கும் போது, அக் கூடம் மக்களால் நிரம்பி வழியும்.

இது ஒரு அற்புத நிகழ்ச்சி போலப் புதிதாகப் பார்ப்பவர் களுக்குக் காணப்படும். அடிகள் சரியாக ஆறு மணிக்கென்ருல்ஆறுமணிக்கே தம்பேச்சைத் தொடங்கி விடுகிருர் என்பதுநன்ருக உறுதிப்பட்ட படியால், கூட்டம் அந் தக் குறிப்பிட்ட நேரத்தில் அங்கு ஒன்று கூடியது. சிறிது கூட மாற்றமோ, காலத் தாழ்வோ இன்றிப் பேசுதற்குத் தொடங்கி விடுவார் என்பதனுல் கூட்டம் ஐந்து அல்லது பத்து மணித்துளி இடைவெளிக்குள் உள்ளே வந்தமர்ந்து நிரம்பி வழியத் தொடங்கியது. பெரும்பகுதி ஒரு மணி நேரம் பொழிவு நிகழும். இறுதியில் பத்துப் பதினைந்து மணித்துளிகள் கூட்டத்தினர் கேட்கும் ஐய வினுக்களுக்கு விடை கூறுவார். பின்னர் 7–30 மணி முதல் ஏறத்தாழ ஒரு மணி நேரம் மக்கள் வரிசையில் வந்து, அவரை வணங்கி 'அருள்வாக்குப்' பெற்றுச் செல்வர். அப்போது அடிகள் அவர்களைத் தனிப்பட அறிந்து கொள்வார். அவர்களுடைய குறைகளைக் கேட்டு, அதன் காரணங் களைப் பலகால் உசாவி அறிவார்.

திருச்சிக்கு வந்த ஒன்றரை ஆண்டுகளில் 'காசிச்சாமிகள்' இந்த நடைமுறை மூலமாக எல்லோரையும் பற்றி நன்கு தெரிந்து கொண்டார். திருச்சியிலேயே பரம்பரையாக வாழ்பவர்களுக்குக் கூட இவ்வளவு விவரம் தெரிவ தில்லை. காசிச்சாமிகள் மிக அழகாகத் தமிழ் பேசுவதை யும் தமிழ்நாட்டைப் பற்றித் தெரிந்து வைத்திருப்பதை யும் கண்டு மக்கள் வியப்படைந்தார்கள். ''அவர் நம்ம நாட்டுக்காரர்தானே. ஏதோ இளமையிலேயே வீட்டில் கோபித்துக் கொண்டு, வெறுப்படைந்து போனவர்

தானும்'' என்று அவர்கள் தாமே யூகித்தபடி பேசிக் கொண்டார்கள். யாருக்கும் அவரை நேரே வினவும் மனவுறுதி கிடையாது. அவரும் தம்மைப் பற்றி, மறந்து கூடப் பேசுவதில்லை. அடிகளின் சொற்பொழிவிலும் நடைமுறையிலும் அனைவரும் கட்டுப்பட்டு, அவர் வழி நின்றனர். அடிகளுக்குச் சமஸ்கிருதம் மிக எளிதாகத் திற மாக வந்தது. ஆங்கிலம், சமஸ்கிருதம், இந்தி போன்ற பல மொழிகளில் அவர் மேற்கோள் காட்டுவதைப் பார்த்து எல்லோரும் வாய் பொத்தி, வியந்து நின்றார்கள்.

அன்றொரு நாள் வெளிநாட்டுக்காரர் ஒருவர் அடிகளைப் பார்க்க வந்திருந்தார், அமெரிக்க நாட்டு "ஹரே கிருஷ்ண'' இயக்கத்தவர் போலவும் ஹிப்பி போலவும் காணப்பட்ட அவருடன், ஒரு தமிழ்நாட்டுப் பெண்மணி யும் வந்திருந்தாள். அவளும் ஹிப்பி போல, மேலே பனியன் மட்டும் அணிந்திருந்தாள். நடுத்தர வயதிருக் கும்; நன்றாக ஆங்கிலம் பேசினாள். அவள் தமிழ்நாட்டுப் பெண்போலச் சிறிதேனும் கூச்சமோ வெட்கமோ படுபவளாகத் தோன்றவில்லை. அவளை எங்கோ பார்த்த மாதிரியும், நன்றாக அறிமுகமான மாதிரியும் இருந்தது. அன்று இரவு தம்மை வணங்கி, அருள்பெற வந்தவர் வரி சையில் இவளையும் காண நேர்ந்தது அடிகளுக்கு ஓர் அதிர்ச்சியைத் தந்தது. அவளைப் பார்த்தவர்கள் கூசும் படியாக அவள் நடையுடை பாவனைகள் இருந்தன. அடி கள் ஒரு மாதிரியாகக் கூர்ந்து அவளைப் பார்ப்பதைப் பார்த்து, அந்த வெள்ளைக்காரன் 'அவள் என் வழிகாட்டி' என்று ஆங்கிலத்தில் கூறினான். அவள், அரசினர் வெளி நாட்டவர்க்கு வழி காட்டத் தன்னைப் போன்ற பலரை வேலையில் வைத்துள்ளதாகவும், தான் கடந்த ஓராண்டாக இவ் அலுவலைப் பார்த்து வருவதாகவும் இப்படி வெளி நாட்டிலிருந்து யார் வந்தாலும் அவர்களைத் தமிழ்நாடு முழுவதும் சுற்றிக் காட்டுவது தன் கடமையென்றும் மறு நாட்காலை தெற்கே தாங்கள் புறப்படப்போவதாகவும் கூறினாள்.

அடிகள் அவள் பேச்சைக் கேட்கக் கேட்க மனம் மயங்கினார்; எதுவோ போட்டு அவர் மனத்தை அறுப்பது போல இருந்தது. அவ் அமெரிக்கருக்கு நம் சமய உண்மைகள் பற்றிய ஐயங்களை விளக்கிக் கொண்டிருந்த அவர், இடையில் தம்மையும் அறியாமல் அப் பெண்ணைப் பார்த்து, 'உன் பெயரென்ன? ஊர் என்ன? உன் கணவன் வேலை பார்க்கவில்லையா?' என்று கேட்டு வைத்தார். அவள் தன் பெயர் 'மிஸ் மலர்' என்று கூற, தொடக்கத்திலேயே 'மிஸ் மலர் அல்லது மிஸிஸ் மலர்?' என்று அடிகள் மறித்துக் கேட்டார். ''நீ திருமணமானவள்தானே? ஏன் மறைக்கிறாய்?'' என்ற தொனி அதில் இருந்தது. அவள் அதிர்ச்சியடைந்து, அடிகளிடம் எதையும் மறைக்கக் கூடாது, மறைக்க முடியாது என உணர்ந்தவள் போல மேலே பேசத் தொடங்கினாள். அவள் முகம் கருத்துப் போய்விட்டது. சாமியார் உண்மையை அறிய வல்லவர் போலும் என்ற அச்சம் அவளை ஆட்டிப் படைத்ததால், அவள் தடுமாறினாள். ''எனக்குக் கலியாணம் ஆகிவிட்டது. என் கணவன் சிறையில் இருக்கிறார். அவருக்கு அதுதான் தொழில். எனக்குச் சொந்த ஊர் திருச்சிதான். பெரிய மிராசுதார் குடும்பத்தில் பிறந்து, உலகறிந்த பெரிய ஜமீந்தார் வீட்டில் வாழ்க்கைப்பட்டேன். ஆனால் தலைவிதி இப்போது 'கைடாக' அரசாங்கத்தில் சேர்ந்து வேலைபார்த்து, வயிறு வளர்க்கிறேன்" என்று அவள் குரல் தழுதழுக்கக் கண்ணீர்த் திவலைகள் சிதறத் தமிழிலேயே பேசினாள். தன் குறைகள் அந்த வெள்ளைக்காரருக்குத் தெரியவேண்டாம் என்று அவள் நினைத்திருக்க வேண்டும்.

''உன் கணவன் சமீபத்தில்தான் சிறைக்குப் போனானா? அவன் பெயர் என்ன?" —அடிகள் சில நாட்களுக்கு முன் வெளிவந்த செய்தியை நினைவிற் கொண்டு இவ்வாறு கேட்டார்.

"அவர் பெயர் கனகசபை. இப்பொழுதுதான் இரண்டு வருசம் ஜெயில் சொல்லியிருக்காங்க. ஆனால் குடிச்சுப்பிட்டு, சீட்டாடிப்பிட்டுப் பத்துப் பதினைந்து நாள் சிறைக்

குள்ளே போயிட்டுப் போயிட்டு வருவது அவருக்குச் சர்வ சாதாரணம்,'' என்று அவள் பேசியதைக் கேட்கக் கேட்க அடிகள் மனம் படபடத்தது. அவளோ தன் ஆற்ருமை யைச் சொல்லிக் கொட்டிக் கொண்டிருந்தாள். அடிகள் மனமோ அனலிலிட்ட புழுப்போலத் துடித்துக் கொண்டி ருந்தது. அவள் தன் மகன் ஒன்றுக்கும் உதவாமல் போய் விட்டதைச் சொல்லி அழுதாள். ''நல்லுசாமி என்று அவன் தாத்தாவுக்கு ஒரு நண்பன். பட்டணத்திலே சினி மாத் தொழிலில் ஈடுபட்டு, சகல கெட்ட செயல்களேயும் செய்து வருகிருன். அவனேடை சேர்ந்து என் மகன் சினி மாவிலே நடிச்சுக் கெட்டுக் குட்டிச் சுவராகி, இப்போ மேக்-அப்-மேஞ சினிமா நடிகைகளுக்குச் சீவிச் சிங்கா ரிச்சுப் பிழைக்கிருன். என் மகள் ஒருத்திதான் இப்போ உருப்படியா எம்.பி.பி.எஸ். படிச்சுக்கிட்டு இருக்கிருள். பூவண்ணர்னு ஒருத்தர். அவரும் என் மாமஞர்க்கு வேண் டப்பட்டவர். மிகவும் நல்லவர். அவர் ஒரு காலத்திலே அவருக்கு என் மாமஞர் செய்த உதவிக்கு நன்றியா, இப்போ இந்தப் பெண்பிள்ளேயைத் தன் வீட்டோட வச் சுப் படிக்க வைக்கிருர். அவருக்கு ஒரு மகன். அவனும் எம்.பி.பி.எஸ். படிக்கிருன். ஒருவேளே தன் மகனுக்கே இவளேக் கொண்டுக்குவாரோ, என்னவோ? இந்தப் பயல் தன் தங்கச்சியையும் நல்லபடியா வாழ விடாமே, சினிமா ஆசைகாட்டி, அடிக்கடி தொந்தரவு செய்கிருனம். அவள் கொஞ்சம் அழகா இருப்பாள். அவளேயும் சினிமா நடிகை ஆக்கிப்பிடுவேன்னு, அடிக்கடி போய் வற்புறுத் திச் சங்கடப்படுத்துகிருனம். குடும்பமே நாசமாப் போச் சுங்க. நான் இப்படி 'கைடா' வாழ்ந்தால் தவிர, வேறு எனக்குப் புகலிடம் இல்லீங்க. எங்க குடும்பத்திலே இந் தப் பெண்ணுவது நல்லா இருக்க, நீங்கதான் அருள் செய் யணும். உங்களாலே முடியாதது இல்லே சாமி!''

அவளுக்குக் கண்ணீர் மாலேமாலேயாகக் கொட்டியது. அவள் உடைக்கு மாருன இயல்பு இப்போது அவளிடம் மேலோங்கி நின்றது. அவள் தனக்குத்தானே கூசிஞள்;

நெளிந்தாள்; அருவருத்துக் கொண்டாள். அடிகளுக்கு என்ன செய்வதென்று தோன்றவில்லை. அவர் உதடுகள் அசைந்தன; அவர் கண்களும் பனித்து நின்றன. அதனை யே தனக்கு வாழ்த்தாக எடுத்துக் கொண்டவள் போல அவள் புறப்பட்டாள்; அந்த வெள்ளைக்காரனும் அவளைப் பின் தொடர்ந்தான்.

○

மனிதவாழ்வின் நெளிவு சுழிவுகளையும் மேடு பள்ளங்களை யும் அறிந்து கொள்ளக்கூடிய இடத்தில் சரவணர் வீற்றி ருந்தார். அவருடைய வாழ்வின் மேடுபள்ளங்களும் அங் குத் தட்டுப்பட்டபோது அவர் அயர்ந்தார். வாழ்வின் ஒட்டு மொத்தமான வளர்ச்சியில் அதன் உள்ளும் புறமும் ஊடுருவி அறியவல்ல அவர், தம் வாழ்வின் சிதறல்களைக் காண நேர்ந்தபோது திகைப்பது தவறன்றே? தம் கண் ணெதிரே, தம் மருமகளையே கொண்டு வந்து நிறுத்திய இறைவனை அவர் கடிந்து கொண்டார். தம்மைப் பற்றிய எண்ணங்களையும் ஓர் அயலவனைப் பற்றிய எண்ணங் களே போல விருப்பு வெறுப்பின்றிச் சிந்திக்க அவரால் முடியவில்லை. அந்த அளவு சாதாரண விளைவுகளாக அவர் வாழ்வின் விளைவுகளும் அமையவில்லை. நன்றாக உரமிட்ட பயிர்போல அவருடைய வாழ்க்கைவிளைவுகள் மேலோங்கி நின்றன. பயிர் தலை தூக்கி ஆடியது. ஓர் உழவன் தான் விதைத்த பயிர் செழித்து வளர்வது காண மனமகிழ்ச்சி அடையவேண்டுமே தவிர, வருந்தலாமா? தினையை விதைப்பதற்குப் பதிலாக வினையைவிதைத்து விட்டோமே என்று பயிர் வளர்ந்தபிறகு வருந்திப் பயனென்ன? அவள் பெரிய மிராசுதார் மகள். ஆங்கிலக் கல்வியில் மகளிர் யாரும் பட்டம் பெருத காலத்தில் படித்துப் பட்டம் பெற் றவள். அவள் தந்தை ஒரு தமிழ் ஆர்வலர். அதனுல் தான் 'மலர்விழி' என்று அவர் அவளுக்குப் பெயரிட்டி ருந்தார். ஒருவருடைய வாழ்க்கைக்கு அவர் ஓரளவுதான் பொறுப்பாகின்ருர். அவருடைய சூழல், பின்னணிதான்

பெரும்பங்கு வகிக்கிறது. இப்போது இம் மலர்விழியைச் சினந்து பயன் என்ன? அல்லது அவள் கணவனைத்தான் எவ்வாறு குறை கூற முடியும்? அவனையும் கெடுத்தது தாமே என அடிகளின் உள்ளம் வாதிட்டது. "நாம் அன்று குடும்பப் பொறுப்புணர்ந்து நடந்திருந்தால், இவ்வாறு ஒரு மரமே பூவோடும் பிஞ்சோடும் பட்டுப்போக நேர்ந் திருக்குமா? வேரும் தூரும் கெட்டால் மரம் தப்பாது என்பதற்கு நம் வாழ்வு ஒரு சான்ருகிவிட்டது. இதுபோல் தான் ஒவ்வொருவருடைய வாழ்விலும் காரண காரியத் தொடர்ச்சியாக நன்மையும் தீமையும் மாறி மாறி வரு கின்றன. காரணமின்றி ஒருவன் கெட்டான் என்பதும், கேட்டுக்குக் காரணம் தெரியவில்லை என்பதும் சும்மா ஏமாற்று. தம்மைத் தாமே மறைத்துக் கொள்வதாகும்.'' இவ்வாறு அடிகள் நெஞ்சம் ஓடியது...''தீமை எங்கே விழுந்து, கருவாகிறது என்பதைப் பலரும் அறிவதில்லை. அக் கரு எப்போது, யாரால், எங்கு விழுந்தது? எப்போது கால் கொண்டது? என்பனவெல்லாம் வெளிப்படப் புல ஞவதில்லை. நம் தீமைகளில் பல மனத்தில் முளை கொள் கின்றன; மறைமுகமாக நாற்றுப் பதிகின்றன; உலகமறி யாமல் பயிராகின்றன. அதனுல்தான் ரிஷி மூலமும் நதி மூலமும் அறிய முடியாதது போலப் பல சமயங்களில் வினை மூலமும் அறிய முடிவதில்லை. அறிய முடியாததி ஞலேயே வினைக்கு மூலம் இல்லை என்று கூறிவிட முடி யாது.''

கலப்படம் செய்பவர் செய்யும் தீங்கு எங்கே போய் முடி கிறது. பத்திரிகைத் துறையில், பாலுணர்வை ஊட்டி, பணம் சேர்க்கும் 'சிவப்பு விளக்கு' நோயாளியினுல் ஏற் படும் தீங்குகள், அவனை மட்டும் பாதிக்காமல் நாட்டை அழிப்பதன் காரணம் என்ன? நாட்டுடைமையாக்கப்பட்ட துறையில் வேலை பார்ப்பவன் நாட்டையே ஏமாற்றி வாழ் வது எங்குபோய் முடியும்? பிற பெண்களைக் கற்பழித்து, வெறி கொண்டவனுல் ஒன்றுமறியாத பேதைப் பெண் பலியாகிருளே, காரணம் என்ன? இப்படியே சிந்தித்துக்

கொண்டுபோனல் வினை முடிச்சில் தொடக்கம் எங்கே இருக்கிறதென்பது தெரியாமலும் முடிவு எங்கேயிருக்கிறதென்று தெரியாமலும் திண்டாடிப் போவோம். எவ்வளவு குழம்பிப் போய் இருந்தாலும், சிக்கலுண்டு கிடந்தாலும், பின்னிப் பிணைந்து கலந்து மறைந்து போனாலும் வினையென்பது காரணகாரிய இயைபுடையதே, மூலமும் விளைவும் விதையும் பயிருமாகிய தொடர்புடையதே என்பதை மறுக்க முடியாது. அடிகள் ஏதோ ஒரு நூலிழையைத் தொட்டு, ஒரு வினைத் தொடர்ச்சியைக் காண முற்படுவார் போலத் தம் வினை என்ற இழையை எடுத்துக் கொண்டு, அதன் வழி தம் மனச் சிந்தனையை ஓடவிட்டுக் கொண்டு இருந்தார்.

வேலையாள் வந்து பாலும் பழமும் ஆகிய உணவை அவர் எதிரே வைத்து, அங்ஙனம் வைத்ததை நினைவூட்டியபிறகு தான் அவர் சிந்தனையோட்டம் தடைபட்டது. அடிகள் தியானத்தில் மூழ்கியிருந்ததைக் கலைக்க நேர்ந்தமைக்கு அஞ்சியவன் போல ஏவலாளன் நடுங்கிக் கொண்டு அவர் எதிரே நின்ருன். அவர் மனம் வினைக்கு எதிரே கையைக்கட்டிக்கொண்டு, நடுங்கி நின்று தத்தளிப்பதை அவன் அறியமாட்டாததினலேதான், அதனைத் தியானம் என அவன் மயங்கி நின்ருன். வினையோட்டத்திற்குப் புத்தி தத்துவத்தில் பொருந்தி நிற்கும் வாசனையாகவுள்ள நினைவுகளும் எண்ணங்களும் விருப்பங்களும் கனவுகளும் காரணங்களாக உதவுகின்றன. வெளித் தெரியும் செயல்களிலேயும் ஒரு பாதிகூட அறிய முடியாத நாம், வினையோட்டத்தின் மூலத்தை அறிவதென்பது எவ்வாறு இயலும்? தொடக்கப்பள்ளியிற் கூடத் தேர்ச்சி பெருத ஒருவன், முதுகலைத்தேர்வை எழுத முயன்ற கதை தான் இது!

தம் எதிரே இருந்த பெரிய உண்டியலை அவர் கண்கள் எதிர்நோக்க நேர்ந்தது. அதில் அந்தக் கலப்படக்காரர் முதல் அமெரிக்கன் வரை ஒவ்வொருவருடைய காசும்

விழுந்து கிடக்கிறது. அதில் பெரும்பகுதி கறுப்புப் பண மாகவும் இருக்கும். இருந்தாலும் உண்டியலில் விழுந்த வுடன் அது புனிதமாகி விடுகிறது என நாம் நம்பு கிறோம், இது ஒரு மனப் பிரமையே! உண்மையில் அவ் வுண்டியலே ஒரு பாவமூட்டை என்று அடிகளுக்குப்பட்டது. மடம், சடங்கு, உண்டியல், கும்பிட்டு விழ்வது, ஆசிகூறு வது ஆகிய எல்லாவற்றையும் துறந்த வாழ்வுதான் உண்மைத் துறவு என அவருக்குத் தோன்றியது. என்ன செய்வது? தம்மாலும் இந்த உலகியலை விட்டு வெளியேற முடியவில்லையே என அவர் கவலைப்பட்டார். எப்போது இவ் 'விஷச்சக்கரத்தை' விட்டு வெளியேறும் நாள் வரும் என அவர் துடியாய்த் துடித்தார்.

அடிகள் பழத்தைச் சாப்பிட்டு விட்டு, பாலைப்பருகி விட்டு வேலையாளை அனுப்பி வைத்தார். திருவேரகப் பகுதி நினைவில் ஓடியது, ஏரகத்தில் உறையும் இறைவன் எழுந்தருளி நின்றான். மலர்கொடு தூவிப் பெரிதுவந்து ஏத்த அவர் மனம் முந்தி முனைந்து எழுந்தது. அவர் கண்கள் உறக்கத்தைத் தழுவின.

○

"குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து
தொண்டகச் சிறுபறைக் குரவை அயர"

7

காசிச்சாமிகள் ஒரு திருமணத்திற்சென்றுவாழ்த்த வேண்டிய கட்டாயமேற்பட்டது. அவர் மகள் கற்பகவல்லியின் மூத்தமகள் கலைச்செல்விக்குத் திருமணமாம். மகிழ்ச்சியான செய்திதான் அது. ஆனால் அங்கு சென்றால் 'என்ன என்ன புதுவிதமான அனுபவங்கள் ஏற்படுமோ?' என அவர் முதலில் தயங்கினார். கற்பகமும் அவர் கணவரும் விடுவதாயில்லை. இறுதியில் திருமணத்திற்கு வர அவர் ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று.

வேண்டாவெறுப்பாக — அதே நேரத்தில் தம் பேர்த்தி ஒருத்திக்குத் திருமணம் நடைபெறுகிறதே என்ற உள்ளார்ந்த மகிழ்ச்சியுடன் அவர் திருமணத்திற்குப் புறப்பட்டுசென்றார். திருமண மண்டபத்திற்கு ஒரு சந்தின் வழியாகச் சாமிகளின் கார் போகவேண்டியிருந்தது. அது மிகவும் குறுகலான பாதை. அங்கே கார் திரும்பி நுழைந்த போது, அந்தப்புழைக்கடையில் பேரிரைச்சலும் கூக்குரலும் கேட்டது. கற்பகம், அவர் கணவர், மாமியார் மற்றும் சிலரைச் சாமியாரால் பார்க்க முடிந்தது. அங்கே மாணிக்கம் எச்சில்இலையோடு நின்றுகொண்டிருந்தான். வண்டி நின்ற இரண்டுமூன்று கணப்பொழுதிற்குள்

அங்கே என்ன நடைபெற்றிருக்கும் என்பதை அடிகளால் ஊகிக்க முடிந்தது. கற்பகம் தன் தம்பியாயிற்றே என்று 'மாணிக்கத்தைப் புழைக்கடைப் பக்கம் கூப்பிட்டு உட்காரவைத்துப் பலகாரம் கொடுத்திருக்கிருள். இது அவள் மாமியாருக்கோ கணவருக்கோ பிடிக்கவில்லே. 'பிச்சைக் காரப்பயலே நடுவீட்டில் கூப்பிட்டுச் சோறுபோடுவாயா'? என்று அவர்கள் திட்டுகிருர்கள். 'நடுவீட்டிற்கா கூட்டிக் கிட்டு வந்தேன். பின்புறமாத் தானே கூப்பிட்டுப் போட்டேன்' என்று கற்பகம் வாதாடுகிருள். வாய்ச் சண்டை பெரிதாகி ஒருவரை ஒருவர் கண்டபடி ஏசிக் கொண்டிருக்கிருர்கள். அதில் பெரும் பகுதி வசை தமக்கும் தம் மனைவிக்குமே அருச்சிக்கப்பட்டதைக் கேட்ட அவர், தமக்குள் கனைத்துக் கொண்டார். தாம் ஒருவேளை இப்போது இப்படித் தலைமறைவாய், மாறுவேடத்தில் இருப்பதுபோல் இல்லாமல், சாதாரணமாக அவர்களில் ஒருவனுக இருந்தால், நேருக்கு நேர் நின்று சண்டை பிடித்துப் பார்க்கலாம் என்று கூட அவருக்குத் தோன்றியது. ''என்ன அப்படி உலகத்தில் இல்லாதது நடந்துவிட்டது? இப்போது திருந்தி விட்டோம் என்ருல் எங்களுக்கு விடுதலையே இல்லையா? எங்களைக் 'கெட்டவர்கள், கெட்டவர்கள்' என்றே அடித்துக் கொல்லலாமா? எங்களைப் போல் கெட்டவர்களே இல்லையா? என்று அவர்மனம் எகிறிக் கொதித்தது.

போதாததற்கு அவர் போய்த் திருமண வீட்டில் அமர்ந்த பிற்பாடும், வீட்டுக்குரியவர்கள் அவரை வரவேற்க வரவில்லை. உள்ளே அறையில் அவர்கள் ஒருவருக்கொருவர் சண்டை பிடித்து, உரக்கப் பேசுவது நன்ருகக் கேட்டது. கற்பகத்தை அவள் கணவன்,அடிக்க ஓடி ஓடிப்போவதும், அவள் 'நல்லா அடிங்க, கொல்லுங்க' என்று கூவுவதும் வெளியிலிருந்தே ஊகிக்கக் கூடியதாய் இருந்தன.

"நான் என்ன தப்புப்பண்ணியிட்டேன். வீட்டுக்குள்ளேயா கூட்டி வந்துட்டேன். ஆயிரக்கணக்கானவுக சாப்பிடுற ஒரு விருந்திலே, அவனுக்கு ரெண்டு கொண்டுபோய்க் கொல்லைப்புறமாக்கொடுத்ததிலே குறைஞ்சாபோயிடும்?''

"குறைஞ்சு போகாதுடி சனியனே... நாளைக்கு அவன் வீட்டுக்குள்ளேயே வருவான். பைத்தியம்பிடிச்சுத் தெருத் தெருவா அலையிற பயல் வீட்டுக்குள்ளே வந்தால் எங்க தரம் என்ன ஆகிறது? அவன் உன் தம்பின்னு தெரிஞ் சாலே உலகம் எங்களை மதிக்காதேடீ!"—இது கற்பகம் மாமியார்.

''அப்பிடி ரொம்பப் பாசம், ஒட்டு, உறவு இருந்தால் நீயும் போடி கொல்லைப் புறத்துக்கு...நீ அதுக்குத்தான் லாயக்கு...புறப்படு கழுதை...வா கழுத்தைப் பிடிச்சு உன்னைக் கொண்டு போய்த் தள்ளியிட்டு வருறேன். நீ கௌரவமா இருக்க மாட்டே. நாயைக் குளிப்பாட்டி நடு வீட்டிலே வச்சாலும், வாலைக் குழைச்சுக்கிட்டு அங்கே தான் போகும்!" ''ஓடு...சனியனே ஓடு!"—இது கற்பகத் தின் கணவன்.

''மொகரக் கட்டையைப் பாரு. அப்பன் வீடு நாசமாப் போச்சு. அண்ணன் கம்பி எண்ருரு...தம்பி பைத்தியம் பிடிச்சு அலையருரு...இனி என்ன வேணும்...இவளையும் அடிச்சு விரட்டு அண்ணேன்!...சனியன் இவளை நம்ம தலையிலே கட்டிப்பிட்டு, இவள் அப்பனும் அம்மாவும் ஆத் தோட போய்த் தொலைஞ்சாக...இவளையும் கட்டித் தூக் கிக் கொண்டுபோய்ப் போட்டுட்டு வா! இவளாத் தொலையமாட்டா!''—இது கற்பகத்தின் நாத்தனர்.

''அட பாவமே! சண்டையை விடுங்க...அந்தப் பயல் அம்மா இருந்தால், என்னதான் பைத்தியம் பிடிச்சாலும் இப்படி நடுத்தெருவிலே விடுவாளா? ஏதோ தம்பிங்கிற பாசம்! போகட்டும்...சண்டையை விடுங்க!!''—யாரோ ஒரு பெண்மணியின் குரல் இது.

அடிகளுக்கு உடனே எழுந்து நியாயம் பேச வேண்டும்; வாதாட வேண்டும் என்று மனம் விரும்பியது. நல்ல வேளையாக அவர் மிகவும் பக்குவப்பட்ட மனநிலையில் அப்போதிருந்தார், இல்லையென்ருல் அந்த வீடே இரண் டாகும்படி எழுந்து போராட வேண்டும் என்று அவர்

உள்ளம் துள்ளித் துள்ளிக் குதித்தது.

மறுபுறம் அவருக்கே அழுகை அழுகையாக வந்தது, மாணிக்கத்தை நினைத்து! இனி இவ்வாறு மாணிக்கத்தை அலையவிடக் கூடாது. என்ன செய்வது? தம்மையும் காட்டிக்கொள்ளாமல், பையனையும் காப்பாற்றவேண்டும். அவர் மனம் மிகத் தீவிரமாகத் திட்டம் தீட்டத் தொடங்கியது. ''என்னதான் பைத்தியம் பிடிச்சாலும் அவன் அம்மா இருந்தால் இப்படி நடுத்தெருவிலே விடுவாளா?''—என்ற தாய்க் குரல் மீண்டும் மீண்டும் ஒலித்து அடிகளை ஒரு 'தந்தை'யாக்கியது; உண்மையிலேயே அவர் அழலானார்...'மாணிக்கத்தை உடனே காப்பாற்றவேண்டும்; ஏதாவது செய்யவேண்டும்; எப்படியாவது அவனை நடுத்தெருவில் விடாமல் காக்கவேண்டும்...... அவன் அம்மை இருந்தால் இப்படி விடுவாளா? அவளை நான்தானே கொன்றேன்! இப்போது இந்த அவல நாடகத்தை நான் பார்த்துக்கொண்டிருக்கலாமா?'—அடிகள் தேம்பி அழலானார். திடீரென்று எங்கும் காற்றுச் சுழன்றடித்தது. மழை தூறத் தொடங்கியது. சாமிகள் கண்களை அடிக்கடி துடைத்தவண்ணம் இருந்தார். எங்கும் தூசிப் படலங்கள் எழுந்து பறக்கத் தொடங்கியதால் பலரும் கண்ணைக் கசக்கிக் கொண்டிருந்தனர். சாமிகளும் அவர்களில் ஒருவராகக் காணப்பட்டதால், வேறுபாடில்லாமல் போயிற்று!

சாமிகளை ஒருவாறு உடையவர்கள் வந்து வரவேற்று வணங்கிய பின் அங்கு மணச் சடங்கு தொடங்கியது. அதன் பிறகு வாய்ச் சண்டைகள் ஓய்ந்தன. வெளியே மழை பெருந் தூற்றல் போட்டுக்கொண்டிருந்தது. மழை வெண்ணிறமாய், தூயதாய் மேலேயிருந்து கொட்டுவதையும் கீழே விழுந்ததும், விழுந்த விழுந்த இடத்திற்கேற்ப நீர் உருமாறுவதையும் சாமிகள் வேடிக்கை பார்ப்பவர்போல் தெருவைப் பார்த்துக்கொண்டிருந்தார். நீர் மாறியபின் பள்ளம் நோக்கிப் பாய்ந்து ஓடுகிறது. பல நிறமுள்ள நீர்கள் இப்படிக்கூடிக்

காலாகி, வாய்க்காலாகி, சிற்றுருகி, ஆருகிக் காவிரி யாய்க் கங்கையாய் ஓடுகின்றன. உலகமும் இப்படித்தான் ஓடிக்கொண்டேயிருக்கிறது. நம் வினைகளும் இப்படித் தான் ஓடுகின்றன. எல்லாமே ஓர் ஓட்டம், ஒரு விரைவு, ஒரு சுழற்சி! வட்டம் தொட்ட இடத்தில்! மழையாகப் பொழிகிறது; ஆருகி ஓடுகிறது; கடலாகிப் பெருகுகிறது! பிறகு ஆவியாகி அது மேலே மேலே ஏறுகிறது; குளிர்ந்து மழையாகிப் பெய்கிறது! எல்லாமே ஒரு வளையம்! வட்டம்! தோற்றம்—வளர்ச்சி—முடிவு! மீண்டும் தோற்றம்—வளர்ச்சி—முடிவு! இறுதியில் ஒடுங்குகிற இவ்வுலகம், அவ் ஒடுங்கியிடமிருந்தே மீண்டும் முகிழ்க்கிறது என்ற சிவ நெறியுண்மையை இவை காட்டுகின்றன போலும்! அடிக ளாரை வாழ்த்துவதற்கு மணமேடைக்கு அழைத்து வாருங்கள்!' என்ற குரல் கேட்டுச் சாமிகளின் சிந்தனை யோட்டம் தடைபட்டது.

திருமண மக்களைப் பல பாடல்கள் பாடி காசிச் சாமிகள் வாழ்த்தினுர். கோளறு பதிகம் பாடி, திருமுருகாற்றுப் படையில் பழமுதிர் சோலைப் பகுதியையும் படித்து, 'மண் ணில் நல்ல வண்ணம் வாழலாம்' என்ற பாடலுடன்' தம் வாழ்த்தை அவர் நிறைவு செய்தார். வாழ்த்தும்போது அவர் கண்கள் பனித்து நின்றன. வேறு எந்த வீட்டிலும் விட அவர் மிக ஈடுபாடாக இங்கு வாழ்த்தினுர் என்று பலரும் பேசிக்கொண்டனர். அதை உறுதி செய்வது போல், வேறு எங்கும் ரூபாய் ஆயிரத்தொன்று பெற்றுக் கொண்டு வாழ்த்துகிற அவர், இங்கே ஆயிரத்தொன் றைத் தட்டில் வைத்துக் கொடுத்து வாழ்த்தினுர்!

கற்பகம் மனம் குளிர்ந்தது. அவள் கணவனும், மாமி யாரும், நாத்தனுரும், பிறரும் மனக்கொதிப்படங்கி, ஆறு தலாகி, முகம் மலர்ந்து மகிழ்ச்சியுடன் காணப்பட்டனர். மணமக்களுக்குப் பரிசுகள் பலவந்து குவிந்தன. சென்னை யைச் சேர்ந்த நல்லுசாமி என்பவர் நூற்றிஒரு ரூபாயும் ஒரு வெள்ளித் தட்டும் பரிசளித்தார். சென்னை பூவண்ணம் பிள்ளை குடும்பத்தார் எவர்சில்வர்க் குடம் ஒன்று பரிசளித்

தனர், கனகசபைமகள் மலர்க்கொடி ஒரு வெள்ளிக் குத்து விளக்கைப் பரிசு கொடுத்தாள். அடிகளுக்கு நிலைமை விளங்கியது. இந்தப் பூவண்ணர் இந்த நிலைக்கு வரத் தாம் உதவியதை அவர் நினைவு கூர்ந்தார். அவரும் நன்றி மறவாமல் தம் பேர்த்தியைப் பேணிக் காப்பதை யும் படிக்க வைப்பதையும் எண்ணி மனம் மகிழ்ந்தார். தம் பேர்த்தியுடன் பூவண்ணரின் மகன் கண்ணனும் வந் திருப்பதைக் கண்டார். ஆனல் மலர்க்கொடி ஒரு சினிமா நட்சத்திரம்போல் உடையலங்காரம் செய்து கொண்டிருப் பதையும், அவளுடைய வெகுளித்தனமான—வெறுப் பைத் தூண்டக்கூடிய நடையுடைபாவனையையும் கண்ட அவர் அருவருப்படைந்தார். ஒருவேளை, பூவண்ணருக்கும் கட்டுப்படாமல், இவள் இப்படி நடந்து கொள்கிருளோ? அவரும் தம் மீது வைத்த பாசத்தால் இதற்கெல்லாம் விட்டுக்கொடுத்துப் போகிருரோ என்றெல்லாம் அவர் எண்ணினர். சற்று நேரத்திற்கெல்லாம் அவர்கள் விரைந்து விரைந்து சாப்பிட்டுவிட்டுப் புறப்பட்டுப் போயி னர்.

சரவணருக்குப் பூவண்ணரும் நல்லுசாமியும் இளமைக் காலத்தில் மிக நெருங்கிய நண்பர்கள். அவர்கள் இரு வரும் நெருங்கிப் பழகினல் கட்டாயம் தம்மை அடையா ளம் கண்டு கொண்டு விடுவார்கள் என்று அவர் அஞ்சி னர். அதுவும் அங்கு வந்திருந்த நல்லுசாமி தம்மை நெருங்கி வந்து உற்றுப் பார்ப்பதையும், பேச்சுக் கொடுப் பதையும் கண்டு அவர் உள்ளம் நடுங்கவே செய்தது. நல்லவேளையாகப் பூவண்ணர் போய்விட்டார். நல்லுசாமி அப்படிப் போவதாகத் தெரியவில்லை. எங்கே, தம்மையே தொடர்வானே என்று அவர் உள்ளம் மறுகியது. அத னல் விரைந்து, பாலும்பழமும் சாப்பிட்டுவிட்டு அடிகள் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டார்.

○

நினைத்தபடி மறுநாள் காலை வழிபாட்டிற்கே நல்லுசாமி

மடத்திற்கு வந்துவிட்டான். அடிகளை அவன் ஏற இறங்கப் பார்ப்பதும், ஏதோ சிந்திப்பதுமாக இருந்தான். சரவணர் சிறிது கூட அவனை ஏறிட்டுப் பார்க்கவில்லை. காலை நிகழ்ச்சிகள் முடிந்ததும் நல்லுசாமி எல்லோருடனும் கூடிப் புறப்பட்ட பிறகுதான் சரவணருக்கு மன அமைதி ஏற்பட்டது.

தம் இளமைக்கால நண்பர்களில் பூவண்ணரைப் போன்ற நல்லவரும் இல்லை; நல்லுசாமியைப் போன்ற கெட்டவனுமில்லை என்ற நினைவு அடிகளின் மனத்தில் ஓடியது. தாம் கெடக்காரணமாக இருந்தவர்களில் இவனும் ஒருவன் என்பதை அடிகள் நினைவு கூர்ந்தார். இந்த நல்லுசாமி போகாத துறையில்லை; சேராத அரசியல் கட்சியுமில்லை. அவன் தொட்டது துலங்காது. திருச்சியில் அரசியல் கட்சிகளின் சார்பில் தேர்தல்களில் போட்டியிட்டுப் பெயரை விளம்பரப்படுத்திக் கொண்டானும். ஒரு முறை நகரவை உறுப்பினரானபோது, கொள்ளைகொள்ளையாகப் பணத்தை அடித்து மூட்டை கட்டிக்கொண்டு சென்னை போனவன்தானும். பிறகு அடிக்கடி திருச்சி வருவதில்லையாம். அங்கே சினிமாத்துறையில் புகுந்து, அவன் பெரிய பணக்காரனுகிவிட்டானும். இதையெல்லாம் கேள்விப்பட்ட அடிகள் அவனிடமிருந்து எப்படியும் தப்பித்துவிடவேண்டும் என்று தவித்தார்.

நல்லுசாமி தன்னைப் பார்க்கின்ற பார்வை ஒவ்வொன்றும், தன்னைப் பழங்கால நினைவுக்கு இட்டுச் செல்வதை அவர் உணர்ந்தார். அவன் எதிரே தாமே அந்த 'மைனர் சரவணுக' மீண்டும் தம்மை உணர்வதை அவர் எண்ணினூர். 'ஐயையோ, அந்த நச்சுக்கோட்டில் மீண்டும் அகப்பட்டுக் கொள்ள நேருமோ' என்று அவர் நடுங்கினுர். தம்மை அவர் காசிக்குப் போன நாளிலிருந்து 'நல்லவன், நல்லவன், நல்லவன்' என்று எண்ணியெண்ணி நல்லவனுக்கிக் கொண்டிருந்தார். இப்போது நல்லுசாமி பார்வை தம்மைக் 'கெட்டவன், கெட்டவன், கெட்டவன்,'

என்று பறை சாற்றுவதாக அவர் அடிமனத்தில் நினைந்து நைந்தார்.

மடமோ செல்வவளம் பெருகி விட்டது. கணக்குக்கு அகப் படாத செல்வம் குவிந்தது. அதை என்ன செய்வ தென்றே புரியவில்லை. மாணிக்கம் நலன்கருதி 'ஓர் ஏழை கள் இல்லம்' தொடங்க அவர் முடிவு செய்தார். பெரும் செல்வர்கள், நகராட்சித் தலைவர், ஆளும் கட்சிச் சட்ட மன்ற உறுப்பினர்கள் உட்பட ஒரு குழுவை அவர் கூட்டி, அவர்களிடம் இப் பொறுப்பை ஒப்படைத்தார். அவர் நினைவு முழுவதும் மாணிக்கத்தை அவ் இல்லத்தில் சேர்த்து, அவனுக்கு மறுவாழ்வு அளிப்பது பற்றியே திட்டமிட்டுக் கொண்டு இருந்தது.

மாலைவழிபாட்டிற்கு நல்லுசாமி மீண்டும் வந்திருந்தான். அவனைப் பார்த்ததும் 'சரிதான் ஆபத்து வரப்போகிறது' என்று அடிகள் உறுதி செய்து கொண்டார். அவர் சொற் பொழிவாற்றிக் கொண்டிருக்கும்போது, அவருடைய புருவமத்தியில் இடதுபுறம் அடி நெற்றியிலிருக்கும் கரிய பருவினை அவன் வைத்தகண் வாங்காமல் உற்றுப் பார்த் துக் கொண்டிருந்தான். அம் மச்சம் அவருக்குப் பிறவி யில் அமைந்தது. இளமையில் நல்லுசாமி சரவணரைப் பார்த்து, "இந்த மச்சம் சற்றுத் தள்ளிப் புருவ மத்தியி லேயே இருந்தால், பொட்டு வைத்ததுபோலவே அழகாக இருந்திருக்குமல்லவா?" என்று அடிக்கடி கேலி பேசுவ துண்டு. இப்போது அதனையே பார்த்துக் கொண்டிருந்த நல்லுசாமியை, எதிர்மறுத்துப் பார்க்கமாட்டாமல் அடி களின் பார்வை தள்ளாடியது; கூசிக் கூனிக் குறுகித் திரும்பியது.

நல்லுசாமி மடத்தின் செல்வ வளத்தையும் தமது செல் வாக்கையும் கண்டுதான் பலாப்பழத்து ஈ போல் தம்மை ஒட்டிக் கொள்ளத் துடிக்கிறுன் என்று அவர் உள்ளுணர்வு கூறியது. அவன் எப்பொழுதுமே அப்படித்தான். பண முள்ள இடத்தைக் கண்டால் விடமாட்டான்; அழகுள்ள

தனையும் எச்சில் இலை நாய் போல் தொடர்வான். இனித் தம்மையும் இந்த இடத்தையும் விட்டு அவன் எங்கே போகப் போகிருன் என்று அவருள்ளம் மறுகி மயங்கியது.

சொற்பொழிவு முடிந்து, மக்கள் அருள்வாக்குப் பெற வரிசையில் வந்து கொண்டிருந்தபோது, நல்லுசாமியும் அவர்களில் ஒருவனுக வந்து கொண்டிருந்தான். அவன் அடிகளின் பாதங்களில் விழ்ந்து வணங்கிஞன். அங்ஙனம் விழுந்து கும்பிட்டவன் நெடுநேரம் எழுந்திருக்கவில்லை. தம் ஒருகால் சற்றே வளைந்து, நரம்பு தளர்ந்து, பலவீனமாய்க் கிடப்பதை அவன் உற்றுநோக்குவது நன்கு புலனுகியது.

அவன் எழுந்துநின்று, திருநீறு பெற்றுக் கொண்டு, மனமகிழ்ச்சியுற்றவன் போல வெளியேறிஞன். அடிகள் தம் காலை உதறிக் கொண்டார். தம் நிழல் அடியில், பாதத்தின் கீழே உறைவது போலவும் அதை உதறிவிட விரும்புபவர் போலவும் அவர் கால்களை நன்ருக உதறிக் கொண்டார்.

'அருள்வாக்கு' நேரம் முடிந்த பிற்பாடு அவர் மன அமைதியின்றி அமர்ந்திருந்தார். அவர் நெஞ்சில் முருகாற்றுப் படை நினைவு ஓடுவதற்குப் பதிலாக, நல்லுசாமி நினைவே ஓடியது. நல்லுசாமி என்ற நினைவு நல்லபாம்பை நினைவூட்டியது. நல்லபாம்பு தம்மை நோக்கிச் சீறி வருகிறது. தம் காலை நோக்கிப் பாய்கிறது. தம்மைக் கடிக்க முந்துகிறது. தம் பாதங்களின் அருகே படம் எடுத்து ஆடுகிறது. ஆனுலும் கடிக்கவில்லை. தம்மை அப்பாம்பு கடித்துவிட்டால்கூட நல்லது என்று அடிகள் எண்ணுகிருர். அதை எட்டி உதைக்கிருர். அதுவோ உதை படாமல் நகர்ந்து கொள்கிறது. சீறிப் பாய்கிறது; மீண்டும் மடங்கி ஓடுகிறது. இது சரவணருக்குச் சித்திரவதையாக இருக்கிறது.

வேலைக்காரன் கொணர்ந்த பழத்தினையும் பாலினையும்

சாப்பிட்ட அடிகள் சிறிதே உலாவி வர வெளியில் புறப்படுகிறார்.

அன்று இரவு 9½ மணியாயிற்று. எல்லோரும் போய் விட்டனர். சாமிகளும் தம் அறைக்குப் போய்விட்டார். அதன் பிறகு வேலையாள் ஒருவன் வந்து 'உங்களை ஒருவர் பார்க்கவேண்டுமாம்' என்று தயங்கித் தயங்கிக் கூறினான். சாமிகள் யாரையும் தனியே பார்க்க அனுமதிப்பதில்லை. அன்று அந்த வேலையாள், எவ்வளவோ துணிச்சலை வரவழைத்துக் கொண்டுதான் வந்து நின்றான். அவர் கடுமையாக அவனை ஒரு பார்வை பார்த்தார். அவன் நடுங்கிக் கொண்டே ஓடி விட்டான். பத்து மணிக்கு மேல் காற்றில்லை என்று வெளியே உலாவி வரப் புறப்பட்டார். அப்போது கட்டைக் குரல் ஒன்று 'சரவணா, சரவணா!' என்று மெதுவாகக் கூவியது, அடிகள் சற்றே நின்று நிதானித்துத் திரும்பினார்.

அங்கே நல்லுசாமி நின்று கொண்டிருந்தான்!

''என்ன சரவணா அப்படிப் பார்க்கிறே? நீ உயிரோடு இருக்கிறதைப் பார்த்ததிலே எவ்வளவு மகிழ்ச்சி தெரியுமா? அதனாலேதான் இன்னைக்குச் சென்னைக்குப் போக வேண்டியவன் போகாமேத் தங்கியிட்டேன்!''

சரவணர் வாயைப் பொத்திச் சைகை காட்டித் தன் அறைக்கு அழைத்துச் சென்றார்.

"நீ என்னை அடையாளம் கண்டுவிடுவாய் என்று முன்பே நான் நினைத்தேன். அது சரியாகப் போய்விட்டது! இங்கே நான் யார் என்பது யாருக்குமே தெரியாது!''

"அது எனக்கும் தெரியும். நானும் யாரிடமும் சொல்ல மாட்டேன்.''

"என்னை யாரென்று தெரிந்தால் பைசாவுக்குக் கூட மதிக்க மாட்டார்கள். என்னை இப்போது தெய்வமாகப் போற்றிக் கொண்டிருக்கிறார்கள்; வணங்கிக் கும்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.''

"அதுவும் தெரியும். பல இலட்சம் ரூபாய் ஒவ்வொரு மாதமும் தமிழ் நாட்டிற்குள் வேறு எந்த மடத்தில் உண்டியலில் விழுகிறது? எதையும் நான் வெளிப் படுத்த மாட்டேன், உன்னைப் பார்த்ததிலே தான் எனக்கு மகிழ்ச்சி. அந்தக் காலத்தில் நாம் எவ்வளவு ஒற்றுமையாக, ஆடலும் பாடலுமாக, வாழ்க்கையையே இன்பப் பொழுது போக்காகக் கொண்டாடிக் கொண்டிருந்தோம். எங்கே நீ செத்துத் தொலைத்துவிட்டாயோ என்று நான் ஏங்கிக் கொண்டிருந்தேன்.''

சரவணர் எதுவும் பேசவில்லை; பேசத் தோன்றவில்லை. நல்லுசாமியே தொடர்ந்தான்: ''நீ சென்னைக்கு வர வேண்டும். நான் இப்பொழுது சென்னையில் மிக நன்ருக இருக்கிறேன். உன் போன்றவர்கள் தலை நகரத்தில்தான் இருக்க வேண்டும். திருச்சி உன் தகுதிக்குப் போதாதது. சென்னையிலிருந்தால் தான் உன் புகழ் உலகமெல்லாம் பரவும். இனி உன்னைப் பற்றிய எல்லாவற்றையும் நான் பார்த்துக் கொள்கிறேன். நாடாளும் அமைச்சர்கள், அரசர்கள், ஆளும் கட்சி உறுப்பினர்கள், எம்.எல்.ஏ.க்கள் எம்.பி.க்கள், திரைப்பட அதிபர்கள், இயக்குநர்கள், திரைப்பட நட்சத்திரங்கள் எல்லோரையும் உன் காலில் விழுந்து வணங்க வைக்கிறேன். பத்திரிகைகள் எல்லாம் உன் புகழ்பாட வைக்கிறேன்...'' என்று நல்லுசாமி அடுக்கிக் கொண்டே போனதைச் சரவணர் சற்றும் விரும்பவில்லை. அவரால் அதைத் தடுக்கவும் இயலவில்லை. அவன் சிறிது நின்றபோது இடைமறித்து அவர் பேசிஞர்: ''திருச்சியே என்னைப் பொறுத்தவரை அமைதியான இடம். திருச்சியை விட்டு வர எனக்கு விருப்பமில்லை. நீ வேண்டுமாஞல் அடிக்கடி வந்துபோ!''

நல்லுசாமி தன் கட்சியை வற்புறுத்திஞன்: ''சரி உன் விருப்பப்படி நீ இங்கேயே இருந்தாலும் அடிக்கடி சென்னைக்கு வரவேண்டும். இது தலைமைமடம்; அங்கே கிளை மடம் ஒன்று கட்டுவோம். அங்கே வந்து, அங்குள்ள மக்களுக்கும் உன் அன்பும் அருளும் கிடைக்கச் செய்ய வேண்

டும். எனக்கொன்றும் தன்னலம் இல்லை. உன் புகழ் பரவ வேண்டும! உன்னைவிட மட்டமான சாமியாரெல்லாம் என்னென்னவோ விளம்பரப்படுத்திக் கொண்டு எப்படியோ வாழ்கிறார்கள். நீ எட்டுத் திசையும் ஒளி வீசித் திகழ வேண்டும். நான் சும்மா சொல்லவில்லை. உன்னைப் பத்தி எவ்வளவு கேள்விப்பட்டேன் தெரியுமா? சனங்கள் நீ என்றால் உசிரா இருக்கிறார்கள். அதை நாம் பயன்படுத்திக்க வேண்டும். நான் திட்டம் தீட்டுகிறேன். நான் அழைக்கும்போது மட்டும் சென்னைக்கு வந்துவிடு. நான் இங்கு வந்து காசிச்சாமிகள் என்ற சரவண சாமிகள் நம்ம சரவணன்தான் என்று சந்தேகப்பட்டதுமே எப்படியும் உண்மையைக் கண்டுபிடித்து விடுவது என முடிவு செய்து விட்டேன்'' என்று பேசிப்பேசிப் பூரித்தான் நல்லுசாமி. அவன் ஏதோ பெரிய திட்டம் தீட்டுகிறான் என்பது மட்டும் அடிகளுக்குப் புரிந்து விட்டது. அவனிடமிருந்து தப்பிப்பதற்கும் வழி தெரியவில்லை. சரவணர் திடீரென்று தாம்யாரென்று கூறிவிட்டு, மடத்தைவிட்டு வெளியேறி விடுவதென்று சிந்தித்தார். இப்படியே மறைமுகமாக இருந்து கொண்டு சித்திரவதைப் படுவதென்பது இனி அவரால் முடியாது. அதுவும் நல்லுசாமியைப் பார்த்த பிறகு, அந்தத் தொந்தரவு மிக அதிகமாகும் என்று தோன்றியது. தம் உள்ளக் கருத்தை உறுதி செய்து கொண்டு, ஏறத்தாழ இரவு பனிரெண்டு மணி அளவில் நல்லுசாமியை வழியனுப்பிவிட்டு சரவணர் படுக்கச் சென்றார்.

○

சரவணர் இதுவரை இல்லாத மனக் குழப்பத்தில் ஆழ்ந்தார். 'பலநாள் திருடன் ஒருநாள் அகப்படுவான்' என்பதுபோல் தம் நிலைமை ஆனதே என்று நொந்து கொண்டார். தாம் செய்வது தவறுதானே என்று அவர் மனச்சான்று இடித்தது. ஏதோ சாயம் வெளுத்ததுபோல், வேடம் கலைந்தது போல், தலைமறைவானவன் பிடிபட்டது போல் ஒரு குற்றவுணர்வு அவரைச் சீண்டிக் கொண்டேயிருந்தது! இதுவரை 'தாம் குற்றவாளி' என்பது போன்ற

உணர்வு அவர் மனத்தில் தலைநீட்டவே இல்லை. அதைக் காசியில், கங்கையிலேயே கழுவிவிட்டுத் தூய நெஞ்சோடு வந்திருந்தார் அவர்.

நல்லுசாமியோ தீமைகளுக்கெல்லாம் துணை நிற்பவன். மிக எளிதாக யாரையும் தீய வளையத்திற்குள் அகப்படுத்தி விடக் கூடிய திறமை மிக்கவன். எந்தத் தண்டனையை யும் தாங்கிக் கொள்ளும் தழும்பேறிய மனத்தையுடைய அவன், வெட்கத்தை உதிர்த்தவன். அவனுடன் ஒன்று பட்டு, பிரியா நண்பனாக வாழ்ந்த காலத்தை எண்ணிப் பார்த்த சரவணர், இப்போதும் அவன் மாருமல் அதே நிலையிலிருப்பதாக ஊகித்தார். தாம் அந்த நிலையிலேயி ருந்து அறவே மாறிவிட்ட நிலையில் அவனுடன் எப்படிப் பழகமுடியும் என்று அவர் மனம் வினவியது. பழகாவிட் டாலோ ஊரெல்லாம் டாம்டாம் அடித்து, உண்மையைக் கூறிச் சிக்கல்களில் மாட்டிவிடவும் அவன் தயங்கமாட் டான். இந்நிலையில் நாள்தோறும் நடித்துநடித்து ஊரை யும் ஏமாற்றித் தம்மைத்தாமும் ஏமாற்றிக்கொண்டு வாழ வேண்டும். சரியான சித்திரவதையாக இருக்கும் இது! அதனால், உடனே தாம் யாரென்று கூறிக்கொண்டு, சாமி யார் வேடத்தைக் கலைத்துவிட்டு, வெளியேறிவிட்டால் என்ன என்று அவர் எண்ணினார். நாடு இந்தத் துறவுக் கோலத்திற்குத்தான் மதிப்புத்தருகிறது. இந்தக் கோலத் திற்குள் மறைந்துகொண்டு என்ன செய்தாலும் தாங்கிக் கொள்கிறது. கோலத்தை மாற்றிவிட்டால், உலகம் பிறகு மாணிக்கத்தினும் கேடாகத் தம்மை நடத்தும்! அது இதைவிடச் சித்திரவதையாக இருக்குமே?

நல்லுசாமியிடம் தந்திரமாக நடந்து கொள்வதுதான் இப் போதைக்கு நல்லது என்ற முடிவுக்கு வந்தார் அவர். ஒரு வேளை தாம் தந்திரமாக நடந்து அவனை வெல்வதற் குப் பதிலாக, அவன் தந்திரமாக நடந்து தம்மை வென்று விட்டால்...... தாம் அவன் வழியிலே வீழ நேரிட்டுவிட் டால்... சரவணரின் கண்கள் குளமாகிக் கரைகடந்து கொட்டின. சதுரப்பாடுதான் முக்கியம்; திறப்பாடுதான்

வேண்டியது. 'முன்னிய வினையை இன்னே பெறுகுவை' என்ற முருகாற்றுப்படை அடியைப் பலமுறை சொல்லிப் பார்த்துக் கொண்டே, புத்துணர்ச்சி பெற முயன்றார் அடிகள்.

நல்லுசாமி இன்னும் பள்ளத்தாக்கிலேதான் நிற்கிறான். தாம் அவனைவிட்டுப் பிரிந்து, மலையுச்சியில், மிகவுயரத்தில் ஏறி நிற்பதாக அவருக்குத் தோன்றியது. அதற்குக் காசி நகர் வாழ்க்கைதான் காரணம். காசிநகரத்தில், கங்கைக்கரையில், விசுவேசுவரர் திரு முன்னர் தாம் உறுதியோடு வாழ்ந்த ஏறத்தாழ இருபதாண்டுக் கால வாழ்க்கையும், அவர் கண்ணெதிரே திரைப்படம்போல் ஓடியது.

நல்ல சூழ்நிலை, மேலும் மேலும் படிக்கும் வாய்ப்பு, தெய்வப்பின்னணி, அறநெறி வாழ்வு, பணிபுரியும் சால்பு இவற்றைத் தந்தது காசிநகரம். மனிதன் சார்ந்ததன் வண்ணமாகின்றான். திருச்சியிலே இருந்திருந்தால் தாம் இவ்வளவு திருந்தியிருக்க முடியாது என்று அவர் உள்ளுணர்வும் கூறியது. எப்போதும் நல்லதைத் தவிர, நினைக்க வழியில்லாதபடி காசி நாட்டுக்கோட்டை நகரத்தார் சத்திரத்து வாழ்க்கை, தம்மை உருவாக்கியதை எண்ணி அவர் வியந்தார். "இப்போது இவன் மீண்டும் தொடர்புறப் போகிறானே? நம்மைக் கருவியாகக் கொண்டு செல்வமும் புகழும் தேட இவன் திட்டம் தீட்டுகிறானே? என்ன ஆகுமோ? எப்படி நம் வாழ்வு திசைமாறுமோ?'' என அவர் தமக்குள் ஏங்கினார்.

அடிகள் மனம் இருதலைக் கொள்ளி எறும்பு போல், அலைக்கழிக்கப்பட்டது. திடீரென்று மலையுச்சியிலிருந்த அவர், மீண்டும் பள்ளத்தாக்கில் விழுந்து விட்டதாகவும் நல்லுசாமி அருகே கிடப்பதாகவும் ஒரு கனவு கண்டார். உடலை, உணர்வு ஒரு குலுக்குக்குலுக்க எழுந்திருந்த அவர் 'அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. எல்லாம் மன நிழல்தான். வேறொன்றுமில்லை. நாம் ஒன்றும் கீழே விழுந்துவிடவில்லை' என்று தமக்குத்தாமே உறுதி செய்து

கொண்டார்! நன்ருக ஆழ்ந்து உறங்கிப் போன அவர் அடிமனத்தில் 'காசிநகர் வாழ்வின்' நினைவே தேங்கிக் கிடந்தது. தம்மை மனிதனுக்கித் தெய்வ நிலைக்கும் உயர்த்திய அவ் வாழ்வை எண்ணியெண்ணி அவர் அடி மனம் பெரும் ஆறுதலடைந்து கொண்டிருந்தது.

○

இரண்டு:

நாற்று

துண்டும் வாங்கி அணிந்து கொண்டார். தம் பழைய உடுப்புகளை ஒரு பிச்சைக்காரனிடம் போட்டு விட்டார். காசி விசுவேசுவரர் ஆலயத்தைத் தேடிச் சென்று, சன்னியாசிக் கோலத்தோடு வணங்கி விட்டுக் கங்கைக்கு நடந்தார். இப்போது தாம் இயல்பாகவே முற்றத் துறந்த துறவி என்பதை அவர் மிக நன்ருக உணர்ந்தார். கையில் இப்போது அவரிடம் பைசாகூட இல்லை. அடுத்த வேளை உணவுக்கு என்ற சேமிப்பும் இல்லை. அக்கம் பக்கத்தில் உற்ருர் உறவினர் என்று யாருமில்லை. சொத்து சுகம் என்று எதுவுமில்லை. தாம் கற்ற கல்வியறிவு என்ற ஒன்றைத்தவிர வேறு எதுவுமே இல்லாத நிலையில் அவர் அந்தக் கல்வியின் பெருமையை நன்குஉணர்ந்தார். காலையில் வாரணசியில் இறங்கியது முதல் அவர் எதுவுமே உண்ணவில்லை; பச்சைத் தண்ணீரைகூடப் பருகவில்லை. உண்ண வேண்டும் உறங்கவேண்டும் என்ற நினைவே அவருக்கு ஏற்படவில்லை. மாலை மங்கிய நேரத்தில் அவர் கங்கைக் கரையை அடைந்தார். கரையோரமாகவே நடந்து, நீண்டதூரம் வந்து கூட்டம் குறைவான ஓரிடத்தில் அமர்ந்தார்.

இனி இந்த உடையோடு, இந்த உள்ளத்தோடு புனித நீரில் விழுந்து மாள்வது என்ற முடிவுடன் அதன் கரையில் அமர்ந்தார். விழும் போது மேல் துண்டினுல் தாம் கால்கள் இரண்டையும் இறுகக் கட்டிக்கொண்டு குதிக்க வேண்டும் என்பதற்காகவே நீண்ட துண்டாக வாங்கி வந்திருந்தார். அதனை விரித்து ஒரு தவசி போல அமர்ந்திருந்த அவர், எவ்வளவு நேரமாகியும் அங்குக் கூட்டம் குறையாததைக் கண்டு, இன்னும் சிறிது தூரம் நடக்கலாமா என எண்ணினுர். பிறகு எப்போது கூட்டம் குறைகிறதோ, அப்போது விழலாம் என்ற முடிவுடன் – எவ்வளவு தூரம் நடந்தாலும் யாரேனும் சிலர் இருப்பார்கள் என்ற நினைவுடன் – கங்கைக்கரை ஓரமாகப் புதரடர்ந்த மரநிழலில் அவர் அமர்ந்தார். கண்ணை மூடிக் கொண்டு வழிபாட்டில் ஈடுபட்ட அவர், யாரும் தமிழ் தெரிந்தவர்

கள் இல்லையென்ற எண்ணத்தினால் உந்தப்பட்டுப் பல இனிய தமிழ்ப் பாடல்களை, வாய்விட்டுத் தமக்குத் தெரிந்த பண்ணில் பாடத் தொடங்கினார். சிறு வயதில் தம் தந்தையின் கட்டாயத்திற்காக மனப்பாடம் செய்திருந்த சிவபுராணத்தையும் போற்றித் திரு அகவலையும் ஓதினார்; 'கந்தர் சஷ்டி கவசத்'தை ஒப்பித்தார். இத்தகைய பாடல்கள் எல்லாம் சிறு பையனாக இருக்கும் போதே நாகலிங்கம் பிள்ளையின் கண்டிப்பால், தேவாரப்பாடசாலையில் பயின்றவை.

திருச்சியில் ரயிலேறியநேரத்திலிருந்து வியர்த்த வியர்வையும் நடுங்கிய நடுக்கமும் அஞ்சிய அச்சமும்! அக் கணத்திலிருந்தே இப்பாடல்கள் எல்லாம், நீண்ட நாளாகப் பயன் படுத்தாமல் பெட்டியில் பூட்டி வைத்து எடுத்த அணிகள் போல, அவர் நினைவிலிருந்து வெளிப் போந்தன. இப்போது கங்கையின் அலையோசையுடன் அவருடைய குரலோசை போட்டியிட்டது.

''கூற்றாயின வாறு விலக்ககிலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்

ஏற்றாய் அடிக்கே இரவும்பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்

தோற்றாதுஎன் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட

ஆற்றேன் அடியேன் அதிகைக்கெடில
வீரட்டானத்துறை அம்மானே!''

'கூற்றாயினவாறு'.. என்றுதொடங்கும் திருநாவுக்கரசரின் இக் கொல்லிப்பண் பதிகத்தைப் படித்துப் படித்து அழுதார் சரவணர். தம் வாழ்வில் திருச்சி, சென்னை, பம்பாய் என அலைந்து தாம் செய்த பாவங்கள் எல்லாம் அவர் நினைவை உறுத்தி நின்றன. முன்னையோர் தேடிவைத்த செல்வத்தை முறையின்றிச் செலவழித்த கொடுமை; வீட்டுக்கு வந்த திருமகளைக் கெடுத்துக் குட்டிச்சுவராக்கிக்

போல இயங்கிக் கொண்டிருந்தார். அவன் செய்யும் ஒவ்வொரு செயலையும் கவனித்து, ஏதோ பலநாட் பழகியவர் போலச் சரவணர் தாமும் ஈடுபட்டுச் செய்ய லானார்.

அதன் பிறகு நகரச் சத்திரத்தில் பல வழிபாடுகள் நடந் தன. தமிழ்நாட்டு நாதசுர மேளம் முழங்கியது. சிலர் காசிவிசுவேசுவரர்க்குரிய அபிடேக அலங்காரப் பொருள் களுடன் ஊர்வலமாகப் புறப்படலாயினர். ஆண்டியுடன் சரவணரும் அதில் சேர்ந்து சென்றார். அவர் அதிகம் பேசவில்லை. வாய் ஏதேனும் பாட்டை முணுமுணுப்ப தோடு சரி. கேட்பவர்க்கு உண்டு, இல்லை என இரண் டொரு வார்த்தைகளே அவர் பேசினார், பலரும் அவரை அரை ஊமை என்றே எண்ணி விட்டார்கள்! அவரோ இவ் உலகைப் பற்றியே எதுவுமே கவலைப் பட்டதாகத் தெரியவில்லை. பழைய சரவணன் கங்கையோடு போய் விட்டதாகவும், இப்போது திரிபவன் புதியதோர் 'சாமி' என்றும் அவர் உறுதி செய்து கொண்டார். அந்த ஊர் வலத்தில் ஆண்டி முன்னே சென்றதால், இவரும் அவனைத் தொடர்ந்து முன்னே சென்றார். 'சம்போ சம் போ சங்கர மகாதேவா!' என்று இடையறாது கூவிக் கொண்டு, அவர்கள் காசி நகரத்துக் கடைத்தெருக்களின் வழியாகச் சென்று, கோயிலை அடைந்தார்கள். விசுவேசு வரர் கோயிலினுட்சென்று, அவர்களுடன்சேர்ந்து சரவண ரும் நல்ல முறையில் வழிபாடு செய்தார். விசாலாட்சி சன்னிதானத்தில் 'தொடுக்கும் கடவுட்பழம்பாடல்' என்ற குமரகுருபரர் பாடலைக் கணீரென்ற குரலில், முதல்நாளே பாடி, அவர் அனைவரது கவனத்தையும் ஈர்த்தார். சத் திரத்திற்குத் திரும்பியபின் மேலாளரிடம் சரவணசாமியை ஆண்டி அறிமுகப்படுத்தி வைத்தான். வழக்கம் போல் அன்றும் நூறுபேருக்கு அன்னதானம் இடப்பட்டது. சரவணரும் அவர்களில் ஒருவராய் ஆண்டியின் அருகே அமர்ந்து உண்டு அயர்வு நீங்கினார்.

○

சரவணர் தம் உடலைக் கங்கையிற்போட்டு, 'காசியில் இறக்க முத்தி' என்ற நம்பிக்கையில் வீடுபேறடைய எண்ணிவந்தார். இப்போது அவரிடம் பெரும்மாறுதலேற் பட்டிருந்தது. பலருக்கும் தம் ஒவ்வோரணுவும் பயன்படு மாறு பணிசெய்து முற்ற முடியத் துறவறவாழ்வு வாழ்ந்து பிறருக்கு எடுத்துக் காட்டாகத் திகழ வேண்டும் என்று அவர்மனம் உறுதியாய் எண்ணியது. அவ்வளவு மாறுத லுக்கும் இந்த ஆண்டிதான் காரணம் ஆவான். நந்த வனத்தைக் கவனிக்கவும் அதிலிருந்து மலரெடுத்து வந்து காலையிலும் மாலையிலும் பூத்தொடுக்கவும் என்பணியில மர்த்தப் பட்டிருந்த ஆண்டி, அதற்கும் அப்பால் எல்லா விதமான வேலைகளையும் விருப்பி மேற்கொண்டு செய்து வந்தான். அவன் திருமணம் பற்றிய நினைவே இல்லா மல் இவ்வளவு காலம் போக்கிவிட்டான். அவனுக்கு உற் றார், உறவினர் என யாரும் இருப்பதாக எவருக்கும் தெரி யவில்லை. துறப்பதற்கு என எதுவுமில்லாததால் அவன் துறவியாகவும் இல்லை. சத்திரத்தின் நடைமுறைகள் தென்னாட்டவர்க்கே பெருமை தருவனவாக இருப்பதைக் கண்ட சரவணர், அதன் அன்றாட நடைமுறை அலுவல் கள் அனைத்திலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். எதற் கும் பயனின்றி இருந்து சாவதில் என்ன இருக்கிறது? முழுவதும் தம்மை மறக்கிற வேகத்தில் அவர் உழைத் தார். அவர் முன்னோர்கள் எல்லாம் இவ்வாறு உழைத்த வர்களே. அவர் தான் முழுவதும் சீமானாய், உல்லாச வாழ்விலேயே தம் இளமையைக் கழித்தார். இப்போது எங்கிருந்து இந்த விரைவும் வேகமும் உழைப்பும் வந் தன என்று, இவரே அதிசயிக்கும்படி அவர் சுழன்று சுழன்று பணி செய்தார். தாம் யார் என்பதை—பாரிஸ்டர் படித்தவர் என்பதை—பணக்காரக் குடும்பத்தவர் என் பதை அவர் சிறிதளவு கூடக் காட்டிக்கொள்ளவில்லை. ஆண்டியும் மற்றவர்களும் அவரை அணுகி எதனையும் தூண்டித் துருவிக் கேட்கவுமில்லை. பெரும் செல்வக் குடும் பத்தவர் என்பதையும் ஏதோ காரணத்தால் அனைத்தை

குடிகாரியாக மாற்றிக் கடைசியில் கொலைசெய்து எறிந்த குற்றம்; சூதிலும் வாதிலுமே காலமெல்லாம் கழித்த தீமை—எதை நினைப்பது? எதை விடுவது? தம்மைத் தாமே நொந்துகொண்டு அவர் அழுத அழுகை கங்கை வெள்ளத்தோடு போட்டியிடுவது போலப் பொங்கிப் பெருகியது.

திருமுருகாற்றுப் படையை அவர் சின்னஞ்சிறு வயதில் கற்றது மட்டுமல்லாமல், பிறகு இலண்டனிலும் திருச்சியிலும் கூட நினைவு கூர்ந்த நாட்கள் உண்டு. திருச்சியை விட்டுப் புறப்பட்டதிலிருந்து அவர் அதனை மீண்டும் மீண்டும் நினைவு படுத்தி, தட்டுத் தடுமாறி, முழுப்பாட்டையும் ஓதியவண்ணமிருந்தார். இப்போது பாடல் முழுவதையும், ஆறு படைவீட்டுப் பகுதிகளைக் கொண்ட 317 அடிகளையும் பத்து வெண்பாக்களையும் ஓர் அடி விடாமல் அவர் மிக நினைவோடு வாய்விட்டுப் பாடினார். வேறு எதிலும் காணாத மன அமைதியை அது அவருக்குத் தந்தது. ஒரு வேளை தம் இளமைக் கால வாழ்வின் தொடக்கத்திலேயே, இப் பழக்கத்தை விடாது போற்றியிருந்தால், தாம் திசைதப்பிப் போயிருக்க நேர்ந்திராது என்ற நினைவு அவர் நெஞ்சிலோடியது. இனி அதை நினைத்துப் பயனென்ன?

இப்போது ஒரே நாளில் எவ்வளவு பெரிய மாறுதல்? தம்மைக் குடிகாரனாய்க் கொலைகாரனாய் ஆக்கிய சூழ்நிலை எங்கே? இந்த மாறுதல் எங்கே? புத்தர் ஞானம் பெற்றது போல் அல்லவா, ஒரே நாளில், கணப்பொழுதில் நடந்து விட்டது. புத்தராவது பல ஆண்டுகள் உலகத் துன்பங்களைக் கண்டு நைந்துருகி, ஒரு நாளில் முழு மாற்றம் பெற்றார். தமக்கு முதல்நாள் வரை இருந்த அந்தச் செருக்கு, திமிர், ஆணவம், புறக்கணிப்பு, வெறி எல்லாம் அவளைக் கொன்றவுடன்—கொல்லும் படியான சூழ்நிலை ஏற்பட்டவுடனே முழுவதும் மாறி ஒரு திண்ணிய உணர்வு மனநிறை, கடைப்பிடி, உரம், வைராக்கியம், உறுதி ஏற்பட்டதை எண்ணியெண்ணி வியந்தது அவருடைய உள்

மனம். இனி, இந்த உடையோடும் உணர்வோடும் கங்கையின் ஓட்டத்தில் கலந்துவிடலாம் என அவர் இடையிடையே கண் விழித்துப் பார்த்தார். கங்கைக் கரையில் மனித நடமாட்டம் குறையவில்லை. மீண்டும் பாடல்களைப் படிப்பதும் கண்திறந்து பார்ப்பதுமாக இருந்தார் அவர்.

''உலகம் உவப்ப வலன்ஏர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு
ஓஅற இமைக்கும் சேண்விளங்கு அவிரொளி
உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்தாள்
செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை
மறுவில் கற்பின் வாள்நுதல் கணவன்
... ...
... ...
சேவடி படரும் செம்மல் உள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்புரிந்து உறையும்
செலவுநீ நயந்தனை யாயின் பலவுடன்
நன்னர் நெஞ்சத்து இன்னிசை வாய்ப்ப
இன்னே பெறுதிநீ முன்னிய வினையே!

இங்ஙனம் வாய்விட்டுப் படித்துக் கொண்டே, சரவணர் ஒரு முறை கண்முகிழ்த்து எதிரே பார்த்த பொழுது, அங்கே தமிழ் நாட்டு நண்பன் ஒருவன் முருகனைப் போலவே எதிரே நிற்கக் கண்டு, பாட்டை நிறுத்திவிட்டு உற்றுப்பார்த்தார்.

''சாமி! கும்பிடறேனுங்க. உங்க அருமையான தமிழ்ப் பாட்டைக் கேட்டுட்டு, அப்படியே நின்னுட்டேனுங்க... வாங்க... என்றோடெ வாங்க சாமி! தமிழ்நாட்டுக்காரங்க தங்கிறதுக்கு நல்ல இடம் ஒண்ணு இருக்குது. உங்க மாதிரி சாமிங்களுக்கு மரியாதை காட்டுவாங்க....வாங்க சாமி!" என்றான் அவன்.

சாமிகள்—ஆம் சரவண சாமிகள்!—திகைத்தார். என்ன செய்வது என்றும் என்ன பேசுவது என்றும் அவருக்கு

எதுவும் தோன்றவில்லை. உடையும் பாட்டும் அவரைச் சாமியார் ஆக்கிவிட்டன. சாவதற்குப் பதில் ஏன் சாமியாராகவே வாழ்ந்து விடக் கூடாது? உலகத்திற்குத் தொண்டுசெய்து, செய்த பாவத்தைத் தொலைக்கக் கூடாதா?...அவன் ''என் பேரு ஆண்டிங்க...பண்டாரம். இங்கே நகரச் சத்திரம் இருக்குங்க...வாங்க .. அங்கே தங்கலாம்... நான் அங்கேதான் தங்கியிருக்கிறேனுங்க!", என்று பரிவோடு அழைத்தது, அவரை அன்புக் கயிற்றால் கட்டி இழுப்பதுபோல் இருந்தது. ஏதோ மாயவித்தைக்குக் கட்டுப்பட்டவர் போல அவர் எழுந்து, அவன் பின்னேயே நடந்தார்.

இடையில் கட்டி, முழங்கால் வரை திரைத்து நின்ற நான்கு முழ வேட்டி; மேலே ஒரு துண்டு. இடுப்பில் வெற்றிலைபாக்குச் சுற்றி வைத்திருந்த பெரிய மடி ஒன்று, துருத்திக் கொண்டிருந்தது. வாய் முழுவதும் குதப்பிய வெற்றிலை. ஆண்டியின் பின்னேயே நடந்த சரவணர் 'ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டையார் நகரச் சத்திரம்' என்று குறிக்கப்பட்டிருந்த பெரிய இரண்டு மாடிவைத்த உயரமான கட்டிடத்திற்குள் நுழைந்தார். அந்த வேளையிலும் சிறிது தேங்காய்த் துண்டும், பொங்கலும் வாழைப்பழமும் கொண்டு வந்து கொடுத்தான் ஆண்டி. அதைச் சாப்பிட்டுவிட்டு, ஆண்டியின் பக்கத்தில் படுத்த அவர் நன்றாக உறங்கிப் போனார்.

○

மறுநாட் காலையில் ஐந்து மணிக்கே எழுந்த ஆண்டி 'சாமி'யையும் உசுப்பி விட்டான். முதல்நாள் இரவு 2 மணி வரை கண் விழித்த அலுப்பில் அயர்ந்து உறங்கிய அவர் வாரிச் சுருட்டி எழுந்து உட்கார்ந்தார். இருவரும் நீராடி விட்டு, நீண்ட தூரம் நடந்து நந்தவனத்திற்குச் சென்றார்கள். அது சத்திரத்து நந்தவனம். அங்கேயிருந்துதான் பூசைக்கு வேண்டிய மலர், பச்சிலைகளைக் குடலையில் எடுத்து வருவது வழக்கம். ஆண்டி பூஞ்செடி

களை ஒழுங்குபடுத்தித் தண்ணீர் பாய்ச்சினான். குப்பைகளை அப்புறப்படுத்திக் குழியிற்கொண்டு குவித்தான். 'சாமி' களும் ஆண்டியுடன் சேர்ந்து அத் திருப்பணியில் ஈடுபட்டார். ஆண்டி, "உங்களைப் பார்த்தால் படித்தவர்போல் இருக்குது; நீங்கள் இத்தையெல்லாம் செய்ய வேண்டாம்'', என்று எவ்வளவோ தடுத்தும் அவர் கேட்கவில்லை.

மரம் செடி கொடிகளை நாட்காலைப் போதில் பார்ப்பதும் அவை துளிர்விடுவதையும் அரும்புவதையும் பூப்பதையும் காண்பதும் அவற்றிற்குக் கருத்தோடு வேலை செய்வதும் மனத்திற்கு ஒரு வித மலர்ச்சியை நல்கியது. மனிதன் இப்படி இயற்கையோடு உறவாடி, அதற்காக வேலை செய்வதால் மனம் பண்படும் என்பதை அவர் உணர்ந்தார். மாந்தர்கள் இயற்கையைவிட்டு விலகவிலக விலங்காகிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு விதை தூவி, அது செடியாகி, அதிலிருந்து ஒரே ஒரு அரும்பு மலர்வதைப் பார்க்கும்போதுகூட எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறது! தாய்மைப் பாசத்தை, அன்பை அல்லவா சுரக்கச் செய்கிறது அது!

அவரால் பூத்தொடுப்பதற்கு மட்டும் பழக முடியவில்லை. அதையும் சிறிது முயன்றால் கற்றுக்கொண்டு விடலாம் என்பவர் போல், அவர் ஆண்டி பூத் தொடுக்கும் போதெல்லாம் உன்னிப்பாகக் கவனித்து வந்தார். ஆண்டி சத்திரத்திற்குத் திரும்பியதும் தோளிற் சுமந்துவந்த பூக்குடலைகளை வைத்து விட்டுப் பக்கத்திலுள்ள பசுமடத்திற்குச் சென்றான். அங்கு சத்திரத்துப் பசுமாடுகள் நின்று கொண்டிருந்தன. அவற்றுக்கு வேண்டியவாறு வேலைகள் செய்யும்படி பணியாட்களை ஏவித் தானும் அவற்றில் ஈடுபட்டுச் செய்தான் ஆண்டி. சாணத்தை அப்புறப்படுத்தி, கொட்டிலைக் கழுவி விட்டு, மாடுகளைக் குளிப்பாட்டி, புல் போட்டு, பருத்திக்கொட்டைத் தண்ணீர் வைத்துப் பால் கறந்து திரும்பும்போது மணி ஏழு ஆகிவிட்டது. என்ன காரணமோ தெரியவில்லை; சரவணர் ஆண்டியின் நிழல்

போல இயங்கிக் கொண்டிருந்தார். அவன் செய்யும் ஒவ்வொரு செயலையும் கவனித்து, ஏதோ பலநாட் பழகியவர் போலச் சரவணர் தாமும் ஈடுபட்டுச் செய்ய லானுர்.

அதன் பிறகு நகரச் சத்திரத்தில் பல வழிபாடுகள் நடந் தன. தமிழ்நாட்டு நாதசுர மேளம் முழங்கியது. சிலர் காசிவிசுவேசுவரர்க்குரிய அபிடேக அலங்காரப் பொருள் களுடன் ஊர்வலமாகப் புறப்படலாயினர். ஆண்டியுடன் சரவணரும் அதில் சேர்ந்து சென்றுர். அவர் அதிகம் பேசவில்லை. வாய் ஏதேனும் பாட்டை முணுமுணுப்ப தோடு சரி. கேட்பவர்க்கு உண்டு, இல்லை என இரண் டோரு வார்த்தைகளே அவர் பேசினுர், பலரும் அவரை அரை ஊமை என்றே எண்ணி விட்டார்கள்! அவரோ இவ் உலகைப் பற்றியே எதுவுமே கவலைப் பட்டதாகத் தெரியவில்லை. பழைய சரவணன் கங்கையோடு போய் விட்டதாகவும், இப்போது திரிபவன் புதியதோர் 'சாமி' என்றும் அவர் உறுதி செய்து கொண்டார். அந்த ஊர் வலத்தில் ஆண்டி முன்னே சென்றதால், இவரும் அவனைத் தொடர்ந்து முன்னே சென்றுர். 'சம்போ சம் போ சங்கர மகாதேவா!' என்று இடையருது கூவிக் கொண்டு, அவர்கள் காசி நகரத்துக் கடைத்தெருக்களின் வழியாகச் சென்று, கோயிலை அடைந்தார்கள். விசுவேசு வரர் கோயிலினுட்சென்று, அவர்களுடன்சேர்ந்து சரவண ரும் நல்ல முறையில் வழிபாடு செய்தார். விசாலாட்சி சன்னிதானத்தில் 'தொடுக்கும் கடவுட்பழம்பாடல்' என்ற குமரகுருபரர் பாடலைக் கணீரென்ற குரலில், முதல்நாளே பாடி, அவர் அனைவரது கவனத்தையும் ஈர்த்தார். சத் திரத்திற்குத் திரும்பியபின் மேலாளரிடம் சரவணசாமியை ஆண்டி அறிமுகப்படுத்தி வைத்தான். வழக்கம் போல் அன்றும் நூறுபேருக்கு அன்னதானம் இடப்பட்டது. சரவணரும் அவர்களில் ஒருவராய் ஆண்டியின் அருகே அமர்ந்து உண்டு அயர்வு நீங்கினுர்.

○

சரவணர் தம் உடலைக் கங்கையிற்போட்டு, 'காசியில் இறக்க முத்தி' என்ற நம்பிக்கையில் வீடுபேறடைய எண்ணிவந்தார். இப்போது அவரிடம் பெரும்மாறுதலேற் பட்டிருந்தது. பலருக்கும் தம் ஒவ்வோரணுவும் பயன்படு மாறு பணிசெய்து முற்ற முடியத் துறவறவாழ்வு வாழ்ந்து பிறருக்கு எடுத்துக் காட்டாகத் திகழ வேண்டும் என்று அவர்மனம் உறுதியாய் எண்ணியது. அவ்வளவு மாறுத லுக்கும் இந்த ஆண்டிதான் காரணம் ஆவான். நந்த வனத்தைக் கவனிக்கவும் அதிலிருந்து மலரெடுத்து வந்து காலையிலும் மாலையிலும் பூத்தொடுக்கவும் எனப்பணியில மர்த்தப் பட்டிருந்த ஆண்டி, அதற்கும் அப்பால் எல்லா விதமான வேலைகளையும் விரும்பி மேற்கொண்டு செய்து வந்தான். அவன் திருமணம் பற்றிய நினைவே இல்லா மல் இவ்வளவு காலம் போக்கிவிட்டான். அவனுக்கு உற் றார், உறவினர் என யாரும் இருப்பதாக எவருக்கும் தெரி யவில்லை. துறப்பதற்கு என எதுவுமில்லாததால் அவன் துறவியாகவும் இல்லை. சத்திரத்தின் நடைமுறைகள் தென்னாட்டவர்க்கே பெருமை தருவனவாக இருப்பதைக் கண்ட சரவணர், அதன் அன்றாட நடைமுறை அலுவல் கள் அனைத்திலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். எதற் கும் பயனின்றி இருந்து சாவதில் என்ன இருக்கிறது? முழுவதும் தம்மை மறக்கிற வேகத்தில் அவர் உழைத் தார். அவர் முன்னோர்கள் எல்லாம் இவ்வாறு உழைத்த வர்களே. அவர் தான் முழுவதும் சீமானாய், உல்லாச வாழ்விலேயே தம் இளமையைக் கழித்தார். இப்போது எங்கிருந்து இந்த விரைவும் வேகமும் உழைப்பும் வந் தன என்று, இவரே அதிசயிக்கும்படி அவர் சுழன்று சுழன்று பணி செய்தார். தாம் யார் என்பதை—பாரிஸ்டர் படித்தவர் என்பதை—பணக்காரக் குடும்பத்தவர் என் பதை அவர் சிறிதளவு கூடக் காட்டிக்கொள்ளவில்லை. ஆண்டியும் மற்றவர்களும் அவரை அணுகி எதனையும் தூண்டித் துருவிக் கேட்கவுமில்லை. பெரும் செல்வக் குடும் பத்தவர் என்பதையும் ஏதோ காரணத்தால் அனைத்தை

யும் துறந்து வந்துவிட்டவர் என்பதையும் மட்டும் அவர் கள் ஒருவாறு யூகித்து வைத்திருந்தார்கள். அவரை அங்கே தங்கவைக்க ஆண்டி கூட அனுமதி கேட்கவில்லை. ஆண்டியோடு வந்தார்; ஆண்டியின் நண்பர் என்பது தான் அனைவருக்கும் தெரியும். அவரும் யாரிடமும் கேட்டு அனுமதி பெறவுமில்லை. அது முறைப்படி கேட்கப் பட்டு மறுக்கப்படவோ, அளிக்கப்படவோ இல்லை. எப்ப டியோ வந்தார்; அதன் வேலைகளில் தம்மைத் தாமே ஈடு படுத்திக் கொண்டார். ஆண்டி எவ்வாறு அச்சத்திரத்தை விட்டுப் பிரிக்க முடியாத ஓர் உறுப்பினனாகி விட்டானோ, அது போலவே சரவணரும் ஆனார். இப்போது எந்த வேலையென்றாலும் 'சரவண சாமி எங்கே?' எனப் பலரும் கேட்கும் நிலை ஏற்பட்டுவிட்டது.

பூங்காவைச் செம்மைப்படுத்தி, மலர்ச்செடிகளை உண் டாக்குவதில் அவர் கண்ணும் கருத்துமாயிருந்தார். மிக வும் முன்னதாக, வைகறைப் போதிலேயே எழுந்துபோய் ஆறு மணிக்குள், அவர் அவ்வேலைகளை முடித்துவிட்டு, அங்கேயே பல்விளக்கிக் குளித்துவிட்டு வருவது வழக்க மாயிற்று. ஆண்டியே இதைப்பார்த்து வியப்படைந் தான். இதற்கென இரண்டொரு வேலையாட்கள் இருந்த னர் என்றாலும், சரவணர் அவர்களையும் ஏவித் தாமும் முயன்று உழைத்தார். ஆண்டி சிறிது நிதானமாகப் பொறுமையுடன் வேலைபார்ப்பான்; சரவணரோ பம்பரம் போல் சுழல்வார். இதைப்பார்த்து ஆண்டி உள்ளூர மகிழ் வான். சத்திரத்தை விட்டுச் சற்றுத் தள்ளியிருந்த நந்த வனம் முன்பெல்லாம் கவனிப்பாரின்றிக் கிடந்ததுண்டு. இப்போது அது பூத்துக் குலுங்கிப் பொலிவுற்றுத் திகழ்ந் தது!

சத்திரத்தை ஒட்டி இருந்த பசுமடத்தில், இப்போது இரண்டே பசுக்கள் தான் சொந்தமாக இருந்தன. அவற் றைப் பேணிப் பாதுகாக்க முடியாததால், மற்றவர்களிட மிருந்து பால்வாங்க ஏற்பாடாகி இருந்தது. அவர்கள் தங் கள் மாடுகளைக் கட்டிக்கொள்ளப் பசு மடத்தில் இடம் தரப்

பட்டிருந்தது. எனவே அங்கு அதிக வேலை இல்லையென்ருலும், சரவணர் நாள்தோறும் ஒரு முறையாவது அங்கு சென்று அதனைச் சுத்தப்படுத்துவதில் கவனம் செலுத்தினர்.

இதையெல்லாம் கவனித்த மேலாளர், அறங்காவலர்களுக்குச் சொல்லி அவருக்குச் சம்பளம் வாங்கித்தரவும் முன்வந்தார். ஆங்கிலக் கடிதங்களுக்குப் பதில் போடவும் கிழக்காசிய நாடுகளிலிருந்தோ பிற இடங்களிலிருந்தோ வரும் புனிதப் பயணிகளிடம் உரையாடவும் சரவணர் உறுதுணையாக இருந்ததால் மேலாளருக்கு அவரிடம் தனி மதிப்பும் மரியாதையும் ஏற்பட்டிருந்தது. எந்தக் காரணத்தை முன்னிட்டும் சரவணர் தாம் சம்பளம் பெற இயலாதென்று மறுத்துவிட்டது. எல்லோர்க்கும் ஒரு வியப்பை ஏற்படுத்தியது. அதன்பிறகு அவரைப் பார்க்கும் போதெல்லாம் ஒரு தூய துறவியைப் பார்த்த பெருமித உணர்வே ஒவ்வொருவருக்கும் ஏற்பட்டது.

சரவணருக்குச் சிறப்பாக ஓர் இயல்புண்டு. எதிலும் ஆழ்ந்து, அமிழ்ந்துவிடுவார் அவர். முன்பு செல்வச் செழிப்பில் குதித்தாடியபோது அவர் அதை அனுபவிப்பதிலேயே ஆழ்ந்துவிட்டார். இரவுபகல் எந்த நேரத்திலும் அவர் அந்த ஆட்டத்திலும் பாட்டத்திலுமே நாட்டமுடையவராக விளங்கினர். இப்போது பற்றற்ற—விருப்பு வெறுப்பற்ற வாழ்வு என்று வந்தபோதும் அவர் முற்றிலும் பற்றற்றவராகக் காணப்பட்டார். உழைப்பதில் ஒரு வேலையாளைவிட மிகவும் உழைப்பவராக, ஓர் உரிமையாளரைவிட மிகவும் உண்மையானவராக, ஒரு முனிவரைவிடச் சிறந்த தவநோன்பியாக அவர் காணப்பட்டார். இதனல் சுற்றியிருந்த அனைவராலும் அவர் வணங்கத்தக்கவரானர்.

○

காசிநகரம் சரவணருக்கு மிகவும் பிடித்துப்போய்விட்டது. வருணை, அசி என்ற இரண்டு கிளையாறுகளும் கங்கையிற்

கலக்குமிடத்தில், அவ் இரண்டற்கும் இடைப்பட்ட நிலத்தில் இருந்தமையால் அவ்வாரணாசி நகர் இயற்கைப் பொலிவோடு இலங்கியது. மாலை நேரங்களில் அவர் காசி இந்துப் பல்கலைக் கழகத்திற்குச் சென்று வருவதுண்டு. விரைவிலேயே அவர் இந்தியில் பேசக் கற்றுக் கொண்டு விட்டார். பல்கலைக் கழக வகுப்புக்களில் சேர்ந்து இந்தி, சமஸ்கிருதம் இரண்டிலும் நன்கு தேர்ச்சி பெற்றார். சத்திரத்தில் மாலை நேரங்களில் பக்திப் பாடல்கள் பாடுவோராக அவர் அறிமுகமானார். பிறகு சிற்சில சமயங்களில் அவர் சமயச் சொற்பொழிவுகளும் ஆற்றியதுண்டு. ஒருசில வட இந்தியர்களுக்குத் தமிழ் கற்பிப்பவராகவும் மற்றவர்களுக்குச் சமஸ்கிருதம், இந்தி மொழிகளைக் கற்பிப்பவராகவும் அவர் அவ்வப்போது விளங்கியதும் உண்டு.

காசியில் எங்கு பார்த்தாலும் சிவலிங்கங்கள்! பிற்காலத்தில் எங்கே சிவலிங்கத்தைப் பார்த்தாலும் அவருக்குக் காசி நினைப்பு வந்துவிடும். அது இந்துக்களுக்கு மட்டுமின்றிச் சீக்கியருக்கும் பௌத்தருக்கும் கூடப் புண்ணிய நகரமாகும் என அறிந்த சரவணர் அம்மண்ணில் நடமாடுவதை ஒரு பெருமையாகக் கருதினார். பித்தளைப் பாத்திரக் கடைகளை அங்கு எங்கு போனாலும் காணலாம். பட்டுநெசவு, சரிகைவேலை, நகைகள் செய்தல், பொம்மை செய்தல் போன்ற தொழில்களைக் காணநேரும் போதெல்லாம் சாமிகள் அத்தொழிலை நுட்பமாகக் கவனித்து, இதைத் தமிழகத்தில் எப்படிப் பயன்படுத்தலாம் என எண்ணமிடுவார். அம்மண்ணில் நடக்கும்போதெல்லாம், வியாசமுனிவர் வாழ்ந்த இடமென்றும் மகாவீரரும் புத்தரும் சங்கரரும் துளசிதாசரும் சான்றோர்களும் இருந்த இடமென்றும் அவர் பெருமிதத்தோடு நினைவு கொள்வார். விசுவநாதர், அன்னபூரணி, விசாலாட்சி கோயில்களில் வழிபடத் தென்னாட்டிலிருந்தும், கிழக்காசிய நாடுகளிலிருந்தும் கூட்டம் வருவதை நகரச் சத்திரத்தில் காணலாம். அங்கேயே மேலாளர், பணியாட்கள், சமையற்

காரர்கள், மேளகாரர்கள் எனப் பல தமிழகத்தவர் நிலையாகச் சம்பளத்திற்கு இருந்ததால், அச்சூழ்நிலை தமிழகத்தைவிட்டுப் பிரிந்துவிட்ட உணர்வைக் குறைப்பதாய் இருந்தது.

சரவணசாமி நகரச் சத்திரத்து அலுவல் ஒவ்வொன்றிலும் தம்மைத் தாமே ஈடுபடுத்திக் கொண்டார். சத்திரத்திற்குள் நகரேசுவரர் கோயில், பாதாளஈசுவரர் கோயில், அன்னபூரணி கோயில் என மூன்று கோயில்கள் உள்ளன. அவற்றின் அன்றாட பூசை வழிபாடுகளிலும் சரவணர் தம் மாலான உதவிகளனைத்தையும் செய்தார். காலை 11மணிக்கும் இரவு 8 மணிக்கும் விசுவேசர் கோயிலுக்குச் சம்போ புறப்படும்போது சரவணரும் உடன்சென்று அது திரும்பும் போதுதான் திருப்புவார். ஒவ்வொருநாள் மாலை நான்கு மணி அளவில் சத்திரத்தில் வியாசபாரதச் சொற்பொழிவு, பெரியபுராண உரை, பகவத்கீதை விளக்கம் நடக்கும். இவற்றில் எல்லாம் அமைதியாக, அடக்கமாகக் கலந்து கொண்டு சரவணர் பெரும்பயன் பெற்ருர். பிறகு பல ஆண்டுகள் அவரே ஆசிரியராகிச் சொற்பொழிவாளராகி இவற்றைப் பிறருக்கு எடுத்தோதுபவரானுர். சரவணர் சொற்பொழிவு என்ருல் கூட்டம் மிகுதியாக வரவும் தொடங்கியது. எல்லா மதத்தினரையும், எல்லா மொழியினரையும் அவர் கவர்ந்தது குறிப்பிடத்தக்கது.

நகரத்தார்களில் சிலர் தாம் பிறந்த நட்சத்திரத்தன்று விசுவேசர் கோயிலில் நன்னீராட்டு, அருச்சனை செய்ய வேண்டித் தமிழகத்திலிருந்து பணமனுப்புவார்கள். சிலர் கங்கை நீரைக் குடங்களிலோ, தகரங்களிலோ அடைத்து அனுப்ப வேண்டி, அதற்குரிய தொகையை அனுப்புவார்கள். சிலர் மோட்சதீபம் போடவும் சிலர் தங்கள் உறவினரின் 'அஸ்தி'யைக் கங்கையிற் கரைக்கவும் வேண்டி உரிய தொகையை அனுப்புவார்கள். இவ் வேலைகள் பலவற்றில் சத்திரத்து மேலாளருக்குச் சரவணர் மிகவும் உதவியாக இருப்பார். அவர் விடுப்பில் போய்விட்ட சமயங்

களில் முன்னின்று இவற்றைச் சரவணர் தாமே செய்வது மூண்டு.

சத்திரத்திற்கு எங்கெங்கிருந்தோ, எவரெவரோ வருவார்கள். சாந்தி செய்துகொள்ள, நூருண்டு நிறைவைக் கொண்டாட, நீத்தார் கடனாற்ற, தம் அந்திய காலத்தைக் காசியிற் கழிக்க, காசி இந்துப் பல்கலைக் கழகத் தேர்வுகள் எழுத எனப் பலரும் வருவார்கள். எல்லோர்க்கும் வேண்டிய உதவி செய்வதிலும் வழிகாட்டுவதிலும் இன்பம் காண்பார் சரவணர்.

ஒவ்வொரு நாளும் சத்திரத்தில் குறைந்தது நூறு பேர்களுக்காவது அன்னதானம் நடைபெறும். இதில் முழுப் பங்கேற்று நடத்துவார் சரவணர். தமக்குப் புகலிடம் அளிக்கப்பட்ட இடம் என்பதும் தம் வயிற்றுத் தீயை அணைக்க உதவிய அன்னதானம் என்பதுமே அவர் இவ்வளவு ஈடுபட்டு, இவற்றில் எல்லாம் உழைக்கக் காரணமாகும்.

விசுவேசர் கோயிலில் புலர்காலை வழிபாடு, உச்சிக்காலம், அர்த்தசாமம் மூன்றிலும் முறையே இனிப்பும் பருப்புப் பொங்கலும் சர்க்கரைப் பொங்கலுமாகிய மூன்றும் படையலிட்டு வழங்கப்படும். உச்சிக் காலம், அர்த்தசாமம் இரண்டிற்கும் சத்திரத்திலிருந்தே அருச்சனை, அபிடேக, அலங்காரப் பொருள்கள் ஊர்வலமாகத் தனித்தனியே இரண்டுமுறை ஒவ்வொரு நாளும் கொண்டுபோகப்படும். இதற்குச்'சம்போ' என்று பெயர். சரவணருக்குச் சம்போ கொண்டு போவதிலும் விசுவேசுவரரை நாள்தோறும் இருமுறை வழிபடுவதிலும் பேரின்பமும் பேரார்வமும் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

நகரச் சத்திரத்தின் மாடியிலுள்ள சுப்பிரமணியர் படத்தின் முன்பாகச் சாம்பிராணிக் கலசத்தை வைத்துப் பிறகு கீழே பாதாள ஈசுவரர் கோயிலில் தசாங்கம் போட்டு, நகரேசுவரர் கோயிலை வலம் வந்து தமிழகத்து மேளதாளம், நாதசுரத்துடன் சம்போ புறப்படும். வாசனைத் தைலம்,

தேன், பன்னீர், சூடம், ஊதுபத்தி, அத்தர், பழுப்புச் சர்க்கரை, திருநீறு, சந்தனம், வில்வம், அறுகம்புல், பூ மாலை, பால், தயிர், பஞ்சாமிர்தம், கங்கைநீர், அரிசி, பூணூல் அனைத்தும் ஒவ்வொரு வேளையும் கொண்டு போகப்படும். சவ்வாது, பட்டு, வெண்சாமரை, சோடச உபசாரப் பொருள்கள் எல்லாம் வெள்ளிப் பாத்திரங்களில் வைத்து எடுத்துச் செல்லப்படும். அபிடேகப் பொருள் களை இந்துஸ்தானி அந்தணர்கள் நால்வர் கொண்டு செல்வர். இதற்காக நான்கு அந்தணரை சம்பளத்திற்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். அவர்கள் நகரத்தார் பண்டா என அழைக்கப்படுவர். மற்றபடி சத்திரத்தார் காலை யில் இருவரும் இரவு அறுவரும் உடன்சென்று எல்லாப் பொருள்களையும் கொடுத்துத் திருப்புவர். காலையில் 11 மணிக்குப் புறப்படும் சம்போ 12-30க்குத்திரும்பும். இரவு 8மணிக்குப் புறப்படும் சம்போ 11 மணிக்குச் சத்திரத்திற் குத் திரும்பி வந்து சேரும். சரவணர் ஒவ்வொரு நாளும் 11 மணிக்குச் சம்போவுடன் திரும்பிவந்து, அனைத்தையும் பத்திரப்படுத்திய பிறகுதான் உறங்கப் போவார். சம்போ கொண்டு போகும் போது, ''சம்போ சம்போ சங்கர மகா தேவா'' என்று கூவிக் கொண்டு ஊர்வலமாகப் போவார். அப்போது வழியிலுள்ள மக்களும் கடைக்காரர்களும் சம் போவைப் பார்த்துத் தலைவணங்குவர்.

சம்போ ஒவ்வொரு நாளும் சரியான நேரப்படி புறப்படும். சம்போவைப் பார்த்துக் கடிகாரத்தில் நேரத்தைத் திருப்பி வைத்துக் கொள்ளலாம் என்று அங்கு மக்கள் பேசி மகிழ் வர். 'பஞ்சாப் மெயில் நேரப்படி வரத்தவறினாலும், நகர்த்தார் சம்போ நேரப்படி வரத் தவறுவதில்லை என்று அங்கு ஒரு பழமொழியே உருவாகிவிட்டது. இரவு சம்போ திரும்புவதைப் பார்த்துத்தான் வழியிலுள்ள கடைக்காரர்கள் எல்லாம் கடைகளை அடைப்பது வழக்கம்.

அவ் வழியில் தேவார, திருவாசக அருட் பாடல்களைப் பாடிச் செல்வதும் 'சம்போ சம்போ சங்கர மகாதேவா' என்று கூவுவதும் சரவணர் உள்ளத்துக்கு ஒருவித இதம்

அளித்தன. அவருடைய தோற்றத்தையும் துறவுக் கோலத்தையும் பெருமிதமான குரலையும் 'சம்போ' என்ற சிவநாமத்தையும் கேட்ட மக்கள் எழுந்து நின்று பணிந்து தாமாகவே ஈடுபட்டுக் கும்பிடும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்!

○

''கச்சினன் கழலினன் செக்சைக் கண்ணியன்
குழலன் கோட்டன் குறும்பல்லியத்தன்
தகரன் மஞ்ஞையன் புகரில் சேவலங்
கொடியன் நெடியன் தொடியணி தோளன்''

9

சரவணர் எப்போதும் ஒரே சிந்தனையுடனும் ஒரே நோக்குடனும் காணப்பட்டார். 'தன்னைத் தானே தியாகம் செய்வது' என்ற மேலான கொள்கை அவரிடம் சுடர் விட்டது. மனிதர்கள் எப்போதும் 'என்ன பயன் கிடைக்கும்' என்பதிலேயே நாட்டமுடையவர்கள். 'கருமத்தைச் செய், அதன் பயனை எதிர் பாராதே' என்றும் 'பயனை எதிர்பார்ப்பவன் உலோபி' என்றும் 'தொழில் செய்யத்தான் உனக்கு அதிகாரம் உண்டு. அதன் பயன்களில் எப்போதுமே உனக்கு அதிகாரமில்லை. செய்கையின் பயனைக் கருதாதே; தொழில் செய்யாமலும் இராதே' என்றும் கூறப்படும் கீதை உபதேசங்கள் இங்கு பலராலும் இன்னும் உணரப்படவில்லை. அதனால் குறிக்கோள் இல்லாத முயற்சியால், இங்கு பலர் மடிந்து வீழ்ச்சி அடைவதுண்டு. சரவணரோ இதற்கு நேர் எதிராகக் காணப்பட்டார். பயனே வேண்டாமென்று துறந்து விட்டுப் பணிபுரிந்தார்.

கோயிலிலும் சத்திரத்திலும் இருந்த பண்டாக்கள் அனைவரும் சரவணருக்கு நல்ல பழக்கமாகிவிட்டனர். சத்திர

அறங்காவலர் குழுவிலும் அவர்மீது நன்மதிப்பு ஏற்பட்டது. கோடீசுவரராக வாழ்ந்து, கட்டுப்பாடின்றி அலைந்த கதையெல்லாம் பத்துப் பதினைந்து ஆண்டுகளாகத் தொண்டராக வாழ்ந்ததும் சுவடு தெரியாமல் போய்விட்டன. வந்தமறுநாளே மாறியவர் அல்லவா அவர்! அதனை மாற்றமென்று சொல்லமுடியாது. மறுபிறவி என்றுதான் சொல்லவேண்டும். சாவதென்ற முடிவோடு வந்ததனால், இப்போது திசை மாறிய வாழ்வு, வழிபாட்டு வாழ்வாக மாறியது போலும்! நிலையாமை உணர்வு அடிமனத்தைத் தைத்தவுடன், ஆணவமல நெகிழ்ச்சி உண்டாகிவிட்டது. அவர் சாகாமல் செத்துவிட்டார்; மீண்டும் பிறவாமல் பிறந்துவிட்டார்! காலையில் 4 மணிக்கே எழுந்து இரவு 11 மணிக்கு மேலேதான் அவர் உறங்கச் செல்வது வழக்கமாகிவிட்டது. ஒவ்வொரு நாளும் கணப்பொழுதும் ஓய்வின்றி அவர் அலுவல்களைக் கவனித்தார். நோயென்றும் நொடியென்றும் ஒருநாள் பழகவேண்டுமே! எல்லோரும் அவரைக் குருவாக ஏற்றுப் போற்றினர். அவரோ ஆண்டியைத் தம் குருவாக ஏற்று நடந்தார்; ஆண்டியிடம் மிக்க மதிப்பு வைத்திருந்தார். அவனுடைய உண்மை, கடமை, உழைப்புப் பண்புகளை அவர் அப்படியே ஏற்றுக் கற்றுக்கொண்டார். மனிதன் புத்தகங்களைப் படிப்பதைவிட மனிதர்களைப் படிக்க வேண்டும்; மனிதப் பண்புகளைப் படிக்கவேண்டும்; பண்பாட்டைப் படிக்கவேண்டும் என்று அவர் கனவுகண்டார். தம்முடைய கல்வியைவிட, பாரிஸ்டர் படிப்பைவிட ஆண்டியினுடைய பண்பு மேலானது; உழைப்பு எளிதிற் கற்றுக்கொள்ளவோ, பின்பற்றவோ முடியாதது என அவர் உணர்ந்தார்.

சரவணர் தம் மனத்தைத் தூய்மைப் படுத்தவும் உண்மையான துறவற வாழ்வை விடாது மேற்கொள்ளவும் இக்கடும் உழைப்புத் தேவையென்று திண்ணமுற எண்ணினார். எனவே தம் மனத்தைக் கடமையுணர்வின் எண்ண அலைகளால் அவர் நிரப்பிக்கொண்டார். பசுமடத்தில் ஒரு வங்காளி தந்து வந்த பாலில் நீரை அதிகமாகக் கலப்பது

போல் தெரிகிறதே என அவர் நினைவு ஓடும். மறுகணம் நந்தவனத்து முல்லைச் செடியில் இலைப்புழு விழுந்துவிட் டதை எப்படி அகற்றுவது என அவர் மனம் சிந்திக்கும். நேற்று அன்னதானத்தின்போது வந்த இந்துஸ்தானிச் சாமி ஒருவர், சோற்றை மூட்டை கட்ட முயன்றதும், பணி யாட்கள் அது முறையல்ல என்று தடுத்ததும் அவருக்கு நினைவுக்குவரும். சம்போவுக்குக் கொண்டுபோக வில்வம் நன்கு தழைத்திருக்கிறதா, இல்லையா என ஒருபோது மனம் நாடும். மறுபோது விசுவேசர் சன்னதியில், நாத சுரம் முழங்கத் தாம் தேவாரம்பாடி வழிபடுவது போல் ஒரு காட்சி தோன்றும்!

சம்போ கொண்டுபோகும் பொழுது, அருள் ஒழுகும்தமிழ் இசைப் பாடல்களைப் பாடிக் கொண்டே போவது அவர் வழக்கமாயிற்று. பாடல் முடிந்ததும் "சம்போ..." என்று அவர் முழங்குவது கேட்டு எல்லோரும் முழங்குவர். ஆங் காங்கு வேலைபார்த்துக் கொண்டிருந்தவர்கள், பேசிக் கொண்டிருந்தவர்கள், பொருளை நிறுத்துக் கொண்டிருந் வர்கள், வாங்கிக் கொண்டிருந்தவர்கள் எல்லாம் தத்தம் அலுவலை அப்படியப்படியே விட்டுவிட்டுச் சம்போவைக் கையெடுத்துக் கும்பிடுவர். சரவணரும் திரும்பக் கும்பிடு வார். அந்தநேரம் வழியெங்கும் ஒரு தெய்வ உணர்வு— ஒளி சூழ்வதுபோல் ஒவ்வொருவரும் உணர்வர்.

ஒவ்வொரு நாளும் நகரச் சத்திரத்தில் காலை ஆறரை மணிக்குச் சாஸ்திரியார் ஒருவர் வந்திருந்து பஞ்சாங்கம் படிப்பது வழக்கம். அவருக்குச் சாதகம் பார்க்கவும் கை ரேகை பார்க்கவும் கூடத் தெரியும். சரவணர் அவைபற்றி யும் ஓரளவு அனுபவ அறிவு ஏற்படுமாறு, அவரிடம் கேட் டுக் கேட்டுச் சில அடிப்படைகளைத் தெரிந்து கொண்டார்.

காலையிலும் மாலையிலும் திருமுறைகளை ஓதுகிற வழக்கத் தையும் திருக்குறள் வகுப்பு நடத்துவதையும் சரவணர் தான் கொண்டுவந்தார். அவர் இந்தியிலும், சமஸ்கிரு தத்திலும், ஆங்கிலத்திலும் சரமாரியாகத் தம் விளக்கங்

களைப் பொழியும்போது, அனைவரும் திகைப்போடும் வியப்போடும் தெளிவோடும் அவற்றைக் கேட்டு மகிழ்ந்தனர்.

ஒரு சமயம் தமிழ்நாட்டிலிருந்து இரத்தினசாமிகள் தம் மாணவர்கள் இருவருடன் காசிக்கு வந்து, ஏறத்தாழ ஒன்றரையாண்டுகள் தங்கியிருந்தார். அவர் தெளிவான சிவசமய அறிவு உடையவர். நடைமுறைக் கண்ணோட்டத்துடன், மிக அழுத்தமாகச் சைவ சமய உண்மைகளை விளக்கவல்லவர். அவர் நாள்தோறும் முறையாகச் சித்தாந்த வகுப்புநடத்தினார். அவரிடம் முதல் மாணவராய்ச் சரவணர் முறையாகச் சிவநெறிக் கோட்பாடுகளைக் கற்றுக் கொண்டார். தாயுமானவர் பாடல்களில் தொடங்கி, திருவருட்பயனைப் படித்து, சிவஞான போதத்தை மாபாடியத்துடன் ஐயமறப் பயின்று சிவஞான சித்தியாரிலும் திருக்களிற்றுப்படியாரிலும் தோய்ந்து மற்றைய சாத்திர நூல்களையும் தோத்திர நூல்களையும் மேற்கோள்களாகக் கற்றுப் பயனடைந்தார் சரவணர். இரத்தின சாமிகளிடமே தீக்கையும் பெற்று, 'சரவண அடிகள்' என்ற திருப் பெயரும் சூட்டப்பட்டார்.

○

இரத்தின சாமிகளிடம் கற்கும்போதே சரவணர் தம் ஐயங்களை எல்லாம் அகற்றிக் கொண்டார். இரத்தினர் ஒரு நோக்கில் சொல்லிக்கொண்டு போனால், இவர் எதிர் நோக்கில் கேள்வியை எழுப்புவார். இரத்தினர் அதற்காகச் சீறி விழாமல், பொறுமையாக விடை கூறுவார். சித்தாந்த உண்மைகளைச் சிந்திப்பதிலும் அதுபற்றி அடிக்கடி உரையாடுவதிலும் 'சரவண அடிகள்' தம் பெரும் பகுதி நேரத்தைச் செலவிட்டார். காசியில் கால் வைத்த நாளிலிருந்து அவர் காவியுடைதான் பூண்டிருந்தார் என்றாலும், இப்போதுமுறைப்படி 'தீக்கை' பெற்றுவிட்டதால் அனைவரும் அவரிடம் மிக மதிப்புடனும் மரியாதையுடனும் பழகினர். ஆயினும் அவர் முன்பு போலவே தம் அன்

ருட அலுவல்களைக் கவனித்து வந்தார். ஆண்டியிடமும் எப்பொழுதும் போலவே பழகிவந்தார். ஆண்டிக்கு அவரிடம் எப்போதும்—அவருடைய தமிழ்ப் பாட்டைக் கேட்ட அந்த முதல் நாளிலிருந்து மிகுந்த மரியாதை இருந்து வந்தது. இப்போது, தன்னைப் போலவே மற்றவர்களும் அவரது உண்மையான பெருமையை அறிந்து கொள்ள நேர்ந்ததே என்று அவன் மனத்திற்குள் மகிழ்ச்சி கொண்டான்.

சரவணர் தம் திருச்சி வாழ்வை மறந்தொழிந்தார். தம் கண்ணெதிரே அத்தகைய பணத்திமிர் பிடித்துக் கண்டபடி ஆடுகின்றவர் என்று கருதக்கூடிய ஆணையோ பெண்ணையோ பார்த்தால் கூட அவருக்குப் பழைய சபலங்கள் ஊடாடுவதில்லை. அவருடைய வைராக்கியம் —மனத்திண்மை—உறுதிமிகச்சிறந்தது! அவருடைய தாத்தாவும் தந்தை நாகலிங்கம் பிள்ளையும் இத்தகைய மனவுறுதி மிக்க மாண்பான வாழ்க்கை வாழ்ந்தவர்களே! சரவணர் சின்னஞ்சிறு பிள்ளையாக வளர்ந்தபோது, இக் கட்டுக்கோப்பான வாழ்வுகளை உடனிருந்து, உன்னிப்பாகக் கவனித்து அந்த உணர்வோடு வளர்ந்தவர். இன்று அவரிடம் அதே கட்டுப்பாடு, கட்டுக்கோப்பு முழுவதுமாக ஒளி வீசித்திகழ்ந்தது. இடையில் வீசிய புயல் ஓய்ந்துதொலைந்தது. ஒவ்வொருகால் அவருக்கு வீட்டு நினைவு வரும்; பிள்ளைகள் நினைவு ஓடும். அப்போதெல்லாம் தாம் செய்த பாவத்திற்கு அவர்களை இப்படிப் பிரிய நேர்ந்ததுதான் சரியான தண்டனை என முடிவு செய்து கொள்வார். ஆண்டிக்கு உறவென்று யாருமில்லை. என்றாலும் தன் அன்னையையும் ஒரே ஒரு அக்காவையும் அவள் பிள்ளைகளையும் பற்றி அவன் சரவணரிடம் மட்டும் தனியே ஏதாவது குறிப்பிட்டுப்பேசுவான். அப்போதெல்லாம் சரவணருக்கு என்னவோ போல இருக்கும்; ஒருவித மனக்குறை அடிமனத்தில் குமிழியிடும். பிறகு தாம் தம் மக்களை விட்டு முழுவதும் விலகி வந்துவிட்டதுதான் அவர்களுக்கும் நல்லது என்று அவருக்குத் தோன்றும். ''பிள்ளைகளோ,

குடும்பமோ ஏற்கத் தக்க செயல்களையா நாம் செய்தோம். அங்கேயே இருந்திருந்தால் எல்லோரும் நர்மை எளன மாய் நடத்தியிருப்பார்கள். அது நம் பிள்ளைகளையும் பாதித்திருக்கும். மூத்தவர்கள் இருவருக்கும் எப்படியோ திருமணமாகிவிட்டது. மூன்ருவது பையனை அவர்களில் யாரேனும் ஒருவர் கவனிக்காமலா விட்டுவிடுவார்கள்?"— இவ்வாறு சரவணர் ஓர் ஆறுதல் கொண்டு வாழ்ந்து வந்தார். இருந்தாலும், வெளிக்காட்டாமல்தான் அவரால் பாசாங்கு செய்துகொண்டு ஒட்ட முடிந்ததே தவிர, அவரது உள்மனம் இந்தப் பாசத்தால், அன்பால், வாஞ்சையால் வெந்துகொண்டுதான் இருந்தது. 'பொற்கொடியையாவது கொல்லாமல் விட்டுவிட்டு வந்திருந்தால், அவள் குடும்பத்தைக் கவனித்துக் கொண்டிருப்பாளே, என ஒரு கணம் எண்ணும் அவர் மனம். உடனே 'அவளை அவ்வாறு கவனிக்கும் நிலைமையிலா விட்டு வைத்தோம்? தெய்வமாய் வந்தவளை அரக்கியாய் மாற்றித் தொலைத்தோமே! அமிழ்தத்தை நஞ்சாக்கித் தீர்த்தோமே! காவியத்தைக் கள்ளாக்கி விட்டு அல்லவா நம் பாவத்தை நிறுத்தினேம்? அவள் செத்ததே சரி. உயிரோடு இருந்திருந்தால் இன்னும் கேவலமாகப் போயிருக்கும்......'' சரவணர் மனம் இவ்வாறு உள்ளூற அல்லாடுவதும் மல்லாடுவதும் வெளியில் யாருக்கும் தெரியாது. அவர் ஆண்டியிடம் கூட இதுபற்றி ஒரு சொல் பேசியதில்லை. அவ்வளவு மனக் கட்டுப்பாட்டோடு இருந்துவிட்டார்.

இருந்தாலும் தம் மனத்தையோ, நினைவையோ தம்மை விட்டு விரட்டிவிட முடியுமா? அது கிடந்து குழம்பிக் கொண்டுதான் இருந்தது; அழுது புலம்பி அரற்றிக் கொண்டுதான் இருந்தது. வெள்ளத்தின் மேலேதான் இரைச்சல், குழப்பம் எல்லாம்; அடிநீரில் அமைதியும் தெளிவுமிருக்கும் என்பதெல்லாம் மனத்தைப் பொறுத்த வரை பொய்யே. மனவெள்ளத்தின் உள்ளேதான் அத்தனை குழப்பமும் கலக்கமும்! மேலே ஏதோ தெளிந்த நீரோடைபோல் காட்டிக் கொள்ள முடிகிறது. சரவண

ருக்கு இந்த 'வாஞ்சை' தலைதூக்கும்போதெல்லாம், பக்தி யுணர்வு மேலோங்கும். குடும்ப பாச நினைவு, அவரை மேலும் மேலும் பக்திப் பாடல்களைப் படித்துப்படித்து மன அமைதி தேடவைத்தது. பழைய கொடுஞ்செயல்களும் பாவங்களும் நினைவிலோடி, அவரைச் சித்தாந்த நெறி யின் சிந்தனையில் தோயச் செய்தன. உண்மையாகச் சொன்னால், பழைய நினைவு என்ற எதிர்விசையினாலே தான் அவர் புதிய தவ நோன்புகளில் அதிகமாக, மிக அதிகமாக ஈடுபட்டார்; ஈடுபட நேர்ந்தது என்று கூற வேண்டும். இந்தத் தாக்கமும் எதிர்த்தாக்கமும் என்ற மன இயக்கம் அவர் தம்மைத்தாமே தத்துவ விளக்கத் திற்கு ஒரு எடுத்துக்காட்டாக்கிக் கொண்டது போல ஆயிற்று. அதிலும் சித்தாந்தத்தில் 'வினைக்கோட்பாடு' பற்றி இரத்தின அடிகள் விளக்கிய பிற்பாடு, அதுபற்றிய சிந்தனையிலும் ஆராய்ச்சியிலும் சரவணருக்குப் பெரும் ஈடுபாடு முகிழ்த்தது.

○

சரவணர் வைகறையில் நந்தவனத்தில் வேலைபார்த்துக் கொண்டிருந்தார். பிச்சிப்பூப் போலப் பூக்கும் என்று, ஒருவன் இரண்டு கொடிப்பதியங்களைக் கொடுத்துவிட்டுப் போனான். அவற்றை அவர் வாங்கிவைத்து, நாள் தோறும் தண்ணீர்விட்டு வந்தார். ஆனால் ஒரு சில வாரம் கழித்து, அடர்ந்து படர்ந்து வந்த அக்கொடிகளில் இலைப்புழுக்கள் ஏற்பட்டு, அவை முன்பிருந்த செடிகொடி களையும் பாதிக்கத் தொடங்கின. கவலையோடு இதைப் பார்த்து, என்ன செய்வது எனச் சிந்தித்துக் கொண்டி ருந்தபோது, அங்கே ஓரிடத்தில் பெருச்சாளிகள் நிலத் தைத் தோண்டி, வளர்ந்துவரும் பூச்செடிகளைத் தூரோடு சாய்த்துவிட்டிருப்பது கண்ணிற்பட்டது. அவர் நினைவு அங்கிருந்து, எங்கோ பாய்ந்தது. இரத்தினர் சரவண ருக்குப் பாடம் சொல்லிக் கொண்டிருக்கிறார்: "அரசு மக் களை ஆள்கிறது என்றால், நேரே வந்தா செயற்படுகிறது?

ஒரு மாவட்ட ஆட்சித் தலைவரை, தாசில்தாரை வைத்து ஆளச்செய்கிறது. இறைவன் உயிர்கள் ஒரு நெறிப்பட இயங்க, ஆணவமலம் நெகிழ்ந்து நீங்க வினையை நியமித்துள்ளான். அது ஒரு தனி நியதி, சுழற்சி, முறைமையாகும். அது கண்ணுக்குத் தெரியாதது. நுண்ணிய கருத்து இழைகளால் ஆனது. அது தொடர்கிறது; தொடர்கிறது; தொடர்ந்துகொண்டே இருக்கிறது! போன பிறவியிலிருந்து, சென்ற ஆண்டிலிருந்து, நேற்றிலிருந்து, கடந்த கணப்பொழுதிலிருந்து இப்போது, இனிவரும் காலத்திற்கெல்லாம் அது தொடர்கிறது. ஒன்று தோன்றி அத்தோடு முடிவதென்பதில்லை. ஒன்று முடிவுறும்போதே, அதிலிருந்து பல இழைகள் பிரிந்து வெளிப்படுகின்றன. அங்ஙனம் அவை வெளிப்படும் போது தான் முன்னது முடிவுறுகிறது. இது ஒருவனை மட்டும் தனித்துத் தொடர்ந்து ஓய்கிறதா? பரம்பரைக்கும் பரவுகிறது; சமுதாயத்திற்கும் விரிகிறது.''

சரவணர் 'வினையைத் தனியொரு பொருளாக எப்படிக் கருதுவது?' என்று ஐயப்படுகிறார். அவர் நினைவோட்டம் தடைப்படுகிறது. தொடர்ந்து இரத்தினர் குரல் உள் மனத்தே ஒலிக்கிறது. அவர் ஒரு குவளை தண்ணீரெடுத்து, அரைக்குவளை குடித்துவிட்டுப் பேசுகிற ஒலி, பதிவு செய்த நாடாவில் ஓடுவதுபோல் அவர் மனத்திற்குள் ஓடுகிறது: ''செய்யாத வினைப்பயனை உயிருக்கு இறைவனாலும் ஊட்டவியலாது; ஊட்டமாட்டான். தான் வகுத்த சட்டத்தைத் தானே மீறி முறை மாறி ஊட்டுவது அவன் இயல்பன்று. அதுபோலவே செய்த வினைப்பயனை ஊட்டாமல் விடுவதும் இயலாது. ஊழ் என்பது இறைவன் நேரே அனுப்புகிற ஆணை அன்று. அவன் ஆணையை ஏற்று ஆட்சிக்கு வந்துவிட்ட வினையின் செயற்பாடு அது. உயிரின் முயற்சியை ஊழ் பறிக்காது. நாம் ஊழை வெல்கிறோம் என்பது நம் முன்வினையைப் பின் செய்யும் வினையால் வெல்கிறோம் என்பதுதான். ஊழை வெல்வது இறைவனை வெல்வதாகாது. முன்னைய வினை

யை விடப் பின்னைய வழிபாடு, நோன்பு, தவம், நற் செயல் வலிதாகுமானால், முன்னைய வினை பயனைத் தருவதில் தளர்கிறது; ஓய்கிறது; நீங்குகிறது. முன்வினையை நாம் வென்றுவிட்டதாகச் சில சமயம் எக்களிப்போம். ஆனால் மறுமுறை, சூழ்நிலை வாய்க்கும்போது ஊழ் மேம்பட்டு, அற்றம் பார்த்து நம்மைத்தாக்கும். 'ஊழையும் உப்பக்கம்' காணலாம் என்பது, ஊழ் நம் முயற்சி வலிதாகும்போது புறமுதுகிட்டு ஓடும் என்பதைத்தான் குறிக்கிறதே தவிர, முற்றிலும் ஒழிந்தது என்று குறிக்கவில்லை. மீண்டும் நம் முயற்சி தளரும் நேரத்தில் அதே ஊழ் வெளிப்பட்டுத் தாக்கும்; அதிர்ச்சியுண்டாக அடிக்கும். எனவே ஊழிலிருந்து தப்பிக்கவொண்ணாது. தீய வினை செய்தவன் அதிலிருந்து தப்பிக்க வழி மீண்டும் தீமை செய்வதன்று. பொய் சொன்னவன் தப்பிக்க மீண்டும் அதையே திரும்பச் செய்தால் அந்தப் பாவம்தான் வளரும். தீய ஊழிலிருந்து தப்பவழி, தீய செயலையே கனவிலும் கருதாமல், உயிர் தன் முயற்சியால் நல்வினை வழிப்படுவதேயாகும்.''

சரவணர் எதிரேயிருந்த வேப்பமரத்தில் ஒரு குச்சியை ஒடித்துப் பல் விளக்கிக்கொண்டே, தெருப் பக்கம் சென்றார். அங்கே அந்தப் புலர்காலை நேரத்தில் ஒரு பெருச்சாளி சாய்க்கடைப் பக்கம் ஓடியதையும் அதை ஒரு நாய் துரத்துவதையும் கண்டார். ஒரு சிறுவன் அந்நாய்மீது ஒரு கல்லை வீசி எறிந்து கொண்டிருந்தான். அவனை அவனுடைய தந்தை 'காலையில் விடிந்ததும் ஏண்டா நாயை விரட்டுகிறே? அது கடிக்கப் போகுது. உள்ளே வா' என்று இந்தி மொழியில் திட்டிக் கொண்டிருந்தார். இக் காட்சியைப் பார்த்துவிட்டு, உள்ளே திரும்பிய சரவணர் மனத்தில் 'உயிரின் முயற்சிக்கும் ஊழ்வினைக்கும் ஏன் இந்தப் போராட்டம்?' என்ற எண்ண ஓட்டம் கோடிட்டுச் சென்றது. இரத்தினரிடம் பாடம் கேட்ட சிந்தனையில், அவர் மனமே அவருக்கு விடை கூறவும் முயன்றது:

''முயற்சி, ஊழ் என்பனவெல்லாம் பெயர் வேறுபாடுதான். முன் செய்து பயனுக்கு வந்தது ஊழ்; இப்போது செய்வது, செய்ய நினைப்பது முயற்சி. இவை இரண்டுக்கும் இடையே நடைபெறும் போராட்டத்தினுல்தான் உயிரின் அறிவு விளக்கம் பெறுகிறது. பிறப்புக்குக் காரணமான ஆணவமலப் பிடி தளர்கிறது. வினையும் வினைப்பயனும் உயிர்களை உயிர்வித்தற் பொருட்டும் படிப்படியே உயர்த்துதற் பொருட்டும் இறைவனுல் படைக்கப்பட்டவையே. ஒரு வினையைச் செய்து அது பயனுக்கு வரும்போது, அதைத் தடுக்க, நல்லதை அடைய, விரும்பியதைப் பெற உயிர் முயல்கிறது. வினை செய்ததன் பயனை, விளைவை செய்த அளவுக்கு ஏற்ப ஊட்டியே தீரும். உயிர் தீயதைச் செய்துவிட்டு நல்லதை அடையவும், வேண்டாததைச் செய்துவிட்டு விரும்பியதை அடையவும் முயல்கிறபோது, முயற்சியை ஊழ் சோதனை செய்கிறது. நன் முயற்சிக்கு, நல் நினைவிற்கு அது உதவுகிறது...இந்தச் சமயங்களில் இறைவன் ஊழின் பக்கம் நிற்பானு? முயற்சியின் பக்கம் நிற்பானு? அஃதாவது முன் செய்த வினையின் பயனை ஊட்டுவதற்கு முனைநிற்பானு? முன்பு செய்யும் முயற்சியாகிய வினைக்கு உதவ வருவானு?......இந்த நினைவே தவறு. வினையை இறைவன் அதற்குரிய தனியுரிமையோடு நடத்துகிருன்.

செயல், வினை ஒரு காரண காரிய இயைபோடு இயங்குகிறது. நாம் முன்னரே செய்து பயனுக்குவரும் தகுதியுடையதாக இருப்பதே ஊழ். அது பலகாலும் முற்பட்டு நம் புதிய, ஆகாமிய முயற்சியைத் தகைந்து பயனைத்தர முந்தும். இவ் ஆகாமிய வினை வலியுடையதாகி விட்டால் பயனுக்கு வரும் நிலையை உடனே அடையும். அதற்குத் தடையாகி நிற்கும் ஊழ்வினையின் பயனை ஒழித்துப் புதிய முயற்சியின் பயனை ஊட்டவேண்டிய சூழல் ஏற்படும். 'ஊழிற் பெருவலி யாவுள?' என்றும் 'ஊழையும் உப்பக்கம் காண்பர்' என்றும் கூறப்படுவன, மனிதன் முன் பின்னுகச் செய்த, செய்கின்ற வினைகளின் போராட்டமே.

இதிலிருந்து ஓர் உண்மை புலனாகிறது. நம் ஊழை தலை விதியை இறைவன் எழுதவில்லை. நாமேதான் எழுதிக் கொள்கிறோம்; நம் சிந்தனை, செயல்களால் எழுதிக் கொள்கிறோம்!

முன்செய்த வினைதான் ஊழ்; பின் செய்யும் வினைதான் ஆகாமியம். இரண்டும் நம் வினையேயாகும். இவ்விரண்டில் எது பயனுக்கு வரும் தகுதியில், எப்பொழுது மேம்படுகிறதோ, அப்பொழுது அவ்வினையை ஊட்டுவது என்பதே வினைச்சட்டமாகும். வினைச் சட்டத்தை உண்டாக்கியவன் இறைவனே தவிர, அவனே சட்டமாகான். சட்டத்தை—மீற முடியாத விதியை அவன் வகுத்ததால்—அவனே நம் தலைவிதியை எழுதியதாக 'உபசார வழக்கில்' பேசுகிறோம்.

நாம் முயற்சி செய்யாவிட்டால் பழவினைகள் பயனுக்கு வரவே செய்யும். நாம் பழவினைப் பயனிலிருந்து தப்பிக்க முயன்றுகொண்டேதான் இருக்கிறோம். ஒரு தீவினையின் பயனை ஒழித்துவிடலாம் என்று பல தீவினைகளைச் செய்து கொண்டிருக்கிறோம். ஒரு விலங்கை அறுக்கப் போய்ப்பல விலங்குகளைப் பூட்டிக் கொள்கிறோம்; குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசிக்கொள்கிறோம்!

செய்த வினைப் பயனை நுகராமல் தப்ப நினைப்பது ஒரு தவறு. அதனைக்கண்டு தயங்குவதும் அஞ்சுவதும் கற்றவர்க்கு அழகன்று. தீவினையே செய்யாமல் இருப்பதுதான் முன்னைய தீங்கிலிருந்து தப்ப வழி!

உண்மையாகச் சொன்னால் 'வினையின் பயனைத் தந்தே தீரவேண்டும்' என்றல்லவா நாம் வாதிடவேண்டும்? வேலை பார்த்துவிட்டுக் கூலி வாங்காமல் போகிறோமா? உத்தியோகம் பார்த்துவிட்டுச் சம்பளம் வேண்டாமென்று விவாதிக்கிறோமா? செய்த வினையின்பயனை உயிர் அடைந்தால்தானே, நல்வினை, வழிபாடு, நோன்பு, தவம் எல்லாம் பயன்தரும்?

நாமோ ஒவ்வொருவரும் தீயதைச் செய்துவிட்டுத் தப்ப முயல்வதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கிறோம். செல்வாக்கோடும் சார்போடும் தீயதைச் செய்தால், யாரும் நம்மை அசைக்க முடியாதென்று நம்புகிறோம். அது ஒரு வழியில் உண்மைதான். வேறு யாரும் வெளியிலிருந்து அசைக்க முடியாமல் நம்மை நாமே வலிமைப் படுத்திக் கொண்டாலும் நம் வினை நிச்சயமாக நம்மை அசைத்துவிடுகிறது. அரசின் சட்டத்திற்கு அகப்படாமல் தப்பினாலும் தப்பித்துவிடலாம்; ஆண்டவனின் விதிச் சட்டத்திற்கு யாரும் தப்பவே முடியாது.

ஆயினும் செய்ததற்காகவே செய்தவினைப்பயனை ஊட்டுவதென்பதும் இறைவன் முடிவன்று; திருத்துவதற்காகவே வினைப்பயன் ஊட்டப்படுகிறது. தேர்ச்சி பெறவேண்டும் என்ற நோக்கத்துடன்தானே தேர்வு வைக்கப்படுகிறது?

பழிக்குப்பழி, இரத்தத்திற்கு இரத்தம், வினைக்கு வினை என்பனபோல் நாம் எண்ணுவனவெல்லாம் தவறு. புதிய ஆகாமிய முயற்சி எந்த அளவு நம்மைத் திருத்தியிருக்கிறதோ அந்த அளவு ஊழ்வினைப்பயன் தன் கூர்மையை இழக்கிறது, தாக்குவதில்! திருந்தத் திருந்தத் திருந்தியவனைத் திருமுன்னர்க் கொண்டு சேர்க்கிறது அத் திருத்தம். இதுவே நியதி, பால், ஊழ், முறை எனப்படுகிறது!”

ஆண்டி வந்து தோளைத் தொட்டு உலுப்பிய போதுதான் சரவணர் இவ்வுலகிற்கு வந்தார். அவர் கையிலிருந்த பற்குச்சி முழுவதும் மொட்டையாகிக் கட்டையாய்ப் போயிருந்தது. அத்தனை நீளக் குச்சியையும் அவர் கடித்துக் கடித்துத் துப்பியிருக்கிறார், இந்தச் சிந்தனை வேகத்தில்! ‘சம்போ கொண்டுபோக நேரமாகவில்லையா? என்ன சாமி! இன்னிக்குத் தேடி வர வச்சுட்டியே’ என்று சலித்துக்கொண்ட ஆண்டி, விரைவு படுத்தவே, இருவரும் சத்திரத்தை நோக்கிப் பூக் குடலைகளுடன் புறப்படலானார்கள்.

○

'மென்தோள் பல்பிணை தழீஇத் தலைத்தந்து
குன்று தொருடலும் நின்றதன் பண்பே'

10

சரவணர் இப்போது சுற்றுப்புற நகர்களுக்கெல்லாம் கூடச் சிந்தாந்தச் சொற்பொழிவுகள் ஆற்றச் சென்றார். தமிழில் மட்டுமின்றி ஆங்கிலத்திலும் இந்தியிலும்கூட அவர் பேச்சுக்கள் அமைந்தன. ஞாயிற்றுக் கிழமைகளில், ஒரு நாளில் போய்த் திரும்பக் கூடிய ஊர்களுக்கு மட்டும் வெளியூர் போய் வருவது நல்லதென எல்லோரும் சிந்தித்து முடிவு செய்தார்கள். ஆண்டியும் சரவணருடன், ஒரு பயபக்தியுள்ள மாணுக்கனைப் போலக் கூடப்போய் வந்தான். பஞ்சவடி, பிரயாகை, அயோத்தி, அரித்துவார் போன்ற ஊர்களுக்கெல்லாம் போய்த் திரும்பினார்கள்.

இந்தச் சொற்பொழிவுகளினால் சரவணருக்கு மேன் மேலும் அறிவு வேட்கை ஏற்பட்டது. ஒவ்வொருமுறை சொற்பொழிவு செய்து ஓயும்போதும் மக்கள் தெரியாதன வெல்லாம் தெரியப் பெற்றதாகக் களிப்பில் மூழ்குவார்கள். சரவணருக்கோ சொல்ல நினைத்ததை முழுவதும் தெளிவுபடச் சொல்லிவிடவில்லை என்பது போலவும் மேலும் நிறைவு வேண்டி நிற்பது போலவும் ஒருணர்வு

எஞ்சி நிற்கும். எப்பொழுதும் அவர் சிந்தனையில் மூழ்கி நின்றார். இரத்தின அடிகளார் அவரிடத்தில் ஏற்படுத்தி விட்டுப் போன பெரிய விளைவு இது. இருபதாண்டுக் கால மாக அவர் காசி நகரில் பணிபுரிவதிலேயே காலம் போக்கினார். சரியை கிரியைகளிலேயே மன அமைதி கண்டு வந்தார்; இப்போதெல்லாம் ஞான நெறியில் மூழ்கலானார்! அவர் உள்ளம் அறிவொளியைத் தேடி அலைந்தது.

அறிவு விளக்கை உலக அரங்கில் ஏற்றி வைக்க அவர் உள்ளம் அவாவியது. தம்முடைய வாழ்வினால் புத்தரைப் போல், ஏசுவைப் போல் அவ் ஒளியை உலகிற்கு வழங்க அவரால் இயலவில்லை. அவருடைய வாழ்க்கை 'எவ்வாறு வாழக்கூடாது' என்பதற்கு வேண்டுமானால், உலகிற்கு எடுத்துக்காட்டாக இருக்குமே தவிர, வாழ வழிகாட்டியாகாது. அதைக் களைந்து விட்டுத் தம் சொற்பொழிவுகளினால் 'ஞானச் சுடர்விளக்கை' ஏற்றிவைக்க அவர் முயன்றார்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை சரவணர் ஆண்டியுடன் காசி நகரின் வடகிழக்கு மூலையில், சின்னஞ்சிறு ஊராக இன்று விளங்கும் சாரநாத்தை அடைந்தார். புத்தர் உலகம் போற்றும் அறவுரைகளைக்கூறித் 'தம்மோபதேசம்' செய்த இடம் அது! அவர் தம் தருமச் சக்கரத்தை, அறவாழியை இங்கேதான் இயக்கிவிட்டார். சிங்கமும் தரும சக்கரமும் கொண்ட அசோகத் தூணை இங்கே காணலாம். புத்தரின் நெஞ்சத்தில் ஞான ஒளியை ஏற்றிவைத்த, அமைதி தவழும் இடமாகிய சாரநாத்தைக் கண்டது முதல், சரவணர் மிகப் பெரிய இறையருள் தூண்டுணர்வுக்கு ஆட்பட்டார்.

இப்போதெல்லாம் அடிகளுக்கு உறக்கமென்பதில்லை. இரவு பதினொன்று, பனிரெண்டு மணிக்குப் பிறகுங்கூட. அவர் கங்கைக் கரையில் போய், தனியே அமர்ந்து தியானத்தில் ஆழ்ந்து விடுகிறார். கண்ணை மூடிக்கொண்டு, அவ்வாறே சிந்தனையில் ஆழ்ந்து விடியும் வரை கூட இருந்துவிடுகிறார். ஆண்டி அவரை நெடுநேரம் காண

வில்லை யென்ருல், கங்கைக் கரைக்குத் தேடிப்போவ துண்டு. அவர் வழக்கமாக அமர்ந்திருக்கும் இடத்தில் கண்டு, அவர் சிந்தனை கலைந்து கண்விழிக்கும் வரை காத் திருந்து, சத்திரத்துக்குக் கூட்டி வருவான். தம்முடைய சிந்தனையும் தியானமும் பெரிதா, தம் சிந்தனை கலையும் வரை கடமையே கண்ணுகக் காத்திருந்து கூட்டிவரும் ஆண்டியின் சிந்தனையும் கடமையும் பெரிதா என்றுஒருசில சமயம்அவர் தம் மனத்திற்குள் விவாதிப்பதுண்டு. ஆண்டி யின் மன ஒருமையே தமது மன ஒருமையிலும் சிறந்த தென அவருக்குத் தோன்றும். காய்ச்சல் கிடந்தவன் நீருக் கும் உணவுக்கும் ஆர்வப்படுவதுபோல், தமக்கு அறி வாராய்ச்சியில் வேட்கைபெருகியிருப்பது ஏன் என்று அவர் தமக்குத்தாமே கேட்டுக்கொள்வார். ஆயினும் இந்தஇயல் பான வேட்கை வேள்விக்கு அவர் தம் உணர்வு ஆகுதி களை இட்டு, அந்த யாகம் என்றும் நிலைபெறுமாறு செய்துகொண்டே இருந்தார்.

○

நிலவு ஒளிவெள்ளத்தைப் புயல்மழைபோற் பொழியும் முழுமதிநாள். எங்கு நோக்கினும் பால்வெள்ளம் போல் ஒளிக்கதிர்கள்! எதிரே நுங்கும் நுரையுமாய்க் கங்குகரை காணுத வெள்ளமென ஓடிக்கொண்டிருக்கும் கங்கையாறு! பாதி எரியும் பிணங்களையும் முழுப்பிணங்களையும் உயி ரோடு குதித்துச் சாகின்றவர்களையும் தன்னுட் சீரணித் துக் கொண்டு ஓடும் கங்கையாறு, மிக அமைதியாகக் காணப்பட்டது. நள்ளிரவுக்கு மேல் ஆகிவிட்ட நேரம். சர வணர் தம் கண்களை மூடியபடி, சிந்தனையில் மனம் ஒரு மித்துக் கங்கைக்கு எதிரே அமர்ந்திருந்தார். அவருடைய மூடிய கண்களுக்குள்—சிந்தனையில் ஒரு கங்கையாறு ஓடிக்கொண்டிருந்தது. அந்த ஆற்றுக்கு மூலமெங்கே என் றும்தோன்றவில்லை; முடிவெங்கே என்றும் தெரியவில்லை. நீரோட்டம் போலச் சிந்தனையோட்டத்தில் அவர் ஏதோ பாடம் கற்றுக்கொண்டிருந்தார். பக்கங்கள் புரண்டுகொண்

டிருந்தன; கல்வி வளர்ந்துகொண்டிருந்தது. மணிஒன்று, இரண்டு, மூன்று என நடந்து கொண்டிருந்தது; கங்கை ஓடிக்கொண்டிருந்தது; சரவணரும் பாடம் படித்துக் கொண்டே இருந்தார், அசையாமல்!

இமயப் பனியெல்லாம் உருகிவரும் அப்பேராறு கடுங் குளிர்ச்சியாக இருக்கிறது. அசி என்றும் வருணையென் றும் எத்தனை கிளையாறுகள் அதிற் கலந்தாலும், ஊர்ப் பிணங்களை யெல்லாம் தன் வயிற்றுள் இட்டு உண்டு ஓடி வந்தாலும் அது புனிதநதியாகப் பொங்கி வருகிறது. கங் கையைப் போன்ற பேராறு, தன் முடிவற்ற வெள்ளப் பெருக்கில் எல்லாவற்றையும் ஒருதன்மைப் படுத்திவிடு கிறது.

சரவணர் கண்திறந்து ஈடுபடும்போது முழுமதியின் ஒளி வெள்ளம் கங்கையில் எதிர் ஒளியாய்க் கொட்டுகிறது. ஆறு ஒளி பட்ட இடத்தில் வெள்ளிப் பாளமாய் மின்னு கிறது. மேகத்திரை முழுமதியை மூடும்போது ஆற்று வெள்ளம் நடப்பதே தெரிவதில்லை. ஒளி படும்போது மின் னுவது போலவே வாழ்வில் செல்வம் வந்துற்றபோது பொலிவு பொங்குகிறது. கருமுகில் மறைந்தவுடன் எங் கும் கார்இருள் சூழ்வது போலவே வறுமை உறும்போது வாட்டம் நிழலாடுகிறது. உலகில் புகழ் என்பதும் இகழ் என்பதும் செல்வம் என்பதும் வறுமை என்பதும் இது போன்ற தோற்றங்களே!

சிறுவட்டத்திற்குள் மிகப் பெரிதாகத் தெரியும் இவை, பெரும் வட்டத்திற்குள் வைத்துப் பார்க்கும்போது சிறி தும் பொருளற்றவை ஆகின்றன. பருப்பொருள்களாகத் தோன்றுமிவற்றையே உள்ளீடற்ற நுண்பொருளாக வைத்துப் பார்க்கும்போது, வெறும் பிரமை, தோற்றம், நிழலாகி விடுகின்றன!

மண்மீது விளையும் மரங்கள் செடி கொடிகளுக்குக் கணக் குண்டா? சிறு நெருஞ்சியாக வெளிப்படுகிற மண்மகள்

தான், பெரும்பலாவாகவும் புறப்படுகிருள்! இரண்டும் மீண்டும் மண்ணுகித்தான் மறைகின்றன.

மேகங்கள் போடும் பலவகையான உருவக் கோலங்களுக்கு ஏதும் நிலையான மதிப்புண்டா? மாளிகை என்பதும் குடிசை என்பதும் இப்படிப்பட்ட கருமுகில், வெண்முகில் போடும் பல்வேறு கோலங்களே. ஒளி வீசும் உயர்ந்த பதவி, ஒன்றுமற்ற ஆண்டிக்கோலம்...இதனல் அதற்குப் பெருமை, அதனல் இதன் சிறுமைத் தோற்றம் ...எல்லாம் மனிதன் தன் மனம் என்ற எல்லைக் கோட்டிற்குள் 'கற்பித்துக்' கொள்பவையே! கற்பிதம் மாறினல், இவையெல்லாம் நிலைமாறும் நிழலுருவங்களே!

நான் இன்னர் மகன், இந்த ஊரினன், இவ்வளவு சிறப்பினன் என்பனவெல்லாம் கணநேரக் குறியீடு! அடையாளம்!

பருப்பொருள்களில் காண்பன எல்லாவற்றையும் நாம் நுண்பொருள்களில், கருத்துப் பொருள்களில் ஏற்றிப் பார்க்கலாம்! பள்ளம் கண்டாற் பாயும் தண்ணீர்; எப்பொழுதும் மேலெழும் ஆவி; தன்னை அகழ்வாரையும் தாங்கி அசையாமல் கிடக்கும் மண்!பாய்ந்தோடும்அன்பு; தன்னை உயர்த்தும் முனைப்பு; தன்னையே அழித்துக்கொள்ளும் தியாகம்! பருப்பொருள்களாகக் காண்பனவற்றைப் போலத்தான் நுண்பொருள்களும் இயங்குகின்றன. நாம் பருப்பொருள்களில் செய்முறை ஆய்வு செய்து, நுண்பொருள்கள் பற்றி முடிவு செய்துவிடலாம். அதிலொன்றும் தவறேற்படாது. அன்பு நீர் போன்றது; சினம் நெருப்புப் போன்றது; பொறுமை மண் போன்றது; வினை வெள்ளம் போன்றது; உயிர் மிதவை போன்றது; வாழ்க்கைச் சிக்கல் சுழி போன்றது! இப்படியே ஒவ்வொரு பருப்பொருளிலும், ஒவ்வொரு சமயத்தில் ஏதேனும் ஒரு நுண்பொருளின் தன்மை அமைந்து காணப்படுகிறது!சிலர் வாழ்வு தென்னை போலப் பலஆண்டு கழித்துப் பயன்தரலாம்; சிலர் வாழ்வு வாழை போற் சிலவாரங்களில் பயன்

தரலாம். ஒரு சிலரதுசெயல் கீரைத்தோட்டம்; மற்றவர் பணி நெல்வயல்! இவையெல்லாம் மண்மகளின் பல்வேறு கோலங்கள்போல, வாழ்வு வகைகள்!

வானத்துத் தண்துளி கொட்டிக்கொண்டே இருக்கிறது. கல்லேத்தாக்கிக் கொப்புளித்து, முழங்கி ஓடிவரும் பேராற்றில், ஒரு மிதவை நீர்போகும் திசை வழியே போய்க் கொண்டேயிருக்கிறது. அதுபோல வினைவெள்ளத்தில் உயிர் ஒரு முறைவழிப்பட்டுச் சென்றுகொண்டிருக்கிறது. வெள்ளம் இழுக்கும் திசையிலே உயிர்போய்க் கொண்டிருக்கிறது.

வினைபோடும் கோடுகள்தான் வாழ்க்கை! வினை தீட்டும் சித்திரங்கள்தான் வறுமை, செல்வம், இகழ், புகழ் என்பனவெல்லாம்! நீர் போடும் கோலங்கள் திவலை, துளி, கழி, கடல் என்பன! மண்போடும் கோலங்கள் தென்னை, புல், வாழை, மான், புலி என்பன! காற்றுப் போடும் கோலங்கள் மேகம், புகை, ஆவி என்பன! வினைபோடும் கோலங்கள்தான் வாழ்க்கை; வினைபோடும் சித்திரங்கள் தான் வறுமை, செல்வம்; இகழ், புகழ்; சொத்துசுகம் எல்லாம்! எனவே பெரியவர் என வியப்பதும் வேண்டா; சிறியவர் என இகழ்வதும் வேண்டா!

அவரவர் வினையே அவரவர் வாழ்வைத் தீட்டுகிறது. எனவே தீதும் நன்றும் பிறர்தர வருவனவல்ல என்பது தெளிவு. நோதலுக்கும் காரணமில்லை; அது தணிதலுக்கும் காரணமில்லை. வேப்பிலையைத் தின்றுவிட்டுக் கசக்கிறதென்று கண்ணைக் கசக்குவதால் பயன் என்ன? வேப்பிலையை யாராவது நோவார்களா? தின்றவனைத்தான் நோவார்கள். எனவே நோதக்க செய்துவிட்டு நோவதாற் பயனில்லை. சாதல் என்பதும் ஒரு புதுமையான,முன்னில்லாத ஒன்றன்று! அது மிக இயல்பான அன்றாட நிகழ்ச்சியே!

மண்மகளின் கோலங்களே புறவடிவங்கள்! அவை மண்ணின் அவதாரங்கள்; மண்மகளின் மாறும் ஒப்பனைகள்!

கடைசியில் எல்லாம் மண் என்ற மூலம்தான். தோற்றங்களுக்கு என்ன சிறப்பு? ஒப்பனைகளுக்குள் என்ன உயர்வு, தாழ்வு? வேடம் என்பதுண்மையானல் அரசவேடம் மட்டும் எப்படி உயர்ந்ததாகும்? ஆண்டிவேடம் எப்படித் தாழ்ந்ததாகும்? கோலம் கலைந்தால் எல்லோரும் ஒருவர்தான்; எல்லாம் ஒன்றுதான்!

பருப்பொருள்களாக நுண்பொருள்களைப் பார்க்கும் இந்த ஆராய்ச்சி மனிதன் சோர்வடைவதற்காக அன்று! எல்லோரும் துறவுபூண வேண்டும் என்றும் அன்று! துறவு என்பது ஆடையா, ஆடையின் செம்மையா? அன்று, அன்று. மனச் செம்மையே துறவு; மனத்திண்மையே துறவு. வினை பற்றிய முழு அறிவு வாய்த்துவிட்டால், எப்படிச் செயற்படவேண்டும் என்பது தெளிவாகப் புலனாகிறது. சலனங்கள், சபலங்கள், கனவுகள், கற்பனைகளால் மனிதன் நிலை பிறழவேண்டியதில்லை என்ற மனத்திண்மை வந்துவிடுகிறது. எல்லாம் ஒன்று என்றால், ஏற்ற வேடத்தைச் செம்மையாகச் செய்வதிலேயே கவனம் போகிறது; இன்னொரு வேடத்திற்காக ஏங்கும் மனம் மாறுகிறது!

காலை நான்கு மணி ஆகிவிட்டது. ஆண்டி வந்து, முன் நின்று பலமுறை கூப்பிட்டபிறகுதான், அடிகளின் நினைவுத்தேர் நிலைகுத்தியது. அவர் மிக்க மனநிறைவோடு உலகை நோக்கினார். ஏதோ தாம் காணாத உண்மைகளைக் கண்டவர் போலவும், தீராத சிக்கல்களைத் தீர்த்தவர் போலவும் அவர் முகம் மும்மடங்கு பொலிந்து நின்றது.

ஆண்டியோ அவரைச் சந்தேகக் கண்ணோடு பார்த்தான். ''ஏதும் சித்தப்பிறழ்ச்சி'' ஏற்பட்டுவிட்டதோ என அவருக்காக இரக்கப்பட்டான். இங்கு வந்து அதிகமாகப் படித்து இந்த நிலைக்கு ஆளாகி விட்டாரோ என அவன் மனத்திற்குள் மிகவும் அனுதாபப்பட்டான். அவரை 'எழுப்பி', 'விழிப்புண்டாக்கி' நேரே நந்தவனத்திற்கு

அழைத்துச் சென்றான். "ஏறத்தாழ இருபதாண்டுகளாகச் சாமிகள், இந்தச் சத்திரத்திற்காக, நந்தவனத்திற்காக, அன்னபூரணி, விசாலாட்சி, விசுவேசுவரருக்காக என எவ்வளவோ உழைத்திருக்கிறார். ஆனால் இப்போது தான் சில சமயங்களில் ஒரு மாதிரியாகி விடுகிறார். அதற்காக அவரைக் கைவிட்டு விடலாமா? அது ஒரு 'ஞானக் கிறுக்காக'க் கூட இருக்கலாம்'', என இவ்வாறு ஆண்டி தன் மனதிற்குள் சரவணரை எடை போட்டான். எவ் விதத்திலும் சரவணர், சராசரிப் பொது மட்டத்திற்கு மேற்பட்ட தனிச்சிறப்பு மேதை என்பது மட்டும் ஆண்டிக் குப் புரிந்தது.

○

'முருகியம் நிறுத்து முரணினர் உட்க
முருகாற்றுப் படுத்த உருகெழு வியனகர்'

11

எப்போதும்போல், அன்றும் சரவணர் கங்கைக்கரையிலே கண் மூடிச் சிந்தனையுலகில் 'சித்து'க்கள் செய்து, கூடுவிட்டுக்கூடு பாய்ந்து கொண்டிருந்தார். குன்றுதோருடும் முருகன் அவர் உள்ளத்தில் குரவைக் கூத்தாடிக் கொண்டிருந்தான். 'சிவந்த மேனியனுகவும். சிவந்தஉடையினனுகவும் சிவந்த அடிப்பாகத்தையுடைய அசோகந்தளிர் அசையும் செவிகளை உடையவனுகவும் கச்சைகட்டிக் கழலணிந்து வெட்சி சூடியவனுகவும் குழலும் கொம்பும் இசைக் கருவிகளும் ஆகியவற்றை இசைப்பவனுகவும் கிடாயையும் மயிலையும் ஏறி ஊர்பவனுகவும் குற்றமற்ற சேவற்கொடியினனுகவும் நெடியனுகவும்......... முருகன் தோன்றுகிருன். மெல்லிய தோளையுடைய பெண்மான் போலும் மகளிரை முழவு போன்ற பெருமையுடைய தன் தோள்களால் தாங்கித் தழுவிக்கொண்டு, அவர்களுக்குத் தலைக்கைதந்து குன்றுகள் தோறும் குரவையாடுகின்ருன். இவ் இனிய காட்சியை மனத்திரையில் ஓவியமாகத் தீட்டிக் கொண்டிருந்த சரவணர் இடையே கண்களை விழித்துப் பார்த்தார்.

கங்கை என்ற ஏட்டைப்புரட்டி, இயற்கைக்காட்சி என்ற பக்கத்திற்குள் கண்ணைச் செலுத்தி, மதியும் உடுக் கூட்டமும் முகில்திரளும் மின்னலும் இடியும் மழையும் சொல்லித்தரும் பாடத்தை அவர் மனப்பாடம் செய்து கொண்டிருந்தார். இப்படி ஒரு முறை அவர் கண் விழித்துக் கங்கையைப் பார்த்தபோது, அதில் ஒரு மனித உருவம் மிதந்துவருவது தெரிந்தது. எத்தனையோ பிணங் கள் மிதந்து வருவதுபோலவே இதுவும் வருகிறது என எண்ணிய அவர், ஒரு கணம் அதுமுக்குளித்துத் தத்தளிப் தைப்பார்த்து, உயிருடன் மிதந்து வருவதாக அறிந்தார். மழையினால் நனைந்து போனதனையும் மறந்திருந்த சரவணர், தன்னினைவு வரப்பெற்று, மறுகணம் கங்கை யிற் குதித்து, அவ்வுருவத்தை நெருங்கினார். கரையை ஒட்டியே மிதந்து வந்தாலும், தம்மையும் சேர்த்து இழுத்த சுழியில் சரவணர் அகப்பட இருந்தார். நல்ல வேளையாக, ஒரு படித்துறையில் ஆபத்தில்லாமல் அதனைக் கரைசேர்த் தார் சரவணர். கரை சேர்த்த பிறகுதான் அது ஒரு பெண் என்று தெரிந்தது. முதலுதவியும் அளித்து, அப் பெண்ணைக் காப்பாற்றிய சரவணருக்கு, அடிமனத்தில் பழைய நினைவு தோன்றி மனக் கலக்கத்தை மிகுவித்தது.

சரவணர் கங்கைக் கரையில் உட்காரும் போதெல்லாம் இப்படி மிதந்து போகும் பிணங்கள் ஒவ்வொன்றும், அவர் அடிமனத்தில் ஓர் உறுதியை உண்டாக்கும். இன்று உயிருடன் ஒரு உருவம் மிதந்து வருவதையே காண நேர்ந்தது. தக்க சமயத்தில் காப்பாற்றிய மனநிறை வோடு இருந்தபோது, ஆண்டி அவரைத் தேடிக்கொண்டு அங்கு வந்து சேர்ந்தான். அப் பெண்ணைப் பார்த்ததும், ''அட உஷாவா? நம்ம நாராயணபண்டாவின் மகளில்ல. அட பாவமே...... ஏன்மா? இப்படி?'' ஆண்டி தட்டுத் தடுமாறிப் பாதி இந்தியும் பாதி தமிழுமாகக் கேட்டான்.

''ஆத்திலே விழுந்து மிதந்து வந்தது. நான் குதிச்சு காப்பாத்தினேன்'' என்றார் சரவணர்.

''அட பாவமே! ஒனக்குத்தானே கலியாணம் நிச்சயம் பண்ணியிருக்கு'' — உஷாவைப் பார்த்து ஆண்டி கேட்டான்.

''எனக்குப் பிடிக்கலே'' — உஷாவின் உதடுகள் அசைந்தன.

''அதுக்காக... இவரு இங்கே கொக்காட்டம் குந்திக்கிட்டு இருக்கப்போ தப்பிச்சே.. இல்லாட்டி...''

இதற்குள் நாராயண பண்டாவே தம் உறவினர் இருவருடன் அங்கு வந்து விட்டார். நடந்ததை அறிந்து, அடிகள் காலில் விழுந்து கும்பிட்டுவிட்டு, பண்டா தம் மகளை அழைத்துக்கொண்டு புறப்பட்டார். ''பொண்ணு விரும்புற இடத்திலேயே கட்டிக்கொடுங்க, கட்டாயப் படுத்தாதீங்க'' என்று ஆண்டி, நாராயண பண்டாவின் காதோடு ஓதி அனுப்பி வைத்தான்.

○

என்றைக்குமில்லாதபடி ஆண்டிக்கு இன்று கடுங்கோபம் வந்துவிட்டது. ''இப்படி மழையிலே நனைஞ்சா உடம்பு என்னுகும்? இங்கே வருறபோதெல்லாம் என்னையும் கூட்டிக்கிட்டு வரப்பிடாது...''

''என்னமோ தெரியலே ஆண்டி... என்னை ஆத்தங்கரை இழுத்துத் தன்னேடே ஐக்கியப் படுத்திக்கிற மாதிரி ஒரு நினைவு... ஏதோ கள்ளக் காதலி வீட்டுக்கு யாருக்கும் தெரியாமே ஒருத்தன் போற மாதிரி, நான் கங்கைக் கரைக்கு வந்து விடுகிறேன்.''

''நல்லாருக்கு... இந்த நேரத்திலே ஆத்திலே குதிச்சு... பனிக்கட்டி மாதிரி இருக்குமே ஐயா... வரவர எனக்குப் பிடிக்கல்லே!''

''என்ன செய்யிறது ஆண்டி... ஒரு உசிரு சாகத் தத்தளிக்கும்போது, பார்த்துக்கிட்டிருக்க மனசு வருமா? மேலும் இப்படி ஆத்திலே பிணம் போறதைப் பார்த்துப்

பார்த்து என் மனம் வயிரம் ஆகுது. அதனாலேதான் நான் இப்பவெல்லாம் கங்கைக்கரையிலே வந்து அடிக்கடி உட்கார்ந்து விடுகிறேன். ஆத்திலே ஒரு உசிரு தத்தளிக்கிறதைப் பார்த்ததும், நான் உணர்ச்சிவசப்பட்டுட்டேன். என்னையே மறந்து தண்ணியிலே குதிச்சிட்டேன்''.

''எனக்கும் வயசாயிடுச்சு. நான் எத்தனை நாளைக்கு உன்னைப் பார்த்துக்கப் போறேன். நீ பாட்டுக்கு அன்னந்தண்ணியில்லாமேக் கிடந்தால் நல்லாருக்கா... எனக்கும் ஊரு நினைவு வந்திடுச்சு. கடைசி காலத்திலே ஊருப்பக்கம் ஒரு வாட்டியாவது போய்த்து வரலாமுன்னு நினைக்கிறேன்.''

இதைக் கேட்டதும் சரவணருக்கும் என்னமோ போல இருந்தது. அவர் வழக்கம்போல மௌனமாகவே நடந்து வந்தார். ''என்ன இருந்தாலும் நம்ம பக்கம்தான் சரி... நம்ம நாட்டை விட்டுட்டு, இந்த வயத்தைக் கழுவுறதுக்காக இம்மாந் தூரம் வந்து... இது என்ன ஊரு ஐயா... குளிரானு ஒரேயடியாக் குளிராயிடுது... வெயில் வந்தால் அதுவும் தாங்க முடியாமே ஆயிடுது... நம்ம ஊருலேன்னு எல்லாம் தாங்கிக்கிருப்பிலே இருக்கும்'', என்று ஆண்டி பேசிக்கொண்டே போனான்.

சரவணர் இடைமறித்து, ''நமக்குத்தான் இது பழக்கமாயிட்டுதுல்ல... இனி நம்ம ஊரு வேறே... இந்த ஊரு வேறையா?'' என்றார். என்ன பேசினாலும் அவர் உள்ளம் தெற்கேயுள்ள நடு நிலையான தட்ப வெப்பம் அங்கே இல்லை என்பதை உள்ளூற நினைக்கத்தான் செய்தது. இருவரும் பேசிக்கொண்டே நந்தவனத்தை அடைந்த போது, நன்றாக விடிந்து விட்டது. சரவணர் அக் கடுங் குளிரையும் ஒரு பொருட்டாக மதிக்கவில்லை. தம் உடம்பை விரைந்து துவட்டிக் கொள்ளக்கூட இல்லை. தன்னியல்பாகவே உலரும்படி அதை விட்டுவிட்டார். மனம் உறுதியடையும் போது, எல்லாம் அதன் வழிப்படவே செய்கின்றன. அவருடைய உள்ளம் முருகன் எழுந்தரு

ளிய திருக்கோயிலாகிவிட்டது. பலவகை வாத்தியங்கள் முழங்கப் பகைவரெல்லாம் அஞ்சும்படி முருகனை ஆற்றுப் படுத்திய வெறியாடு களம்போல அவர் நெஞ்சம் விளங் கியது. இப்போது அதில் பகையை ஓட்டிவிரட்டும் உறு தியும் திண்மையும் ஒன்றி நின்றன.

பிறகு அன்றைய நாட்கடமைகள் என்ற வட்டத்தில் அவர்கள் இருவரும் காலடி எடுத்து வைத்ததால், நேரம் தானே உருண்டோடத் தொடங்கியது.

'வேண்டுநர் வேண்டியாங்கு எய்தினர் வழிபட
ஆண்டாண்டு உறைதலும் அறிந்த வாறே'

12

அந்தக் கோடை காலத்தில் என்றுமில்லாத வெப்பம் எங்கும் பரவியது. திடீரென்று காசியிலும் அதன் சுற்று வட்டாரங்களிலும் அம்மைநோய் பரவிவிட்டது. ஒவ்வொரு நாளும் பலரைப் பலிகொண்டது அது. இத் தகவல் தீப்போல் பரவி, வதந்தியில் ஒன்று பத்தாகி, மக்கள் அச்சத்திற்காட்பட்டு நடுங்கலாயினர். தெருக்கள் வெறிச்சோடிப் போயின; கடைத் தெருக்களில் கூட்டம் குறைந்தது. பலரும் தங்கள் தங்கள் உறவினர்கள் இருக்குமிடந்தேடி, நீண்ட தூரங்களுக்குப் பயணமாயினர். காசிச் சத்திரத்தில் இப்போது தென்னாட்டவர் பலர் போய்விட்டதால், மிக மிகச் சிலரே தங்கியிருந்தனர். அரசு அம்மைத் தடுப்புக்கு எல்லாவித முயற்சியையும் மேற்கொண்டது. ஆயினும் நோயின் வேகம் சீறிக்கொண்டு ஊரையே வளைத்ததால், மனித முயற்சிகள் செயல் இழந்தன.

ஆண்டிக்கு வயதான காலத்தில் அம்மைநோய் போட்டு விட்டது. ஆண்டியை ஒரு பண்டாவின் வீட்டுப் பின்புறம், சிறு குடிசைபோன்ற தாழ்வாரம் ஒன்றில் வாடகைக்கு

வைத்துச் சிகிச்சை அளிக்கப்பட்டது. சரவணர் அங்கேயே தங்கி ஆண்டியைக் கவனித்துவந்தார். பலரும் அதைத் தடுக்க முயன்றனர். அடிகள் அம்மை போட்ட இடத்தை விட்டு விலகியிருக்கவேண்டும் என்றனர். வேறு யாரைச் சம்பளத்திற்கு நியமித்தாலும் ஆண்டியைக் கண்ணும் கருத்துமாகக் கவனிக்க மாட்டார்கள். எனவே சரவணர் யார் பேச்சையும் கேட்காமல், தம்மைப் பற்றியும் கவலைப் படாமல் வேப்பிலையும் கையுமாக உடனிருந்து ஆண்டியைக் கவனித்துவந்தார். பாண்டியனின் வெப்புநோயைத் தணிவிக்கத் திருஞானசம்பந்தர் பாடிய, ''மந்திர மாவது நீறு, வானவர் மேலது நீறு, சுந்தரமாவது நீறு, துதிக்கப்படுவது நீறு'' என்ற திருநீற்றுப் பதிகத்தைத் திரும்பத் திரும்பப் பாடி, திருநீற்றைத் தூவி, வேப்பிலையால் தடவி ஆண்டியின் உடல் வெப்பத்தை ஆற்றிவந்தார். அம்மை நோயின் வேகம் தணிந்து ஆண்டி பிழைத்துக் கொண்டான். அவனுக்கு மருந்தைவிடச் சரவணரின் அன்பான பணிவிடையும் அவர் பாடிய அருட்பாசுரங்களும்தான் உயிர் காக்க உதவின எனலாம். எப்படியோ, உயிர் பிழைத்துத் தலைக்குத் தண்ணீர்விட்டு, நடக்க இருக்கத் தெம்பும வரப்பெற்றான் ஆண்டி. ஆனால் அவர்கள் யாரும் எதிர்பார்த்ததற்கு மாறாக ஒன்று நடந்துவிட்டது. ஊரிலேயே அம்மை நோய் தணியும் நேரத்தில், ஆண்டிக்கு அம்மைநோய் முற்றிலும் நீங்கி அமைதி கண்ட நேரத்தில் சரவணருக்கு அம்மைபோடத் தொடங்கிவிட்டது. ஓரிரு நாட்களில் அம்மை உடம்பு முழுவதையுமே கொப்புளங்களாக்கி, அதன் உக்கிரம் அனைத்தையும் கொட்டத்தொடங்கியது. முகம் முழுவதும் கொப்புளங்களால் மூடப்பட்டுக் கோரமாய்க் காட்சியளித்தது. கேள்விப்பட்ட எல்லோரும் சரவணர் பிழைப்பார் என்று கூறவில்லை. ஆண்டியோ சற்றும் மனவுறுதி தளரவே இல்லை. ஒரு வாரம் பத்து நாள்வரை அவர் அன்னம் தண்ணீர் எதுவுமின்றிப் பாயோடு பாயாய் ஒட்டிக்கொண்டு கிடந்தார். ஆண்டி அவர் பாடக்கேட்டுக் கேட்டுப் பழகிய திரு

நீற்றுப் பதிகம், கோளறு பதிகம், திருவீரட்டானப் பதிகம் போன்றவற்றை அரைகுறையாய், மனம்போனவாறு, முன்பின் என்றறியாமல் உள்ளன்போடு ஒப்பித்துக்கொண் டிருந்தான். ஒரு நாள் எல்லோரும் 'எல்லாம் முடிந்து விட்டது; தூக்கிப்போட்டுவிடலாம்' என்று கூறிவிட்டனர். ஆண்டி அதற்கு ஒருப்படவில்லை. சரவணர் உயிரோடிருப் பதாக அவன் சத்தியம் செய்தான். நல்ல வலுவான உட லாதலால், அவ்வளவு கோரமான அம்மையின் விளை யாட்டை அவர் தாங்கிக்கொண்டார். 'போன உயிர்' என்று கருதப்பட்டது, மூன்று நாள் கழித்துத்திரும்பியது. பிறகு படிப்படியாக அம்மை இறங்கியது. அவர் மீது கொண்ட ஆங்காரத்தை மாரி தவிர்த்தாள். சரவணரும் பிழைத்தெழுந்தார். ஆனால் அம்மை ஆளை முழுதும்மாற்றி விட்டாள். முகமெல்லாம் பள்ளமும் படுகுழியுமாய்ப்போய் விட்டது. ஒரு கண்ணில் சிறு பூ விழுந்து, பார்வை மங்கி விட்டது. வலதுகால் பாதம் முன்பே பிறவியில் நரம்பு தளர்ந்து சிறிது வளைந்து போனது, இப்போது நன்கு பலவீனப்பட்டுக் காட்சியளித்தது. அவர் குணமாகிப் பல நாட்கள் கழித்துச் சத்திரத்துக்கு வந்தபோது, யாரும் அவரை சரவணர் என்று நம்பவே இல்லை. ''என்ன இப்படி அடையாளமே தெரியாமல், ஆளே உரு மாறிப் போய்விட்டீரே; குரலும் அடியோடு மாறி விட் டதே" என்று இப்படித்தான் ஒவ்வொருவரும் விசாரித் தார்கள். ஆண்டி கூடவேயிருந்து அவரைத் தேற்றி னன். நாளுக்கு நாள் அவர் உடலில் தெம்பு ஏற ஏற, ஆண்டி அவரைத் தமிழ் நாட்டுக்குப் போகும்படி வற் புறுத்தினன். அவரோ இன்னும் வடக்கே இமயமலைச் சாரலுக்குப் போக விரும்பினர். ஆண்டி அதை மறுத் தான். ''சொந்த நாட்டுக்குப் போய்விடுங்கள். இங்கே யாரும் நம்மைக் கவனிக்கவில்லை. இதுக்கு நம்ம ஊரிலே போயிச் செத்தாலும் புண்ணியந்தான். ஒங்க அறிவும் ஆராய்ச்சியும் நம்ம நாட்டுக்குப் பயன்படட்டும்'' என அவன் நச்சரித்தான். சரவணருக்கும் ஊர்ப் பக்கம்

தலைகாட்டும் எண்ணம் தலைநீட்டியது. அதற்கு மிக முக்கிய காரணம் 'அடையாளம் தெரியாமல் உருமாறிப் போய்விட்டோம்' என்ற மனத் தெம்புதான்.

மூன்று மாதம் கழித்து. நன்கு உடல் தேறிய பிறகு, நீண்ட ரயில் பயணத்திற்கு அவர் ஆயத்தமானார். இப்போது அவர் முன்னிலும் சற்றுப் பருமனாக ஊதிப்போயிருந்தார். உடல் பொலபொலவென்று அவ்வளவு உறுதி இன்றி இருந்தது. முகத்தில் அடர்ந்து வளர்ந்த தாடி, அம்மைத் தழும்புகளை ஓரளவு மறைத்துக் கொண்டு கிடந்தது. புறப்படும் நாள் நெருங்க நெருங்க ஆண்டிக் கிழவன் மனங்கலங்கினான். அவனையும் சரவணர் உடன் வருமாறு அழைத்தார். அவனுக்கு வயதாகிவிட்டதால், மற்றொரு பண்டாரத்தைச் சத்திரத்தார் இப்போது வேலைக்கு அமர்த்தி இருந்தார்கள். இருந்தும், 'சத்திரத்தைவிட்டுப் போ' என்று ஆண்டியை யாரும் கூறவில்லை. 'தான் வேறு, சத்திரம் வேறு' என்று ஆண்டி என்றும் வாழ்ந்ததில்லை; நினைத்ததுகூட இல்லை. அங்கு அப்போதிருந்த அனைவரிலும் ஆண்டி ஒருவனே, அச் சத்திரத்தில் நீண்ட நாள் தங்கியிருந்தவன். எனவே எல்லோரையும் ஏவி வேலை வாங்குமளவு அவனுக்கு அங்கே உரிமை இருந்தது. புதிதாக வந்த மேலாளர் கூட, சத்திரத்து நடைமுறைகளிற் சந்தேகம் வரும் பொழுது ஆண்டியைக் கேட்டுத்தான் செய்தார். இப்போது, ஆண்டி ஊருக்குச் சரவணருடன் போவதானால், அதை யாரும் தடுக்கப் போவதில்லை. இருந்தாலும் ஆண்டி அதை விரும்பவில்லை. சரவணருடைய அறிவும் ஆராய்ச்சியும் தத்துவ விளக்கமும் மெய்ப்பொருள் உணர்வும் தமிழ்நாட்டுக்குப் பயன்பட வேண்டும் என்று ஆசைப் பட்டான் ஆண்டி. பிரிவது கடினமென்றுணர்ந்தும் அவரை வழியனுப்பி வைக்கத் தன் மனத்தைத் தானே திடப்படுத்திக் கொண்டான் ஆண்டி. ஆயினும் தான் மட்டும் சத்திரத்தைப் பிரிவதென்பது அவ்வளவு எளிதில் இயலாது என்பதை உணர்ந்தான். அதனால் சரவணரிடம்,

'தேவைப்படும்போது, என் கடைசிகாலத்திலாவது, நான் கட்டாயம் தமிழ்நாட்டுக்கு வந்து திரும்புவேன்' என்றான். அப்போதும் காசிக்குத் திரும்புவதையே கருத்தாகக் கூறும் அவனது பாசத்தை வியந்தார் சரவண அடிகள்.

கடைசியாகப் புறப்படுகிற நாள் வந்தபோது, ஆண்டி தனியே அழுது புலம்பி விட்டான். அவரையும் 'விரைவில் காசிக்குத்திரும்பிவர வேண்டும்' என வேண்டிக்கொண்டு, விடை கொடுத்தான். சரவணரும் திருச்சிக்குப்போய் ஒன்றிரண்டாண்டுகள் கழித்துத் திரும்பி வந்து, ஆண்டி யிடம் தம் கதை அனைத்தையும் முற்ற முடியச் சொல்லி அழுது ஆறுதல் பெற வேண்டும் என்றும் பிறகு ஆண்டி யும் தாமுமாக இமயமலை அடிவாரத்திற்கே சென்று விட வேண்டும் என்றும் தம் மனத்திற்குள் எண்ணிக்கொண்டு புறப்பட்டார்.

சரவணரைச் சத்திரத்தில் எல்லோரும் மிக மரியாதை யுடன் வழியனுப்பி வைத்தார்கள். ரயிலடியில் ஆண்டி மிக்க மன உருக்கத்தோடு விடை கொடுத்தான். அவரும் மனச்சுமை தேங்கிய நிலையில், கண்ணின் இமைகனக்கக் கையை அசைத்துப் பிரியலானார். பிரியமனமில்லாத இரண்டு அன்புள்ளங்களை, விசிலடித்துக் கொண்டு செயற் படத் தொடங்கிய ரயிலின் இருப்புச் சக்கரங்கள் பிரித்து, நெடுஞ் சேய்மைக்குக் கொண்டுசென்றன. வண்டி நகர்ந்த பிறகு முகத்தை மூடிக்கொண்டு அழுதபடி நின்ற ஆண் டியை, ஓடுகிற வண்டியிலிருந்தபடி கவனித்த சரவணர் தாமும் கண்கலங்கி அழுதுவிட்டசர்!

○

சரவண அடிகள் மலைக்கோயிலில், உச்சிப்பிள்ளையார் திரு முன்பு, குன்றிலமர்ந்து, நாள்தோறும் மாலை நேரத்தில் தத்துவச் சொற்பொழிவாற்றினார். அவர் சொற்பொழி வைப் பத்துப் பதினைந்து பேர்தான் முதலிற் கேட்டார் கள். பிறகு வரவரக் கூட்டம் அதிகமாயிற்று; நூறுபேர் இருநூறுபேர் என்று வரத் தொடங்கினார்கள். காசியிலும்

கயையிலும் அரித்துவாரிலும் பஞ்சவடியிலும் அவர் பேச்சைத் தற்செயலாக ஒருமுறை' இருமுறை கேட்கநேர்ந்த ஒருசிலர் அவரை அணுகி, ''உங்கள் பேச்சு அப்படியே இருக்கிறது. ஆள்தான் அடையாளம் மாறிவிட்டீர்கள்'' என்றார்கள். பிறகு அம்மை போட்ட விவரத்தை அறிந்து, அவரே இவரென உறுதி செய்துகொண்டு, 'காசிச்சாமிகள்' எனப் பெயரிட்டு அழைக்கத் தொடங்கினார்கள்.

சரவணரிடம் பலருக்கும் அன்பும் ஈடுபாடுமேற்பட்டது. ஆறேமாதத்தில் ஆர்வலர் பலரும் கூடி, அம்மா மண்டபச் சாலையில், ஐந்தேக்கர் நிலத்தை வாங்கி, ஒரு மண்டபத்தை முதலிற் கட்டினார்கள். 'சரவணமடம்' நல்லஇயற்கைச் சூழலில் கால்கொள்ளலாயிற்று. காசிக்குத் திரும்புவது பற்றிய எண்ணத்தைக் கைவிட்டு, ஆண்டியைத் தம்முடன் வந்திருக்குமாறு அவர் திருப்பத் திரும்ப மடல் எழுதினார்.

தம் மடத்தில் முருகனையே வழிபடு தெய்வமாகக் கோயில் கட்டி எழுந்தருளச் செய்தார். அவரவர் விரும்பியவாறு விரும்பியதை எய்தி வழிபட, அங்கங்கே எழுந்தருளும் முருகன் சரவண மடத்திலும் எழுந்தருளி, அடிகளுக்கு மனத்துயர் களையும் மருந்தாயினான்.

○

மூன்று:

விதைப்பு

''உலறிய கதுப்பின் பிறழ்பற் பேழ்வாய்ச்
சுழல்விழிப் பசுங்கண் சூர்த்த நோக்கின்''

13

சரவண மடத்துக்குச் சென்னையிலிருந்து கடிதம் வந்திருந்தது. உறையின் மேல் 'தனிப் பார்வை' என எழுதியிருந்ததால், அதனை அடிகளிடமே கொண்டுவந்து தந்தனர். நல்லுசாமிதான் எழுதியிருந்தான். படித்து முடித்தபோது சரவணர் முகம் வியர்த்துப் போயிற்று. நல்லுசாமி விரைவில் அடிகள் சென்னைக்கு எழுந்தருளி, ஒரு மாதம் அவனுடைய விருந்தினராக இருக்கவேண்டும் என்று கேட்டிருந்தான். வரவேற்புக்குழு, வரவேற்பு வளைவுகள், ஊர்வலம், ஆங்காங்கு பாதபூசை ஏற்பாடுகள், பத்திரிகை விளம்பரங்கள், கோயில்களில் பூரணகும்ப மரியாதைகள், பெரிய புள்ளிகள் சந்திப்பு, சென்னையில் கிளைமடம் கட்டக் குழு அமைத்தல், நிதிசேர்த்தல் என அவன் எழுதியிருந்த அனைத்தையும்—முன்னேற்பாடுகளாகவும் நிகழ்ச்சி நிரலாகவும் அவன் குறிப்பிட்டிருந்த அத்தனையையும் சரவணர் படித்துப்பார்த்தார். அதில் ஒன்று கூட அவருக்கு விருப்பமானது இல்லை. தம்மைக் கருவியாக வைத்துப் பெயரும் புகழும் செல்வாக்கும் செல்வமும் தேட நல்லுசாமி முயல்கிறான் என்பதை அவை தெளிவாகக்காட்டின.

முதலில் அவர் ஆடம்பரத்தை வெறுத்தார்; அடுத்து ஒரு கயவனின் கீழான முயற்சிகளுக்குத் தாம் ஒரு கருவி யாவதை அவர் மனம் ஒப்பவில்லை.

மறுமுறை எண்ணியபோது, தம் காசிவாழ்வை நீக்கிவிட்டுப் பார்த்தால் தாமும் ஒரு 'கயவன்' தானே என்று அவர் மனம் அவரையே சுட்டது. வேறு ஆளாக இருந்தால். நல்லுசாமி எளிதாக. இவ்வாறு கட்டாயப்படுத்த முடியுமா? சரவணர் தம்மைத்தாமே நொந்துகொண்டார். ''ஏன்? இருபத்தி நாலு, இருபத்தைந்து ஆண்டுக் காலத்தில் நாம் எவ்வளவோ மாறிவிட்டோம்? புனிதப் பண்புகளைப் போற்றி, மாறுதலடைந்து விட்டோம். அவனோ இன்றும் அக்கயமைக் குணம் மாருமல் அப்படியே இருக்கிருன். இன்றைய நிலையில் நமக்கும் அவனுக்கும் மலைக்கும் மடுவுக்குமுள்ள வேறுபாடு இருக்கிறது. நாம் ஏன் அவனைக் கண்டு அஞ்சவேண்டும்? அவனல்லவா நம்மைக் கண்டு அஞ்சவேண்டும்!''—இவ்வாறு சரவணர் மனம் வழக்காடியது.

''ஆனல் நல்லுசாமி எதற்கும் தயாராக இருப்பவன். அவன் பெயர்கெட இனி என்ன இருக்கிறது? நம் நிலை அப்படி இல்லையே. நாம் யாரென்பதை ஊர் அறிந்தால் நாம் உலகத்தை ஏமாற்றிக்கொண்டிருப்பதாக அல்லவா தூற்றும். வணங்கத்தக்க இன்றைய நிலைக்கும் அதற்கும் பொருந்தி வருமா? நம் பழைய நடத்தைகளை வெளிப்படுத்திவிட்டால் உலகம் காறித்துப்புமே! என்ன ஆனலும் புதுப்பிறவியான இப்புனிதம் கெட்டுவிடக் கூடாது. பழைய கதை தெரிந்தால், அதைத்தான் எல்லோரும் பெரிதாகப் பேசுவார்கள். இப்போதுள்ள மதிப்பும் மரியாதையும் காற்றில் போய்விடும். பிறகு நம்மனமே நம்மைப் போட்டு அரிக்கும். சேச்சே! இவன் கண்ணில் நாம் அகப்பட்டிருக்கவே கூடாது. எவ்வளவு காலங்கழித்தும் விடாமல் துரத்திக்கொண்டு வந்துவிட்டானே! இவன் ஒருவனுடைய கண்ணில் மட்டும் படாதிருந்தால் எவ்வளவு நன்ருக இருந்திருக்கும். சொந்த மகளுக்குக்கூட அடை

யானம் தெரியவில்லை; உற்ருர் உறவினர் சந்தேகப்பட வில்லை. நாய் மோப்பம் பிடிப்பதுபோல் வந்து, இந்தப் பயல் கண்டுபிடித்துவிட்டானே!

தப்பிக்க வழி? வேறு எதுவும் இல்லை. பொறியில் அகப் பட்ட எலி தப்பிக்க என்ன மறுகுமறுகுகிறது? வலையிலகப் பட்ட மான் என்ன விதமாக மருள்கிறது? கண்ணியில் விழுந்த பறவை எப்படித் துடி துடிக்கிறது? உள்ளம் பொறியில் விழுந்து விட்டது. இனி என்ன செய்தும் பய னில்லை!

ஒரு மாதந்தானே வரச்சொல்லுகிருன்; போய்வந்தால் போயிற்று. அதன்மேலும் அவன் தொடராதபடி, நல்ல படியாக நேரே பேசி ஆவன செய்வோம். இதில் நிதானம் இழந்தால், பரபரப்புக்காட்டினுல் எல்லாம் குட்டிச்சுவராகி விடும்.''

அடிகள் மடத்து எழுத்தனைக் கூப்பிட்டு மடலை நீட்டினர். அவன் அதை வாங்கி. விரைந்து படித்துவிட்டு 'வர இய லாதென்று எழுதிப் போட்டு விடட்டுமா?' என்று கேட் டான். ஏனெனில் இதுவரை இத்தகைய நீண்டதூர அழைப்புகளுக்கு, இந்த ஒரே பதிலைத்தான் எழுதிக் கொண்டிருந்தார்கள்.

சரவணர் சிறிதுநேரம் தலையில் கையூன்றிக் கொண்டு, இருந்துவிட்டு ''வருகிரேம். ஒரு மாதம் மட்டுமே அங்கி ருக்க முடியும். மாத முடிவில் இங்குக் கட்டாயம் திரும்ப வேண்டும். இங்குள்ள ஆர்வலர்கள் வேண்டுகோள் இது. ஆடம்பரம் வேண்டாம்; அமைதியான தொண்டினையே விரும்புகிரேம்'' என்று எழுதும் என்ருர். அந்த எழுத்த னுக்கு ஒரே வியப்பாகப் போய்விட்டது. மடத்தைவிட்டு ஒருநாள் கூட வரமாட்டேன் என்று உறுதியுடன் கூறி வந்த அடிகள், எப்படி ஒரு மாதம்போக இசைந்தார் என்று எல்லோருமே மூக்கின்மேல் விரலைவைத்துப் பேசிக் கொண்டார்கள். ''என்ன இருந்தாலும் அந்த நல்லுசாமி

பொல்லாத ஆளையா!'' என்று சிலர் அவனுடைய சாதுரி யத்தை மெச்சினர்கள்.

O

சரவணர் மனம் சில நாள்களாகவே மேலும் மேலும் கடுமையான போராட்டத்திற்கு ஆட்பட்டது. தாம் மடத்தைத் தொடங்கி நடத்திவரும் விதமே அவருக்குத் தவறென்று தோன்றியது. எப்பொழுது மடத்தில் உண்டியல் வைக்கப்பட்டதோ, அப்போதே அதன் புனிதம் போய்விட்டதென அவர் மனம் இப்போது எண்ணியது. இன்று திரைப்பட அரங்குகளிற்போனல் அங்கே கட்டண விவரம் ஆங்காங்கு எழுதிப் போட்டிருக்கக் காணலாம். அதுபோலக் கோயில்களுக்குப் போனலும் அங்கே கட்டண விவரங்களைக் காணலாம். நம் நாட்டவர்கள் கோயில் களைச் சிறந்த வாணிகக் களங்களாக மாற்றிவிட்டார்கள். பிற வணிகத்துறைகளில் முதலிடு தேவை; இதில் அது தேவையில்லை. இதனல் இன்று 'சமயவாணிகம்' செழித் தோங்கி வருகிறது. இது நல்லதற்கு அறிகுறி அன்று. கோயில்களிலும் மடங்களிலும் உண்டியல் வைப்பதே தவறு. இன்று கறுப்புப் பணத்தின் புகலிடமாக உண்டி யல்கள் பல விளங்குகின்றன. நல்லுசாமிக்குத் தம் மீது கண் விழுந்ததற்கே காரணம் இங்கு சேர்கிற பணம்தான் என்பதைச் சரவணர் நன்கு உணரலானர். காசியில் சம் பளமும் வேண்டாம் என்று பல ஆண்டுகள் உழைத்த 'துறவு' மனமெங்கே? இங்கு ஒவ்வொரு நாளும் உண்டி யலை எண்ணி, 'இருப்பு' எவ்வளவு கூடியிருக்கிறது என் பதைக் கணக்கன் கூற, உள்ளூற மகிழும் உள்ளம் எங்கே? நல்லுசாமி தானும் இந்த முதலிடில்லாத வாணிகத்தில் வருவாய் தேடப்பார்ப்பதில் குற்றமென்ன? நம் முன்னைய வினை மட்டுமே, இந்த இடுக்கணுக்குக் காரணமென்றும், இப்போது நாம் முற்றிலும் திருந்திவிட்டோமென்றும் நினைத்து, நடப்பதற்கு அழுங்குவது ஒரு போலித்தனம் ஆகும். பலர் அப்படித்தான் தம்மைத் தாமே தவருக

மதிப்பீடு செய்துகொண்டு, வினையை நோகிருர்கள்; அல்லது ஆண்டவனை நோகிருர்கள். இப் போலித்தனத்தில் உண்மை புதையுண்டு போகிறது. சரவண மடத்தில் பணம் சேர்ப்பது அறமேயென்ருல், அதில் நல்லுசாமி போன்றவர்கள் 'கூட்டுக்கடை' வைக்க ஆசைப்படுவது எப்படிக் குற்றமாகும்? சாயவேட்டி கட்டிக்கொண்டு செய்தால், நம்நாட்டில் தப்பும் சரியென்று படுகிறது. வெள்ளை வேட்டி கட்டியிருந்தால் அதே தப்பு இரண்டு மடங்கு தப்பாகப் படுகிறது. அதனுல்தான் நம் நாட்டில் கோயில் என்றும் குளம் என்றும் அறம் என்றும் தருமம் என்றும் துறவென்றும் தவமென்றும் கூறிக் கொண்டு, கள்ளத்தனமாக மறைந்து வாழ்வோர் தொகை அதிகமாக இருக்கிறது. வள்ளுவரும் 'புதருக்குள் மறைந்து வேட்டுவன் பறவையை எய்வதுபோல' என்று இவர்களை இனங்காட்டினுர்! இப்போது நல்லுசாமியிடம் தாம் வசமாகச் சிக்கிக் கொண்டிருப்பதால், அவன் தம்மையும் மடத்தையும் வைத்துப் பணம் சேர்க்கப் பார்க்கிருன் என்பதைச் சரவணர் அறிவு தெளிவாக ஒப்புக் கொண்டது. எனவே, இப்போதைக்கு அவனுடன் ஒத்துப் போவதைத் தவிர வேறு வழியில்லையென்றும் விரைவிலேயே இப் பந்த, பாசங்களுக்கெல்லாம் ஒரு முடிவு கட்டிவிட வேண்டும் என்றும் சரவணர் தம் மனத்திற்குள் ஒரு முடிவு செய்து கொண்டார்.

○

'ஏழைகள் இல்லம்' ஒன்றைச் சரவண மடத்தின் சார்பில் தொடங்கி ஒரு மாதம் கூட ஆகவில்லை. மடத்தின் நிதி பொது நன்மைக்குப்பயன்படவேண்டும் என்பதற்காகவே இது தொடங்கப்பட்டது எனப்பலரும் பாராட்டுகிருர்கள். சரவணருக்குத்தான் இதன் உண்மை தெரியும். அவர் தம் மைந்தன் மாணிக்கம் தெருத்தெருவாகப் பிச்சை எடுத்து அலைவதை நிறுத்தவே இப்படியொன்று தொடங்கத்திட்டம் இட்டார். நூறுபேர் ஏழைகள், ஆதரவற்ற

வர்கள், உறுப்புக் குறைபட்டவர்கள் இதிற் சேர்க்கப்பட்டனர். நூறு பேர் நிறைவுறும்வரை மாணிக்கத்தை யாரும் அழைத்து வந்து சேர்க்கவில்லை. வயதானவர்களை அழைத்து வந்தபோது, சரவணர் அனாதையான இளைஞர்களைக் காப்பாற்றுவது எதிர்காலச் சமுதாயத்திற்கு நாம் செய்யும் பணியுமாகும் என்று விவாதித்தார். இளைஞர்களாகக் கூட்டிவந்த போதும் யார், யாரையோ அழைத்து வந்தார்களே தவிர, மாணிக்கத்தை யாரும் பார்த்ததாகக் கூடக் கூறவில்லை. 'பைத்தியம் பிடித்து, வாழ்வை இழந்த ஒருசில இளைஞர்களுக்காவது நம் ஏழைகள் இல்லத்தில் இடம் ஒதுக்கவேண்டும்' என்று அடிகள் வற்புறுத்தவே, ஏறத்தாழ நான்குபேர் அப்படிப்பட்ட பைத்தியங்களாகப் பார்த்து அழைத்து வந்தார்கள். அவர்களிலும் மாணிக்கத்தைக் காணவில்லை. சரவணருக்குப் பெரும் ஏமாற்றமாக இருந்தது. மாணிக்கத்தையே குறிப்பாக அடையாளம் கூறி அழைத்துவரச் சொன்னால், அப்போது யாரும் ஐயப்பட்டுவிட நேரும் அல்லவா? சரவணர் செய்வதறியாமல் திகைத்தார். கடைசியாக மடத்து எழுத்தனைத் தனியே அழைத்து, அடையாளம் எல்லாம் கூறி, மாணிக்கத்தைப் பார்த்து அழைத்துவரக் கூறினார். அவனும் அவ்வாறே மாணிக்கத்தைப் பிடித்து வந்தான். ஆனால் ஏழைகள் இல்லத்தின் மேலாளர், "ஐயா, நூறுபேருக்கு மேல் கண்டிப்பாக ஒருவரைக்கூடச் சேர்க்கக் கூடாது என்று நீங்கள் கூறியிருந்தீர்கள் அல்லவா? அதற்குமேல் பலர் வந்து திருப்பி அனுப்பிவிட்டோம். இப்போது இவனைச் சேர்த்தால் தகராறு வரும். நாம் வேண்டுமென்று சலுகை செய்ததாகப் பேசுவார்கள்!" என்றார். சரவணருக்கு மெல்லவும் முடியவில்லை; விழுங்கவும் முடியவில்லை. "இவனைப் பல நாளாகத் தெருக்களில் பார்த்திருக்கிறேன். எச்சில் இலைக்காகத் தெரு நாய்களோடெல்லாம் சண்டை போட்டிருக்கிறான். நன்றாக இங்கிலீஷ் பேசுகிறான். படித்தவன் போல் இருக்கிறது" என்றார் அடிகள். அவர் குரல் தழுதழுத்தது.

அதற்குமேல் அவரால் மாணிக்கத்தைச் சேர்த்துத்தான் ஆகவேண்டும் என்று வற்புறுத்த இயலவில்லை. எனவே மாணிக்கத்தைத் திரும்ப அனுப்ப வேண்டியதாயிற்று!

சரவண அடிகள் தமக்குள் குமைந்து மருண்டார். 'விதி' என்ற ஒன்று அவர் நெஞ்சிற்குள் புகுந்து கொள்கிறது. பிள்ளைப்பூச்சி போல நெளிகிறது; சுருள்கிறது அது. அவரால் தாங்க முடியவில்லை. அதை வெளியே எடுத் தெறியவும் முடியவில்லை. கண்ணீர் பொங்குகிறது. எதற்காகப் பலநாள் திட்டம் போட்டு, இந்த இல்லத்தைத் தொடங்கினரோ, அந்த இல்லத்தில் அவர் தம் மகனைச் சேர்க்க முடியவில்லை. "எனக்குத் தண்டனை போதாதா முருகா? இன்னுமா என்னைச் சித்திரவதை செய்யவேண் டும்?'' என்று முருகன் திருமுன் இரண்டு கைகளையும் நீட்டி அவர் இறைஞ்சினர். அப்போது ஏழைகள் இல்ல உதவியாள் ஒருவன் அங்கு வந்து நின்றான். அடிகள் திரும்பிப் பார்த்தபோது, "ஒரு பெரியவரை அவங்க சொந்தக்காரங்க வந்து கூட்டிக்கிட்டுப் போயிட்டாங்க. அவரு வீட்டிலே கோவமா வந்தவராம். தகவல் கிடைச்சு, வந்து கூட்டி போயிட்டாங்க...... இப்போ ஒரு இடம் காலியா இருக்கிறதினலே, மாணிக்கம் என்கிறவனைச் சேர்த்துக்கலாமா என்னு கேட்டுகிட்டு வரச் சொன்ஞக. அந்தப் பைத்தியத்தையும் இன்னும் தங்கள் உத்தரவுக் காக இல்லத்திலேதான் உட்கார வச்சிருக்காங்க'' என்று அவன் விளக்கிச் சொன்னன். அடிகள் ஒப்புதலுக்காகத் தலையாட்டியதும், அவன் விரைந்தான். முருகனை நோக்கித திரும்பிய சரவணர், நிலந்தொட பட விழுந்து வணங்கினர். கண்கள் அன்பைத் தாரை வார்த்தன. "வேண்டுநர் வேண்டியாங்கு எய்திநர் வழிபட, ஆண் டாண்டு உறைதலும் அறிந்தவாறே'', என்று அவர் வாய் அசைந்து கொண்டிருந்தது.

○

திருச்சியிலேயே 'பெருப்புள்ளி' எனப்படும் ஒருவர், நல்லு

சாமி அனுப்பியதாகக் கூறி அடிகளைப் பார்க்க வந்திருந்தார். அவரைப் பார்த்தாலே 'பெருப்புள்ளி' என்பது அகல நீளங்களால் உறுதிப்பட்டது! சென்னையில் அவர் சினிமாத் தொழிலில் ஈடுபட்டுள்ளாராம். அங்கு அடிகளை வரவேற்க நடக்கும் ஏற்பாடுகளையெல்லாம் அவர் வாய் கொள்ளாமல் விவரித்தார், அடிகளுக்கு அதைக் கேட்கக் கேட்க நாராசமாக இருந்தது. இந்தக்காலத்துச் சாமியார்களிலிருந்து சற்று வித்தியாசமானவர் சரவணர். தம் எதிரே வணங்குபவர் பணக்காரரா, ஏழையா என வேற்றுமைப் படுத்தி அறிந்து கொள்வதிலும் பையிலுள்ள கனத்திற்குத் தகுந்தபடி அருள் வழங்குவதிலும் இந்தக்காலத்துச் சாமியார்கள் கை தேர்ந்தவர்கள். சரவணஅடிகளோ தம் முன் நெளிந்த, குழைந்த பெரும்புள்ளியை ஏறெடுத்துப் பார்க்கவும் விரும்பவில்லை. அவர் போனபிறகு நெடுநேரம் அடிகளுக்கு 'நல்லுசாமி அச்சம்' துளைத்துக்கொண்டிருந்தது. எப்போதோ அவனுடன் கொண்ட தொடர்பும், அன்று செய்த பாவங்களும் அவருடைய மனத்தின் ஒரு மூலையில், தெள்ளிய ஆலின் சிறுபழந்து ஒரு விதையாக உட்கிடந்தன. இப்போது அவை 'அணிதேர்ப் புரவி ஆட் பெரும் படையுடன்' மன்னரும் தங்கும்படியான ஆலமரமாக வானுற ஓங்கி வளர்ந்து நின்றன...

''...ஒருகணம் அவர் மனத்தில் பழைய வாழ்க்கையெல்லாம் திரைப்படம்போல் ஓடுகிறது. ஒவ்வொன்றாய்த் தனித்தனியாய் நினைவிற்கு வருகின்றன. திருச்சி, சென்னை, பம்பாய், சென்னை, திருச்சி என்று அவர் மனவேகத்தில் பறக்கின்றார்.''

"...அவருக்குக் கொடிய தொற்றுநோய்பிடிக்கிறது. அதற்குரிய காரணத்தைச் சொல்லாமல் அவர் மறைக்கிறார். மருத்துவர் அவரை நச்சரித்து, ஒவ்வொன்றாய்க் கேட்டு உண்மையை வரவழைக்கிறார். ''அடபாவி! உண்மையைச் சொன்னால்தான் ஐயா நோய் தீரும். புண்ணை அறுத்துக் கழுவவேண்டும்; புனுகு போட்டு மூடிவைத்து

விட்டால் அது தீர்ந்துவிடுமா?'' என்று மருத்துவர் கடிந் துரைக்கிருர்.''

''...கடன்காரன் ஒருவன் தான் கொடுத்த கடனைக் கேட்டு, அவர் மடியைப் பற்றுகிருன்; கழுத்தை நெரிக் கின்ருன். அவர் அவனிடமிருந்து எத்தனையோ முறை தப்பித்திருக்கிருர். அவனைப் பலமுறை ஏமாற்றியிருக் கிருர். இப்போதே அவன் அருகில், நேரில் வந்து, மடி யைப் பிடித்து உலுப்புகிருன்... இனித் தவணை சொல்ல முடியாத இக்கட்டான நிலை.''

அச்சமும் அருவருப்பும் மீதூர, இவ்வாறு நனவிற் கண்டு கண்டு நடுங்கினர் சரவணர். மறுபடியும் சற்றுக் கண் அயர்ந்தபோது, அவர் தாம் ஒரு வழக்கு மன்றத்தில், நீதிபதியின் முன்னல், குற்றவாளிக் கூண்டில் நிற்பதாகக் கனவு கண்டார்.

எதிரே காக்கிச் சட்டை அணிந்த காவல்துறைக் கண் காணிப்பாளர் ஒருவர், கையில் தடியை உருட்டிக் கொண்டே கேட்கிருர்: ''நீர் குடிபோதையில் உம் மனைவி யைக் கொன்று விட்டீர் என்கிறேன். உண்மையா? இல் லையா?''

''இல்லை''

''உம் மனைவியின் பண்பைக் கொன்றீர்; அன்பைக்கொன் றீர்; நல்ல உயர்குடிப் பிறப்பைக் கொன்றீர் அல்லவா?''

''நான் எதுவும் செய்யவில்லை!''

''ஒன்றும் செய்யாதவர் ஏன் இப்படி நடுங்குகின்றீர்...? உண்மையைக் கூறும்... உமக்கு எப்போது திருமண மாயிற்று? அப்போதைய உம் நிலை என்ன? கடைசியில் நீர் எதற்காகத் திருச்சியை விட்டு ஓடினீர்? இடையில் நீர் செய்த மோசடிகள் எத்தனை? நாசங்கள் எத்தனை? கேடு கள் எத்தனை? எங்கே ஒன்றுவிடாமல் கூறும், இந்த மா மன்றத்தில்கூறி, மன்னிப்புக்கேளும்! இல்லையென்ருல்''...

''இல்லையென்றால்......என்னை என்ன செய்யப் போகின்றீர்கள்?''

''தூக்கில் தொங்கவிடப் போகிறோம்!"

''நான் உயிரோடிருந்தாலல்லவா தூக்கில் போட்டுக் கொல்வதற்கு, நான் எப்போதோ செத்துப்போய்விட்டேன் ஐயா... இப்போதிருப்பது புதிய சரவணன். நான்வேறு.''

''சும்மா கதை விடாதீர் ஐயா. நீதிமன்றம் இந்தக்கதைக்கெல்லாம் மயங்காது. உண்மையான உம் வரலாற்றைக் கூறும். நீர் தலைமறைவாய் இருந்துகொண்டு உலகத்தை ஏமாற்ற ஏமாற்ற உம்மை விடமாட்டோம்...நீர் இப்போது செய்து கொண்டிருப்பது மாபெரும் குற்றம்... உலகத்தையே ஏமாற்றிக் கொண்டிருக்கிறீர்...இதோ உம் வேடத்தைக் கலைத்து, முடியை மொட்டையிட்டு, தெருவில் உம்மை ஊர்வலமாய் இழுத்துப்போய்...'' அக் கண்காணிப்பாளர் கடகடவென்று சிரிக்கின்றார். அதைக் கேட்டுச் சரவணர் நடுங்குகிறார்...

சரவணர் நடுக்கத்தோடு விழித்துப் பார்த்தபோது, பக்கத்தில் யாருமில்லை. அதன்பிறகு அவர் உறக்கம் வராமல் புரண்டு புரண்டு தத்தளித்தார். அந்தப் பழைய நினைவுகளிலேயே இழுப்புண்டு, சிக்குண்டு தவிக்கலானார். அந்தப் பழம் நினைவு ஒரு பேய் போலத் துணங்கைக் கூத்தாடியது. தலைமுடி பரட்டையாய்ப் பறக்க, பற்கள் முறை பிறழ்ந்து தோன்ற, பிளந்த பெரிய வாயோடு, சுழலும் விழி, பசிய கண், அச்சந்தரும் பார்வை ஆகியவை விளங்கப் பேய்மகள் ஆடுகின்ற துணங்கைக் காட்சி கோரமாயிருந்தது.

○

"கழல்கண் கூகையொடு கடும்பாம்பு தூங்கப்
பெருமுலை அலைக்கும் காதில் பிணர்மோட்டு
உருகெழு செலவின் அஞ்சுவரு பேய்மகள்"

14

சரவணன் இலண்டன் மாநகரத்தில் பாரிஸ்டர்-அட்-லா பட்டம் பெற்றுத் திரும்பிய காலம் அது. அன்று அந்த வட்டாரத்திலேயே ஓர் இளைஞன் இவ்வளவு பெரிய பட்டம் பெற்றது இதுவே முதல் தடவையாகும். இதனால் சரவணன்மீது அனைவருக்கும் மதிப்பும் மரியாதையும் ஏற்பட்டிருந்தன. அவனுடைய அழகும் கவர்ச்சியும் மேலை நாட்டுப் பாணி நடையுடைகளும் பலரையும் வியந்து நோக்கவைத்தன. எல்லாவற்றிற்கும் அவனைப் பெற்ற தந்தை நாகலிங்கம் பிள்ளையும் பாட்டனார் பெரிய ராஜாவும்தான் காரணம் எனலாம். அவர்கள் குடும்பத்திலேயே முதன்முதல் வெளிநாடு போய் வந்த பெருமைகூட சரவணனையே சாரும். நாகலிங்கம்பிள்ளை எப்போதும் தம் முன்னோர் போல வயல் வரப்புகளிலேயே நேரில் போய் நின்று நிலைமைகளைக் கவனித்து வந்தார். நல்லபக்தி உடையவர். அவருக்குத் தமிழிலுள்ள பக்திப் பாடல்கள் எல்லாம் மனப்பாடம். ஜமீந்தாராயிற்றே என்று மரநிழலில்கூட ஒதுங்கி நிற்காமல், தலைபில் பாகை கட்டிக் கொண்டு, செய்யின் நடுவே போய்நின்று ஏரோட்டுபவர்

களைத் திருத்திக் கொண்டிருப்பார் அவர். ஒவ்வோராண்டும், அவர்தான் பொன்னேர் பூட்டுவது வழக்கம். காலந் தவருமல் கடமையாற்ற வேண்டும் என்பதிலும் வெட்டியாக ஒரு பைசாக் கூடச் செலவழிக்கக் கூடாது என்பதிலும் மிகக் கண்டிப்பானவர் அவர்.

சரவணன் பள்ளிப்படிப்பு முடியும்வரை நாகலிங்கம்பிள்ளையின் மிக இறுக்கமான கண்டிப்பின்படி கட்டுத்திட்டமாக வளர்ந்தான். தேவாரப் பாடசாலைக்குப் போய்க் காலை நேரத்தில் இசையோடு தேவார திருவாசக திருமுறைகளை ஓதவேண்டும். மாலை நேரத்திலோ ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனி ஆசிரியர் வந்து கற்றுக்கொடுப்பார். நாகலிங்கர் தாமும் தம் முன்ஞேரும் ஆங்கிலம் படிக்கவில்லை என்றும் மேற்படிப்புப் படிக்கவில்லை என்றும் கருதி, தம் ஒரே மகனை எவ்வளவு முடியுமோ அவ்வளவு உயர்ந்த படிப்புப் படிக்க வைத்து விடுவதென்று திட்டமிட்டார். அதன்படி சரவணன் ஒப்புயர்வற்ற கல்விகற்றுத் திரும்பியிருந்தான்.

சரவணனுக்கு என்று ஊர் உலகமெல்லாம் தேடி, இறுதியில் மிராசுதார் கனகலிங்கம் மகளான பொற்கொடியை அவர் உறுதி செய்தார். அந்தக் காலத்தில் அவர்கள் வகுப்பில் அவள் ஒருத்திதான் படித்துப் பட்டம் பெற்ற பெண்ணுகத் திகழ்ந்தாள். மற்ற குடும்பத்தில் எல்லாம் பெண் அழகாயிருந்தால், பட்டம் பெற்றிருக்கவில்லை. பட்டம் பெறவில்லையென்ருலும் ஒரளவு படித்திருந்த வேறு இரண்டொரு பெண்கள் மிகுந்த செல்வக் குடும்பத்திலே பிறந்தவர்கள். அவர்களை மணம்பேசி முடித்தால் சீர்வரிசையும் செல்வமும் மிக அதிகமாகக் கிடைக்கக் கூடும் என்ருலும் தம் மகனுக்கு அழகு குறைந்த பெண்களை முடிக்க அவர் மனம் ஒருப்படவில்லை.

பொற்கொடி மிகச் சிறந்த அழகிமட்டுமன்று; அவள் நம் நாட்டுப் பழக்க வழக்கப்படி, லட்சுமி போல மஞ்சள் பூசிய முகமும் மலர் தவழும் கூந்தலுமாய் வளர்ந்து, உண்மை

யில் ஒரு பொன்னுலான கொடிபோலவே காட்சியளித்தாள். தம் மகனுக்கு இவளே தகுந்த சோடி என்று அவர் மனம் உறுதி செய்துவிட்டதால், பிறகு வேறு யாராலும் அதை மாற்ற முடியவில்லை. இவ்வாறு, விரைந்து திருமண ஏற்பாடு செய்ய நாகலிங்கர் முயன்றதற்கு ஒரு காரணம் உண்டு. அவர் மனத்தில் சரவணன் போக்குப் பற்றி ஒருவித ஐயம் முளைவிட்டது. வெளிநாடு படிக்கப் போன எல்லாருமா 'கரன் சந்திர மோகன்தாஸ் காந்தி' போல வாழ்ந்து திரும்பியிருப்பார்கள்? அங்கு உள்ள சூழ்நிலையில் ஐந்தாருண்டு காலம் தங்கி வரும் ஒருவனிடம் நல்ல மாறுதலும் இருக்கலாம்; அது வேறு வகையாகவும் இருக்கலாம். அதற்குச் சான்று கூறுவது போலச் சரவணனுடைய சில நடவடிக்கைகள் காணப்பட்டன. அவன் அடிக்கடி சந்தித்துப் பழகும் நண்பர்களில் பூவண்ணன், பொன்னப்பன் போன்ற சிலர் மிக நல்லவர்களே. ஆனால் நல்லுசாமி, குழந்தைவேலு போன்ற சில 'கெட்ட' நண்பர்களுடன் அவன் மிகவும் ஊடாடிப் பழகியதை நாகலிங்கர் அறிந்து வருந்தினர். இந்த நிலையில் வெளிப்படப் பேசி இதையெல்லாம் கண்டிப்பது, மைந்தனின் மனத்தை மரத்துப் போகச் செய்யக் கூடும். எனவே, அவன் மனத்தில் இடம் பெறக் கூடிய பெண்ணைப் பார்த்து, ஒரு கால் கட்டுப் போட்டுவிட்டால் பையன் தானே திருந்திவிடுவான் என அவர் எண்ணினர்.

நாகலிங்கர் மிகவும் திண்ணிய மனத்தினர். அவர் முகமே அதைக் காட்டும். இதுகாறும் அவர் திட்டமிட்டுச் செய்த எச்செயலும் பலிக்காமற் போனதில்லை. வருமுன் உணரும் ஆற்றலும் முன்கூட்டியே திட்டமிட்டுச் செயற்படுத்தும் திறமையும் கட்டுப்பாடும் எஃகு போன்ற மனவுறுதியும் குடும்ப வாழ்வினராகிய அவரை, ஒரு தவ முனிவரிலும் மேலாகக் காட்டின. பொதுவாக இத்தகைய விதியை ஆளும் விறலுடைய பெருமக்களை நாம் ஒரு தலைமுறைக்கு முன்னதாக நாடெங்கும் காணக்கூடிய நிலைமை இருந்தது. இன்று நிலைமை கெட்டிருக்கிறது. மூக்குப்

போன செலவைக்கு எதையாவது செய்பவர்கள், திட்டமில்லாமலும் குறிக்கோளின்றியும் செயற்படுபவர்கள், செயலாற்றும் திறமை அற்றவர்கள், கட்டுப்பாட்டையும் மன உறுதியையும் இழந்தவர்கள் என இவ்வாறு புதிய தலைமுறையினர் குப்பையைக் கிண்டும் கோழிகளாகி வருகின்றனர். நாகலிங்கரும் சரவணனும் முறையே இந்த இரண்டிற்கும் எடுத்துக்காட்டாக விளங்கினர். இவர்களின் இப்புதிய முரண்பாட்டில் நாகலிங்கரே வென்றார். திருமணமானவுடன் மணமக்களைத் தேனிலவிற்காக மைசூர், பெங்களூர், மாலம்புழா, கொச்சின் என எங்கெங்கோ அவர் அனுப்பிவைத்தார். எதிர்பார்த்தவாறு சரவணன் மதுவுண்ட வண்டாக மனம் மகிழ்ந்து அதிலேயே மூழ்கிக் கிடந்தான். இப்போதெல்லாம் எங்கு சென்றாலும் தன் மனைவியுடன் இணைபிரியாது சென்று வந்தான். நாகலிங்கர் நினைத்தபடி அத்தீய நண்பர்கள் சிலரும் விலகிப் போயினர்.

திருச்சியிலும் சுற்றுப்புறங்களிலும் எந்த ஒரு விழாவிற்கும் தலைமை தாங்கச் சரவணனை அழைப்பார்கள்; பரிசு நல்கத் திருமதி பொற்கொடி சரவணனை அழைப்பார்கள்! சரவணன் அழகிய ஆங்கிலத்திலோ, அல்லது எளிய இனிய தமிழிலோ பேசி எல்லோரையும் மகிழ வைக்கும் திறனுடையவனானான். இவர்களுக்கு முதலில் ஒரு பையன் பிறந்து வளர்ந்தான்; பிறகு கற்பகவல்லி பிறந்தாள். பின்னர்ச் சிலகாலம் இடைவெளிக்குப் பிறகு மாணிக்கம் பிறந்து வளர்ந்தான். காலப்போக்கில், பத்துப் பதினைந்து ஆண்டுகளாக அனைவரும் போற்ற வாழ்ந்த காலத்தில், நாகலிங்கருக்கு உடல்நலம் கெட்டது. எதிர்பாராமல் ஒருநாள் நிறைவாழ்வு வாழ்ந்து, மக்களோடு மகிழ்ந்து மனையறம் காத்த அப்பெருமகனார், நீண்ட நாட்களுக்கு முன் தம் மனைவி போன இடத்திற்கே போய்விட்டார். அவருடைய காலத்தில், அவர் கடுந்தவ நோன்பிபோலக் கட்டுப்பாட்டோடு இருந்ததால், அக்குடும்பம் ஆல்போல் தழைத்து, அறுகுபோல் வேரோடி,

மூங்கில் போல் சுற்றிச் செழித்துத் திகழ்ந்தது. செல்வம் கோபுரம் போல் வளர்ந்து நின்றது. சரவணனும் பொற் கொடியும் கண் நிறைந்த வாழ்வும் கருத்து நிறைந்த நற் புகழும் பெற்றுக் குலவிளக்குகள் எனத் திகழ்ந்தனர். அவர்கள் தங்கள் மக்களை நன்கு படிக்கவைத்து, பற்றோ டும் பாசத்தோடும் வளர்த்துவந்தனர். அவர்கள் இருவ ரையும் விழாக்களுக்கும் வேடிக்கைகளுக்கும் என்று வழி யனுப்பி வைத்துவிட்டு குழந்தைகளைக் கண்ணை இமை காப்பதுபோல் நாகலிங்கர் கவனித்துக்கொள்வார். கடைசி வரை அந்நிலக்கிழார், ஓர் உழவனாகவே வாழ்ந்து செத்தார் என்றுதான் கூறவேண்டும். கடைசி யாக அவருடைய ஆவி, வயலில் உழுவதை மேற்பார் வையிட்டுக் கொண்டிருக்கும்போதுதான் பிரிந்தது!

நாகலிங்கர் மரணத்துக்குப் பிறகு, சரவணனின் வாழ்க் கைக் கப்பல் சிறிதே திசை திரும்பியது. நல்லுசாமி, குழந்தைவேலு போன்ற தீய நண்பர்கள் இது காறும் குறிப்பிட்ட 'எல்லை'க்கப்பால்தான் சரவணனைக் கண்டு எப்போதாவது அளவளாவுவார்கள். இப்போது அவர்கள் வீட்டிற்கே அடிக்கடி வரத்தொடங்கினார்கள். இரவும் பக லும் பலாப்பழத்து ஈ போலச் சரவணனை ஒட்டிக் கொண் டார்கள். அன்பிற்குரியவளான பொற்கொடியாலும் அதை மாற்றமுடியவில்லை. மூன்று குழந்தைகளைப் பெற்ற பிறகும், கட்டுக்குலையா அழகும் கண்கவர் வனப்புமுடை யவளாகத்தான் பொற்கொடி திகழ்ந்தாள். பெரும்பகுதி தன் மாமனார் மனப்போக்கு, சிக்கனம், கட்டுப்பாடு ஆகியவற்றைக் கற்றுக்கொண்டு, பொற்கொடி அதன்படி நடந்து அவரிடம் நற்பெயர் எடுத்து வாழ்ந்து வந்தாள். சரவணன் தன் மனைவி போக்கை அறிந்து, நடந்து தனக் குக் கெட்டபெயர் வராமல் காப்பாற்றிக் கொண்டாள். நாகலிங்கர் பிற்காலத்தில் வாங்கிய பெரும்பாலான சொத்துக்களைப் பொற்கொடி பெயராலேயே வாங்கினார். அவள் இந்த வீட்டிற்கு வாழ்க்கைப்பட்டு வரும்போது, சீர்வரிசையோடு ஒன்றாக, திருச்சியிலுள்ள ஒரு மாளிகை

யையும் அவள் தந்தை எழுதிக்கொடுத்திருந்தார். மேலும் பொதுவாக அந்தக்குடும்பத்துச் செல்வ இருப்பும், வரவு செலவுகளும் பற்றிச் சரவணனைவிட, அவளே நன்கு அறிந்து வைத்திருந்தாள். இதனல் நாகலிங்கர் இறந்த பிற்பாடு, சரவணன் அவளையே ஒவ்வொன்றிற்கும் எதிர் நோக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

நாகலிங்கர் வாழ்ந்த காலமெல்லாம் சரவணன் அடங்கி யிருந்தாலும் அவன் மேலைநாட்டில்போய் படித்துவிட்டு வந்தபோது உடன் ஊறிப்போன சில பழக்கவழக்கங்கள் அவனுள் அடங்கியே கிடந்தன. இலண்டனில் அவன் ஒரு சீமான்வீட்டுப் பிள்ளையாய்க் கண்காணுத நாட்டில் வாழ்ந் ததால், தன் இச்சைப்படி திரிந்தான. குடிப் பழக்கமும் மங்கையர்களுடன் நடனங்கள் ஆடுவதும் பெரு விருந்து களிற் கலந்துகொள்வதும் இன்பக் கேளிக்கைகளிற் பொழுதுபோக்குவதும் அவனுக்கு அங்கே சாதாரண நடைமுறையாக இருந்தன. பணம் தண்ணீர்போல் செல வானுலும், நாகலிங்கர் தம் மகன் படிக்கும் படிப்பு அப் படி என எண்ணி, அதுபற்றி ஐயப்படாமலே விட்டுவிட் டார். செலவு கூடக்கூடப் படிப்பின் உயர்வே அவர் கண் முன் நிழலாடியது. அவர் படிப்பில் வைத்த பேரார்வத் தைச் சரவணன் தன் பெருஞ்செலவுக்குப் பயன்படுத்திக் கொண்டான். திருச்சி திரும்பிய பிற்பாடு சரவணன் பட்ட துயரம் பெரிது. எனினும் தன் தந்தைக்கு எதிரே பெட்டிப் பாம்பாக அடங்கிக் கிடந்தான். திருமணமாகுமுன் ஒரு முறை, இருமுறை அவன் தன் நண்பர்களோடு வெளியூர் சென்ற போதெல்லாம் என்ன நடந்ததென்பதை நாகலிங் கர் சாதுரியமாக உளவறிந்து வைத்திருந்தார். தம் மக னைத்தாம் கண்டிப்பதாகவோ, திருத்துவதாகவோ தெரி யாதபடி மிக திறமையாக, மிக நாகரிகமாக அவனைத்தன் வயப்படுத்தி, ஒரு மருமகளையும் கூட்டிவந்து, அவள் நிழல்போல அவனை நடக்க வைத்து வெற்றிகண்டிருந் தார் நாகலிங்கர்!

சரவணன் இக்கட்டுப்பாட்டைப் பொடி மூடிய தணல் போலத்தான் தாங்கிக்கொண்டிருந்தான் என்றும், அவனு டையதாகமும் தவிப்பும் முற்றிலும் அவியவில்லை என்றும் தந்தையை இழந்த பிறகு அவை மும்மடங்காகப் பெருகிக் கட்டுக்கடங்காத காட்டுத் தீயாகி விட்டன என்றும் பின்பு தான் விளங்கியது. சரவணன் இப்போதெல்லாம் நேரத் திற்கு வீட்டிற்கு வருவதில்லை. வெளியூர்களுக்கும் அடிக் கடி போகத்தொடங்கினான். எதற்கும் காரணம் சொல்வ தில்லை. மாறாக, பொற்கொடி ஏதாவது கேட்டால் சீறி விழுந்தான். அவன் கைகளில் பணம் தண்ணீர்போல் செலவழிந்து கொண்டிருந்தது!

பொற்கொடிக்கு ஒரு பக்கம் கவலையாக இருந்தாலும் மறு பக்கம் நம்பிக்கையும் இருந்த காலம் அது. இப்படி எவ்வ ளவு செலவழித்தாலும் தன் பெயரால் உள்ள பணமும் நகையும் சொத்துக்களுமே மூன்று தலைமுறைக்குப் போது மென்பதனால், அவள் சிறிது தெம்பாகவே இருந்தாள். 'காலம் இப்படியே போய்விடாது; விரைவில் தன் கண வன் திருந்திவிடுவான்' என அவள் மனத்தில் நம்பிக்கை ஒளி வீசிக்கொண்டிருந்தது. இந்த நேரத்தில் சரவண னுக்கு வேங்கடேசன் என்ற மலையாள நாட்டுத் தமிழர் ஒரு வரின் நட்பு ஏற்பட்டது. அவருடைய குடும்பமே ஒரு கல் விக் குடும்பம், கலைக்குடும்பம் என்னுமாறு வெளியில் காணப்பட்டது. அவர் சிறந்த, ஆங்கிலமொழி கற்ற அறி ஞராகவும் இனிக்க இனிக்கப் பேசுபவராகவும் விளங்கி னார். அவர் தம்பி கைலாசம் மிகச் சிறந்த இசைக் கலைஞ னாக விளங்கினான். அவன் பல இசை அரங்குகளில் ஏறிப் பாடும் வாய்ப்புப் பெறவேண்டும் என்றும், விரைவிலேயே திரையுலக இசையமைப்பாளராக ஆகிவிடவேண்டும் என் றும் ஆசைப்பட்டான்.

அவர்களின் தங்கை இந்துமதி மிகுந்த அழகுடைய இளம் பெண். அவள் ஆடற்கலைக்கழகு தேடப் பிறந்தவள் போலவே திகழ்ந்தாள். நல்லுசாமி சரவணனை இந்துமதி யின் நாட்டிய நிகழ்ச்சி ஒன்றுக்கு அழைத்துச் சென்றான்.

அன்றிலிருந்து இக் குடும்பத்தை ஏழரையாட்டைச் சனி பிடித்தது எனலாம். சரவணன் அடிக்கடி வேங்கடேசன் வீட்டிற்கு இந்துமதியுடன் உரையாடி மகிழும் இன்பத் திற்காகவே போய்வரத் தொடங்கினன். அவர்களும் முத லில் இவனிடம் எதிர்பார்க்காதவர்கள் போல மிகவும் பண் பாக நடந்துகொண்டனர். இந்துமதி சரவணனிடம் ஒட்டி உறவாடினுள். இருவரும் இரவு பகலாக ஆங்கிலத்திலும் தமிழிலும் பேசிப்பேசி மகிழ்ந்தனர். என்னதான் பேசினர் களோ தெரியாது. அவர்களின் பேச்சைக் கேட்டுக் கேட் டுச் சூரியனும் அலுத்துப்போய், முகம் சிவந்து மறைந் தான்; பிறைமதியும் ஓடி ஓடி ஒளியலானுன்! திருமண மாகவேண்டிய அப்பெண், சரவணனுடன் தொடர்புகொள் ளலானுள். இது வெளியுலகிற்குத் தெரியாமல் சில திங் கள்களாகத் தொடர்ந்து நடந்து வந்தது. இதை ஒரு பின் புலச் சார்பாக வைத்துக்கொண்டு அண்ணன் வேங்க டேசன் தம் குடும்பத்திற்கு நல்லதோர் எதிர்காலம் அமை யும்படியாகத் திட்டமொன்றைத் தீட்டினுர். அதைச் சதித் திட்டம் என்று சொல்வதைவிட விதித்திட்டம் என்றுதான் சொல்லவேண்டும். ஏனெனில் சரவணனுடைய குடும்ப நாசத்திற்கே அதுதான் வித்திட்டதென்பது, காலப்போக் கில் உறுதியாயிற்று.

ஒரு பேய்மகள்; அவளுடைய கண்கள் கழன்றுவிழுவன போல் உள்ளன. கூகை ஒரு காதிலும் கொடும்பாம்பு ஒரு காதிலும் காதணிகள் போலத் தொங்குகின்றன. வயிருே பனைமரத்து அடிபோலச் சருச்சரை உடையதாகயிருக் கிறது. அச்சத்தைத் தரும் நடையையுடைய அப்பேய் போல, சரவணன் உள்ளத்தில் காமப் பேய்மகள் தலை விரித்தாடத் தொடங்கினுள். இராமனை மயக்க வந்த சூர்ப்பனகை அழகிய உருத்தாங்கி வந்ததுபோல, இங்கே இந்துமதி சரவணன் வாழ்க்கையிற் புகுந்தாள்.

○

''குருதி ஆடிய கூருகிர்க் கொடுவிரல்
கண்தொட்டு உண்ட கழிமுடைக் கருந்தலை''

15

''ஆசியக் கண்டத்து ஏற்றுமதி இறக்குமதிக் கம்பெனி லிமிடெட்'' என்று, நீண்ட ஆங்கிலப்பெயரைத் தாங்கிய, கூட்டுக் கம்பெனி ஒன்றைச் சென்னையில் தொடங்க வேங்கடேசன் திட்டம் தீட்டினர். சரவணன் ஐந்துலட்சம் போடும் மேலாண்மைப் பங்குதாரர்; பிறிதொரு ஐந்து லட்சம் பங்குகளாகச் சேர்ப்பது! இப்பத்துலட்சத்துடன் தொடங்கும் கம்பெனி, விரைவிலேயே கோடிக் கணக்கில் இலாபம் தரப்போவதாக அவர் ஆசைகாட்டினர். இதை நம்பிய சரவணன், தங்களிடம் ரொக்கமாகவும் நகைக ளாகவும் இருந்த பணம் முழுவதையும் திரட்டிக்கொண்டு புறப்பட்டான். அறிந்த, தெரிந்த அனைவரிடமும் பங்கு களும் சேர்த்தான். கிட்டத்தட்டப் பத்துலட்சம் சேர்த்துக் கொண்டுதான், சென்னையில் கம்பெனி துவங்கியது. ஆடம்பரமான வீடு, கார் வசதி, தொலைபேசி வசதி, மற்றும் குளிர்சாதன வசதி முதற்கொண்டு முதலிலேயே ஏற்படுத்தப்பட்டன. இவையெல்லாம் இல்லையென்றால் கம்பெனியை யாரும் மதிக்கமாட்டார்கள் என்று கூறப்பட்

டது. கடிதப் போக்குவரத்துக்கள், பத்திரிகை விளம்பரங்கள், விருந்துகள், எப்போதும் சுற்றிச்சூழ்ந்திருக்கும் ஆள் அம்பு வகையருக்கள் எல்லாம் பார்க்க வேண்டுமே! வேங்கடேசன் குடும்பத்தார் எல்லோருமே சென்னைக்குக் குடியேறி ஆயிற்று. பொற்கொடி வர மறுத்துவிட்டாள். அவளுக்கு இந்தக் கம்பெனி தொடங்குவதில் சிறிதும் விருப்பமில்லை. இருந்தாலும் அவள்பேச்சையெல்லாம் இப்போது யார் கவனிக்கிறார்கள்? அவையனைத்தும் நாகலிங்கர் காலத்தோடு மலையேறிப் போய்விட்டன.

இந்துமதியின் ஆட்சி அகவாழ்க்கையில் மட்டுமல்லாமல், அலுவலகத்திலும் கொடிகட்டிப்பறந்தது. ஒன்றிரண்டு மாதங்கள் உருண்டோடின; பணம் தண்ணீர் பட்ட பாடாகப் போய்க்கொண்டிருந்தது. வேங்கடேசன் வெளி நாடுகளிலிருந்து பஞ்சும், சவுளிகளும், பெரிய நூற்பாலை யந்திரங்களும் இறக்குமதி செய்யும் ஏற்பாட்டிற்கு என ஐரோப்பா புறப்பட்டு விட்டார். நல்லுசாமி போன்ற போன்ற நண்பர்கள் சென்னையில் ஆடம்பரவாழ்வில் மூழ்கடித்தனர். மறுபடியும் ஆறுமாதம் தண்டச்செலவிலேயே ஓடியது. எதனையும் ஏற்றுமதிசெய்யவுமில்லை; இறக்குமதியாகவுமில்லை. சரவணன் இந்துமதியோடு அலைந்த மயக்கத்தில் இதனைப் புரிந்துகொள்ளவுமில்லை. கடைசியாக ஆறுமாதம் கழித்து, அமெரிக்காவிலிருந்து வேங்கடேசன் எழுதியிருந்தார். ஐரோப்பாவிலிருந்து அவர் கப்பல் ஒன்றில் பஞ்சும், சவுளிகளும் அனுப்பியிருந்ததாகவும் அக் கப்பல் கவிழ்ந்துவிட்டதாகத் தந்தி வந்திருக்கிறது என்றும் அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம் என்றும் இப்போது அமெரிக்காவிலிருந்து குழந்தைகள் உணவுக்கான மூலப் பொருள்கள், பால்பவுடர் இறக்குமதி செய்ய முயன்று வருவதாகவும் இந்தப் பேரம் முடிந்தால் இந்தியா திருப்பி வந்து, ‘குழந்தைகள் உணவு’ தயாரித்துப் பெரும்பணம் சம்பாதித்து இழப்பையெல்லாம் மீண்டும் சரிக்கட்டி விடலாம் என்றும் அவர் தம் மடலில் எழுதியிருந்தார். அதனுடன் அவர் கடிதத்தைமுடித்திருந்தால், இவ்வளவு நீண்ட

கடிதம் கொண்டு போன பணம் தொலைந்ததற்கு மட்டுமே என நினைக்க இடமேற்பட்டிருக்கும். அவரோ இறுதியில் தான் முக்கிய செய்தியைக் குறிப்பிட்டிருந்தார். மேற் கொண்டு இரண்டு இலட்சம் ரூபாய் உடனே அமெரிக்கா விற்கு அனுப்பவேண்டும் என்பதுதான் அது. இப்போது கம்பெனியில் பைசாக்கூட இல்லை. சென்ற மாத வாடகை யும் சம்பளப் பாக்கிகளும் அப்படியப்படியே நின்றன. சர வணன் எங்கிருந்து பணம் அனுப்புவான்? சென்னை நிலை மையைச் சரிக்கட்டவே ஒரு லட்சம் தேவைப்பட்டது. திருச்சி சென்று இருந்த சில நகைகளை விற்றுத் தரும்படி, தன் மனைவியைக் கட்டாயப்படுத்தி ரூபாய் திரட்டி வந் தான் சரவணன்.

O

பொற்கொடி நிலைமை இவ்வளவு மோசமாகும் என்று எதிர்பார்க்கவில்லை. அவளுக்கு என்ன தோன்றியதோ, யாருக்கும் தெரியாது. திடீரென்று கற்பகவல்லிக்குத் திரு மணம் பேசி எல்லா ஏற்பாடுகளும் செய்து விட்டாள். திரு மணத்திற்கு மட்டும் சரவணன் வந்து சென்றான். தொடர்ந்து கனகசபைக்கும் நல்ல இடமாக வந்ததால் திருமணம் நிறைவேறிற்று. கடைசிப் பையன் மாணிக் கத்தைக் கான்வெண்டில் பணம்கட்டி, வீட்டுத் தொடர் பில்லாமல் படிக்க ஏற்பாடு செய்த பிறகு பொற்கொடிக்கு நிம்மதியாக இருந்தது.

இவையெல்லாம் முடிய ஆறேழு மாதங்கள் ஆயின. பத்து லட்ச ரூபாயில் தொடங்கப்பட்ட கம்பெனி கவிழ்ந்த கதை இன்னும் நாட்டில் பரவவில்லை. வெளிநாட்டிலிருந்து, வேங்கடேசன் திரும்பிவந்து, குறித்தபடி பணம் அனுப் பாததினால்தான் கம்பெனி கவிழ்ந்துவிட்டது என்று சரவ ணனுடன் சண்டை பிடித்தார். இது குதிரை கீழே தள்ளி யதும் அல்லாமல் குழிபறித்தது போலவும் இருந்தது. வர வர அவர்களுக்குள் சண்டை வலுத்தது. பம்பாயிலிருந்து ஒரு பெரிய படைத்தளபதியாக விளங்கும், நடுத்தர வயது

மனிதர் ஒருவர் இப்போது வேங்கடேசன் வீட்டில் காணப் பட்டார். இந்துமதி அவருடன் நெருங்கிப் பழகினாள். அவளை அவர் திருமணம் செய்து கொள்வதற்காக பம்பா யிலிருந்து வந்திருப்பதாகவும், திருமணம் முடிந்ததும் எல்லோரும் பம்பாய் போய்விடுவார்கள் என்றும் சரவ ணன் கேள்விப்பட்டான். எல்லாம் அதுபோலவே நடந்து போயின எனப் பிறகு சரவணன் அறிந்தானாயினும் முன் னதாக அவன் எதுவுமே தடை செய்ய நினைக்கவில்லை. 'குற்றம் புரிந்தவர்கள் அவர்களா, தானா?' என்றே அவ னுக்கு ஐயமாக இருந்தது. சரியானபடி தான் ஏமாற்றப் பட்டது குறித்து, அவன் வெதும்பினான். அதைவிட ஆறேழு லட்சம் கடன் வாங்கியிருப்பதைக் கட்ட வேண் டுமே என்ற கவலை அவனை நிலை தடுமாற வைத்தது. செய்தி பரவப்பரவ, எல்லோரும் வந்து நெருக்கி விடுவார் களே என்றும் வழக்குத் தொடுப்பார்களே என்றும் யாருக்கு என்னபதிலைச் சொல்வதென்றும் அவன் திகைத் தான். கடைசியில் அவன் திருச்சிக்குப் பெரிய குடிகாரனா கத் திரும்பினான். நல்லுசாமி போன்ற நண்பர்கள் இவனி டம் சுருட்டிய பணத்தை வைத்துக்கொண்டு, திரைப்படத் துறையில் நுழைந்து, அங்கேயே தங்கிவிட்டார்கள்.

நிலைமை உலகறியத் தெரிந்ததும் கடன்காரர்கள் சரவணனைச் சூழத் தொடங்கினர்; வழக்குகள் பெருகின. தன் குடும்ப மானத்தைக் காக்கக் கருதிய பொற்கொடி, தங் கள் சொத்துக்களையும் நகைகளையும் விற்றுவிற்றுக் கண வன்பட்ட கடனுக்காகக் கொட்டிக்கொண்டிருந்தாள். பற் றுக் குறைக்கு, அவன் குடித்துவிட்டு வந்து, அவளை அடித்தும் திட்டியும் சித்திரவதை செய்து கொண்டிருந் தான். இந்த நிலையில் ஒரு நாள் திருச்சி வந்த நல்லுசாமி சென்னையில் சினிமாத்துறையில் புகுந்தால் பணம் சம்பா தித்து விடலாம் என ஆசைகாட்டினான். பொற்கொடிக்குச் சீராக வந்த ஒரு மாளிகை தவிர, எஞ்சியிருந்த ஒரு சில சொத்துக்களையும் ஒன்று விடாமல் கட்டாயப்படுத்தி விற் றுப் பணமாக்கிக்கொண்டு சரவணன் சென்னை புறப்பட்டு

விட்டான். பொற்கொடி கண்ணீர் விட்டு அழுதாள்; அவன் கால்களில் விழுந்து கெஞ்சினுள். ஒன்றும் பயனில்லே; உதைபட்டதுதான் மிச்சம்.

"முன்னேர் தேடிய சொத்துக்களே விற்க நமக்கு அதிகாரமில்லே என்றும் அச் சொத்துக்களில் நம் இரு பையன்களுக்கும் உரிமையிருப்பதால் கடன்காரர்கள் அனேத்தையும் எடுத்துக்கொள்ள முடியாதென்றும்'' பொற்கொடி வாதாடியதெல்லாம் பயன் இன்றிக் கழிந்தன. சென்னேக்குச் சென்று, திரைப்படத்துறையில் ஈடுபட்டு, இழந்த செல்வத்தையெல்லாம் ஈட்டிக்கொண்டு வரப் போகின்றவன் போலச் சரவணன்பேசினன். ஆனலும் அவனுடைய நண்பர்கள் அவனே எதற்காக ஆசைகாட்டி, மீண்டும் சென்னேக்கு அழைத்துபோகிருர்கள் என்பது பொற்கொடிக்கு நன்ருக விளங்கியது. கிட்டத்தட்ட ஒன்றுமற்ற அனுதையாகத் தன்னே விட்டுவிட்டுத் தன் கணவன் செல்கிருனே என அவள் தேம்பித்தேம்பி அழுதாள். உற்ருர் உறவினர் எல்லாம் இதை அறிந்தும் அறியாதவர் போல் இருந்தனர். யாரும் அவர்கள் குடும்ப விவகாரத்தில் தலேயிட முன்வரவில்லே. இத்தனே நாளாக 'வெளியில் தெரிந்தால் கேவலமாயிற்றே' என அவள் மூடி மறைத்தாள். யாரையும் அணுக விடுவதில்லே. சரவணன் விரைவில் திருந்திவிடுவான் என்றும் அப்படி அவன் திருந்தும் போது இவ்விவரங்கள் உலகிற்குத் தெரியாமலே போய் விடுமென்றும் அதனல் குடும்ப மானம், மதிப்பு சிதையாமல் காக்கப்படுமென்றும் அப்பேதைப்பெண் நம்பியிருந்தாள். இறைவனிடம் தன் கணவனேத் திருத்தித் தன்னிடம் முன்புபோல ஒப்படைக்கும்படி வேண்டி இறைஞ்சினுள். தன் மாமனர் படத்தையும் வைத்துக் கும்பிட்டுக் கண்ணீர் பெருக்கினுள். ஒருநாள் தன் கணவன் திருந்தி விட்டதாகவும், தீய நண்பர்களேவிட்டு விலகிவிட்டதாகவும், தானும் தன் கணவனும் முன்புபோல இரட்டைப் பறவைகளாய் எங்கும் மகிழ்வோடு பறந்து திரிவதாகவும் கனவுகண்டாள். அவள் எண்ணங்கள், கனவுகள் அவ்வ

அவு எளிதாக, விரைவாகப் பலிக்கவில்லை. மாருக அவர்கள் குடும்ப விவகாரம் உலகம் முழுதும் அறியும் கதையாகிப் போயிற்று. பங்கு சேர்ந்தவர்கள், கடன்கொடுத்தவர்கள் எல்லாம் சரவணனை விரட்டியதாலும் நீதி மன்றங்களில் வழக்குத்தொடுத்ததாலும் சொத்துக்கள் ஒவ்வொன்ருகக் கையைவிட்டுப் போனதாலும் அவள் எதை மறைத்துக் குடும்பப் புகழைக் காப்பாற்றப் போவதாக மனப்பால் குடித்தாளோ, அப்புகழ் இருந்த இடம் தெரியாமல் மறைந்து பழியும் பாவமும் பெருகலாயின.

சில வழக்குகள் கீழ் மன்றத்தில் சரவணனுக்குப் பெரும் பாதகமாகத் தீர்ப்பாயின. அதனுல் உயர்நீதி மன்றத்திற்கு, வழக்கை மேல்முறையீட்டுக்காகக் கொண்டுபோக வேண்டியிருந்தது. பொற்கொடியையும் ஒரு சாட்சியாகப் போடவேண்டிய கட்டாயம் சில சமயங்களில் நேர்ந்தது. அப்போதெல்லாம் தன் கணவன் குற்றவாளிக் கூண்டிலும், தான் சாட்சிக் கூண்டிலுமாக ஏறி நிற்க வேண்டிய துயரத்தை எண்ணியெண்ணி அவள் நைந்தாள். பொய் சொல்ல வேண்டிய கட்டாயங்கள் ஏற்பட்டபோதெல்லாம் அவள் தன் மனச்சான்ருேடு போராடிஞள்.

கனகசபை தன் மாமனுர் வீட்டுதவியால் ஏதோ ஒரு விதமாக வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தான். அவனுக்கு ஒரு மைந்தன் பிறந்தபோது அதைக்கூடக் கொண்டாடமுடியாத அளவு, குடும்பத்தில் துன்பமும் கடனும் சூழ்ந்து நின்றன. கற்பகவல்லி நல்லபடியாக வாழ்ந்தாலும், தங்கள் குடும்பத்தின் வீழ்ச்சி அவள் வாழ்விலும் சிறிது எதிரொலிப்பதாகக் கேள்விப்பட்டுப் பொற்கொடி வருந்திஞள். ஆயினும் தக்க சமயத்தில், இந்தக் குடும்பம் என்ற ஆலமரம் கீழே முற்றிலும் சாய்வதற்கு முன்னுல், தன் மாமனுர் போல் தானும் திட்டமிட்டுத் தன் மூத்த பிள்ளைகள் இருவருக்கும் தக்க இடங்களில் திருமணம் முடித்துவிட்டதை எண்ணியெண்ணி அவள் அடிமனம் மகிழ்ந்தது. இப்பொழுதைய நிலையில், யாரும்

சம்பந்தம் செய்து கொள்ள பக்கத்தில் வரவே மாட்டார்கள். சிறிது முந்திக் கொண்டது நல்லதாகப் போயிற்று. மாணிக்கம் கான்வெண்டிலேயே தங்கிப் படிக்கிருன். அவனே வீட்டுக்கு விடுமுறைக் காலத்தில் கூட வரவிடுவதில்லே. எப்போதாவது அவனேப் போய்ப் பார்த்துவிட்டு உடனே திரும்பி விடுவாள் பொற்கொடி. வரவர அவன் படிப்புக்குப் பணம் கட்டக்கூட இயலாத சூழல்கள் ஏற்பட்டன. 'எவ்வளவு கோபுரம் போல் உயர்ந்து, குவிந்து கிடந்த செல்வம், ஒரு நொடியில், கொண்டவன் திட்டமாக வாழாததால் கரைந்து போய் விட்டது' என அவள் எண்ணிக் கலுழ்ந்தாள். தன் மாமனும் அவருடைய முன்னேர்களும் அரும்பாடுபட்டு, மழையிலும் வெயிலிலும் நின்று, தொழிலாளரோடு தொழிலாளராகக் கூடி நின்று உழைத்துச் சேர்த்த செல்வம் இப்படிப் போக என்ன நியாயம் என அவள் உள்ளம் வாதாடியது. அதற்கெல்லாம் அவளால் விடை காண முடியவில்லே.

சிக்குண்ட நூல்போல் வாழ்க்கை ஆகியிருந்தது. அச்சிக்கலே எடுக்கப் பொற்கொடிக்கு வழி வகை தெரியவில்லே. கணவனே மேலும் மேலும் சிக்கலேப் பெருக்கிக் கொண்டிருந்தான். சிக்கலே தோன்ருமல் காத்து வந்த நாகலிங்கர் செத்துத் தெய்வமாகியிருந்தார். இனி அனேத்தையும் அறுத்துச் சுக்கு நூருக எறிவதைத் தவிர வேறு வழியில்லே என்ற நிலே உருவாகிக் கொண்டிருந்தது.

O

"ஒண்தொடித் தடக்கையின் ஏந்தி வெருவரு
வென்றடு விறற்களம் பாடித் தோள்பெயரா
நிணந்தின் வாயள் துணங்கை தூங்க"

16

குடும்பப் புகழையும் குலச் சிறப்பையும் காக்கவென அவள் அமைதியும் அடக்கமும் காத்தனவெல்லாம் விழலுக்கிறைத்த நீராயின. தன் கணவனுக்காக என்று அவள் ஒத்துழைத்ததெல்லாம் கடைசியில் அவளுக்கே எமனாகப் போயின. சென்னையிலே தங்கிவிட்ட சரவணன் தன் மனைவி தன்னைத் திருச்சி வருமாறு வற்புறுத்திய போதெல்லாம் அவளைச் சென்னைக்குத் தன்னுடன் வந்து விடுமாறு கட்டாயப்படுத்தினான். ஒரு கட்டம் இனித் திருச்சியில் நீடிக்க முடியாது; சிறிது காலமாவது வெளியூர் போய்விடவேண்டும் என்ற நிலைமை ஏற்பட்டது. கடன்தொல்லை மட்டுமன்றிப் பலரும் பேசிய ஏளனப் பேச்சும் ஒரு காரணமாகும். அச்சமயம் பார்த்து, ஊர்வந்து இரவோடு திரும்பிய சரவணன் பொற்கொடியையும் அவள் சம்மதத்தை எதிர்பாராமலே வாடகைக்காரில் ஏறச்செய்து, சென்னைக்குக் கூட்டிக் கொண்டு போய்விட்டான்.

சென்னையில் உணவு விடுதிகளில் தங்க நேர்ந்தது. அது

பொற்கொடியின் மன இயல்புக்கு மாறானது. சரவணனோ தொழிற்செல்வர்களும் திரைப்படத் துறையினர் சிலரும் அரசியல்வாதிகளுமாகக் கூடி அவர்களிலே மட்டமான வர்கள் ஒன்று சேர்ந்து குடித்து விட்டுக் கும்மாளமடிக் கின்ற இடங்களுக்கு அடிக்கடி போய்வரத் தொடங்கி னான். அவ்வத் துறையில் நல்லவர்கள் பலர் இருப்பார் கள் அன்றோ? அவர்களை அவன் நெருங்கிப் பழகியதாகத் தெரியவில்லை. இரவு நேரங்களிலும் அவன் திரும்புவ தில்லை. சென்னையில் தங்குமிடங்களில் இங்ஙனம் இரவு நேரங்களிலும் தன்னந்தனியே அடைபட்டுக் கிடப்பது பொற்கொடிக்கு அச்சத்தைத் தந்தது.

புலியும் மானும் போரிடுகின்றன. புலிதான் வெல்லுகிறது. மானின் குருதி தோய்ந்த வாயுடன் புலி சீறிச் செருமு கிறது. கோழி தன் குஞ்சுகளைக் காக்க எகிறித்தான் பாய் கிறது. ஆனாலும் பயன் என்ன? பருந்தின் கால்நகவளைவு களுக்குள் சிக்குண்ட கோழிப்பார்ப்பு 'கியாகியா' எனக் கத்துவதால் விடுபடுகிறதா? பூனை கிளியை விரட்டுகிறது; எவ்விப் பிடிக்கிறது. சிறகடிக்கும் கிளி என்ன செய்ய முடி கிறது? நன்மையும் தீமையும் போரிடுகின்றன. நன்மை மான்போல மருள்கிறது. கோழிபோல் தற்காப்புக்காக எகிறிக்குதிக்கிறது; கிளி போலப் பறக்கிறது. ஆனால் தீமை என்ற அந்தக் கொடிய உயிரிடமிருந்து தப்ப முடிவ தில்லை. இறைவனே தீமையை வலுவுள்ளதாகவும் நன் மையை வலுவற்றதாகவும் படைத்துவிட்டாரா? தீமைக் குத் தாக்கும் ஆற்றலைத் தந்த இறைமை, நன்மைக்குத் தாங்கும் ஆற்றலைத்தான் தந்துள்ளதா? பொற்கொடி ஏதோ சிந்தித்தாள்... தான் ஒரு மான்போலவும் தன் கண வன் தன்னைக்கொன்று தன் இரத்தம் தோய்ந்த வாயுடன் புலியாக உலவுவதாகவும் ஒரு உருவெளித்தோற்றம் ஏற் படும். பிறகு தான் ஒரு கிளி போலச் சிறகிரண்டும் பறக் கப் பறக்கத் தன்னைப் பூனைபோலத் தன் கணவன் வாயில் கவ்விக்கொண்டு ஓடுவதாக ஒரு நினைவோடும். தன் குழந் தைகளுடன் தான் ஒரு கோழிபோல இரை பொறுக்கிக்

கொண்டு, கொல்லைப்புறத்தில் திரிவதாகவும் அங்கே ஒரு கள்ளப்பருந்து வந்து பாய்ந்து, தன்குஞ்சுகளை ஒவ்வொன்றாகத் தூக்கிக்கொண்டு ஓடுவதாகவும் கடைசியில் தன்னையே தூக்கிக்கொண்டுபோவதாகவும் நினைவில் நனவு போலத் தோன்றும். இந்த அச்சந்தரும் அருவருப்பான எண்ணங்களால் சூழப்பட்டு மனம் நைந்து நைந்து உருகி அப்படியே உறங்கிப்போவாள் பொற்கொடி!

○

சரவணன் குடிபோதையுடன் ஆடிய இடங்களில், சென்னைப் பிரமுகர்கள் சிலர் தங்கள் மனைவிமாருடனே, காதலியருடனே வருவதைக் கண்டான். எல்லோருமே பம்பாய், டில்லி, வெளிநாடு என்று போய்வரக்கூடியவர்கள். ஆணும் அப்படி, பெண்ணும் அப்படி! அதனால் எல்லோருமே வரையறையின்றி, இன்னார் மனைவி இன்னார் என்ற நினைவுமின்றி 'சோஷலாகப்' பழகினர். சரவணன் தன் மனைவியோடு சென்னையிலிருப்பதாகக் கேள்விப்பட்ட சிலர் அவன் தன் மனைவியை இத்தகைய கேளிக்கைகளுக்கு அழைத்து வராதது பற்றிக் கேலி பேசினர். 'பழைய பட்டிக்காடுகள்' என்று எள்ளிநகையாடினர்.

சரவணனுக்கு என்ன 'உணர்ச்சி' 'மானம்' இல்லையா? தன் மனைவியைக் கட்டாயப்படுத்தி, அந்த 'திருக்கூட்டத்திற்கு' அழைத்துப் போகத் தொடங்கினான். சில நாட்கள் அவள் வராத இடத்திற்கு வந்துவிட்டவள்போல், படாதது ஒன்று பட்டுவிட்டதுபோல் விலகியே இருந்தாள். எத்தனை நாள் அவ்வாறு இருக்க முடியும்? இப்போதெல்லாம் அவளும் சேர்ந்து, அவர்களுடைய கூத்தையும் கும்மாளத்தையும் சுவைக்கத் தொடங்கினாள். இந்தக் குடி நாற்றமும் புகைமண்டலமும்தான் அவளை என்னவோ செய்தன!

ஒருமுறை அவள் சரவணனிடம் "இப்படிச் சூதாட்டமும் குதிரைப் பந்தயமும் என்று அலைகிறீர்களே... மீதமிருந்த

கொஞ்சநஞ்சம் பணத்தையெல்லாம் கட்டிக்கொண்டு திரைப்படம் எடுக்க வந்தீர்களே, அது என்ன ஆயிற்று?" என்று கேட்டாள். அதற்கு அவன் ''படம் பாதி எடுத்த தோடு நிற்கிறது. மீதி எடுக்கப் பணம் போதவில்லை. நீ தான் உனக்குச் சீர்வரிசையாகத் தந்த வீட்டை விற்க மாட்டேன்னு சொல்லிட்டியே. இல்லேன்னுப் படம் எப் போதோ எடுத்து முடிந்திருக்கும். நம்ம கவலே எல்லாம் தீர்ந்திருக்கும். ரொம்ப வேண்டியதில்லே. ஒரு லட்சம் தான். வீட்டை விற்கக்கூட வேண்டாம். அடைமானம் வச்சாப் போதும்...''

பொற்கொடி பதைபதைத்துப் போனுள். பச்சைக் கொடி யென்று தொடப்போய் அது பச்சைப் பாம்பாகிச் சீறு கிறதே! அவள் மறுதளித்தாள்: ''மாணிக்கத்திற்கு இன் னும்எவ்வளவோ செய்யவேண்டும். கனகசபை வீட்டோடு எத்தனை நாளைக்குமாமனுர் தயவில் இருப்பான்? அவர்கள் போகட்டும். நாம் போனுல் ஒண்ட இடம் வேண்டாமா?''

''அது சரி...எல்லாம் மூணு மாதத்துக்குத்தானே...படம் ஓடத் தொடங்கிட்டா, ஒரு நொடியிலே வீட்டைத் திருப்பிவிடலாமே"

''இல்லேங்க...சினிமாவெல்லாம் சூதாட்டம் மாதிரி... பணம் வந்தாலும் வரும்; போனுலும் போகும். எந்தப்பக் கம் திசை திரும்பும்னு சொல்ல முடியாது. தயவுசெஞ்சு என்னை இதிலே மட்டும் கட்டாயப் படுத்தாதீங்க!''

''அதனுலேதான் நான் இப்போ சூதாடிக்கிட்டு இருக்கி றேன். எப்படியும் நம்ம அதிர்ஷ்டத்துக்குப் பணம் கிடைக் காமலா போயிடும்? அப்புறம் பாரு நம்மைக் கண்டபடி பேசுறவங்க வாயிலே மண்ணை அள்ளிப் போடுறேனு இல் லையான்னு?"

''மற்ற உழைப்பிலேயெல்லாம் வராத பணம் சூதிலே யாங்க வரப் போகுது.''

''வராமேப் போகுமா? சூதிலே போன பணம் சூதிலேயே வராதா? நானும் என்னென்ன முடியுமோ, அத்தனையும்

முயற்சி செய்துதான் பார்க்கப் போகிறேன். எப்படியும் பழைய நிலைக்கு வந்திடுவேன் பாருவே. பணம் மட்டும் வந்துட்டால் அப்புறம் எந்தப் பயலும் நம்மை எதுவும் பேசமாட்டான்.'' சரவணன் கடகடவென்று சிரித்துத் தன்னுள்ளே மகிழ்ந்தான். பொற்கொடியால் அதை இரசிக்க முடியவில்லை. இருந்தாலும் தானும் மனம் மகிழ்வது போல் ஒத்திசைக்க முயன்முள்.

○

சரவணன் தன் மனைவியை அடிக்கடி அழைத்துச் சென்ற விருந்துக் கேளிக்கைகளில் 'வைத்திநாத்' என்ற காவல் துறை அதிகாரியும் காணப்பட்டான். அவன் பொற்கொடியை முன்பே அறிந்தவன். ஆள் கன்னங்கரேர் என்றிருந்தாலும், நல்ல உயரம்; வாட்டசாட்டமாக இருப்பான். பொற்கொடியைப் பார்த்தது முதல் அவள் மீது ஒரு கண் வைத்தான் அவன். பொற்கொடிக்கோ அவனைப் பார்த்தது முதல், பழைய கல்லூரி நிகழ்ச்சிகள் நினைவிற்கு வந்து, மனத்திற்குள் நடுக்கமெடுத்தது. அவர்கள் இருவரும் இளமையில் ஒரே கல்லூரியில் படிக்க நேர்ந்தது. அவன் வைத்தியநாதன் என்ற தன் பெயரை 'வைத்தியநாத்' என்று வெட்டி, ஒட்டிப் புதுமையாக வைத்துக் கொண்டான். நண்பர்கள் அவனை 'வைத்தி' என்றுதான் அழைப்பது வழக்கம். அப்போது வைத்தி பொற்கொடி மீது ஆசைப்பட்டு ஒவ்வொரு நாளும் ஏதாவது தொந்தரவு கொடுத்து வந்தான். அவளோ ஒவ்வொரு முறையும் அவன் முகத்திலடிப்பதுபோல், நல்ல படிப்பினை கொடுத்து வந்தாள். ஒருமுறை அவன் பொற்கொடி தன்னைக் காதலிக்காவிட்டால், தான் உயிரை விட்டுவிடப் போவதாகவும் அங்ஙனம் சாக நேர்ந்தால் தன் சாவிற்குப் பொற்கொடிதான் காரணம் என்பதை உலகம் அறியுமாறு செய்துவிடப் போவதாகவும் மிரட்டி ஒரு கடிதம் எழுதியிருந்தான். அதைப் பார்த்த பொற்கொடி, உடனே அதனை முதல்வரிடம் கொண்டு போய்க்

கொடுத்து விட்டாள். முதல்வர் அவனைக் கூப்பிட்டுக் கண்டித்துக் கல்லூரியிலிருந்து 'தற்காலிக விலக்கமும்' செய்து விட்டார். பிறகு அவன் 'இனிமேல் அவ்வாறு தவறு செய்வதில்லை' என்று நீண்ட மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுத்துத் திரும்பவும் கல்லூரியில் சேர நேர்ந்தது. இதனால் எல்லோருடைய ஏளனத்துக்கும் சிரிப்புக்கும் ஆளான வைத்தி, தன் படிப்புக் காலம் முடியும் வரை அவள் மீது பொருமிக் கொண்டே இருந்தான். ஆனாலும் அவளை அவனால் ஒரு மயிரிழைகூட அசைக்கமுடியவில்லை.

இப்போது இந்தக் கூட்டத்தில் பொற்கொடியைப் பார்த்ததும் அவனுடைய பழைய நைப்பாசை நாக்கை சுவைத்துக் கொண்டது; பழைய வன்மம் தலை தூக்கியது. ஆயினும் முன்பு நடந்த எதையுமே மனதில் வைககாதது போல் பேசிப் பழகினான். இப்போது அவன் பெரிய அதிகாரி! அதிலும் காவல்துறை அதிகாரி! சில சமயங்களில் இவ்வாறு குறிப்பிட்ட ஒரு துறைக்கு முற்றிலும் பொருத்தமற்றவர்களும் எப்படியோ அதே துறையில் மேனிலைக்கு வந்துவிடுகிறார்கள். எனவே பொற்கொடியும் வம்பை இனி விலைக்கு வாங்க வேண்டாம் என்று அவனுடன் அன்பொழுகப் பேசுவதுபோல் நடித்தாள்.

வைத்தியின் மனத்திற்குள் அந்தக் கருவம், வஞ்சம் குடிகொண்டிருந்தது. அவன் தக்க சமயம் பார்த்து அவளைச் சாய்த்துவிடத் திட்டம் தீட்டிக் கொண்டிருந்தான்.

○

ஒரு முறை அவர்கள் எல்லோரும் கூடிக் கோவாவிற்குப் புறப்பட்டார்கள். கோவாவில் அவர்களில் ஒருவர் தம் படத்திற்கான சில காதற்காட்சிகளை படம்பிடிக்கப் போகிறாராம். அதற்காகத் தம் கூட்டத்தையே அவர் தம் செலவில் கூட்டிப் போவதாகக் கூட்டிச் சென்றான்.

கோவா சென்றதும் எல்லோரும் பஞ்சிமில் ஒரு பெரிய

உணவு விடுதியில் அறைகள் எடுத்துக்கொண்டு தங்கினர். அங்குள்ள மிகஅழகான காலன்கூச் கடற்கரையில் சில காட்சிகள் படம் பிடிக்கப்பட்டன. பிறகு எல்லோரும் 'இப்பி'கள் வாழும் 'அஞ்சுனு கடற்கரை'க்குச் சென்றார்கள். அங்கு இப்பிகளுக்கான எல்லாப் பொருளும் விற்கப்பட்டன, உடையைத் தவிர. இப்பிகள்தான் உடைகளை அணிவதில்லையே. பலர் கூடாரம் அடுத்துத் தங்கியிருந்தார்கள். இத் திருக்கூட்டத்தாரும் அவர்களுக்குப் பக்கத்தில் இரண்டு மூன்று கூடாரங்களை வாடகைக்குப் பேசி அமைத்துக்கொண்டார்கள். ஆண்களுக்கு ஃபெனி மதுவும் பெண்களுக்கு இளநீர் மதுவும் வழங்கப்பட்டன. கஞ்சா பிடித்தமானவர்கள் கஞ்சா அடித்தார்கள். பீரைக் கண்ட மட்டும் அடைக்க முடிந்தவர்கள் அடைத்துக்கொண்டார்கள். சிலர் இப்பிகளுக்குரிய சிறு சிறு உடைகள், அலங்காரப் பொருள்களைத் தாங்களும் வாங்கி அணிந்துகொண்டு, கடற்கரையில் அலைந்தார்கள்.

ஒரு கூடாரத்தில் சீட்டு விளையாட்டு மும்முரமாக நடந்து கொண்டிருந்தது. சரவணன் அதில் இருந்தான். மற்றொரு கூடாரத்தில் ஆட்டமும் பாட்டமும் இருந்தது. பொற்கொடி அதை இரசித்துக் கொண்டிருந்தாள். நன்றாக இருட்டிவிட்டது. அந்தப் பெரிய கூடாரத்தில் ஒரு 'புளூபிரிண்டுப்' படத்தைப் போட்டு, அதை இருபது, இருபத்தைந்து பேராக அமர்ந்து பார்த்துக் கொண்டிருந்தார்கள். அந்தப் படம் பம்பாயிலிருந்து வரவழைக்கப் பட்டு ஒரே காமவிகாரமாய்க் கண்ணராவியாக இருந்தது. வைத்தி சமயம் பார்த்து, பொற்கொடியின் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு, அவளைத் தொடுவதும் அவள் மீது சாய்வதுமாக இருந்தான். படத்திலோ எல்லாம் பச்சையாகக் காட்டப்பட்டுக்கொண்டிருந்தது. பார்த்துக்கொண்டிருந்தவர்களும் அலங்கோலமாகக் கிடந்தார்கள். ஒரு சமயம் படத்தில் முத்தக்காட்சி நடந்து கொண்டிருந்தது. வைத்தி அதே போலப் பொற்கொடியை வலிந்து அணைத்து முத்தமிட்டான். அவ்வளவுதான், அவள் அவன்

கன்னத்தில் ஓங்கி அறைந்துவிட்டாள். அந்தச் சத்தம் கேட்டு எல்லோரும் அதிர்ந்து போயினர். பம்பாயிலிருந்து வந்து, படம் ஓட்டிக்கொண்டிருந்தவன் பயந்து படத்தைப் பாதியில் நிறுத்தி விட்டான். இதைக் கவனித்த சிலருக்கு மிகவும் வருத்தமாகப் போய் விட்டது. அவர்கள் கூட்டத்தில் அப்படி யாரும் 'நாகரிகம் இல்லாமல்' நடந்துகொள்வதில்லை. இவள் பண்பாடில்லாமல் நடந்து கொள்கிறாளே என்று அவர்கள் ஆங்கிலத்தில் பேசிக் கொண்டனர். அவர்களில் இருவர் சரவணனிடம் ஓடிச் சென்று, ''உன் மனைவி பட்டிக்காடாக இருக்கிறாள். அவளுக்குச் 'சோஷலாகப்' பழகத் தெரியவில்லை. இன்றைக்கு உலகம் எப்படிப் போய்க்கொண்டிருக்கிறது தெரியுமா? விமான வேகத்தில் முன்னேறிக் கொண்டிருக்கிறது. உன் மனைவி பார்க்கத்தான் அழகாக இருக்கிறாளே தவிரப் பண்பாக நடந்து கொள்ளத் தெரியவில்லையே? முத்தமிட்டால் என்ன குடிமுழுகிப் போகும்? திரும்ப முத்தமிட வேண்டிய இடத்தில் ஓங்கி அறைகிறாளே? ஒருத்தி எத்தனை பேர் தன்னை முண்டியடித்துக்கொண்டு, முத்தமிட வருகிறார்கள் என்பதை வைத்துத்தானே தன் மதிப்பையே கூட்டிக் கொள்கிறாள்! இனிமேல் எங்கள் கூட்டத்தோடு கூடிக் களிப்பதானால், இங்குள்ள பழக்கவழக்கங்களுக்கு ஒத்துப் போக வேண்டும். காசிக்குப் போனாலும் கருமந் தொலையாது என்பார்கள். இவள் கோவாவிற்கு வந்தும் பழைய கிராமத்து மட்டியாய் இருக்கிறாளே. இனிமேல் இந்தக் காட்டுமிராண்டியை, இப்படிப்பட்ட இடங்களுக்கெல்லாம் கூட்டிக் கொண்டு வந்து எங்கள் மகிழ்ச்சியைக் கெடுக்காதே!'' என்றார்கள்.

சரவணனுக்குக்கோபம் பொங்கி வந்தது. பலர் முன்னிலையில் 'தன்மானம்' போய்விட்டதே என அவன் வருந்தினான். அவர்களோடு சரிசமமாக—ஒரு நிகராகத் தன் மனைவி நாகரிகத்தில் வளரவில்லையே என அவன் எண்ணிக் கூச்சப்பட்டான். அவர்கள் முன்னிலையில் வெட்கித் தலை குனிந்தான்.

விருட்டென்று எழுந்துசென்று, கூடாரத்தினுள் திகைத்துப் போய், மருட்சியடைந்த மான்போல தனியே உட்கார்ந் திருந்த பொற்கொடியைப் பரபரவென்று வெளியே இழுத்துவந்து. ''தடிக்கழுதை! நாகரிகம் தெரியாத சனி யன்! கடைஞ்செடுத்த பட்டிக்காடு! இப்படியா நடந்துக் கிறது!'' என்று திட்டி, அடிஅடி என்று அடித்து நெட் டிக்கு உதைத்தான். அவள் சீறுகிற பாம்பென அவ மானம் தாங்காமல் நெட்டுயிர்த்தாள். ''என்னையா அப் படி முறைச்சுப் பார்க்கிறே?'' என்று அவளை எகிறித் தள் ளினன் அவன். அவள் கூடாரத்தின் ஒரு மூலையில்போய் விழுந்தபோது, அங்கு நீட்டிக்கொண்டு நின்ற கம்பி ஒன்று, அவள் நெற்றியில் பட்டு இரத்தம் கசிந்தது. அப் படியே அங்கு மூர்ச்சையாகி விழுந்தாள் அவள். பிறகு யாரும் அவளைப்பற்றிக் கவலைப்படவில்லை. மீண்டும் சீட் டுக் கச்சேரி தொடங்கியது அங்கே! இங்கே 'புளுபிரிண்ட்' படம் ஓடத்தொடங்கியது! புதிய மதுக்கோப்பைகள் வந் தன; படத்தில் புதிய நிருவாணக் காட்சிகள் தொடர்ந் தன. உலகமே சுற்றிச் சுழன்று மயங்கித்தியங்கிச் சுருண் டது அவர்களுக்கு.

வைத்தி மட்டும் விழிப்போடு இருந்தான். அளவாகக் குடித்து, தன் வஞ்சத்தைத் தீர்ப்பதிலேயே நாட்டமாக இருந்தான். படத்தில் வந்த 'பச்சைக் காட்சிகள்' வேறு அவனை வெறிகொள்ள வைத்தன. அவன் மனம் பொற் கொடியையே நாடியது.

மெதுவாக வெளியே எழுந்து சென்ற வைத்தி கீழே விழுந்த அவள் நெடுநேரமாக எழுந்திராததைப் பார்த்து, 'என்ன நடந்தது?' என்பதைக் கவனித்தான். அவள் நெற்றியிலடிபட்டு மூர்ச்சையுற்றுக் கிடப்பதைக் கண் டான். அவளை அப்படியே தூக்கிச் சென்று, வாடகைக் கார் பிடித்துப் பஞ்சிமிற்குப் பறந்தான் அவன்.

அங்கே, தாங்கள் தங்கியிருந்த விடுதியில் தன் அறையில் அவளைப் படுக்கவைத்து, வேலையாளைக் கூப்பிட்டு, முத

லுதவிப்பெட்டி வாங்கி, புண்ணைச் சரிசெய்து செங்குருதி யைத் தடவிவிட்டுப் பக்குவமாக மருந்து போட்டுவிட் டான். அவள் சிறிதே மயக்கம் தெளிந்த போது, மருந்து கொடுப்பவன் போலப் போதை மருந்தை அவள் வாயில் ஊற்றிக் குடிக்கச் செய்தான். அவள் தன்னையே மறந்து கிடந்தாள். இளமை முதல் கருவிக்கொண்டு கிடந்த வைத்தி, பழிக்குப் பழி வாங்க இதை வாய்ப்பாக பயன் படுத்திக் கொண்டான்.

○

மறுநாள் காலையில் கண் விழித்துப் பார்த்த பொற்கொடி, தன் வாழ்வே சுக்குநூறாகிவிட்டதை உணர்ந்தாள். தன் அருகே, வாயில் ஈமொய்க்க, அயர்ந்து உறங்கும் வைத் தியைக் கண்டாள். அருகே மேசை மீதிருந்த மருந்துப் பெட்டி, போதை மருந்துகள், குடி வகைகளைப் பார்த் தாள். அவள் உள்ளம் ஆழமாக அழுதது; பலமாகச் சிரித்தது. அலங்கோலமாக அயலான் ஒருவனுக்குப் பக் கத்தில் கிடக்கும் தன்னைத் தானே ஒரு பத்ரகாளிபோல் அவள் எண்ணிப் பார்த்துக் கொண்டாள். மறுகணம் தன்னையே இழந்துவிட்ட பிறகு இனி என்ன இருக்கிறது என்று அவள் தேம்பினாள். இவை அனைத்திற்கும் கார ணமான தன் கணவன் மீது அவளுக்கு ஆறாத சினம் பொங்கி எழுந்தது. ''அவருக்கு இனி மனநிறைவு தானே! சோஷியலாகப் பழக வேண்டுமாம்! பழகியாகி விட்டதே! இனி நிம்மதிதான்!! இதற்குத் தானே அவர் இத்தனை நாளாகப் போராடினார்! குடும்பப் புகழை மீண் டும் கொண்டு வரப் போகிறாராம்! ஆகா அதற்கு இன்று அடிக்கல் போட்டாகிவிட்டது. இனி என்ன கவலை!...... கயவர்கள், காலிகள், தூர்த்தர்கள், தூ...!'' அவள் மனம் அவளையும் கேட்காமல் ஏதேதோ தானே பிதற்றிக் கொண்டிருந்தது. ஒரு சமயம் அந்த மனம் இப்படிப் பொங்கியது: ''இனி என்ன? அங்குள்ள குடிவகை எல்

லாவற்றையுமே குடித்துவிடுவது! வைத்தியை மீண்டும் எழுப்பிவிடுவது. வாழ்க்கை என்பது என்ன? அனுபவிக்கத்தானே!......'' இவ்வாறு பொங்கிய மனம் சிறிது தடைப்பட்டது. பழைய தயக்கம் தலை நீட்டியது: ''கட்டுப்பாடா? கற்பா? அட பழைய பட்டிக்காடே? இது என்ன கண்ணகி காலமா? நாகரிகமில்லாத கழுதையே! கருநாடகமே! காட்டுமிராண்டி!'' தன்னைத்தானே அவள் மனம் திட்டிக் கொண்டு சிரித்தது. அந்த மனக்குரங்கு மரத்தின் உச்சிக்கு ஏறியது; கிளைவிட்டுத் தாவியது; கீழே விழுந்து புரண்டது; கூக்குரலிட்டது!!

சற்றுநேரத்திற்கெல்லாம் அவள் எழுந்து வெளியில் வந்து, சரவணனுடன் தான் தங்கியிருந்த அறைக்குச் சென்றாள். அங்கு கதவு தாழிடப்படாமலே கிடந்தது. சரவணன் வைத்தியைப் போலவே உலகை மறந்து கிடந்தான். அவள் தன்பாட்டுக்குத் தன் வேலைகளைக் கவனிக்கத் தொடங்கினாள். அவள் குளித்து, உடையுடுத்துப் பொலிவுபெறத் தலைவாரிக் கொண்டாள். நெற்றிக்கு மேலே இருந்த காயத்தில், வேலையாள் மூலம் பிளாஸ்திரி ஒன்று பெற்று ஒட்டிக் கொண்டிருந்தாள். இந்நேரம் பார்த்துக் கண்விழித்த சரவணன், கண்ணாடி எதிரேயிருந்த பொற்கொடியைக் கவனித்தான்.

''காயம் பட்டுவிட்டதாக்கும்? இதற்குத்தான் சொன்னதைக் கேட்கவேண்டும் என்கிறது'' என்றான். அவன் குரல் பரிவை வெளிப்படுத்தியது.

அவள் வெறுமனே புன்னகை பூத்தாள்.

''இன்றைக்கு உலகம் அப்படி! நம் பழைய காலத்தை நினைத்துக் கொண்டேயிருந்து பயன் என்ன? கறுப்பு கிறுப்பு என்பதெல்லாம் கண்ணகி காலத்தோடு சரி.''

அவள் இப்போது வாய்விட்டுச் சிரித்தாள். அச்சிரிப்பில் ஒருவித விகாரம் இருந்தது. காளியோ, துர்க்கையோ சிரிப்பதுபோல இருந்தது அது.

''என்ன சிரிக்கிருய்? இப்போது பலருடனும் தோளோடு தோள் சேர்த்துப் பழகத் தெரியணும். ஆணென்றும் பெண்ணென்றும் வேறுபாடில்லே. அமெரிக்காவிலோ, ஐரோப்பாவிலோ—ஏன் ஜப்பானிலோ, ஆப்பிரிக்கா விலோ கூட இப்பொழுது இந்தக் கட்டுப்பாடு, மூட நம் பிக்கை, பந்தங்கள் எதுவுமே கிடையாது. அங்கெல் லாம் பெண்களே கூடச் சந்திரனில் காலடி எடுத்து வைத்துவிட்டார்கள். இங்கேதான் அடுப்படியிலேயே கிடந்து சாகிருர்கள்."

''ஏன்? இங்கே மட்டும் என்ன குறைச்சலாம்?"—பொற் கொடி, கண்ணுடியை விட்டுத் திரும்பாமலே பேசிஞள்.

''அப்படிச் சொல்லு... உலகம் முன்னே நடக்கிற திசை யிலே நாமும் கண்ணே மூடிக் கொண்டு முன்னேற வேண் டியதுதான். இப்போதுதான் நீ என் மனேவி...... நாகரி கத்திற்கேற்ற நல்லமனேவி.''

பொற்கொடி சொல்ல நினேத்தாள்: ''இல்லே! நேற்று வரைதான் நான் உங்கள் மனேவி. இன்று......'' அவள் சொற்கள் தொண்டையை விட்டு வெளிவராமலே ஒய்ந் தன. சரவணன் மேலும் தொடர்ந்தான். "பொற்கொடி! உன்ஞலே எனக்குச் சில உதவியாக வேண்டியிருக்கு.'' அவன் குரலில் கனிவு சிறிது கூடுதலாகவே இருந்தது. ''இனி யாரோடேயும் பழகக் கூசாதே! சும்மா பழகுவது ஒரு நட்பு முறைதானே? பாய் பிரண்ட், கேர்ள் பிரண்ட் எல்லாம் இப்போ சர்வ சாதாரணம்...... இன்றைக்கு அந்தச் சேட்டு உன்னே அழைச்சுக்கிட்டு பம்பாய் போய் வரணுமுன்ருரு... அதுதான் இங்கே தமிழ்ப்படம் எடுக்க நம்மையெல்லாம் அழைச்சிக்கிட்டு வந்திருக்கிருர்ல ..... அவருதான்...ரொம்ப நல்லவரு. வயதானவரு. உன் ஞேட சும்மா அப்படி ஜாலியா போக ஆசைப்படருரு. உன்னே ஒண்ணும் விழுங்கிவிடமாட்டாரு. பத்திரமாக் காலேயிலே கொண்டுவந்து விட்டுடுவாரு. பாவம் இந்த வயசிலே ஆசைப்படருரு. அவருகிட்டே எவ்வளவு பணம்

இருக்குத்தெரியுமா? அவர் நினைச்சால் நம்ம கடனெல் லாம் ஒரு நொடியிலே தீர்ந்து போயிடும். ஒரே நாளில் வழக்கு சழக்கையெல்லாம் முடிச்சிட்டு நிம்மதியாயிருக்க லாம்......என்ன? இப்பவே தயாராகிவிடு...சரிதானே?'' இவ்வாறு அவளை எதிர்பாராமலே பேசி முடித்த சரவ ணன், தொலைபேசியை எடுத்துச் சேட்டைக் கூப்பிட்டுக் கால் மணி நேரத்தில மனைவியுடன் வருவதாகக் கூறி ஞன். இப்போது பொற்கொடிக்கு எல்லாம் புரிந்தது. ''அவன் நிலை என்ன? அவன் என்ன நினைக்கிருன்? தன் னிடம் அவன் என்ன எதிர்பார்க்கிருன்? தன்னை எதற் காகக் கோவாவிற்குக் கூட்டிவந்து, இப்படியெல்லாம் கொஞ்சம்கொஞ்சமாக நஞ்சுண்ணப் பழக்கியிருக்கிருன்?'' என்பன அனைத்தும் இப்பொழுது அவளுக்கு நன்ருக விளக்கமுற்றன.

அவள் நளாயினியை நினைத்துக்கொண்டாள். தன் கண வன் விருப்பப்படி அவனை நோயாளியாகி அழுகி வடிந்த அவனைக் கூடையில் வைத்து, அவனுடைய தாசி வீட் டிற்கே தூக்கிச்சென்ற கற்பரசி என்று அன்று கற்பனை செய்தார்கள். பாவம், அந்தக் காலத்தவர்களால் கணவன் ஏவற்படி, மனைவி சோரம்போவதாகக் கற்பனை கூடச் செய்ய முடியாத நிலை! தான் நளாயினியை விடவும் ஒரு படி உயர்வு என எண்ணி அவள் தன்னுள் மகிழ்ந்து கொண்டாள். இந்த நேரம் தொலைபேசி அடித்தது. சேட் டாகத்தான் இருக்கும் என்று அவன் ஒலிவாங்கியைக் காதில் வைத்தபோது ''அலோ! நான் வைத்தி பேசு கிறேன். சரவணஞ? பொற்கொடி நல்லபடியாக இருக்கி ருளா? இரவு நீ பாட்டுக்குச் சீட்டுக்கச்சேரியில் இருந் திட்டே...நெற்றியில் ஆழமான காயம் தெரியுமா? எப்படி இருக்கு? இரவு மிகவும் கவனித்து மருந்துபோட்டு மூர்ச்சை தெளிய ஒருமணி நேரம் ஆயிட்டுது...ஆமா இன் னைக்கு இங்கே பஞ்சிமிலேயே அழகான தியேட்டர்லே ஒரு இங்கிலிஷ்படம் வருதாம். நீ வருறியா? இல்லைஞ, சாயந்திரம் பொற்கொடியை அனுப்பேன். இரண்டு

பேருமாப் படம் பார்த்துட்டு, நேரே கடற்கரைக்கு வரு கிறோம்.''

"இன்றைக்குநம் சேட்ஜியும் அவளும் பம்பாய் போருங்க. நாளைக்கு மாட்னி பாருங்களேன். காலையிலே வந்ததும் அனுப்புறேன். நாளைமறுநாள் தானே நாம் சென்னை புறப்படரோம்?'' எதிர்தரப்பின் சம்மதத்தோடு, ஒலி வாங் கியைக் கீழே வைத்தான். சரவணன் பொற்கொடியைப் பார்த்து, "இரவு வைத்தி உனக்கு மருந்துபோட்டு, மிக நன்ருகக் கவனித்துக் கொண்டானுமே?'' என்ருன்.

''ஆமா. ரொம்ப நல்லா மருந்துபோட்டுக் கவனிச்சுக்கிட் டாரு. நீங்க கவனிக்கலேயே என்கிற கவலேயில்லாமே கவனிச்சுக்கிட்டாரு!''

''அவன் எவ்வளவு பெரிய உத்தியோகத்திலே இருக்கி ருன் தெரியுமா? சும்மா கொஞ்சம் ஓய்வுக்காக லீவு போட் டுட்டு வந்திருக்கிருன். அவனே நாம கவனிச்சுக்கிட்டா, நம்மை அவன் கவனிச்சுக்குவான்.''

''நாளைக்கு மாட்டினிக்குப் போனுல், போகுது!'' என்ற பொற்கொடியைச் சரவணன் வியப்போடு பார்த்தான். 'இவளுக்குப் பாம்புச்செவி; தொலேபேசியில் அவன் பேசி யதை அப்படியே கேட்டுக்கொண்டு இருந்திருக்கிருளே' என அவன் மனமும் வியந்து நின்றது. பொற்கொடி உள் ளூர "சரிதான் இரண்டு நாளைக்குப் 'புக்'காகி விட் டோமா?'' என்று, தனக்கிருக்கும் கிராக்கியை நினைத்துத் தனக்குள் சிரித்துக் கொண்டாள்.

சரவணன் அப்போது அவளேப் பார்த்து, ''என்ன அப் படிப்பார்க்கிருய்? நம்ம இரண்டுபேருக்கும் நம் குடும்பத் திற்கும் பயன்படும்னுத்தான் உன்னிடம் இப்படி ஏதாவது சொல்லுவேன். இல்லேனு எதுவும் தொந்தரவு கொடுக்க மாட்டேன். இந்த வைத்தி நம்ம பக்கமிருந்தா, நம்மை எதிர்க்கிற பசங்க எல்லாம் கிடுகிடுனு நடுங்குவாங்க!'' என்ருன்.

பொற்கொடி சோகத்தோடு கணவனைப் பார்த்தாள். 'எப்படி அமையவேண்டிய வாழ்க்கை எப்படிப் போய்விட்டது?' என்று அவள் மனம் வருந்தியது. அவன் அவள் இன்னும் மனம் ஒப்பித் தன் வழிக்கு வரவில்லை என ஊகித்தான். அவன் "இங்கே வந்திருக்கவங்க எல்லோருமே இப்படித்தான். ஏன் இன்றைக்கு உலகமே இப்படித்தான்? அதோ உன் முன்னாலே கிடக்கிற பத்திரிகைகளைப் புரட்டிப்பாரு...பக்கத்திற்குப் பக்கம் இதுதான்! எல்லாம் இந்த அஞ்சுனுபிச்சு மாதிரிதான் நிருவாணத்தை நோக்கி ஓடுகிறது. திரைப்படங்கள் எல்லாம் இதுதான் இப்போ? சுவரொட்டிகளைப் பாரு...வீட்டுக்கு வீடு...அறைக்கு அறை இதுதான் பொற்கொடி! இப்போ இப்படி இல்லாட்டாத்தான் கேவலம்! தெரிஞ்சுக்கோ. மனத்தை அலட்டிக்காதே" என்று பேசித் தீர்த்தான். அவனுக்குள்ளும் ஒரு பழைய உணர்வு முண்டிக்கொண்டிருக்கிறது. ஒருவாறு பேசித்தீர்த்தான் அவன்.

கீழிருந்து கார் 'ஆரன்' ஓலமிட்டது. இருவரும் கீழே சென்றனர். அழகுத்தேவதைபோல் நின்ற பொற்கொடி, காரில் ஏறிச் சேட்டின்பக்கம் அமர்ந்துகொண்டாள். சேட்டுக் கைநிறைய ஒரு கத்தை ரூபாய் நோட்டுகளை அள்ளிச் சரவணன் கையில் திணித்தார். அந்தக்கத்தைகளில் ஒன்றையே எடுத்து, 'டாடா' காட்டி அவர்களை மிக்க மன மகிழ்ச்சியோடு வழியனுப்பி வைத்தான் சரவணன். அவளும் தன் கணவனைப் பிரிகிறபோது கையசைத்தாள். கண்களில் துளும்பிநின்ற கண்ணீர் உருண்டோட! கடற்கரை ஓரமாகவே கார் பம்பாயை நோக்கி விரைந்து, பறந்து கொண்டிருந்தது. அந்தக் கடலளவு கண்ணீர்வெள்ளம் தன் உள்ளத்துள்ளும் பெருகிநிற்பதை அந்த ஏழை நெஞ்சம் எண்ணியது. சேட்டு முரட்டுத் தமிழில்பேசித் தன்னை அரவணைத்துக் கொண்டபோதுதான் அவள் இந்த உலகிற்கு வந்தாள்.

கார் விரைந்துகொண்டிருந்தது. சேட்டு ஏதோ மாத்திரை களை விழுங்கிக்கொண்டிருந்தார். பம்பாயை நெருங்குவ தற்குள் அவள் ஒரு 'குரங்குகைப் பூமாலை' ஆகியிருந் தாள். அவள் தன் உடலால் ஒத்துழைத்தாலும், அவள் உள்ளம் ஒதுங்கியே நின்றது. இதனை அது அருவருப் போடு பார்த்தது. உடம்பில் ஏறும் அழுக்கிற்கும், பாவத் திற்கும் சம்பந்தமில்லை என அவள் மனம் வாதிட்டது. அவள் தன்னிலிருந்து தன் உடலைப் பிரித்துநோக்கினாள். அதை இப்போது சேட்டிடம் ஒப்படைத்திருந்தாள். அவள் உள்ளம் மட்டும எங்கெங்கோ அலை பாய்ந்தது.

பம்பாயில் நகருக்குள் வண்டி போகும் சமயம்; சேட்டும் கண்ணயர்ந்தவர்போல் களைத்துக்காணப்பட்டார். பொற் கொடி வெளியே வேடிக்கை பார்த்துக்கொண்டுவந்தாள். திரைப்படச் சுவரொட்டி ஒவ்வொன்றும் எழுந்துவந்து கொத்துவது போல இருந்தது! எவ்வளவு அலங்கோலம்? ஒவ்வொரு சுவரொட்டியிலும் ஒரு கருநாகம் நெளிந்தது; தேள் ஊர்ந்தது; நட்டுவக்காலி கொடுக்கை உயர்த்தியது! அவைகள் பார்ப்பவர் கண்களைக் கொத்திக்கொண்டிருந் தன; கவனிப்பவர் மனங்களைக் கொட்டி நஞ்சாக்கிக் கொண்டிருந்தன.

○

சேட்டோடு மிகப்பெரிய 'ஐந்துவிண்மீன்' விடுதிகளில் உணவுண்டாள்; மதுவைக்கூட சுவை பார்த்தாள். இப் போதுதான் உடல்வேறு தான்வேறு என்றாகிவிட்டதே. பிறகென்ன? உடல் கெட்டது கெட்டதுதானே? அவள் முழுமூச்சாக உடலை ஒதுக்கித் தள்ளினாள். அன்று அவர் கள் பார்த்த படம்.........படமா அது? படத்தில் வந்ததை விட, அந்தக் கொட்டகையில் படம் பார்க்க வந்தவர்கள் செய்த அநியாயமே அதிகம்! ஒவ்வொருகாட்சியும் அலங் கோலமாக வந்த போது, பொற்கொடிக்கு கோவாக் கடற்கரையே நல்லதென்று பட்டது. படத்தில் காதற்

காட்சிகளில் தீமைப்புலிகள் உறுமின; கற்பழிப்புக் காட்சிகளில் பாவச் சிங்கங்கள் கர்ச்சனை புரிந்தன; பச்சைபச்சையாக வாழ்வைக் காட்டிய பகுதிகளில் ஒழுக்கக் கேட்டு ஓநாய்கள் ஊளையிட்டன! மற்றவர்கள் படத்தை ரசித்தபோது, பூங்கொடிக்கு அவைஇவ்வாறு தோற்றின. ஒரே படத்தில் எத்தனை முறை கற்பழிப்புக் காட்சிகள்! ஒரு சமயம் கதைக்கு நாயகன் தலைவியின் கூந்தலைப் பற்றி இழுத்து, அவள் ஆடை குலைய நின்ற போது, எங்கெங்கோ முத்தமிட்ட காட்சி வந்தபோது கொட்டகையே மகிழ்ச்சி ஆரவாரம் செய்தது! பொற்கொடி திரையில் ஆடிய சிங்கம் ஒன்று, எகிறிப் பாய்ந்து நேரே ஓடிவந்து, தன்னைக் கவ்விவிட்டதாக நினைத்துக் கொண்டு 'வீல்' என்று கத்தினாள். பிறகுதான் தான் சேட்டின் அரவணைப்பில் பத்திரமாக இருப்பதையறிந்து அவள் அமைதி கொண்டாள்.

மறுநாள் அதிகாரி வைத்தியுடன் பஞ்சிமில் படம் பார்த்தபோதும் பொற்கொடிக்கு இந்த அனுபவங்களே ஏற்பட்டன. ஓநாயும், வெறிநாயும், சிங்கமும்,கரடியும், பேயும், பிசாசுமாக எவைஎவையோ திரையில் தோன்றிப் புறப்பட்டு, உலகத்தவர்களைக் கடிப்பதாகக் குதறுவதாக—அதனால் உலகத்தவர் எல்லோருமே வெறி கொண்டு அலைவதாக அவள் உள்ளம் நினைத்து நினைத்து அல்லோல கல்லோலப்பட்டது. அது ஒரு இந்திப்படம். பம்பாயில் பார்த்த ஆங்கிலப் படத்திற்கு இந்த இந்திப் படம் எந்தவகையிலும் சளைத்ததாகத் தெரியவில்லை. சென்னை வந்த பிற்பாடும் பொற்கொடி இந்த மனப் போராட்டத்தில் மூழ்கியே தவித்தாள்.

○

தன் கணவன் வாங்கிக்கொண்டுவந்து போட்ட தமிழ் பத்திரிக்கைகளை—மாத வார ஏடுகளைத் தொடவும் அவள் நடுங்கினாள். அவள் சொந்த வாழ்வில் ஏற்பட்ட அடி, அவளை மயங்கித் தியங்க வைத்தது. தன் அறையில்அவள்

ஒருநாள் படுத்திருந்த போது 'ஆரன்' சத்தம் கேட்டது. சேட்டுத்தான் வந்திருக்க வேண்டும் என்று அவள் சன்னல் வழியாக எட்டிப் பார்த்தாள். நல்ல வேளையாக அவ்வண்டி வேறு யாரையோ எதிர்பார்த்து நின்றது. இப்போதெல்லாம் அவளுக்கு கடமை சரியாக இருந்தது. கார் ஒலி கேட்டால் சேட்டு; தொலை பேசி மணியடித்தால் வைத்தி; கால் நடையன் ஒலி காதில் விழ வந்தால் சரவணன்......... என்று இப்படியே அவள் கற்பு வாழ்க்கை ''அந்த அந்த நேரத்தில் அவரவர்க்கு உண்மையாக நடிக்கும் நிலைக்குப்'' போயிருந்தது!

சற்றே அவள் கண்ணயர்ந்தாள். இப்போது அந்த விடுதி அறையில் தங்குவது அவளுக்குக் கொடுமையாகப் படவில்லை. அவள் பெட்டிகளில் பணம் நோட்டுக்கத்தைகளாக நிரம்பிக்கிடந்தது. அவள் கேட்டது கிடைத்தது; அந்த இந்திரலோக வாழ்க்கையே வாழ்ந்து கொண்டிருந்தாள் அவள்.

ஆனாலும் அவள் மனம் அந்தப் பழைய வாழ்வை எண்ணியே தேம்பித்தேம்பி அழுதது. ஓர் அயல்நாட்டு வெள்ளைக்காரா, திருச்சி மகளிர் பேரவையில், தன் தலைமையில் பேசிய ஒரு பேச்சு அவள் நினைவிலாடியது. ''எங்கள் நாட்டில் எல்லாம் எங்களுக்கு நிம்மதியான வாழ்வில்லை. நான் ஒரு வரலாற்றுப்பேராசிரியன். உள்ளதைச்சொல்கிறேன். வெளியேபோகிற மனைவியோ, கணவனோதத்தம் கணவன், மனைவிக்கு 'உண்மை'யாக இருப்பார்கள் என்று நம்ப முடியவில்லை. பெற்றோர்கள் யாரெனத் தெரியாமலும், அவர்களால் கைவிடப் பட்டும் அரசின் பொது நிறுவனங்களால் வளர்க்கப்படும் குழந்தைகளின் தொகை வரவரப் பெருகி வருகிறது. திருமணமாகுமுன்பு கன்னிமை கழியாதிருக்கும் பெண்கள் இல்லையோ என்ற நிலைமை உருவாகிவருகிறது...........'' என்றெல்லாம் அன்று அவர் பேசினார். ஆனால் இறுதியில் அவர் ''இந்திய மனைவி மிகவும் நம்பிக்கைக்குரியவளாகவே இன்றும் விளங்குகிறாள். என் மனைவி கூட (பக்கத்திலிருந்த மனைவியைச்

சுட்டிக்காட்டி) இந்திய மனைவி போன்றவளே! நாங்கள் நெடுங்காலம் இந்தியாவில் இருந்திருக்கிறோம்!!'' என்று பலத்த சிரிப்புக்கிடையே கூறியதும் அவள் நினைவிற்கு வந்தது.

சற்று நேரத்திற்கெல்லாம் அவளுக்குப் பகல் தூக்கம் வந்து, ஓர் அழுத்து அழுத்திவிட்டது. அப்போது அவள் கனவுகளில் மூழ்கினாள். ''பயிர்கள் செழித்தோங்கி நிற்பதைப் பார்த்து உழவன் மிகவும் மகிழ்கிறான். அந்த மகிழ்ச்சியில், ஓரத்தில் உள்ள செடியொன்றில் இலைப்புழு விழுந்திருப்பதை அவன் கவனிக்கவில்லை. மறுநாள் அதே நேரத்திற்கு அவன் வந்து பார்க்கிறபோது, பயிர்கள் முழுவதுமே இலைப்புழுவால் நாசமாகிக் கிடக்கின்றன. ஒரு புழு ஓராயிரம் செடிகளையும் அழித்துவிட்டது. அந்தப்புழு அவன் கண்ணெதிரே நெளிகிறது...அவள் மார்பினுள் புகுகிறது...உடம்பு நோகிறது...வீல் என்று கத்துகிறாள், கனவில்...வெளியே கேட்காத பெருஞ்சத்தம் உள்ளத்தில் எதிரொலிக்கிறது! புரண்டு புரண்டு படுக்கிறாள்.

வெள்ளை வேட்டி ஒன்றில் கறுப்புமைக் கறை தெறித்து விழுகிறது. முதலில் ஒரு புள்ளிபோல் தெரிந்தது...தண்ணீரில் போட்டெடுத்ததும் வேட்டி முழுவதுமே கறையாகிப் பரவுகிறது; கசக்கிய கையிலும் அந்த மைக்கறை படிகிறது. எங்கும் கருப்புமை...கறை...சுற்றிலும் கும்மிருட்டுப் போல ஒரு தோற்றம்...பொற்கொடி தலையைத் திருப்பித் திருப்பிப் படுக்கிறாள் ...

ஒரு குளத்தில் யாரோ ஒருவர் ஒரு நச்சுச்செடியைப் போட்டுவிடுகிறார். அச்செடி குளம் முழுவதும் படர்ந்து பரவுகிறது. அந்தக் குளத்தில் வந்து, வாய்வைத்த கால் நடைகள் எல்லாம் செத்துச் செத்து விழுகின்றன. அதன் மீது பறந்த பறவைகள் எல்லாம் போய் உட்கார்ந்த மரக் கிளை, மாடங்களிலிருந்து அப்படியப்படியே செத்து விழுகின்றன! சுற்றுப் புறத்தில் ஒரு மனிதரை, மாட்டை, ஆட்டை, பறவையை உயிரோடு திரியவிடவேண்டுமே?...

கதவைச் சரவணன் படபடவென்று தட்டியபிறகுதான், பொற்கொடி நனவுலகிற்கு மீண்டாள். அவள் இதயத்தி லும் உடலிலும் நச்சுக்காற்றின் நடுக்கமிருந்தது. அவள் கதவைத் திறந்தபோது, ''என்ன பொற்கொடி? கீழே அந்த மனுசன் தானே காரோட்டிக்கிட்டு வந்து ஆரன் அடிச்சிக்கிட்டே இருக்கிருரு... நீ பாட்டுக்குத்தூங்குறியே.. வயசானகாலத்திலே அவரு மாடிப்படி ஏறிவரமுடியுமா?" என்று சரவணன் செல்லமாகக் கடிந்துகொண்டான். விரைந்து, அந்தத்தேவி மீண்டும் ஒரு பக்தனின் வழி பாட்டிற்காகத் தன்னே அபிடேக அலங்காரங்களில் ஈடு படுத்திக் கொள்ளலாஞள்!

○

''இருபேர் உருவின் ஒருபேர் யாக்கை
அறுவேறு வகையின் அஞ்சுவர மண்டி''

17

இப்பொழுதெல்லாம் பொற்கொடி, வயதிற்குரிய தோற்றம் இன்றி, மிக இளமையுடையவள்போல் தன்னை ஒப்பனை செய்துகொண்டாள். அதுமட்டுமன்றி நிறையவே படம் பார்க்கத் தொடங்கியிருந்தாள். மிக மட்டமான படங்கள் என்று சொன்னாலும், அவள் விரும்பிப் போய்ப் பார்த்துவிட்டு வந்தாள். அவள் தன்னை மறக்க வேண்டியிருந்தது. எந்த நேரமும் சிந்தனையும் குழப்பமுமாய் அவள் தன் தலையைப் பிய்த்துக் கொள்ள நேர்ந்ததால், குழப்பத்தையும் அவளால் இப்போது தவிர்க்க முடியவில்லை.

அவள் இப்போதெல்லாம் பெரிய தத்துவவாதி ஆகிவிட்டாள். ''நான் யார், இந்த உடல் எது, உயிர் எது, உடல்தான் நானா? உடலும் உயிரும் சேர்ந்ததுதான் நானா?'' என்று பெரிய தத்துவ விசாரணையில் அவள் இறங்கிவிட்டாள். ''இந்த உடல் நானில்லை. நான் வேறு...அது என் உயிரில் இருக்கிறது; உள்ளத்தில் இருக்கிறது'' என்று அவள் முடிவு செய்து கொண்டாள்.

தன்னை இந்த உடலை விட்டும், உறவைவிட்டும், உலகை விட்டும் வெகுதூரம் பிரித்து நோக்குவதில் அவள் மன அமைதி கண்டாள். சித்தர்கள் கூடுவிட்டுக் கூடு பாய்வார்களாமே, அப்படியானாள் பொற்கொடி. தான் இன்னும் நல்லவளாக சிறந்தவளாக இருப்பதாக அவள் அடிக்கடி நினைவு கொள்வாள். தானாகவே தன்னை மதித்துக்கொண்டாள். அவள் தன் கணவனுக்காக இந்த உடலைப் 'பணயம்' வைத்திருக்கிறாள்; 'பிணை'யாகக் கொடுத்திருக்கிறாள்! இது எப்படித் தவறாகும்? சொல்லப் போனால் பிறரைவிடத் தானே கற்பிற் சிறந்தவள் என்று அவள் தருக்கிக் கொண்டாள்.

திருமணமாகிற அன்று மணமக்கள் ஒருவர் மற்றவருக்காகத் தங்கள் உடலைத்தான் ஒப்படைக்கிறார்கள். அவர்கள் உயிரை ஒப்படைப்பது எப்போது? அவர்கள் வாழும் வழி முறை தெரிந்து இணைந்தும் பிணைந்தும் கூடியும் ஊடியும் வாழ்கிறபோதுதான் அது நடைபெறுகிறது. உலகில் ஒரு சிலர்தான் உயிருக்குயிராக வாழ்கிறார்கள். மற்றவர்கள் 'உன்மேல் உயிரையே வைத்திருக்கிறேன்' என்பதெல்லாம் வெறும் உபசார வழக்குத்தான்! பொற்கொடி தன் கணவனிடம் உயிரையே ஒப்படைத்திருந்தது என்னவோ உண்மைதான். ஆனால் சரவணன் அவ்வாறு வாழவில்லை. அதனால்தான் தன் உடைமைகளை விற்றும் ஒத்திக்கு வைத்தும் அடைமானம் வைத்தும் வாழ்வது போல், அவளையும் பயன்படுத்திக் கொள்கிறான். எனவே, தன் உடலைத்தான் அவனுக்காகத் தான் கறைப் படுத்திக் கொண்டு வாழ்வதாகவும், தன் உள்ளம் இன்னும் தூயதாக இருப்பதாகவும் அவள் திடமாக நம்பினாள். அதனால் இப்போது அவள் அதிகம் கூச்சப்படுவதில்லை; நன்றாகத் தலைநிமிர்ந்தே நடந்தாள். குற்றங்குறைகளும் பழகிவிட்டால் குணங்களாகி விடுவது ஒரு மனப்பழக்கமேயாகும்.

வைத்தி ஒரு 'விலங்காக'வே வளர்ந்திருந்தான் என்பதைப் பொற்கொடியால் நன்குணர முடிந்தது. வெறி

பிடித்த நாய் இரத்தத்தைக் குடித்துச் சதையைத் தின்று முடித்த பிறகும் எலும்பை விடாது கடித்துக்கடித்துச் சுவைத்துக் கொண்டிருக்கும். எச்சில் இலைக்குத் தாவும் நாய், இலை கிழிந்தாலும் விடாது. இன்னொரு நாய் குறுக்கே போகும்போது கூட அது சீறும். இப்போதெல்லாம் பொற்கொடி சரவணனுடன் இருக்கும் காலம் மிகவும் குறைவு. வைத்தி அவளைச் சுற்றிச்சுற்றி வருகிற காலமே அதிகமாக இருந்தது. சில நாட்களாக இதைச் சரவணனாலும் பொறுக்க முடியவில்லை. ஆனால் அவனாலும் அதைத் தடுக்க முடியவில்லை. பெரிய போலிசு அதிகாரியாயிற்றே என்று அவன் கோழைத்தனமாக அஞ்சியஞ்சித் தன்னுள் தயங்குவதைப் பார்த்துப் பொற்கொடிக்குச் சிரிப்பாய் வந்தது.

அந்த ‘சேட்ஜி’ எவ்வளவோ தேவையில்லை. அவர் வயதான காலத்திலும் தெய்வ சன்னதிக்குப் போய் வரும் உண்மையான பக்தனைப் போல் தவருமல் வந்து போய்க் கொண்டிருந்தார். அவருக்கு அவளைப் பார்ப்பதில், தொடுவதில், அவளுடன் கடற்கரைக்குப் போவதில், சுற்றுவதில், அவள் பேசுவதையும் சிரிப்பதையும் பார்த்துக் கொண்டிருப்பதில் பெருமகிழ்ச்சி! அளவு கடந்து ‘காணிக்கை’களையும் குவித்துக் கொண்டிருந்த அவரிடம் சரவணனுக்கும் ஒரு ஈடுபாடிருந்தது. அதற்கு இடையூருக அடிக்கடி அலையும் வைத்தியைத் தடுக்க வழியறியாது சரவணன் திண்டாடினன்.

○

நீண்ட நாட்களுக்குப் பிறகு சரவணன் தன் மனைவியை அழைத்துக் கொண்டு படம் பார்க்கப் போனன். அது ஒரு தமிழ்ப்படம். ‘ஓர் இரவு மட்டும்’ என்று படத்தின் பெயரே மிகவும் கவர்ச்சியாக இருந்தது. அதிலும் ‘A’ முத்திரை குத்திய படம் இது. சுவரொட்டிகள் மிகக் கவர்ச்சியாகத் தெருவெல்லாம் பளிச்சிட்டன. ஓர் இதழில் வந்த கதையைப் படமாக்கி இருக்கிருர்களாம்.

''ஒருவன் அலுவலகத்தில் பணத்தைக் கையாடி விடுகிறான். அவனுக்கு நேரேயுள்ள மேலதிகாரி அவனைக் கையும் களவுமாகப் பிடித்துவிடுகிறார். அவனுக்கு வேலையும் போய் விடும்; தண்டனையும் உறுதி என்றாகி விட்டது.

அன்று மாலை அவனைக் காப்பாற்றுவதற்காக அவன் மனைவி, அம் மேலதிகாரியைத் தனியே சந்தித்துக் கெஞ்சுகிறாள். நான் அதற்குப்பதிலாக இந்த இரவை உங்களோடு கழித்து விடுகிறேன் என்று கூறி அவ்வதிகாரியை அவள் மயக்கப் பார்க்கிறாள். அவரோ மிகவும் கண்டிப்பான பேர்வழி. எனவே அவளை நன்கு திட்டி அனுப்பி விடுகிறார்.

மறுநாள் அவர் அலுவலகம் போகிறார். அவனைப்பற்றிய குற்றத்தைத் தெளிவாகக் குறிப்பெழுதி மேலதிகாரிக்கு அனுப்புகிறார். நிருவாக மேலாளர் உடனே அவனைக் கூப்பிட்டுத் தண்டிப்பார் என அவர் எதிர்பார்த்த வண்ணம் இருக்கிறார்.

மேலதிகாரி அவரையும் அவனையும் அழைக்கின்றார். அவனைக் குற்றம் சாட்டச் சரியான காரணமில்லையென்றும் இப்படிப் பொய்க் குறிப்பு எழுதியதற்காக அவரை வேலையிலிருந்து 'இடைக்கால நீக்கம்' செய்திருப்பதாய் அவர் அறிவித்து இருவரையும் போகச் சொல்கிறார்.

அவ் அதிகாரி, மேலாளர் அறையை விட்டு வெளியேறும்போது, கைப்பையைச்சுழற்றியபடி, அப்பெண் மேலாளர் அறைக்குள் நுழைகிறாள். இதைக் கவனித்த 'அதிகாரிக்கு' நேற்று அவள் 'இந்த இரவை உங்களோடு கழித்து விடுகிறேன்' என்று கூறியது நினைவிற்கு வருகிறது. ஒருமுறை திரும்பிப் பார்த்து, அங்கே மேலாளரும் அவளும் கொஞ்சிப் பேசிக் கொண்டிருப்பதைக் கவனித்தவராய் அவர் தலைகுனிந்தபடியே நடக்கிறார்.''

இந்தச் சின்னஞ்சிறிய கதையைச் சவ்வுபோல் இழுத்து, சிறியதோர் படமாக்கியிருந்தார்கள். படம் முடிந்து வெளி

யில் வந்த போது பொற்கொடி, சரவணன் இருவர் முக முமே வாடிப்போயிருந்தது.

''அவள் செய்தது சரிதான்! தன் கணவனுக்காக ஒரு மனைவி என்னென்னவோ தியாகம் செய்யும்போது, இதை மட்டும் செய்யக்கூடாதா?'' சரவணன் மனநிலை இது.

''நல்லா இருக்கே. குற்றம் செய்தவனைத் தண்டிக்காமே விட்டது ஒரு குற்றம். அதுக்காக அவள் தானும் களங்கப் பட்டது அதைவிடக் குற்றம்'' இவ்வாறு பொற்கொடி வாதாடினாள்.

''படத்திலே காதற்காட்சிகள் ரொம்ப அழகா எடுத்திருக் காங்க. ஒளிப்படக்காரர் கலைத்திறன் முதல்தரம். என் னென்ன கோணத்திலே எவ்வளவு அழகா எடுத்திருக் காங்க...''

''சேச்சே...அதுக்காக இப்படியா பச்சையா எடுப்பாங்க. அந்தக் காலத்திலே இதையெல்லாம் தனிமை, மறைவு, ஒதுங்கி நடப்பது என அறிமுகப்படுத்துவாக. சிலையிலே இதுபோலப் பாலுணர்வு ஊட்டுபவை உண்டு. ஆனால் அவையெல்லாம் மறைவா, ஒதுக்குப்புறமா, தூணின் மறைவான இடத்திலே எங்கேயாவது இருக்கும். இப்போ, பதினாயிரம் பேரை உட்கார வைச்சுக்கிட்டுக் கண்காட்சியாவுல காட்டுருக?''

''என்ன பொற்கொடி, நம்மகிட்ட இல்லாததையா காட்டு ருங்க? நம்மிடம் இருக்கிறதை அப்படியே 'நடப்பியலாக்' காட்டினா கோபப்படலாமா?''

''பொருளாதார வேறுபாட்டை, சுரண்டலை அப்படியே காட்டுற நடப்பியலை விட்டுட்டு, காமத்தைக் காட்டுற நடப்பியலுக்கு நாம தாவியிட்டோம்; அதனாலே குப்பை யிலே கிடந்து புரள்கிறோம்."

''குப்பை இருக்குங்கிறதை ஒத்துக்கிறியா இல்லையா? அப்படி இருக்கிறதை இருக்கிறதாக் காட்டுறதிலே என்ன தப்பு?''

''வீட்டிலே குப்பை இருக்கிறது உண்மை. அதைக்கூட்டி வெளியே எறியணும். உடம்பிலே அழுக்குச் சேர்வது இயற்கை. நாள்தோறும் குளித்து அதைப் போக்கணும். குப்பை இயல்புன்னு சொல்லிட்டு நாமே குப்பையைக் கொண்டுவந்து வீட்டிலே கொட்டிக்கிறோம். உடம்பிலே அழுக்குச் சேர்வது இயற்கைன்னு சொல்லிட்டு சேத்தை அள்ளி உடம்பிலே பூசிக்கிறோம். எல்லாம் தானே விளைய வல்லன. செம்பிற் களிம்பு தானே ஏறும்; நீக்கத்தான் வழிதேட வேண்டுமே தவிர, அதனையே மிகுவிக்கக் கலைகள் பயன்படவேண்டியதில்லை...''

இதைக் கேட்டுச் சரவணன் பலமாகச் சிரித்தான். ''ஏது? நீ பெரிய தத்துவவாதி ஆகிவிடுவாய் போலிருக்கிறதே!'' என்றான் அவன். அவள் அதை மௌனமாக அங்கீகரித்தாள். ''எனக்கு வந்த இழிவு இந்த நாட்டில் பிறந்தபிறிதொரு பெண்ணுக்கு ஏற்படுவதையும் நான் விரும்பமாட்டேன். படத்தில் வந்தவளுக்குக் கூட, இவ்வாறு சோதனை ஏற்பட்டதை நான் ஒப்பமாட்டேன். அந்தத் தடியனைத்தான தண்டித்திருக்க வேண்டும். இந்தத் தீமைகளுக்கெல்லாம் காரணமான நச்சுக்கிருமிகளை அடியோடு ஒழிப்பேன். அவை இதழ்களாக இருந்தால் என்ன? திரைப்படங்களாக இருந்தாலென்ன? அவற்றை எதிர்த்துப் போராட்டமே துவங்குவேன்'' என அப்பேதை நெஞ்சம் பிதற்றியது.

பொற்கொடியின் உள்ளம் மெய்யுணர்வாளனின் உள்ளம் போல் அடிக்கடி உண்மையை நாடி ஓடியது. பட்டப் படிப்பு வரை படித்தவள் ஆதலால், அவ்வேட்கை அவள் உள்ளத்திற்கு உரமூட்டி வளர்த்தது. வாழ்க்கையில் மிக அதிகமாக அடிபட்டு, அனுபவப் பட்டவர்கள்—அருணகிரியார், பட்டினத்தார் போலத் தத்துவத்துறையில் மேம்பட்டதெல்லாம் அவள் நினைவிலோடி நிழலாடின.

சரவணன் ஏதோ சில தந்திரங்களால் தன் கடனையெல்லாம் அடைத்து விடுவது போலவும், படம் எடுத்துமுடித்து

விடுவது போலவும் மீண்டும் பழைய வாழ்வுக்குத் திரும்பி விடுவது போலவும் கனவு கண்டான். ஆனால் அவ்வாறு திரும்ப முடியாத படுபாதாளத்தில், தன்னை விழ்த்திக் கொண்டிருப்பதை அவன் சற்றும் உணரவில்லை. எப்போதும் பெரிய நிலையிலிருந்து கீழே விழ்ச்சி அடைப வர்கள் இப்படித்தான் கடைத்தேற மாட்டாமல் கனவு கண்டு, கற்பனையில் மிதந்து அல்லற்படுவார்கள். அவனைச் சென்னையில் பார்த்த சில உற்றார், உறவினர்கள் ''அடேயப்பா! சரவணன் இப்போது சென்னையில் எவ்வளவு வசதியாக வாழ்கிறான் தெரியுமா? நிறையச் சம்பாதிக்கிறான்போல் இருக்கிறது. அதை வைத்துக் கொள்ளத் தான் தெரியவில்லை. கடன்கள் வளர்ந்து கொண்டிருக்கின்றனவே தவிரக் குறையவில்லை. ஆனாலும் அவனுக்கென்ன குறைச்சல்? காரை விட்டுக் கீழே இறங்கி நடப்பதில்லை. உயர்ந்த ஓட்டலில் தங்கியிருக்கிறான். அரச வாழ்வு வாழ்கிறான்'' என்று பேசிக் கொண்டார்கள்.

எவ்வாறோ சரவணன் காலமும் சென்னைப் பட்டிணத்தில் ஓடிக்கொண்டிருந்தது. சென்னை போன்ற நகரங்களில் யாருடைய காலமும் ஓடும்; ஓடாமலே ஓடும்! யார், யாரைப் பற்றிக் கவலைப்படுகிறார்கள்? புதிய புதிய உறவுகள், இழுவல்கள் அவனுக்கு! எத்தனை ஆண்டுகளாகச் சென்னையிலிருக்கிறான். குடும்பமாக ஒரு வீடு வாடகைக்குப் பிடித்துத் தங்கினோம் என்றிருக்கவேண்டுமே? மனைவியை அழைத்துவந்த பிறகும் அவன் விடுதி அறைகளிலேயே தங்கியதற்குக் காரணம் இருந்தது. 'சேட்'டுப் போன்றவர்களைக் கவர்ந்து, பணம் தேடவும் அவன் முற்பட்டதே காரணம். அவனுடைய முன்னோர்கள் வாழ்வின் மற்றொரு கோடியான உயர்வை நோக்கி உச்சிக்கே சென்றார்கள்; இவனோ படுபாதாளத்திற்கே செல்கிறான்! இரண்டிலும் ஓர் ஒற்றுமை இருக்கிறது. இவனிடம் எப்போது பணம் சேரும்? எவ்வாறு கடன் தீரும்? பணம் ஒன்று வருமுன்பே பத்து ரூபாய் செலவழிக்கிறான். பழைய கடன் ஒன்று திரும்போதே, புதிய கடன் பத்து சேர்கின்

றன! வாழ்க்கையில் மட்டும் தீமை என்கிற சிக்கலில் மாட்டிவிட்டால், பிறகு அதைத்தான் சுற்றிச்சுற்றி வர வேண்டியிருக்கும். அதை விட்டு வெளியேறிவிடலாம் என நினைப்பதெல்லாம் கனவாகவே முடியும். அதனால் தான் மனிதன் தன் வாழ்வில் மயிரிழை கூடத் தவறிழைக்கக் கூடாது என்று சான்றோர்கள் அடித்துப் பேசினார்கள். 'ஒரு பைசாதானே திருடினான், ஒரு பொய்தானே கூறினான், ஒருநாள்தானே குடித்தான்' என்பனவெல்லாம் நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதாகும். குளத்தில் ஒரு கல் விழுந்தால், அதனால் ஏற்படும் அலைவட்டங்கள் அகன்று அகன்று செல்லுமே தவிரச் சுருங்காது. சரவணனும் தன் தந்தை இறந்ததுமுதல், தீய வழியில் திரும்பினான். அன்று முதல் இன்றுவரை கடனைத் தீர்க்கப் போவதாகவும் மீண்டும் குடும்பப் புகழை நிலைநாட்டப் போவதாகவும் பழைய நல்வாழ்வை அடையப்போவதாகவும்தான் கூறிக் கொண்டிருக்கிறான். அவ்வாறு கூறிக் கொண்டே அவன் மேலும் மேலும் அதை அடையும் வழிகளாகத் தீயவற்றையே செய்கிறானே தவிர, நல்லவற்றை நாடவில்லை. சரவணனைச் சுற்றிய தீமை வட்டம் தான் இவ்வாறு வரவரப் பெரிதாயிற்றே தவிர, அவனால் அதைவிட்டு வெளியேற முடியவில்லை. அதற்குள்ளேயே ஓடிஓடி ஒளிந்தான்; இப்போது அவ் ஓட்டமே அவனுக்கு வாழ்வாகிவிட்டது.

○

பொற்கொடி இடையிடையே நோய்வாய்ப் படலானாள். அரிப்பு, தடிப்பு, வெப்பு, காய்ச்சல் என அவள் ஒருவகை நோய்க்கு ஆளானாள். சில சமயம் அவள் தன் நினைவை யிழந்து தடுமாறுமளவு இது வளர்ந்தது. மறைமுக நரம்பு நோய்களுடனும் மனநோயுடனும் அவள் போராடினாள். ஒருமுறை வைத்தி அவள் அறைக்கு வந்தவன், புறப் படும்பொழுது அவள் அயர்ந்து, தன்னினைவின்றிக் கிடப் பதைக் கண்டான். 'அவளுக்கு என்ன உடம்பு?' என்று

அவன் சற்றும் கவனிக்கவில்லை. அவள் நோயால் அவதிப்படுவதைப் பார்த்துக் கவலைப்படவோ, இரக்கப்படவோ அவனுக்குத் தோன்றவில்லை. மனித விலங்குகளும் பசிதீர்ந்தவுடன் குருதிபடிந்த வாயுடன் புறப்படவே செய்கின்றன. அவளுடைய கைப்பெட்டி பாதி திறந்து கிடந்ததில், பணமிருப்பது தெரிந்தது; ஒன்றிரண்டு நகையும் உள்ளே கழற்றி வைக்கப்பட்டிருந்தன. வைத்தி மெதுவாகப் பெட்டியை மூடிக் கையில் எடுத்துக்கொண்டு வெளியேறி நழுவிவிட முயன்றான். அப்போது கட்டில் மூலை பெட்டியில் இடிக்கவே, விழித்தெழுந்த பொற்கொடி 'முன்னமே இப்படி நடக்குமென எதிர்பார்த்துக் கிடந்தவள்போல், கூக்குரலிட்டாள். அவன் வேகமாகத் திரும்பி ஓடிவந்து அவள் வாயைப் பொத்தினான். அவள் அவன் கையை விலக்கிக்கொண்டு திமிறி எழுந்தாள். அவன் பெட்டியைப்போட்டுவிட்டு ''சீ நாயே! பெட்டியை எடுத்துக்கொண்டு ஓடவா பார்க்கிறாய்?" என்று அதட்டினான். அதற்குள் வேலைக்காரர்கள் சிலர் அவ் அறைமுன் கூடிக் கதவைத் தட்டினர். வைத்தி கதவைத் திறந்து, "ஒன்றுமில்லை, போங்கள்'' எனக் கத்தினான். அவர்கள் இது ஏதோ குடும்பச் சண்டைபோலும் என எண்ணிக்கொண்டு, அங்கிருந்து போய்விட்டார்கள். பிறகு அவன், ''ஏதாவது வெளியில் சொன்னால், உன்னை விபசாரக் குற்றத்தின் கீழ்க் கைது செய்து விடுவேன்.'' என்று மிரட்டிவிட்டுப் போனான். இதைக்கேட்டதும் அவளுக்குச் சிரிப்பும் சினமும் பொங்கி வந்தன. ஆனால் அதற்குள் அந்தக் கயவன் ஓடிவிட்டான்.

வேலியே பயிரை மேய்வதுபோல் வைத்தி நடந்துகொண்டது, அவளுக்கு மிக்க மன உளைச்சலைத் தந்தது. அவனை மீண்டும் காணவோ, அவனோடு பழகவோ இனி இயலாது என அவள் உள்ளம் இடித்துக் கூறியது. அவனைப் பகைத்துக்கொண்டு அங்கிருப்பதும் ஆபத்தில்தான் முடியும். சட்டம் அவன் கையிலிருப்பதால் அவன் எதுவும் செய்துவிடக்கூடும்.

'சேட்ஜி'யும் வயதான தம் மனைவிக்கு உடல்நலமில்லை என்று பம்பாய் போய்விட்டார்.

சரவணன் இப்போதெல்லாம் தன் மனைவியைப் பார்க்கக் கூட, அடிக்கடி வருவதில்லை. வருமானமில்லாத இடத்தில் வந்து பயனென்ன? நோய்வாய்ப்பட்டுத் தவிக்கும் போதெல்லாம் அவ்விடுதியைச் சேர்ந்த வேலையாட்கள் தான் உதவினார்கள். இந்த நிலையில் திருச்சி போய்விடுவதுதான் நல்லது என்று பொற்கொடிக்குப் பட்டது. மீண்டும் வைத்தி வந்து தன்னைத் தொந்தரவு செய்வதற்குள் சரவணனுக்கும் தெரியாமல் சேர்த்து வைத்திருந்த பணத்தையும் நகைகளையும் எடுத்துக்கொண்டு அவள் திருச்சிக்குப் புறப்பட்டாள். அவள் போவது தெரிந்தும் சரவணன் வழியனுப்பக் கூட வரவில்லை!

○

“ஒரு முகம்
செறுநர்த் தேய்த்துச் செல்சமம் முருக்கிக்
கறுவுகொள் நெஞ்சமொடு களம் வேட்டன்றே”

18

திருச்சிக்கு வந்து இரண்டொரு நாட்கள் கவனிப்பார் யாருமே இன்றித் தன்னந்தனியே கிடந்தாள் பொற்கொடி. சுற்றிலும் பெரிய தோட்டமும் நடுவே மிகப்பெரிய மாளிகையுமாக இருந்த அவ்வளவு பெரிய வீட்டில், தான் மட்டும் தன்னந்தனியாகக் கிடப்பது அவளுக்குப் பெரிய வேதனையாக இருந்தது. மாளிகைக்குப் பின்புறம், ஒரு மூலையிலிருந்த குடிசையில் தோட்டக்காரன் குடும்பத்தோடு இருந்தான். அவன் மனைவிமட்டும் இடையிடையே வந்து கவனிக்காமல் இருந்திருந்தால் பொற்கொடி செத்தே போயிருப்பாள்.

வழக்கமாக அந்த வீட்டில் சமையல்செய்யும் ஆளுக்காகக் கிராமத்துக்குச் சொல்லியனுப்பி, அவன் இரண்டு நாள் கழித்துத்தான் வந்து சேர்ந்தான். சித்த மருத்துவர் ஒருவரைக் கூட்டிவந்து, கையைக்காட்டி மருந்து உண்ணத் தொடங்கினாள். அவர் உடல் தேறுவதற்கு ஆறு மாதமாகும் என்று கூறிவிட்டார். உடலுறவால் ஏற்படும் எல்லாநோய்களும் அவளைப் பீடித்திருப்பதாக அம்மருத்து

வர் கூறியபோது, தனக்கேற்பட்ட முறைகெட்ட வாழ்வின் கொடுமையை எண்ணி நைந்தாள் அவள். 'வெளியில்தலை காட்டினுல் கேவலம்' என நினைத்துத் தன் வீட்டிலேயே அடைபட்டுக் கிடந்தாள். எனினும் அவள் வந்து, நோயுற்றுக் கிடக்கும் செய்தி, சிறிதுசிறிதாக ஊர் முழுதும் பரவி விட்டது. உறவினர்களும் நண்பர்களும் ஒரு சிலர் மட்டும் பார்க்க வந்தனர். அவர்களும் வேண்டா வெறுப்பாக வந்ததாகத் தோன்றியது. அவர்களிடம் 'சென்னை ஒத்துக் கொள்ளவில்லை என்றும் இரத்தக்கொதிப்பு இருக்கிறதென்றும்' பொய்யான காரணங்களைக் கூறிவைத்தாள், பொற்கொடி. அவர்களில் ஒருவரிருவர் சரவணன் மீது ஆத்திரப்பட்டனர். "இவ்வாறு மனைவி நினைவு கூட இல்லாமல் எப்பொழுதும் தொழிலையே கவனித்துக் கொண்டிருந்தால் குடும்பம் என்னுகும்?'' என்று அவர்கள் பேசிக் கொண்டதைக் கேட்டபோது, பொற்கொடி உள்ளுக்குள் சிரித்துக்கொண்டாள். ஒவ்வொருவரும் ஏதாவதொரு மருத்துவ முறையைக் கூறிவிட்டுத்தான் அங்கிருந்து சென்றனர்.

ஒருநாள் கற்பகவல்லி தன் தாயாரைப் பார்க்க வந்தாள். அவள் ஒரு சிறிது தன் பெற்றோரைப் பற்றித் தன் கணவன் வீட்டார் வழியாகக் கேள்விப்பட்டிருந்தாள். தன் பிள்ளைகளில் இரண்டைக் கூட்டிக்கொண்டு, ஆறு சாத்துக்குடிப் பழங்களுடன் அவள் ஆட்டோவில் வந்திறங்கினுள். மூத்த பையனும் பெண்ணும் பள்ளிக்குப் போய்விட்டார்கள் என்று தாய் கேட்டதற்குக் கூறினுள். இப்போதும் வாயும் வயிறுமாக இருந்தாள். இதைக் கண்ட பொற்கொடி மனம் தாய்மை வாஞ்சையினுல் உள்ளுள் கிளுகிளுத்தது! ஆனுல் கற்பகவல்லி நறுக்குத் தெரித்தாற் போல், வெளிப்படப் பேசிய பேச்சுக்கள் அவளை வெட்டித் தள்ளுவது போல் இருந்தன.

''ஊரே கேவலமாப் பேசும்படி ரெண்டுபேரும் நடந்துக் கிட்டா, மானம் மரியாதை இல்லையா? தாத்தா இந்த ஊர்லே இருந்த நிலை என்ன?...''

"எல்லாம் உன் அப்பாதான்...நான் பொம்பிளை என்ன செய்வேன்?''

''அவரு கதைதான் தெரிஞ்சதாச்சே...இங்கே திருச்சியே சிரிக்குது!...''தொடர்ந்து கற்பகவல்லியே பேசினாள். அவள் உள்ளம் வெந்து போயிருந்தது. ''பாரிஸ்டருக்குப் படிக்கவச்சாரே தாத்தா! என்ன புண்ணியம்? நல்லாத் தான் அப்பா 'ஷேர்' சேர்த்துக் கம்பெனி ஆரம்பிச்சாரு! ஊரிலே இருக்கிறவங்க எல்லோர்கிட்டேயுமாசேர்க்கிறது. அங்கே கொண்டுபோய் இப்படி ஊரார் பணத்தைக் கவிழ்க் கலாமா? அவன் வேங்கடேசன் என்கிறவனை ஏன் விட் டீங்க...அவன் குடும்பமே வேசைக் குடும்பமாமுல......''

''அவனாலேதான் கற்பகம்! நம்ம குடும்பமே நாசமாப் போச்சு!'"

''இங்கே நூறும் இருநூறுமாக் கடனை வாங்கிவச்சு...... கம்பெனி கவிழ்ந்துப்போச்சுன்னு விடுவாகளா?''

''கம்பெனியா கவிந்திச்சுக் கற்பகம்! குடும்பமே கவிந் திச்சு...அவனுக்கென்ன வெளிநாட்டிலேயிருந்து கப்பல் கவிந்திடுச்சுன்னு உங்க அப்பாவுக்குத் தந்தி கொடுத் துட்டு, ஏமாத்திப்புட்டான்......இப்போ அவன் குடும்பத் தோட ஓடிப்போயி நல்லா இருக்கிறானம். நாம அகப் பட்டுக்கிட்டு முழிக்கிறோம்!"

"எம் பையன் படிக்கப் போற பள்ளிக்கூடத்திலே கூடக் கேக்கறாங்களாம்......அட, கடங்காரப் பயல்தானே உன் தாத்தான்னு! பயல் வந்து அழுகிறான். என் மாமியார் குத்திக்காட்டிப் பேசாத நாளே கிடையாது!''

''எப்பவோ நான் திருச்சிக்குப் போயிடறேன்னு புலம்பி னேன். கேட்டாத்தானே........விடமாட்டேன்னுட்டாரு. என்னையும் சிக்கல்களிலே இழுத்துவச்சு......''

''நமக்கு எங்கே புத்தி போச்சு? ஒத்துவரலேன்னு விட் டுட்டு ஓடி வரவேண்டியதுதானே!''

''எப்படி? விட்டாத்தானே? அடி உதைக்குப் பயந்து, ஒத்துப்போக வேண்டியிருக்கு. இல்லையின்னுத் தான் சாகிறேன்னு பயமுறுத்துருரு!''

''செத்தா சாகட்டுமே! ஊரே தூத்துது. இப்ப என்ன பேசருங்கதெரியுமா? ஒங்க அம்மாவுந்தானுமே குடிச்சிட்டு ஆடினு! எல்லாம் தேவடியாப் பொழைப்புன்னு திட்டுருக!''

''உலகம் நாலுந்தான் பேசும்...பேசிட்டுப் போகட்டும்!''

''நாம அடக்கமாயிருந்தால் பேசாது. 'இல்லாதது பிற வாது, அள்ளாதது குறையாது'ம்பாங்க. தெரியுமா?''

''வாழ்க்கையிலே வறுமைப்பட்டவுங்களைத் தூத்திறதுக் குன்னு உலகம் தயாரா இருக்கும்......பணமிருந்தால் வாயைத் திறக்கப் பயப்படும். இல்லையா?''

''நான் அதெல்லாம் பொய்யின்னு அவங்களுக்குப் பதில் அடி கொடுத்திட்டேன். இருந்தாலும் நாம எச்சரிக்கை யாயிருந்தா, எவளாவது நாக்கு மேலே பல்லுப்போட்டுப் பேசுவாளா?''

கற்பகத்தின் நம்பிக்கையை எண்ணிப் பொற்கொடி மனம் நெகிழ்ந்தாள். 'அப்படியெல்லாம் யாரோடும் சண்டை போடாதே' என்று சொல்ல வாயெடுத்தவள், 'எங்கே குட்டு வெளிப்பட்டுவிடுமோ?' என்று அடங்கிப் போனாள். கற்பகவல்லியோ வந்ததிலிருந்து, காலில் வெந்நீரைக் கொட்டிக் கொண்டவள் போல், அங்கிருந்து திரும்பிப் போக விரைந்து கொண்டிருந்தாள். அவள் வீட்டில் 'போகவே கூடாது' என்று தடுத்திருப்பார்கள் போல் இருக்கிறது. தானே தன்னை நன்கு கவனித்துக் கொள் வதாகவும் பிள்ளைகளுடன் அடிக்கடி வந்து தொல்லைப்பட வேண்டாம் என்றும் குறிப்பாகக் கூறி மகளை வழியனுப்பி வைத்தாள் பொற்கொடி.

○

கனகசபை தன் மனைவி வழியிற் கிடைத்த வீட்டில், தன் மாமனர் வீட்டையடுத்து, அவர்கள் ஆதரவில் வாழ்ந்து

வந்தான். 'அவனுடைய பழக்க வழக்கங்களும் நல்லபடியாக இல்லை' என ஒரு வதந்தி உலவியது. சரவணன் சமுதாயத்தில் தலைநிமிரவொட்டாதபடி, மேலும் மேலும் பல காரியங்களைச் செய்து வந்ததால்,மனவெறுப்படைந்த கனகசபை தானும் தன் வாழ்வில் தட்டுத் தடுமாறிக் கொண்டிருக்கிறான் போலும் என்று பொற்கொடி எண்ணினாள். அவர்களும் தங்கள் கைக்குழந்தையைத் தூக்கிக் கொண்டு பார்க்க வந்திருந்தார்கள். மலர்விழி எப்பொழுதும் மிகச்சுறுசுறுப்பாக இருப்பவள். இப்போது சோகம் இழையோடிக் காணப்பட்டாள். அவள் முகம் கறுத்துப் போயிருந்தது. தோட்டத்தில் எங்கோ மூலையில், ஒரு செடியில, ஒரு இலையில் விழுந்த புழு இப்போது இலைக்கு இலை, செடிக்குச்செடி பரவுவதை அவள் முகம் காட்டியது. அந்த மைக்கறை தான் சந்தனமேனித் தையலையும் கறுக்கவைத்துக் கொண்டிருந்தது. 'ஒரு குளத்தில் விழுந்த நச்சுச்செடி, அதில் தவறுதலாக வந்து வாய் வைத்த ஒரு பசுவையும் சாடுகிறதென்பது நன்கு புலனாகியது'.

தன் மாமியைப்பற்றி ஊர் உலகத்தைப்போல் மலர்விழியும் தவறாக எண்ணிக்கொண்டுதான் வந்தாள். இப்போது மனம் நெகிழ்ந்து, தங்களிடம் பேசவும் கூசி அமர்ந்திருக்கும் மாமியைப் பார்த்து அவளும் மனம் கசிந்தாள். கனகசபை அதிகம் பேசவில்லை. அவனுக்கு என என்ன மீதம் இருக்கிறது? அவனும் 'எனக்கென்ன வைத்திருக்கிறீர்கள்?' என்று கேட்கும் நிலையிலா இருக்கிறான்? சற்று நேரத்திற்கெல்லாம் அவர்கள் அந்தப் 'பேரனை'த் தூக்கிக் கொண்டு புறப்பட்டார்கள். பொற்கொடி தன் மகனையும் 'அடிக்கடி வந்து உன் வேலைகளைக் கெடுத்துக் கொள்ளாதே! உன் தந்தை விரைவில் திரும்பிவருவார். நமக்கும் நல்லகாலம் வரும்!' என்று அன்பாக எச்சரித்து அனுப்பினாள்.

அவர்கள் போன பிற்பாடு பொற்கொடியின் மனம்கிடந்து கலவரப்பட்டது. இருப்புச்சட்டியில், கொதிக்கும் எண்

ணெயில் போடப்பட்ட எள்ளும் கொள்ளும்போல, உள்ளே வெடிகள் கிளம்பின. பாறையை உடைக்க வைக்கப்பட்ட வேட்டு வெடித்தவுடன், சுற்றுப்புறம் எங்கும் கல் சிதறுவது போலச் சிந்தையும் சுக்குநூருகியது. ஒருவன் தப்பு செய்துவிட்டுத் தவித்து நிற்கிருன். ஒரு தீ வட்டம் அவனைச் சுற்றுகிறது. அவன் குடும்பம், உறவு, சுற்றமெல்லாம் அத்தீமையால் பாதிக்கப்படுகின்றன. அத் தீவட்டம் மேலும் ஒரு கட்டம் கூடிச் சுழல்கிறது. அவன் பிறந்த சமூகம், சமுதாயம், நாடு, உலகம் என அத்தீமையின் வட்டங்களே மேன்மேலும் பரவுகின்றன. ஒளிவெள்ளம் பரவுவது போல் ஒருவன் செய்யும் நன்மையும் தீமையும் அவனைச்சுற்றிப் பரவிக்கொண்டே இருக்கும் போலும்! அடடா! செயலின் பயன்கள் எவ்வாறு ஒளிக்கற்றைகளை விட வேகமாகப் பாய்கின்றன!

பொற்கொடி கனவில்... தன் கணவனை ஒரு கறுப்புப்புள்ளியாகப் பார்க்கிருள்! அப்புள்ளி முதலில் அவனையும் வேங்கடேசன் குடும்பத்தையும் சேர்த்து ஒரு சிறு வட்டமாக விரிகிறது! அவள் பிள்ளைகளையும், குடும்பத்தையும் சேர்த்து, இன்னும்சிறிது அவ்வட்டம் விரிகிறது. இப்படியேவிரிந்து விரிந்து அக்கறுப்பு உலகத்தையே விழுங்குகிறது! அவள் 'ஐயோ' என்று அலறிப்புடைத்து எழுகிருள். கனவுகலைந்து அவள்எழுந்தபோது, அங்கே மாணிக்கம் வந்திருக்கக் கண்டாள்அவன்தன் அம்மாவைப்பார்த்ததும் அழுஅழுவென்று அழுது தீர்த்தான். 'வயது வந்த பையனு இவன்?' என்று பார்த்தவர்கள் ஐயப்படும்படி அவன் புலம்பி நின்ருன். "கோடை விடுமுறையிற் கூடப் பார்க்க வரவில்லையே அம்மா! அப்பா எங்கே அம்மா?'' என அச்சிறுவன் பதறினன். முதல் வகுப்பு முதல் எல்லோரிலும் அவன்தான் முதல் மதிப்பெண் பெற்று வந்தான். அவனிடம் வயதுக்கு மீறிய வளர்ச்சியும் திறமையும் காணப்பட்டன. ஒவ்வொரு முறை அவனைப் பற்றிய 'முன்னேற்ற அறிக்கை' அஞ்சலில் வரும் போதும், அவற்றில் பாராட்டும்படியான ஆசிரியர் குறிப்பு அடியில் இருக்கும். அதற்கு அடுத்துப் பெற்

றோர் அடிக்கடி சந்தித்துக் கவனம் செலுத்தவேண்டும் என்றும் எழுதப்பட்டிருக்கும். இப்போது பையனும் கண்ணுக்குப் பொலிவாகவும் வலுவாகவும் விளங்கினான். இதைப் பார்க்கப் பார்க்கப் பொற்கொடி பூரித்துப் போனாள். அவன் காலில் 'பூட்சு' போட்டு நடக்கிற அழகும் எப்போதும் விறைப்பாக நிமிர்ந்து பெருமிதமாகப் பழகுகிற சாயலும் அவளுக்கு அளவுகடந்த மகிழ்ச்சியைத் தந்தன. ஆயினும் மழைபெய்ய மறந்துவிட்ட பயிர் போல அவன் உள்ளம் பெற்றோர் அன்பைப் பெறாமல் தத்தளிப்பது அவன் கண்கலக்கத்தில் தெரிந்தது. இரண்டே நாள்களில் அவனை நயமாகப் பேசி, கான்வெண்டு உணவுவிடுதிக்கே அனுப்பிவிட்டாள் அவள். அந்த இரண்டு நாட்களிலும் நோயுற்ற தன் தாயிடம் அவன் காட்டிய பரிவும் பணிவிடையும் தாயின் நெஞ்சத்தை நெகிழ்வித்தன.

தோட்டத்து இலைப்புழு இந்தப் பசுந்தளிரையும் பாதித்து, அழித்துவிடக் கூடாதே என்று தாய்மனம் உருகியது. நச்சுக் குளத்தின் காற்றுத்தானும் அவன் மீது படக் கூடாது என அவள் நினைத்தாள்.

○

ஆறேழு மாதங்களுக்குப் பிறகு அவள் உடல் நன்கு தேறிவிட்டதாக மருத்துவர் கூறினார். அவளுக்குப் பழைய தோற்றப் பொலிவு புறத்தே ஏற்பட்டிருந்தது உண்மையே என்றாலும், உள்ளுக்குள் எப்பொழுதும் ஒரு வித உளைச்சலும் அரிப்புமாக இருந்தன. அடிக்கடி குடி தேவைப்படுகிற உணர்வும் பழக்கம் காரணமாகத் தலை நீட்டிக்கொண்டே இருந்தது.

சரவணன் திருச்சி வருவதாகத் தெரியவில்லை. அவள் போட்ட மடல்களுக்கும் பதிலே இல்லை. தானே சென்னை போவதென்றால், அங்கே வைத்தி இருக்கிறான் என்ற நினைவு அவளை ஆட்டிப்படைத்தது. ஒன்றில் கட்டுப்

பாடாக, நோன்பாக இருக்கும்வரை மனிதன் தூயவனாக வும் வரன்முறைக்குக் கட்டுப்பட்டவனாகவும் வாழ முடி கிறது. ஒரு சிறிது மாறினாலும் வாழ்வு சடசடெனச் சரிந்துவிடுகிறது. முன்பெல்லாம் தனிமனிதர்கள் பின் புலத்தை, பின்னணியை, சமுதாயத்தை வென்று அதைத் தம் வழிப்படுத்தினார்கள். இந்த நூற்றாண்டு பின்னணிகள் வலுப்பெற்றுவிட்ட காலம். தனி மனிதர்கள் எவ்வளவு மனவலுவுடையவர்களானாலும் அப்பின்னணி வெள்ளம் அவர்களையும் அடித்துக்கொண்டு ஓடுகிறது! இன்று அர சியல், திரைப்படம், ஒழுக்கக்கேடு என்ற மூன்று பெரிய வளையங்களுக்குள்ளும் அகப்பட்டவர்கள் அவற்றைவிட்டு வெளியேறமாட்டாமல் அவற்றிற்குள்ளேயே சுற்றிச் சுற்றி வருகிறார்கள். இன்று இப்பின்னணி மனிதனைச் சுற்றி 'வியூகம்' அமைத்திருக்கிறது.

பொற்கொடியையும் அவளுடைய பழக்கம் தான் இப் போது அரித்துக் கொல்கிறது. ஒரு காலத்தில் அவள் எதைப் பார்த்து அருவருத்தாளோ, அதற்காகவே இப் போது அவள் ஆர்வத்தோடு துடிதுடித்தாள்! தான் வேறு, தன் உடல் வேறு என்ற விவாதம் இப்போது அவள் நெஞ்சிற்குள் முளைப்பதில்லை. அந்த உடலின் தினவிற்கு ஏற்ப, மனம் சுழியிலகப்பட்ட துரும்பாய்ச் சுற்றி வந்ததே தவிரக் கரையேற முடியவில்லை. தன் கணவன் மீது அவளுக்குக் கடுஞ்சினம் பொங்கியது. எவ்வளவு தின்றா லும் தீராத யானைப்பசியால் அல்லற்பட்ட காயசண்டிகை போலத் தான் ஆகிவிட்டதை எண்ணி அவள் நைந்தாள். தன் கணவனைப் பிடித்துப் பரபரவென்று இழுத்துக் கொண்டு வந்து, "எனக்கு யானைப் பசியைத் தூண்டி விட் டாயே, இப்போது பசிக்கு இரைபோடு, போடு!'' என்று அதட்டிக்கேட்க வேண்டும்போல் இருந்தது.

பலநாள் தனிமையில் இவ்வாறு கிடந்து அல்லற்பட்ட பொற்கொடிக்கு, ஒருநாள் ஓவியர் நன்னனின் நினைவு வந்தது. அவள் படுக்கைக்கு எதிரே மாட்டியிருந்த

அந்தப்படம், அவளை ஒரு காலத்தில் அந்தஓவியன் வரைந்தது. அவன் கொஞ்சநாள் கற்பகவல்லிக்கு இசைப்பாடம் கற்பிக்க வந்து கொண்டிருந்தான். அவன் நல்ல ஓவியக் கலைஞன்! இசைவாணன், கவிஞன்! ஒருமுறை அவன் பொற்கொடியின் தோற்றத்தை மிக அழகாக ஓவியந் தீட்டிக் கொணர்ந்தான். கற்பகவல்லிக்குப் பாடம் சொல்லவரும்போது. பொற்கொடி ஒருநாள் குளித்துவிட்டுத் தலையை உலர்த்திக்கொண்டு நின்றதை, அப்படியே எழுதியிருந்தான், அக்கலைஞன். தோகை விரித்த மயில்போலப் பொற்கொடி, ஈர உடையோடு நின்ற அழகு, அப்போது அவனையே வியப்பில் மூழ்கடித்தது. அவளை அக்காட்சியிற் கண்டு ஈடுபட்டுக் கண்ணுற் கண்டதை உடனே கோட்டுப் புனைவாகத் தீட்டிக் கொண்டு சென்று, அதை நன்கு வரைந்து வண்ணந்தீட்டிக் கொண்டு வந்திருந்தான் அவன். அப் படத்தைப் பார்த்தபோது பொற்கொடிக்குத் தன்னைப்பற்றி மிகப் பெருமையாக இருந்தது. ஒரு கலைஞன் தன்னைச் சித்திரம் வரையவேண்டும் என்று நினைக்குமளவு, தான் அழகாக இருப்பதாக எண்ணி அவள் அன்று பூரித்துப் போனாள். அப்படத்தைப் பத்திரப்படுத்திக் கண்ணாடிபோட்டுத் தன் அறையில் மாட்டிவைத்தாள்.

அக் கலைஞன் தன் வாழ்வைத் தெளிவுற அமைத்துக் கொள்ளாதவன். அவனிடம் நிறையச் சொத்தும் செல்வமும் இருந்தன. அவனுடைய கலைத்திறன் காரணமாக நிறையப் பணம் சேர்ந்ததே தவிர, அவன் உலகியல் தெரியாதவன். அவன் காதலித்த ஒரு பெண் அவனை நன்றாக ஏமாற்றிவிட்டு, நிறையப் பணத்தோடு ஓடிய கதை அவளுக்குத் தெரியும். அவன் குடிப்பழக்கமும் உள்ளவன். ஆனாலும் நன்னன் என்ற தன் பெயருக்கேற்ப நல்லவன். அன்று அவனிடம் அவள் உள்ளார்ந்த நட்புக் கொண்டாள். ஆயினும் அன்றைய அவள் மனநிலை எஃகினும் வலியது. இந்நாட்டுக் குடும்ப வாழ்க்கை என்ற வேலி, எல்லை, வரைகோடு மிகச் சிறப்பானது. திருமணத்திற்கே 'வரைதல்' என்றல்லவா பெயர் வைத்தார்கள்!

எல்லைக்கோடிட்டுக் கொள்ளுதலும் பிறவற்றைத் தள்ளி விடுதலும் ஆகிய ஒரு சிறப்பை இவ் 'வரைவு' நல்குகிறது. இங்குத் திருமணம் என்பதே ஒரு நோன்பு, விரதம், தவம்! அந்த எல்லையைத் தாண்டி மனம் தானும் செல்லாது! ஆனால் பொற்கொடியின் இன்றைய மனநிலை வேறு. குடும்பம் என்ற கட்டை உடைத்துவிட்டு, தானே முன்னின்று அவள் கணவனே அவளை வெளியேற்றி விட்டான். இந்த நிலையில் அந்தப் படத்தையே உற்றுப் பார்த்து, அதனடியில் 'அன்புடன் நன்னன்' என இடப்பட்டிருந்த கையெழுத்தைப் பார்த்துக் கொண்டிருந்த அவள் மனம், அந்தக் கலைஞனைத் தாகத்தோடு நினைத்தது. அவனிடம் அந்த மனம் வேட்கையோடு விரைந்து ஓடியது. ''அன்று அவன் நம் முழு வடிவத்தையும் தன் நெஞ்சிலேயே வைத்திருந்து, வீட்டிற்குப் போய் எழுதி வர முடிந்தது என்றால், அதற்குக் காரணம் இருந்திருக்கலாம். அந்தக் கலையுள்ளத்தில் அன்று வேட்கை துளிர் விட்டிருக்கலாம். ஆனால் அந்தத் துளிரைச் சற்றும் ஆதரவோடு நோக்காது, முளையிலேயே கிள்ளி எறிந்துவிட்டோம். அந்த வேட்கை அவன் உள்ளத்தினுள்ளேயே மடிந்து மண்ணாகியிருக்கவேண்டும். இல்லையென்றால் பிறகு பலமுறை அவன் சோர்வோடு காணப்பட்டிருப்பானா? கடைசியில் அவன் கற்பகத்திற்குப் பாடம் சொல்ல வருவதையே நிறுத்திவிட்டானே'' என இவ்வாறு பொற்கொடியின் நினைவோடியது. திடீரென்று அவள் சிந்தனை எங்கெங்கோ பாய்ந்தது: ''......அவள் பட்டிக்காட்டுப் பெண்ணாகிருள். அவள் கழுத்தில் மஞ்சட் கயிறு மின்னுகிறது. அவளைக்கண்டு உலகமே ஒதுங்கிச் செல்கிறது. எல்லோரும் அவளிடம் மரியாதை செலுத்துகின்றனர். அங்கே சரவணன் மாப்பிள்ளைக்கோலத்தோடு வருகிருன். ஆகா, அவன் முகத்தில்தான் என்ன மலர்ச்சி, எவ்வளவு பெருமிதம்! அவள் இந்த உலகத்தையே—நன்னன் உட்பட—மிக அலட்சியமாகப் பார்த்துவிட்டு, சரவணன் கைகளில் போய் விழுகிருள்! அவன் அப்படியே

அவளை அரவணைத்துக் கொள்கிறான்! அவனும் அவளைத் தவிர அனைவரையும் அலட்சியத்தோடு, தன் பார்வையி லேயே ஒதுக்கித் தள்ளுகிறான். வேறு எவர்க்கும் உரிமை யில்லாத உலகத்திற்கு, தம் இருவருக்குமட்டுமே உரிமை யுடைய உலகத்திற்கு, தங்களின் தனி இல்லற உலகத் திற்கு இருவருமே 'உயர்ந்து உயர்ந்து' செல்கிறார்கள். அங்கே அவன் அரசனாகிறான்; அவள் அரசியாகிறாள். அந் தக் குடும்ப நாட்டில், குழந்தைகள் சுற்றம் என்ற குடி படை சூழ, இல்லற அரசாட்சி இனிதே நடைபெறுகிறது!.. திடீரென்று பைத்தியம்பிடித்துச் சரவணன் அவளைக் கழுத் தைப் பிடித்துக் கீழே தள்ளி விடுகிறான்; அவளும் தலை குப்புற விழுகிறாள். இருவரும் குட்டிக் கரணம் பாய்வதே போல், உருண்டு உருண்டு வான் வழியாக வீழ்ந்து, அதல பாதாலத்தில் போய் விழுகிறார்கள்! அங்கே ஆயிரக் கணக்கானவர்கள் ஆடிப்பாடிக்கொண்டு கூத்தடிக்கிறார் கள். இப்போது பொற்கொடி நவநாகரிக மங்கையாகக் காட்சி தருகிறாள்! ஹிப்பி உடை, விருப்பம்போல் எங்கும் சுழலும் பார்வை! எழிலை முழுவதும் வெளிப்படுத்திக் காட் டும் பச்சைத்தனம்! வெட்கமற்ற பார்வைகள்! இப்போது ஒவ்வொருவரும் அவளைக் கைகாட்டி அழைக்கிறார்கள்! எல்லோரும் அவளை விழுங்கிவிடுவது போல் பார்க்கிறார் கள்! அவளும் ஒவ்வொருவரையும் அரவணைப்பதுபோல் பார்க்கிறாள். அவள் 'பால்நடனம்' ஆடுகிறாள்! ஒவ்வொரு வர் கையிலும் தவழ்ந்து தவழ்ந்து, ஒவ்வொருவர் மார் பிலும் புதைந்து புதைந்து, அவள் கணத்திற்குக் கணம் கைமாறி ஆடுகிறாள்! அவர்களில் ஒருவனாகச் சரவணனும் அங்கே ஓரத்தில், ஒதுக்குப் புறத்தில் நின்று கொண்டிருக் கிறான். அங்கே கலைஞன் நன்னன் வருகிறான். கடைசியில் அவன் கைகளிலே போய் விழுகிறாள் பொற்கொடி!..."

பொற்கொடியின் நினைவோட்டம் தடைப்படுகிறது. ஆண் பெண் சமத்துவத்தைப் பற்றி வாய்கிழியப் பேசும் இன் றையப் புரட்சியாளர்களை அவள் மனம் நினைவு கூர்கிறது. "ஆண், பெண் சமத்துவம் என்றால், பெண்ணுக்கு எந்த

அளவு குடும்பப் பொறுப்புண்டோ, அந்த அளவு ஆணுக்கும் இருக்கவேண்டும் என்று வற்புறுத்தலாம் அல்லவா? பெண்ணுக்கிட்ட வேலி ஆணுக்கும் உண்டுதானே? பெண் குடும்ப மரபுகளைப் பேணுவது போல, ஆணுந்தானே அம்மரபுகளைப் பேண வேண்டும்! பெண்ணிடம் எந்த அளவு நன்றியை, அன்பை, கற்பை ஆடவன் எதிர்பார்க்கிறானோ, அந்த அளவு நன்றியை, அன்பை, கற்பை உடையவனாக அவனும் வாழவேண்டும்தானே! இவ்வாறு வற்புறுத்துவதை விட்டுவிட்டு "ஆண் எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்றால் பெண்ணும் எப்படி வேண்டுமானாலும் வாழக்கூடாதா? ஆணிடம் கற்பை வற்புறுத்தாத சமுதாயம் பெண்ணிடம் மட்டும் வற்புறுத்தலாமா? ஆணுக்கு எவ்வளவு சுதந்திரமோ, அவ்வளவு சுதந்திரம் பெண்ணுக்கும் வேண்டுமல்லவா?" என இவ்வாறு தங்கள் வீழ்ச்சிக்குச் சாதகமாக இப்புரட்சிக் கனல்கள் பொழிந்து தள்ளுகின்றன!...''மரபுகள் உடையும் போது எல்லாமே சிதைகிறது. அணைக்கட்டின் அடியில் விழுந்த சிறு பொத்தல் ஒன்று, அணைக்கட்டையே அழித்துவிடுவது போன்றதுதான் கட்டுப்பாடும்! அணையை அழித்துவிடுவதா சுதந்திரம்...!" இவ்வாறெல்லாம் சிந்திக்கச் சிந்திக்கப் பொற்கொடிக்குச் சரவணன் மீது ஆறாத சினம் பொங்கியது. ஆறு மாதத்திற்குமேல் குற்றுயிராகக் கிடந்தும், தன்னைத் திரும்பியும் பாராத அவனை அவள் மனம் அடியோடு வெறுத்தது. "கடிதங்களுக்குக் கூடவா பதில்போட நேரமில்லை? தனக்கு வேண்டும் போதெல்லாம் மிகக் கீழாகப் பயன்படுத்திக்கொள்ள மட்டும் தெரிகிறது. உடல் நலமில்லையென்றதும் இனி இவளை வைத்து வியாபாரம் பண்ணமுடியாது என்று விட்டுவிடுவதா? இவருக்குச் சரியான பாடம் கற்பிக்கவேண்டும்? நேரில் பார்க்க நேர்ந்தால் முகத்தில் காறித் துப்பவேண்டும்!" என இப்படிக் கொதித்தது அவள் மனம்.

தன் உள்ளம் தன்னைத் திரும்பியும் பாராத சரவணனை விட்டு விட்டுத் தன்னைத் தன் உள்ளத்தில் ஓவியமாய் அழகொழுக எழுதிப் பார்த்திருந்த நன்னனிடம் அடிக்கடி செல்வதைப் பொற்கொடி நன்றாக உணர்ந்தாள். நல்ல தன் நன்மையையும் தீயதன் தீமையையும் அவள் உள்ளம் போராடிச் சிந்தித்துக்கொண்டே இருந்தது. கடைசியாக அவள் சிந்தனை ஒரு முடிவுக்கு வந்தது. தன் சமையலாளை அனுப்பி நன்னனை வீட்டிற்கு அழைத்துவர ஏற்பாடு செய்வதெனத் தீர்மானித்தாள்.

O

"மாயிருள் ஞாலம் மறுவின்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன்று ஒருமுகம்''

19

நன்னன் சிறிது தளர்ந்து காணப்பட்டான். ஆயினும் அவனிடம் அழகுணர்ச்சியும் கலைப்பண்பும் பொலிவதை அவன் முகமே எடுத்துக்காட்டியது. அவள் காட்டிய இருக்கையில் அவன் அமர்ந்தான். வேலையாளைக் காபி கொண்டு வரச் சொல்லிவிட்டு, அவள் அவனுக்கு அணுக்கமாக ஓர் இருக்கையை இழுத்துப்போட்டு அமர்ந்துகொண்டாள்.

''அன்று என் படத்தை அவ்வளவு இயற்கையா வரைஞ்சுகொண்டு வந்தீகளே! எப்படி முடிஞ்சிது? சென்னையில் எல்லாம் 'மாடலாக' நிற்பவர்கள் மணிக்கணக்கில் நின்றாலும், வரைய வரவில்லை என்கிறார்களே. என்னைப் பார்த்தபின், வீட்டில் போய் வரைய உங்களால் மட்டும் எப்படி முடிஞ்சிது?''

''இந்தக் கேள்வியை அப்போதே, அன்றைக்கே கேட்பீர்கள் என நான் எதிர்பார்த்தேன்.......ம்ம்ம்...சரி...என்னாலும் வேறு யாரையும் அப்படி வரைந்திருக்க முடியாது?" என்று கூறிய நன்னன் மேலும் தொடர்ந்து பேசினான்.

''அவர்கள் எல்லாம் ஒருமுறை பார்த்தபிறகு என் மனக் கண்ணை விட்டு நீங்கி விடுகிறார்கள்.''

"அப்படியானால் நான்... உங்க மனக்கண்ணில் அப்படியே நின்றேனா?''

''படம் என்ன சொல்லுகிறது?''

''அதைத்தான் சொல்லுகிறது!''

''இன்றைக்குத்தான் அதை வெளிப்படுத்த முடிந்ததாக்கும்?''

''எதற்கும் வாய்ப்பும் காலமும் வரவேண்டாமா? இப் போது...!''

''என்ன சொல்லுகிறீர்கள்...?''

''நீங்கள் நினைச்சதைத்தான் சொல்கிறேன்!''

இருவரும் வாய்விட்டுச் சிரித்தார்கள். காபி கொண்டு வந்த வேலையாளிடம் அதை வாங்கி, நன்னனுக்கு ஊற்றிக் கொடுத்துவிட்டுத் தானும் பருகத் தொடங்கினாள் அவள்.

''இப்போது என்னைக் கூப்பிட்டது...?'' என்று கேட் டான் ஓவியக் கலைஞன். காரணம் தெரிந்து கொள்ளும் ஆர்வம் அவன் முகத்தில் ததும்பியது.

''இப்போது மீண்டும் என்னைப் படம் வரைய ஓய்விருக் குமா? நீங்கள் எவ்வளவு நேரம் இருக்கச் சொன்னாலும் நான் நீங்க சொல்லுகிற விதத்தில் உங்கள் எதிரே அமர்ந் திருப்பேன்'' என்றாள் அவள்.

''அப்படியா? நான் சொல்லும் விதத்தில்...''

''உறுதியாக...''

''நான் இயற்கை அழகை அப்படியே எழுத விரும்பு வேன். ஒரு பெண்ணுக்கு ஆடையும் அணியும் பிறவும் எல்லாம் சுமைகளே. அவை அவளுடைய இயற்கை அழகுக்கு ஈடாகா...!''

''நான்தான் சித்தமாக இருக்கிறேன் என்றேனே!''

மாலையில் வண்ணமும் தூரிகையுமாக வருகிறேன் என்று கூறிவிட்டு அவன் புறப்பட்டான். வாசல்வரை வந்து பொற்கொடி அவனை வாஞ்சையோடு வழியனுப்பி வைத்தாள்.

O

பொற்கொடி இப்போது நன்னனின் நீங்காத நிழலாகி விட்டாள். அவள் நெஞ்சக்கரிப்பை நீக்க, இப்பொழுது இடையீடில்லாமல் மது கிடைத்தது. சரவணன் இல்லாத குறையே தெரியாமல் மட்டுமன்றி, அவன் வராமலே போனாலும் போகட்டும் என்ற நிலைக்கு அவள் வந்து விட்டாள். உலகத்தைப் பற்றியும் அவள் அத்துணை அக்கறைப்படவில்லை. ''வெள்ளம் தலைக்கு மேல் போய்விட்டது; இனியென்ன?'' என்றே அவள் எண்ணினாள்.

''இன்னும் இளமையோடிருக்க வேண்டும்; இன்னும் கட்டழகோடு திகழவேண்டும்; இன்னும் கவர்ச்சியாகக் காட்சியளிக்கவேண்டும்'' என்று அலைந்தாள் அவள். புதுப்புது உடற்பயிற்சிகளைச் செய்தாள்; மருந்துகளை உண்டாள்; ஒப்பனைகள் பூண்டாள் அவள்! அவளை ஆயிரம் கோணத்தில் படம் வரைந்தான் நன்னன்! எல்லாம் இயல்பாக, இயற்கையாக, அப்படியப்படியே!! அப்படங்களிற் சில மிக நல்ல விலைக்குப் போயின. அவற்றை விற்பதில் பொற்கொடி கூச்சப்படவில்லை. ''கைநிறையப் பணம் கிடைக்கிறதே'' என மகிழ்ந்தாள். தான் கலைக்காக மிக நல்ல சேவை செய்வதாக அவள் கருதிக் கொண்டாள். இக்கலையில் ஆர்வமுடைய உலகமும் அவளை 'அழகுக் கலை அரசி' என மதிப்பிட்டுப் பாராட்டியது.

ஒரு சிலர் கூறினார்கள் சைகிள்விடப் பழகினால், பெண்ணுடல் வலுவும் பொலிவும் அடையும் என்று! அவ்வளவு தான். புது மிதிவண்டி ஒன்று வாங்கப்பட்டது. நன்ன

ணின் 'தோட்டமாளிகை' ஊரைத் தாண்டி, சென்னை போகும் வழியில், நீண்ட தூரத்தே, தனித்து இருந்தது. அங்கு நன்னனே அவளுக்கு மிதிவண்டி ஓட்டக் கற்றுக் கொடுத்தான். "இவ்வளவு பெரிய பொம்பிளை சைகிள் விடுறதைப் பார்த்தியாடா?'' என்று மாடுமேய்க்கும் பையன்கள் தங்களுக்குள் கிண்டல் செய்தார்கள். முதலில் அவள் அடிக்கொரு தடவை தவறி விழுந்தாள். அவள் கீழே விழுந்துவிடாமல் நன்னன் தாங்கிக் கொண்டான். அவளை மிதிவண்டி மீது உட்கார வைத்துத் தள்ளிவிட்டு, அவன் கூடவே பின்னுக்கு ஓடினான். ஒருமுறை அவள் பெரிய பள்ளத்தில் விழ இருந்தபோது, நன்னன் விரைந்து தாவி ஓடினான். வண்டி அவன் மீது விழ, அவன் பள்ளத்தில் உருண்டு விழுந்து நன்ருகக் காயம்பட்டது. பொற்கொடி மெதுவாக நழுவி, அவன் மார்பில் சாய்ந்து விழுந்ததால், காயப்படாமல் தப்பித்துக் கொண்டாள். பள்ளத்தினுள்ளே மிதிவண்டியும் அதன்மேல் நன்னனும் அவன் மேல் பொற்கொடியுமாக வீழ்ந்து கிடந்தனர்! ஆனால் இப்போதெல்லாம் அவள் மிக விரைந்து மிதிவண்டி ஓட்டுகிருள்; பழகிக் கொடுத்த நன்னனுற்கூட அவள் அளவு விரைவாக ஓட்ட முடியவில்லை!

சிலர் படகு வலிப்பதினுல் அழகு கூடும் என்ருர்கள். கேள்விப்பட்ட நாளிலிருந்து, பொற்கொடி அதையே பிடிவாதமாக எண்ணிக் கொண்டிருந்து, காவிரியாற்றில் படகு விடவும் பழகினுள். உயிருக்கு ஆபத்து என்று கூறியும் குறிப்பிட்ட வயதிற்கு மேல் இவையெல்லாம் கூடாதென்று தடுத்தும் அவள் கேட்பதாக இல்லை. 'என்றும் இளமையாய் இருக்கவேண்டும்' என்று அவள் மனத்தில் ஓர் ஆதங்கம்-ஆர்வம்-வேட்கை தூண்டி விடப்பட்டு விட்டது. அவள் உள்ளத்தில் கலையுணர்வும் அழகுணர்ச்சியும் முன்பும் இருக்கத்தான் செய்தன. ஆனுல் அவை குடும்பம் என்ற பலகணி வழியாக மட்டுமே பார்த்துச் சுவைக்கப்பட்டன. இப்போது அவள் கணவனே வேலியை எடுத்துவிட்டு, குடும்பச் சுவர்களைத் தாண்டி,

அவளை வெளியேற்றிவிட்டான். காவியமாக இருந்தவள் இதனால் நெடிமிக்க, ஊறிய, பழங்கள்ளாகிப் போனாள்! பெண்ணாகப் பெட்புமிக்கு விளங்கியவள் பேயாக அலையத் தொடங்கினாள்!

நன்னன் தன் பழைய காரை விற்றுவிட்டுப் புதுவண்டி வாங்கினான். பொற்கொடி காரோட்டப் பழகவும தவற வில்லை. நன்னன்தான் அதையும் பழகிக் கொடுத்தான். இவர்கள் இப்படிப் பழகுவதைக் கண்டு, ஊருலகம் கேவல மாக பேசிற்று. அதைப்பற்றிக் கவலைப்படுகிற கட்டத்தை எல்லாம் பொற்கொடி தாண்டிவிட்டாள். இந்த நிலையில் உற்றார் உறவினர் கூடச் சங்கடப்படத் தொடங்கினார்கள். கற்பகவல்லி தாய்வீட்டிற்கு வருவதை அறவே நிறுத்தி விட்டாள். அவள் வீட்டில், ''ஒரு முறை போய் உங்க அம்மாவைப் பார்த்ததாத் தெரிஞ்சாலும் உன் காலை வெட்டிப்பிடுவோம்'' என்று கடுமையாகச் சொல்லித் தடுத்துவிட்டதுதான் அதற்குக் காரணம். கனகசபை வீட்டிலிருந்தும் யாருமே வருவதில்லை. அவன் கண்டபடி செலவு செய்கிறான் என்றும் தன் மனைவியுடன் அடிக்கடி சண்டை போட்டுக் கொள்கிறான் என்றும் கூறினர். பொற்கொடி எதைப்பற்றியும் கவலைப்படவில்லை. திசை திருப்பிவிடப்பட்ட படகு போலவும், துடுப்பு இல்லாத புணை ஒன்று வெள்ளத்தில் போவதுபோலவும் அவள் வாழ்க்கை ஓடிக்கொண்டிருந்தது.

○

சரவணன் சென்னையில் நிலையற்ற வாழ்வில் மிதந்து கொண்டிருந்தான். அவன் எடுத்த எந்த முயற்சியிலும் நிலையாக நிற்கமுடியவில்லை. அவனுடைய நண்பர்கள் அவனை எதிலும் நிலைபெற விடவில்லை. கேளிக்கையிலும் சோம்பேறித்தனத்திலுமாகப் போன பொழுதுபோக, எஞ் சிய நேரமெல்லாம் குடியிலும் சூதிலும் கழிந்தன. குதி ரைப் பந்தயம் தொடங்கிவிட்டாற்போதும், அவன் சிந் தனை, செயலில் பெரும்பகுதியை அது கவர்ந்துகொள்ளும்.

பொற்கொடிக்கு உடல்நலமில்லை என்ற சாக்கில் அவன் அவளை நினைக்கவில்லை. திருச்சிக்குப்போய்த் தலை காட்டவும் அவனுக்கு வெட்கமாயிருந்தது. 'சேட்ஜி' யும்பம்பாய் போனவர் திரும்பவே இல்லை. அவருடைய பிள்ளைகள் தான் கடையைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள். வைத்தியின் பிடியிலிருந்து தப்பவும் அவள் ஊர்போனது நல்லதே என அவனுக்குப்பட்டது. ஆனாலும் ஏதோ குலுக்குச் சீட்டில் விழுவது போலத் தனக்குப் பெருந்தொகை கிடைத்துவிடுவதாகவும் தான் திருச்சிக்குப் போய்க் கடன்களையெல்லாம் தூக்கி எறிந்துவிட்டுப் பொற்கொடியைப் பார்ப்பது போலவும் அவன் மனப்பால் குடிப்பதற்கு மட்டும் தவறுவதில்லை. அவளுடைய கடிதங்களைப் பெற்ற போதெல்லாம் இவ்வாறு ஏதேதோ சிந்திப்பான்; பதில் எழுதமாட்டான்.

ஆசைப்படுகிறபடி நடக்கவில்லையென்று தெரிந்த பிறகும், அவனால் அப்பழக்கங்களை மாற்றிக்கொள்ள முடியவில்லை. திருச்சியில் பொற்கொடிக் குரியதாக, அவள் தந்தை கொடுத்த வீட்டையும் பொய்கூறி, ஒருவரிடம் எழுதிக் கொடுத்து கடன் வாங்கினான். கிட்டத்தட்ட இரண்டு லட்சம் வாங்கிவிட்டான். மேலும்மேலும் அதன்பேரில் அவன் கடன்கேட்ட பொழுது, அவர் திருச்சி போய் வீட்டைப் பார்க்கவேண்டும் என்றும் அதன்பிறகு வீட்டையும் அவரிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் வட்டிக்கு வாடகையின்றி வீட்டை அனுபவித்துக் கொள்வதாகவும் கடன் முழுவதுமாக அசலைக் கட்டியதும் வீட்டைத் திருப்பித் தந்துவிடுவதாகவும் கூறினார். அதற்கு இசைந்தால் மேலுஞ்சிறிது பணம் தருவதாகவும் அவர் ஆசைகாட்டவே அவரையும் கூட்டிக்கொண்டு, இரவோடு இரவாகத் திருச்சிக்குப் புறப்பட்டான் சரவணன். அவ்வளவு பண நெருக்கடி அவனுக்கு! பணத்தேவை ஏற்பட்டால்தான் மனம் மாறுவது அவன் வழக்கமாயிற்று!

○

சரவணன் அந் நண்பருடைய காரில் திருச்சியில் தன் வீட்டிற்கு வந்தபோது, காலை 3 மணி இருக்கும். சமையற்காரன் மட்டுமே வீட்டிலிருந்தான். தன் பெட்டியை எடுத்துக்கொண்டு, நண்பரையும் அழைத்துக்கொண்டு உள்ளே சென்று வீடுமுழுவதும் சுற்றிக் காண்பித்தான். அவர் மன நிறைவுடன் காணப்பட்டார். பிறகு அவரை மலைக் கோட்டை அருகேயுள்ள தங்கும் விடுதி ஒன்றில் அறையெடுத்துத் தங்க வைத்துவிட்டு, அன்று மாலை வந்து காண்பதாகக் கூறித் தன் வீட்டிற்கு விரைந்தான் சரவணன்.

மீண்டும் சரவணன் தன் வீட்டிற்குச் சென்றபோது காலை 6 மணி ஆகிவிட்டது. பொற்கொடி அப்போதும் வரவில்லை என்றறிந்ததும் சரவணனுக்குக் கடுஞ்சினம் பொங்கியது.

'அவள் எங்கே?' எனச் சமையற்காரனிடம் வினவினான் அவன். ''அதை ஏன் கேக்கிறீங்க ஐயா?" என்ற சமையற்காரன் அடுப்பு மெழுகுவதை விட்டுவிட்டுச் சற்றே திரும்பிப் பார்த்தான்; அழாக்குறையாக ''அது பெரிய கதைங்க'' என்று நிறுத்தினான். அச்சமையற்காரன் சரவணனை மிகவும் நல்லவன் என்று உண்மையிலேயே நம்பிக் கொண்டிருப்பவன். தொழில் ஈடுபாட்டாலும் பணம் சம்பாதிக்கிறதுக்காகவும் சரவணன் சென்னையிலேயே தங்கி அரும்பாடுபடுகிறான் என்றும் அவனை ஏமாற்றிவிட்டு இந்த அம்மாள் அலைகிறாள் என்றும் அச் சமையற்காரன் மனமார எண்ணினான். அதனால் அவனுக்குப் பொற்கொடியம்மாள் மீது கோபம் கோபமாக வந்தது.

''கதை என்னடா கதை... சும்மா சொல்லு... கழுதை எங்கே போனாள்?'' என்று சரவணன் முழங்கினான்.

"இப்பவெல்லாம் அம்மா வீடே தங்கிறதில்லீங்க, அந்தப் பாட்டுவாத்தி வந்து கூட்டிக்கிட்டுப்போயிடுவாருங்க. போனால் நாள் முழுவதும் கூட வரமாட்டாங்க! வந்தாலும் ரெண்டுபேருமாத்தான்வருவாங்க... ஐயோ,வெளியே சொல்லப்பிடாது ஐயா! குடி, கும்மாளம்! எனக்கு இங்கே

இருக்கச் சகிக்கலே. எல்லாத்தையும் உங்களுக்காகப் பொறுத்துக்கிட்டு இருக்கிறேன். எங்க அப்பன் பாட்ட னெல்லாம் உங்க உப்பைத்தின்னு வளந்தவங்களாச்சே!"

"இப்போ எங்கேடா போறுள்? ..போன இடம்தெரியுமா?"

''தெரியாதுங்க ஐயா! அந்த வாத்தியார்தான் வந்து கூட் டிக்கிட்டுப் போனுரு! அவரு பங்களா ஊருக்கு வெளியே எங்கேயோ தோப்புக்குள்ளாற இருக்காம். அவரோட சேர்ந்துக்கிட்டு அம்மா அடிக்கிற கூத்து, ஊரு உலக மெல்லாம பரவிப்போச்சு. வெளியே தலைகாட்ட முடியலே ஐயா! சந்தையிலே என்னைப் பார்த்தாக்கூடச் சிரிக்கி ருங்க!''

''கற்பகம், கனகசபை வருறதுண்டா? அவங்களுக்கு இதெல்லாம் தெரியுமா? மாணிக்கம் வந்தானு?"

''மாணிக்கம் ஒரே ஒருமுறை வந்திச்சுங்க. அதுக்கப்புறம் வரவே இல்லைங்க. அங்கேயேதான் கான்வெண்டிலே படிச்சுக்கிட்டிருக்காம். கற்பகத்தம்மா பிள்ளைங்களைக் கூட் டிக்கிட்டு ஒருநாள் வந்தாங்க...மாப்பிள்ளை கூடவரலலே. அதுக்கப்புறம் அவங்களையும் இங்கே காலடி எடுத்து வைக்கப்படாதுன்னு சொல்லிட்டாங்களாம். கனகசபை ஐயா ரொம்ப மோசமாப் போயிட்டாருங்க...அவரு குடி, சூதாட்டமுன்னு போயிக் குடும்பத்தையே கவனிக் கல்லிங்க. இருந்தாலும் உங்க குடும்பத்திலே இப்படிப் பிள்ளை பொறக்கக் கூடாதுங்க...அவரு மனைவி வழியிலே வந்த சொத்து, நகை நட்டையெல்லாம் ஆடித் தீர்த் திட்டாருங்க...இப்போ கடன்தொல்லை அதிகம்...!''

"பொற்கொடியைப் பார்க்கச் சென்னையிலேயிருந்து யாரும் வருறதுண்டா?''

''ஒருத்தர் கூட வருறதில்லிங்க! இந்த ஊர்ச் சனங்களே நம்ம வீட்டோரமா நடக்கறதில்லிங்க! அவ்வளவு அசூ சைப்படருங்க...இங்கே நடக்கிறது ஒரு எல்லைக்குள்ளே இல்லிங்க...நீங்களும் வீட்டையே கவனிக்காம சென்னையி லேயே தொழில் தொழில்னு இருந்திட்டீங்க!"

சரவணன் இதைக்கேட்டுத் தன்னைப் பொறுத்தவரை இவனைப்போல் சிலபேராவது பெருமையாக நினைப்பதுபற்றி ஆறுதலடைந்தான். அச்சமயம் வெளியே 'ஆரன்' ஒலி கேட்டது. சரவணன் வெளிவாசலை எட்டிப்பார்த்தான். பொற்கொடி காரைவிட்டு இறங்கிக் கொண்டிருந்தாள். வண்டியினுள்ளிருந்த நன்னனுக்குக் கையை அசைத்து விடைகொடுத்தாள். அவன் காரைத் திருப்பிக்கொண்டு புறப்பட்டான். உள்ளே வந்த பொற்கொடி, மிக அலட்சியமாக, எதையும் கவனியாமல் 'காபி கொண்டு வா' என்று சமையற்காரனிடம் கூறிவிட்டு, மேலே ஏறிச்சென்றாள். உடன் பின்னேயே மெதுவாக மேலே ஏறிச்சென்ற சரவணன் அவள் அறையில் போய் எட்டிப்பார்த்தான்.

'யாரது?' என்று திரும்பிய பொற்கொடி சரவணனைப் பார்த்துத் திடுக்கிட்டாள். அவள் கண் முழுவதும் சிவந்திருந்தது; தலைமுடி குலைந்திருந்தது. அவள் மிகவும் அயர்ந்து காணப்பட்டாள். சரவணனை அவள் எதிர் பார்க்கவில்லை என்று தோன்றியதே தவிர, சட்டை செய்ததாகத் தெரியவில்லை.

"எங்கேடி சுத்திட்டு வருறே?'' —சரவணன் உறுமினான்.

"படம் பார்த்திட்டு வருறேன்,'' அவள் குரல்.

''விடிந்து எட்டுமணி வரைக்கா?" சரவணன் சிரிப்பு எங்கும் எதிரொலித்தது. ''அது என்னடி படம்? அப்படிப் படம்...!''

''பெண்கள் ஆண்களோட 'சோஷலாப்' பழகிறதைப் பத்தி...கணவனாலே கைவிடப்பட்ட பெண்கள் எப்படி வாழணுங்கிறதைப் பத்தி...ரொம்ப நல்ல படம்.'' அவளும் பதிலுக்குச் சிரித்தாள். அவள் குரலில் வெறுப்பும் உறுதியும் தொனித்தன.

''ஹூம்! எங்கேடி சுத்திட்டு வருறேன்னு கேட்டா...! கூட வந்து விட்டுட்டுப் போறானே. அவன் யாரு?'' சரவணன் குரல் கீழிறங்கித்தான் ஒலித்தது.

''என்னோட நண்பர்...!''

''நண்பர்! தடிக்கழுதை, உன்னை என்ன செய்யறேன் பாரு!''

''ஏன்? என்ன செய்யிறதுக்கு மீதமிருக்கு? உங்களுக்கு எத்தனையோ நண்பர்கள்...நண்பிகள்...அதுபோல எனக்கும் இருக்கக் கூடாதா?''

''சொந்த ஊர்லே வந்து...ஊர் சிரிக்குமேன்னு நெஞ்சிலே நினைப்பிருக்கா...''

"ஏனாம்? நீங்க சொல்ற நண்பர்களோட சுத்தினால் ஊர் சிரிக்காதா?"

''அது சென்னை; இது திருச்சி!''

''திருச்சியிலே மட்டும் ஒரு பொம்பிளை தனியாத் தவிக்க முடியுமா? எல்லாம் நீங்க கத்துக்கொடுத்ததுதான்!''

''ஓகோ...அவ்வளவு திமிறேறிப் போச்சா உனக்கு? உன்னை என்ன செய்யிறேண் பாரு!...ஓடுற காவிரியிலே தூக்கி எறியப் போறேன்."

''நல்லாத் தூக்கி எறிங்க...எறிஞ்சிட்டுக் கம்பி எண்ணுங்க...என்னைத்தான் எப்பவோ கொன்னுட்டீங்களே..."

''நான் ஏண்டி கம்பி எண்ணப் போறேன். உன்னையும் தூக்கி எறிஞ்சிட்டு நானும் விழுந்து சாகப்போறேன்."

பலமாகச் சிரித்த நங்கை, ''காலைக் கட்டிக்கிட்டு ஆத்திலே குதிங்க. உங்களுக்கு நீந்தத் தெரியும்!'' என்றாள்.

சரவணன் பற்களை நறநறவென்று கடித்துக்கொண்டான். ஆனாலும் அவன் அவள் பேச்சைக் கேட்டுக் குமுறினானே தவிரச் செயலற்றவன்போல் காணப்பட்டான். அவன் மிக மோசமான எல்லைக்குப் போனதற்குத் தானும் ஒரு காரணம் என்பது போல் அவனுள்ளம் மறுகியது. தான் அந்த வீட்டை ஒருவருக்கு எழுதிக்கொடுக்க இசையமாட்டாள் என்று, அப்போதைய நிலையில் அவனுக்கு ஆத்திரமாக வந்தது. அவள்மட்டும் அவனுடைய உள்மனத்தைப்

புரிந்துகொண்டு, ''இந்த வீட்டை விற்றுவிடுங்கள்; நானும் கையெழுத்துப் போட்டுத் தருகிறேன்'' என்று கூறியிருந்தால், வந்த ஆத்திரமெல்லாம் பறந்திருக்கும். கையில் காற்காசும் இல்லாமல் உடன்வந்திருக்கும் செல்வரையே செலவுக்கு நம்பியிருப்பதால், தன்னைச் சாராமல் யாருடனே சுற்றும் பொற்கொடி அவனுக்குப் பெரிய எதிரியாகத் தென்பட்டாள்.

அவள் படுக்கையில் விழுந்து பொருமுகின்ற ஓசை கேட்டது: "அன்றைக்கு நான் சென்னையிலே செத்திருந்தால், செத்த இடம் புல் முளைத்துப் போயிருக்கும். கவனிப் பாரில்லாமே அறையில் அடைபட்டுக் கிடந்தேன். ஒரே ஊர்ல இருந்துக்கிட்டே திரும்பிப் பார்க்க ஆளில்லே.'' அவள் குப்புறப்படுத்து அழுது கொண்டிருந்தாள். சரவணன் அதற்கு மேல் அங்கு நிற்கவில்லை.

O

சரவணன் மாணிக்கத்தைப் போய்ப் பார்த்தபோது, அவன் கண்கலங்கி நின்றுன். 'பெற்றேர் பாசம்' என்ற தொடர்பின்றியே அவன் வளர்ந்து கொண்டிருந்தான். உணவு விடுதியை மேற்பார்வை செய்யும் பாதிரியார், சரவணனைத் தனியே அழைத்து, மாணிக்கம் சில சமயங்களில் பித்துப்பிடித்தவன்போல் இருப்பதையும் ஒன்று கிடக்க ஒன்றைச் செய்வதையும் குறிப்பிட்டார். முடியுமானுல் விடுமுறையில் அவனைக் கூட்டிப் போய், வீட்டில் வைத்திருந்து நன்கு கவனித்துக் கொண்டு வந்து விடும்படி கூறினர்.

தன் மூத்த மகன் கனகசபை வீட்டில் எல்லாம் மோசமாக இருப்பதைக் கண்ட சரவணன் வருந்தினன். ''தான் கெட்டது தன்னேடு போகட்டும்; தன் மகனும் அவன் குடும்பமும் கெடக் கூடாது'' என்று அவன் மனம் ஆசைப் பட்டது. ஆனல் ஆசைப்பட்டுப் பயன் என்ன? தன் குடும்பத்தைவிடத் தன் மகன் குடும்பம் மிக மோசமாகப்

போகும்போல் இருந்தது. அவன் எல்லாச் சொத்துக் களையும் அழித்துவிட்டதாகவும், குடியிருக்கிற வீட்டையும் விற்கப் போவதாகவும், தன்னை அடித்து உதைத்துக் கொல்வதாகவும் கூறி அழுதாள் அவன் மனைவி. கனக சபை அப்போது வீட்டில் இல்லை.

சரவணனுக்கு ''இன்னும் ஒரு பெரிய தொகை அந்தச் செல்வரிடம் கடன் வாங்கி விட வேண்டும். சென்னை போக வேண்டும். தொடங்கப் போகிற குதிரைப் பந்தயத் தில் நிறையப் பணம் வரப்போகிறது. அதை எடுத்துக் கொண்டு வந்து, முன்புபோல் வாழவேண்டும்...கடனெல் லாம் தீர்ந்து தலைநிமிர்ந்து திரியவேண்டும்'' என்ற எண் ணமே முனைந்து நின்றது. எனவே மற்றையனவெல் லாம் மனத்தில் அழுத்தமாகத் தைக்கவில்லை. குடிக்கின் றவனுக்குக் குடியிலேயேதான் நாட்டமிருக்கும்; சோம் பேறிக்கு ஏது செய்தாலும் சோம்பலாகக் கிடக்கவே மனம் முந்தும்; கடன்வாங்கிப் பழகியவனுக்கு நோக்க மெல்லாம் அதிலேதான் இருக்கும். இப்போது சரவணன் இரண்டு நாளில் அந்தச்செல்வரிடம் வீட்டை ஒற்றிவைத் துப் பணம் பெறுவதிலேயே வெறி பிடித்து இருந்தான்.

○

அன்று இரவு பொற்கொடியைச் சரவணன் தனியே சந் தித்து, அவள் சம்மதத்தைக் கேட்க நினைத்தான். அவளோ இரவு பத்து மணிக்கு மேல்தான் நன்னன் வண்டியில் மீண்டும் வந்து இறங்கினாள். இருவரும் சாப்பிட வரு வார்கள் என்று சமையற்காரன் கீழே காத்துக் கொண்டி ருந்தான். சற்று நேரத்திற்கெல்லாம் மாடி மேல் பெரும் சண்டை நடப்பது காதில் விழுந்தது, ஒருவர் மீது ஒருவர் மேசை நாற்காலிகளைத் தூக்கி எறிந்து கொள்வதுபோலக் கேட்டது. சமையற்காரன் நடுங்கிப் போனான். ஒரு வேளை இருவரும் குடித்துவிட்டு ஆடினால், தனக்கும் ஆபத்தாக முடியுமே என்று அவன் அங்குபோக அஞ்சி னான். வெளியில்போய் யாரையும் கூட்டிவரவும் அவ

னுக்குத் தயக்கமாக இருந்தது. மெதுவாக மேலே படி ஏறிச் சென்று அவன் எட்டிப் பார்த்தபோது, சரவணன் பொற்கொடியைக் கழுத்தை நெரித்துக் கொண்டிருந்தான். சமையற்காரன் ''ஐயோ, அம்மா!'' என்று தன்னை மறந்து கத்திவிட்டான். அதன் பிறகுதான் சற்றே விலகி, எழுந்து நின்ற சரவணன் பொற்கொடியை நோக்கி ''உன்னையும் கொன்னு ஆத்திலே போட்டுட்டு, நானும் சாகிறனா இல்லையா பாரு! இங்கேயிருந்து வெளியிலே போனே, அவனோடே சுத்தினே, கண்ட இடத்திலேயே குத்திக் கொன்னுபிடுவேன்........டே...இவளை வெளியே விடாமேப் பார்த்துக்க...ஆமா! சாக்கிறதை!'' என்று கத்திவிட்டு அங்கிருந்து வெளியேறினான்.

o

சரவணன் செல்வரிடம் சென்று மேலும் ரூபாய் ஐநூறு மட்டும் கடன்வாங்கிக்கொண்டு, மறுநாட்காலை அவரிடம் வீட்டை ஒப்படைத்து விட்டு எஞ்சிய பணத்தைப் பெற்றுக் கொள்வதாகக் கூறினான். காலையில் அவரை நேரில் வீட்டிற்கு வருமாறு கூறி, ஒருவேளை தாங்கள் வீட்டில் இல்லையென்றாலும் கூர்க்காவிடம் சாவி வாங்கிக் கொள்ளும்படியும் விரைவில் வந்து சந்திப்பதாகவும் கூறி விட்டுச்சரவணன் புறப்பட்டான்.

நன்னனைக் காலைக் கையை முறித்து விடுவதாக ஆள் மூலம் வெருட்டியதால், அன்று முழுவதும் அவன் பொற்கொடியை அழைக்க வரவில்லை. பொற்கொடியோ மிக நெஞ்சழுத்தத்தோடு வெளியே புறப்பட்டுப் போய், எங்கும் நன்னனைக் காணமுடியாமல் அலைந்து கொண்டிருந்தாள். இரவு பத்து மணிக்குமேல் ஆகிவிட்டது. ஆத்திரமடைந்து, வெறிபிடித்துப் போயிருந்த சரவணன் தோட்டத்தில் குடியிருந்தவர்களை அழைத்து, மறுநாள்தான் வரவேண்டும் எனக் கூறிக் கொஞ்சம் பணம் கொடுத்து அவர்களுடைய கிராமத்திற்கு அனுப்பி விட்டான். சமையற்காரனை மறுநாள் எட்டு மணிக்கு வரு

மாறு கூறி, அவன் வரும்போது தாங்கள் சென்னை புறப்பட்டு விட்டால், வீட்டை ஓரளவு சுத்தம் செய்து, அன்று தன்னுடன் வந்த செல்வர் வீட்டிற்கு வரும்போது அவரிடமே ஒப்படைக்க வேண்டும் என்றும் விரைவில் வந்து சந்திப்பதாகவும் கூறி, அந்த இரவு நேரத்தில் பக்கத்துக் கிராமத்துக்குப் போய்வருமாறு அவனுக்கும் ஒரு வேலை கொடுத்து அனுப்பி விட்டான். எல்லோரும் ஒன்றும் புரியாமல் வீட்டைவிட்டு வெளியேறினர்கள்.

சமையற்காரன் வெளியேறும் சமயம் பொற்கொடி வீட்டினுள் நுழைந்தாள். வழக்கம்போல் நன்னன் உடன்வரவில்லை. அவளும் மிகவும் சோர்வுடன் காணப்பட்டாள். அவள் வீட்டினுள் புகும்போது கதவுகள் 'ஆ' வெனத் திறந்து கிடந்தன. ஒருவரையும் காணவில்லை. மிக அமைதியாக இருந்தது. அவள் மாடி ஏறித் தன் படுக்கையில் போய் விழுந்து கண்ணை மூடியபோது, அங்கு ஒளிந்திருந்து பாய்ந்த நால்வர் அவளை அப்படியே கழுத்தை முறித்துக் கொன்றுவிட்டனர். நள்ளிரவு நேரம்! அவள் உடலம் மூடையாகக் கட்டப்பட்டது. அரிசி மூடை தூக்குவது போல் அதைத் தூக்கிக்கொண்டு, அவர்கள் வீதிக்கு வர, அங்கே ஆயத்தமாக ஒரு வாடகைக்கார் வந்து நின்றது. அதில் மூட்டையைப் பின்புறம் அடைப்பானில் வைத்துவிட்டு, அனைவரும் ஏறிக்கொண்டனர். கதவுகளைச் சாத்திவிட்டு வந்த சரவணன், உறங்கிக் கொண்டிருந்த கூர்க்காவைத் தட்டி எழுப்பி, தாங்கள் வெளியூர் போவதாகவும் மறுநாள் காலையில் தன்னுடன் முதல்நாள் வந்தவர் வந்தாலும் அல்லது சமையற்காரன் வந்தாலும் சாவியை அவர்களிடம் கொடுக்கும்படியும் கூறிவிட்டுத் திறவுகோலை அவனிடம் தந்தபின் அக்காரில் ஏறிக்கொண்டான். கார் பறந்தது. கூர்க்காவுக்கும் தூக்கக் கலக்கத்தில் எதுவுமே புரியவில்லை.

சற்று நேரத்திற்கெல்லாம், நள்ளிரவு இரண்டு மணிக்குப் பின் அந்தக்கார் காவிரிக்கரை ஓரம் எங்கோ ஓரிடத்தில் நின்றது. ஓடுகிற வெள்ளத்தில் மூடையை அவிழ்த்துப்

பிணத்தையும் சாக்கையும் தனித்தனியே எறிந்தனர். காரில் வந்த முரடர்கள் சரவணனிடம் பணம் பெற்றுக் கொண்டு அக்காரிலேயே விரைந்தனர்.

சரவணன் உலகையே வெறுப்போடு பார்த்துக்கொண்டு அந்தக் கரையோரத்தில் நின்று கொண்டிருந்தான். விடியும் வரை அவன் ஆடவில்லை; அசையவில்லை. அவன் பார்வை நிலைகுத்திப் போயிருந்தது. ஓடுகிற வெள்ளத்தில் அவனுடைய ஆசை, பாசம், அன்பு, வெறி, சினம், சீற்றம் எல்லாமே சேர்ந்து ஓடிக்கொண்டிருந்தன. அங்கே அவனுள் அந்த 'வெறி' அடங்கி, அங்கு ஏதோ, எதுவோ ஒன்று நடந்துகொண்டிருந்தது.

இருள் சூழ்ந்த பின்புலத்தில் ஒரு இருண்ட இலைபோன்ற வடிவம்...ஆடாமல் அசையாமல் இருளின் இருளாக, நிழலின் நிழலாக நிற்கிறது. அதன்மீது பனி கொட்டுகிறது; இலைகள் உதிர்ந்து விழுகின்றன. அவ்வுருவமோ விருப்பு, வெறுப்பற்ற—பற்று, பாசமற்ற—இன்ப துன்பமற்ற ஒன்றுபோல, எதையும் இலட்சியம் செய்யாமல் நின்றுகொண்டேயிருக்கிறது.

மறுபடியும் திருச்சி போவது...பணம் பெறுவது...குதிரைப் பந்தயம்...எல்லாமே சரவணனைவிட்டுப் பிரிந்து, அந்தக் காவிரியில் கரைந்து, தண்ணீரோடு ஓடிக்கொண்டிருந்தன. அவன் கைகளைக் கட்டிக்கொண்டு, நிலைகுத்திய பார்வையோடு, நின்றது நின்றபடி இன்னமும் நின்றிருந்தான். அங்கே காவிரியில் அவன் ஆசை மனைவி நீராடுவதாக, அவள் கூந்தல் நீரலையோடு அலைபாய்ந்து மிதப்பதாக, அவனையும் அவள் அங்கே கூப்பிடுவதாக அவன் மனம் அலைபாய்ந்தது. அவன் கடைக்கண்கள் பனித்து நின்றன. நேரம் செல்லச்செல்ல இருள் தன் கட்டுக் குலைந்தது. பொழுது புலர்கிற சமயம். விடிவெள்ளி ஒளி வீசுகிறது! தன்னந்தனியாகக் காவிரி ஓரமாய் நின்ற நெடிய பெரிய நிழலோடு மரம்போல நின்றிருந்த, அந்த உருவத்தை அதற்குமேல் அங்கே காணவில்லை...!

○

நான்கு:

அறுவடை

"வேறுபல் துகிலின் நுடங்கி அகில் சுமந்து
ஆரம் முழுமுதல் உருட்டி வேரல்
பூவுடை அலங்குசினை புலம்ப வேர்கீண்டு
விண்பொரு நெடுவரைப் பரிதியில் தொடுத்த
தண்கமழ் அலர் இறல் சிதைய நன்பல
ஆசினிமுதுசுளை கலாவ மீமிசை
நாக நறுமலர் உதிர..."

20

நாட்காட்டியின் நாளேடுகள் உலர்ந்த சருகுபோல் உதிர்ந்த வண்ணம் இருந்தன. அடிகள் சென்னை செல்லும் நாள் நெருங்கிக் கொண்டிருந்தது. அடிகளுக்கு என்றுமில்லாத கலக்கம் மனத்தில் ஏற்பட்டுக் குழம்பிக் கொண்டிருந்தது. மலைவாயில் விழுகின்ற ஞாயிறு, கடல் வாயில் விழுகின்ற முழுமதி, உதிர்ந்து விழுகின்ற நறுமலர், காய்ந்து விழுகிற மரச்சருகு—இப்படியே சரவணர் உள்ளம் அழிவைநோக்கி வட்டமிட்டுக் கொண்டிருந்தது. நல்லுசாமியின் திருவடிவம் நினைவில் வந்துவந்து ஊடாடியபடியிருந்தது. இறை வழிபாடு செய்து, பாடுகிற பாடலில் வரும் கருத்துக்களையெல்லாம் அப்படியே மனக் கண்ணிற்குக் கொண்டு வரும் மனப்பழக்கம் உடையவர் சரவணர். 'வேறுபல் துகிலின்...' என்ற அடிகளை வாய்

ஒலிக்கத் தொடங்கும்போதே, அப் பழமுதிற் சோலையில் பாய்ந்தோடிவரும் சிலம்பாறு அவர் மனக் கண்களில் பாயத் தொடங்கிவிடும். வெள்ளைத் துகிற் கொடிகளைப் பறக்கவிட்டதுபோல அம் மலையாறு, மலையிலிருந்து படிப் படியாகக் கீழே விழுந்துவிழுந்து, தவழ்ந்து தவழ்ந்து ஓடி வரத் தொடங்கும். அதிலே அகில்கட்டைகள், சந்தன மரங் கள் பலாமரங்கள் எல்லாம் வேரோடு, தூரோடு பூவும் பிஞ்சும் காயும் கனியுமாக அடித்துக் கொண்டு வரப்படும். எங்கோ உச்சியில் இருந்த மலைத்தேன் உடைந்து வழி யும். பலாச்சுளைகள் உடைந்த கனிகளிலிருந்து சிதறி மிதந்துவரும். சுரபுன்னையின் நறுமலர்கள் தெப்பம் போல் அலையோடு கூடி அசைந்துவரும். குரங்குகள் குளிரால் நடுங்கும். யானையின் தந்தங்களை அந்த வெள் ளத்தில், ஏதோ கொம்புகுச்சிகள் போலக் காணலாம். பொன்னைக் கொழித்துத் தாவித்தாவி வரும் ஆறு, வாழையை அடியோடு சாய்க்கும். தென்னையை இளநீர்க் குலையோடு கீழே வீழ்த்தும். அப்போது அக்குலைகள் சிதறிக் காய்கள் பறக்கும். மயில்கள் அஞ்சி ஓடும். கோழி நடுங்கி ஒதுங்கும். காட்டுப் பன்றியுடன் கரடிகள் குகை களுக்குள்ளே ஓடி ஒளியும். கருங்கொம்புக் காட்டுப் பசுக் கள் நடுநடுங்கி நிற்கும். இவ்வாறு மலையுச்சியிலே யிருந்து, செங்குத்துப் பாதையில் பாய்ந்தோடிவரும் மலையருவி...........''

இறைவனைப் பற்றிய எண்ணங்களையே மனத்தில் பதிய வைத்துப் பழகிய சரவண அடிகளுக்கு, இப்போது அத் தகைய நினைவோட்டங்கள் தடைப்பட்டன. நல்லுசாமி தான் மலைபோல, வானுக்கும் பூமிக்குமாக வளர்ந்து நின் ருன். வினைவெள்ளம் பேரருவி ஆகப் பொங்கிப் பெருகிப் பாய்ந்து ஓடிவந்து கொண்டிருந்தது. அது எங்கிருந்து பாய்ந்து வருகிறதென்பதே புலப்படவில்லை. அது விழுந் தோடி வருகிற வேகத்தில் கற்பகம் குடும்பத்தோடு நடுங்கிக் கொண்டிருந்தாள். கனகசபை குடும்பம் உருண் டோடி வீழ்ச்சியடைந்து கொண்டிருந்தது. மாணிக்கம்

அதிலே அடிபட்டு வரும் களிறுபோலச் சுருண்டு இழு பட்டுப் பறிபட்டு உருண்டு கொண்டிருந்தான்.

சரவணருக்குத் தலைவலி வரும்போல இருந்தது. அடிக்கடி தலையையும், உடலையும் உலுப்பிக் கொண்டிருந்தார். நல்லுசாமி மட்டும் எதிர்ப்படாமல் இருந்திருந்தால்...... அடிகள் தம்முள் தாமே சிரித்துக் கொண்டார். நிழல் சில சமயம் இருப்பதே தெரிவதில்லை. அது நீள ஆரம்பித் தால் அதற்கும் அளவில்லை. மாலை நேரத்தில் நீண்டோ டும் அதே நிழல்தான், நண்பகலில் அடங்கி ஒடுங்கி அடி யிற் கிடக்கிறது. அடியிற் கிடக்கிறதென்றால் நேரம் பார்த்துக் கிடக்கிறதென்று பொருள்.

''வினையா? வினைப்பயனா? அது ஏது?'' என்று யாரும் மறுக்க நினைக்கலாமா? வினை பயன் தருகிறதென்பதனாலே தானே நாம் உழைக்கின்றோம். நாள் முழுதும் விறகு பிளந்துவிட்டு, மாலையில் கூலி வாங்காமல் வீடு போய் விடுவோமா? கூலியை முன்னதாகவே வாங்கிக்கொள்ள அல்லவா நம் மனம் முந்தும்! வினைப்பயனை அனுபவிப் பது ஒரு சாதாரண உண்மை. ஆனால் அதைத் தானே நாம் மறந்து விடுகிறோம். கண்ணுக்குத் தெரியாத ஒரு நுண்பொருள் என்பதால், அதன் சுழற்சியைச் செயற் பாட்டை யாராலும் கணிக்க முடிவதில்லை.

ஒரு விமானம் விழுந்து நொறுங்கியது. விமான ஓட்டி செய்த சிறு தவற்றால், விமானமே நொறுங்கி, அதிலிருந்த நூறுபேரும் அப்பளமாகி அழிந்து போயினர். விமான ஓட்டி செய்த தவற்றுக்காக அவன் கருகிச் செத்தது சரி யாக இருக்கலாம். அதற்கு அதிலிருந்த நூறுபேரும் செய்த தப்பென்ன? அதிலே ஒவ்வொருவரும் அந்தச் சூழலில் மாட்டியதற்கு ஒவ்வொரு காரணமிருக்கும். எல்லாமே நமக்குப் புலனாவதில்லை. புலனாகாததினால் அப்படிப்பட்ட செயலுக்கு முன் காரணமில்லை என மறுக்கமுடியுமா? காரணம் தெரிந்தபோது அதையே சொல்லிவிடுகிறோம். ''பார்த்தாயா? கலப்படம் செய்து கொள்ளையடித்தான்.

அந்தப் பணம் தானே அவனை விமானம் ஏற வைத்தது! அதனால் அடியோடு போனான். ஆனால் அந்த விஞ்ஞானி! அடபாவமே! அவர் என்ன செய்தார்? அவரையுமா கொல்லவேண்டும், இந்த விமான விபத்து? எல்லாம் தலை விதி'' இப்படிப் பேசுகிறோம். அஃதாவது காரணம் தெரியா ததை நாம் ஏதோ ஒன்றின்மீது சுமத்துகிறோம். செய்த தற்குப் பயனுண்டு; விளைவுண்டு. செய்ததற்குத்தான் பயன் உண்டு; செய்யாததற்குப் பயன் இருக்க முடியாது! எனவே ஒரு பயன் விளைந்தது என்றால், அதற்குக் காரண மான முன்னைய செயலொன்று எங்கோ இருக்கத்தான் வேண்டும். அந்த விமானம் ஏறியதற்கு ஒரு காரண முண்டு, அதிலேயே ஏறவேண்டும்—அதற்குச் சற்று முந் தைய விமானத்தில் ஏறாமல் போனதற்கும், அங்ஙனம் நம் புத்தியில் ஓடியதற்கும் ஒரு காரணம் இருக்கத்தான் வேண் டும். இப்படிக் காரண காரியமாக நம்புவது எவ்வளவு தூரம் மூடநம்பிக்கையாகும்? உண்மையில் இதுதான் பகுத்தறிவு. சைவ சமயத்தில் வேறு எதுவேண்டுமானா லும்—சடங்குகள், சாத்திரங்கள் வேண்டுமானாலும் மூட நம்பிக்கையாக இருக்கலாம். அதை ஆராயவில்லை. இந்த ஊழ்வினைக் கோட்பாட்டிலே கூட மூட நம்பிக்கை கலந்திருக்கலாம். ஆனால் இதன் அடிப்படை அவ்வளவு எளிதில் தகர்த்துவிட முடியாது. 'நிலத்தில் அறைந்த வன் கை தப்பமுடியாது' என்ற எளிய உவமையை, அத னால்தான் திருவள்ளுவரால் கூற முடிந்தது. 'ஊழிற் பெருவலி யாவுள்?' என்ற அவர் கேள்வியிலும் அதுதான் தொக்கிநிற்கிறது. 'அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான் கேடும்' எப்படி வந்தன? ''நினைக்கப் படும்'' என்றாரே திருவள்ளுவர். எனவே காரணம் தெரியாத போது 'நினைக்கப்படுமே' தவிர 'மறுக்கப்படாது.' சரவ ணர் தன் வரலாற்றையே திரும்பித் திரும்பிப் புரட்டினார். தன் நிழல் தன் காலைப்பற்றுகிறது; தான் பரப்பிய நச்சுப் புழு, தன் குடும்பத் தோட்டத்தையே அரிக்கிறது; தான் கலந்துவிட்ட நச்சுக் கிருமி தன்னைச்சுற்றிப் பரவிப் போய்,

எங்கும் அழிவைத் தந்தது மட்டுமன்றி, இப்போது அது தன்னிடமே 'நல்லுசாமி' வடிவில் வருவதை அவரால் நுட்பமாகக் கூர்மையாக உணரமுடிந்தது.

நல்லுசாமியிடமிருந்து வந்த கடிதம் அப்போது அடிகளிடம் தரப்பட்டது. சென்னையில் வரவேற்பு ஏற்பாடுகள் விரிவாகச் செய்யப்பட்டு வருவதை, மிக ஆர்வத்தோடு தன் கடிதத்தில் அவன் விவரித்திருந்தான். அலங்கார வளைவுகள், பாத பூசைகள், கொட்டு முழக்குகள், பூரண கும்பங்கள், விழாக் கொட்டகைகள், விளம்பரங்கள்— அவன் எழுதியிருப்பதில் ஒன்று கூட அடிகளுக்கு விருப்பமில்லை. ஆனால் அதைவிட்டு ஒரு சிறு அணுக்கூட அவரால் தப்பிக்கவும் முடியவில்லை. ஊழ்வினையின் இறும்புப்பிடி, உடும்புப்பிடி எத்தகையது என்பதை அவரால் நன்குணர முடிந்தது. அது அவரது நெஞ்சகத்தைப்போய் அழுந்தத் தாக்கிக்கொண்டிருந்தது. அது எவ்வளவு சாதுரியமாக, இலாவகமாக அவரை அப்படி வளைத்துப் பிடித்துவிட்டது போல இருந்தது.

அவருக்கு வந்த மடலில் சில பத்திரிகை விளம்பரங்கள் கத்திரித்து வைக்கப்பட்டிருந்தன. அவ் விளம்பரம் ஒவ்வொன்றிலும் அடிகளின் படம் ஒன்று இருந்தது. அடிகளைத் தெய்வத்தின் அவதாரம் என்றே வருணித்து, அவர் பார்வையிட்டால் நோய் நீங்குகிறது என்றும் அவரிடம் திருநீறு பெற்றால் செல்வமும் குழந்தையும் திருமணமும் வாய்க்கிறதென்றும் வரிவரியாக எழுதப்பட்டிருந்தது. "நான் சுவாமிகளுக்கு ரூ 1001 தான் வைத்துப் பாத பூசை செய்தேன். என்வாணிகம் செழித்தோங்கியது" என்று ஒருவர் கடிதம் எழுதியிருப்பதாக முகவரியுடன் போடப்பட்டிருந்தது. அத்தகைய ஒருவர் தம்மிடம் வந்ததாக அடிகளுக்கு நினைவே இல்லை. தாயத்து, கவசம் என்று ஏதேதோ விளம்பரங்கள்! இவ்வளவிற்கும் மிகுந்த செலவாயிருக்க வேண்டும். அத்தனை பணத்தையும் எதை நம்பி இந்த நல்லுசாமி செலவழிக்கின்றான்? தம் புகழ் ஓங்கவேண்டும் என்றா இப்படிச் செய்கின்றான்? இது

இரண்டாம் தரச் சாமியார்களை விட மட்டமாக இருக்கிறதே? அவனுக்கு இதில் நிறையப் பணம் தேடி விடலாம் என்ற நம்பிக்கை பிறந்துவிட்டது. அதனால் ''இப்படி எல்லாம் உம்மைப் பயன்படுத்தப் போகிறேன்'' என்று அவன் மிக மனத்துணிச்சலோடு அறிவித்திருக்கிறான். போய்ச் சேருமுன்பே இவ்வளவு விளம்பரம் செய்பவன், போனபிறகு என்னென்ன செய்வானோ? "நான் என்ன செய்தாலும் நீர் ஊமையாய் என்னோடு ஒத்துழைக்க வேண்டும். இல்லையென்றால் உம்மைக் காட்டிக்கொடுத்துக் கேவலப் படுத்திவிடுவேன்,'' என்று தம் முன்பாக நின்று நல்லுசாமி விரட்டுவது போல இருந்தது. எல்லையற்ற துன்பத்தில் மூழ்கினார் அடிகள். அவர் குரங்காக மாறி, நல்லுசாமி என்ற குரங்காட்டி சொல்கிறபடியெல்லாம் ஆடுவது போல ஒரு தோற்றம்...பெருமாள் மாடாகி அவன் கேட்பதற்கெல்லாம் தலையாட்டுவது போன்ற ஒரு கற்பனை... அவன் கையில் 'விதி' என்ற துப்பாக்கி சுழல்கிறது. அவன் 'வைத்தி' போன்ற கெட்ட காவலனாகக் காட்சியளிக்கின்றான். நினைவு மாறியபோது, காவிரி வெள்ளத்தில் ஓடிப்போய் விழுவதுதான் நல்லது என அவருக்குப்பட்டது. அன்று செய்யத் தவறியதை இன்று செய்து விடுவோமா என அவர் மனம் துள்ளிப் பாய்ந்தது.

மடத்தின் வேலையாள் யாரோ பார்க்க வந்திருப்பதாகக் கூறினான். தங்கள் வீட்டுத் திருமணத்திற்கு வரவேண்டும் என்று ஒருவர் பாக்கு வைக்க வந்திருந்தார். தமக்கு உலகம் காட்டும் மதிப்பு, மரியாதை ஒருபக்கம் அவரை 'எதனையும் விரைந்து செய்துவிடாதே' என்று தடுத்துக் கொண்டு நின்றது.

மாலையில் மடத்தின் பின்பக்கம் மரங்களடர்ந்த சோலையினூடே, அடிகள் ஓர் இருக்கை கொண்டுவந்து போடச் சொல்லி அதில் அமர்ந்து, தன்னந்தனியே நீண்ட சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். அங்கே காற்று அசைந்து செல்லும் வேகத்தில் ஒரு மாவிலை கீழே உதிர்ந்து விழுந்தது.

பழுத்தும் பழுக்காமலிருந்த அவ் இலை, தண்ணீர் ஓடிக்கொண்டிருந்த பாத்தியின் பக்கத்தில், தண்ணீரில் பாதியும் தரையில் பாதியுமாக விழுந்தது. திடீரென்று அடிகளுக்குத் தாமே அந்த இலையாக மாறிவிட்டது போல் தோன்றியது. அப்படியே தண்ணீரில் ஊறி, மண்ணில் ஆழ்ந்து, மக்கி உரமாகி மீண்டும் ஒரு செடிக்கு ஊட்டமாக உள்ளோடி வளர்ந்து...நெடுநேரம் அடிகள் அந்த இலையோடு சேர்ந்து, பல பிறப்புகள் எடுத்து மாறிமாறி வளைய வந்துகொண்டிருந்தார்.

O

அடிகள் மறுநாள் 'பருப்பொருளும் நுண்பொருளும்', என்று பேசவேண்டும். அதற்கான சிந்தனைக்கு அசை போட்டுக் கொண்டிருந்தது, அவர் மனம். பருப்பொருள்களில் நாம் எத்தனை வகைகள் காண்கிறோமோ, அதைப் போன்ற ஆயிரம் மடங்கு வகைகள் நுண்பொருள்களிலும் உண்டு. பருப்பொருளாய்க் கண்ணுக்குத் தெரிவனவற்றிற்குத் தோற்றம், வாழ்வு, முடிவு இருப்பதுபோல் கட்புலனாகாத நுண் பொருள்களுக்கும் பிறப்பு, வாழ்வு, இறப்பெல்லாம் உண்டு. அவை நடைமுறையில் பருப்பொருள் போலவே இயங்குகின்றன, கண்ணுக்குத் தெரியாத ஒரு குறையைத் தவிர! சிந்தனையோட்டம் நீரோட்டத்தோடு ஒத்ததுதான். மனத்தில் எழும் குமைச்சல் அடுப்புப் புகை போன்றதுதான். மனிதன் செத்துப் புதைக்கப்படுவது மாவிலை மக்கி மறைவது போன்றதுதான்...இப்படியே அடிகள் சைவ சித்தாந்த உண்மைகளுக்குப் போய்விட்டார். அதில் 'வினை'யையும் ஒரு தனித்துவமுடையதாக—முப்பொருளில் ஒன்றாக—ஆண்டவன் ஆணையால் இயங்கும் தனிப்பொருளாக அவர்கள் கருதுவது போன்ற பல உண்மைகளை அவை நடைமுறைக் கண்ணோட்டத்தோடு, தம் மனத்தில் விளங்கிக்கொண்டிருந்தார், மறுநாள் மக்களுக்கு விளக்குவதற்காக!

அடிகளின் மறுநாள் பேச்சு நல்ல அருளமுதமாக அமைந்தது. அவரது அருளாணையால் தொடங்கப்பட்ட ஏழைகள் இல்லம் நன்கு நடந்துவந்தது. இருநூறுக்கும் மேலாகப் பலரும் அங்கு இப்பொழுது நல்வாழ்வு பெற்று வந்தனர். மாணிக்கமும் அவர்களுள் ஒருவனாக நல்வாழ்வு பெற்று வருவதை அடிகள் மறைமுகமாகக் கண்டு மனம் மகிழ்ந்தார். கற்பகவல்லியின் வாழ்விலும் நல்ல சூழ்நிலை உருவாகவிருப்பதை அவரால் உணர முடிந்தது. கனகசபைதான் சிறையிலடைபட்டுக் கிடந்தான. அவன் மனைவியோ வாழ வழியின்றிக் கண்டபடி அலைந்துகொண்டிருந்தாள். அவர்களுடைய மகன் திரைப்படத் துறையில் ஒப்பனைத் தொழிலாளியாய் ஒண்டிக்கொண்டிருந்தான். அந்தப் பெண்ணாவது மருத்துவப் பட்டம் பெற்று 'டாக்டர்' ஆகிப் பூவண்ணர் மகனை மணந்து நல்வாழ்வு பெறவேண்டும். ஒருவேளை பூவண்ணரையும் அவர் மகனையும் மலர்க்கொடியையும் மறைமுகமாகவேனும் பார்க்கக் கூடுமோ என்ற 'ஆசை' ஒன்றுதான் அவர் சென்னை போவதற்குச் சார்பாக இருந்தது. மற்ற எல்லாமே அவருக்குப் பொறுக்க முடியாத வேதனையைத் தரும் செயல்களாகவே பட்டன.

○

அன்று இரவு அடிகள் சென்னைக்கு இரயிலேறவேண்டும். மடத்து வேலைக்காரர் இருவர் உடன்செல்ல ஆயத்தமாயினர். பயணத்திற்குவேண்டிய முன்னேற்பாடுகள் எல்லாம் முடிந்தன. ஒரு மாதம் அடிகள் வெளியூர் போவது, மடத்துப் பணியாட்கள், மக்கள் அனைவருக்குமே மிகப்பெரிய மனவருத்தத்தைத் தந்தது. அவரது இனிய, நல்ல சொற்பொழிவுகளை இனி என்று கேட்போம் என அவர்கள் ஏங்கினார்கள்.

அமைதியான, அடக்கமான பணியை விட்டுவிட்டு, ஆரவாரமான சூழ்நிலைக்கு மாறுவதை எண்ணி அடிகள் மனம் ஓலமிட்டுக் கொண்டிருந்தது. அங்கே சென்னையில் என்னென்ன கேடுகெட்ட செயல்களுக்கெல்லாம் ஆட்பட

வேண்டி வருமோ? எவனாவது பழைய நண்பன் ஒருவன் நல்லுசாமிபோல் தம்மை அடையாளம் கண்டுவிட்டால்... குரங்காட்டியின் உடுக்கை ஒலி செவிகளில் ஒலித்தவண்ண மிருந்தது. நல்லுசாமி மணிக்கொரு தடவை தொலைபேசி யில் தொடர்பு கொண்டு துளைத்துக் கொண்டிருந்தான்.

இருபதாண்டுக் காசி வாழ்வு தூய துறவு வாழ்வாக நலம் சேர்த்தது. இரண்டாண்டுத் திருச்சி வாழ்வு வழிபாட்டு வாழ்வாக மலர்ந்தது. இனிவரும் சென்னை வாழ்வு...... அடிகளால் நினைக்கவே முடியவில்லை. திருச்சியில் நடை பெற்று வந்த முறைமாருத வழிபாடுகளையும், சொற் பொழிவுகளையும் விட்டுச் செல்வது அவருக்குப் பெரும் பிரிவாகப்பட்டது. அவரை வழியனுப்பி வைத்தபோது மக்கள் அனைவருமே அழுதுவிட்டனர். பலருக்கு ஒரு மாதத்தில்தான் திரும்பி விடுவாரே என்ற நினைவின்றி, ஒரேயடியாகப் போகின்றவரைப் பிரிவதுபோல் தோன்றி அழுகை பீறிட்டது! இங்ஙனம் கண்ணீரும் கம்பலையுமாக வழியனுப்பிவைக்க, அப் புகைவண்டி புறப்படலாயிற்று.

ஓடிக்கொண்டிருந்த வண்டியில் இருந்தபோது, அடி களுக்கு அப்படியே ஓடும் வண்டியிலிருந்து குதித்துச் சாகலாமா என்று கூடத் தோன்றியது. முன்பு காசிக்குப் போகும் போதும் இதுபோன்ற நினைவோடி அவர் தம் மைத் தேற்றிக் கொண்டதுண்டு. அப்போது, அவர் மடத் திலிருந்து புறப்படுமுன் அங்கு நிகழ்ந்ததொன்று நினை விற்கு வந்தது.

அங்கு அவர் கடைசியாக வழிபாடு செய்துகொண்டிருந்த போது, விளக்கு எண்ணெய் இல்லாமல் நின்று போகும் நிலையை அடைந்தது. அப்போது திருவாசகத்தை ஓதிக் கொண்டிருந்த அடிகள், விளக்கின் சுடர் காற்றில் ஊச லாடுவதைக் கண்டார். வேலையாட்கள் பயண ஏற்பாடு களில் கவனத்தைச் செலுத்தி, இதைப் பார்க்க மறந்து விட்டார்கள். அவர்களை அழைத்து எண்ணெய் ஊற்றப் பணித்தார், அடிகள்! ஆனால் அவர்கள் அவசரப்பட்டு,

எண்ணெய் ஊற்றிய வேகத்தில் விளக்குச் சுடர் அணைந்து விட்டது. பிறகு உடனே விரைந்து மீண்டும் அது ஏற்றப் பட்டது.

அடிகள் ஓடுகிற இரயிலின் கடகட ஒலியில் தம் கண்களை மூடினர். ஏதோ அவர் மனம் தம் வாழ்வின் இறுதிப் பயணத்திற் செல்வதாக மாழ்கியது. அதனாலேயே அவர் மனம் உள்ளூறச் சிறிது மகிழவும் செய்தது. இப்போதெல் லாம் அவர் மனம் வாழ்வதைவிடச் சாவது மேலென்ற தத்துவத்தில் மூழ்கிக் கிடந்தது.

கட்டுப்பாடும் விடுதலையும் இரண்டு துருவங்கள் அல்ல. ஒரே நாணயத்தின் இரு புறங்கள்! மனிதனுக்கு விடுதலை உணர்வு வேண்டும். அந்த விடுதலையுணர்வோடேயே அவன் சில கட்டுப்பாடுகளை, வரையறைகளை வகுத்துக் கொள்ளவேண்டும். இயற்கை இத்தகைய கட்டுப்பாடு களை மிக இயற்கையாக வகுத்துக் கொள்கிறது. அது தன் முறைகள், இயல்புகளை விட்டு மாறமுடியாதவாறு கட்டுப்பட்டேயுள்ளன. தென்னை மரத்தைப் பார்த்து வாழைமரம் உயரவேண்டும் என்று ஆசைப்பட முடியாது. பருந்தினளவு உயரப் பறக்க முடியாத கோழி, தன் சிறகு களைத் தகர்க்க முயல்வதில்லை. மனிதன் கட்டுப்பாடு களைத் தகர்ப்பதிலே இன்பம் காண்கிருன். முறையற்ற கட்டுப்பாட்டையும் உடைத்து, அந்த வேகத்தில் முறை யான வரம்பையும் தகர்த்து அவன் அல்லற்படுகின்ருன். சிலந்திக்கு அதன் வலை கட்டுப்பாடு என்று கூறமுடியுமா? புலிக்கு அதன் குகை 'கட்டுப்பாடு' ஆகுமா? அவரவர் தத் தமது 'எல்லைகளை'யும் அறிய வேண்டாமா? மனிதன் விடு தலையுணர்வோடு சிந்தித்துத் தனக்குத்தானே ஓர் ஒழுங்கு முறையை, கட்டுப்பாட்டை, வரன்முறையை வகுத்துக் கொள்ள முடியவில்லையென்ருல் அழிகின்ருன். சரவணர் தம் கட்டுப்பாட்டு வரன்முறை வாழ்வை விட்டுவிட்டு, நல்லுசாமியின் வரன்முறையற்ற வாழ்விற் புகுவதைத் தம் அழிவு போலவே கருதிக் கண்ணீர் பெருக்கினர்.

○

"யூகமொடு
மாமுக முசுக்கலை பனிப்பப் பூநுதல்
இரும்பிடி குளிர்ப்ப வீசிப் பெருங்களிற்று
முத்துடை வான்கோடு தழீஇத் தத்துற்று
நன்பொன் மணிநிறங் கிளரப் பொன்கொழியா
வாழை முழுமுதல் துமியத் தாழை
இளநீர் விழுக்குலை உதிரத் தாக்கி..."

21

கோடம்பாக்கம் குருசாமி கோயிலைத் தாண்டியபின் ஒரு குறுக்குத் தெரு வருகிறது. அதிலிருந்து நான்கு கிலோ மீட்டர் நடந்தால் நல்லுசாமியின் இன்ப மாளிகையையும் தோட்டத்தையும் அடையலாம். அதனுள் 'இல்லாத எப்பொருளும் இல்லை' எனலாம். சிற்பங்களின் கூடம், அரண்மனையிலும் அழகிய அந்தப்புரம், கண்ணுக்கினிய கன்னியர்களின் அணி! இக்கால வசதிகளிலும் ஒன்று கூடக் குறையாத மாளிகையாக அது திகழ்ந்தது. உள்ளேயே நீச்சற்குளங்கள், செய்குன்றுகள், படம் பார்க்கும் சிறு திரையரங்குகள், ஆடலரங்குகள், அதில் ஆடவல்ல அணங்குகள்...... அத்தனையும் உண்டு அங்கே!

இருபது ஆண்டுகளுக்கு முன்னால் சாமி தம்மிடம் அரைக்

காசுகூட இல்லாத நிலையில், சீட்டு வாங்காமலேயே இர யிலில் பயணம் செய்து சென்னையை அடைந்தவன். ஆம், சென்னையில் அவனைச் 'சாமி' என்றால்தான் தெரியும். அவன் சென்னைக்கு வந்தவுடனேயே, தன் பெயரை 'என். சாமி' என்று மாற்றிக் கொண்டுவிட்டான்.

சாமியின் மாளிகையைக் கண்கண்ட சொர்க்கம் என்று வசதிபடைத்த பெரியவர்கள் எல்லோரும் கருதினார்கள். 'அங்கு தாயைத் தவிர எல்லாம் கிடைக்கும்' என்று அவர் கள் அனைவரும் விளையாட்டாகப் பேசிக் கொண்டார்கள். எப்படி அவன் இந்த நிலைக்கு முன்னேறினான்? இதுதான் சென்னையின் பெரிய மறைபொருள்! ஒரு திரைப்பட முத லாளி வீட்டில், வேலைக்குச் சேர்ந்த அவன், புகழ்பெற்ற புதுநடிகை ஒருத்தியைப் பழக்கப்படுத்திக் கொண்டு, அவள் மூலம் ஆசைகாட்டிப் பெரிய மிட்டாமிராசுகள் சிலரை அழைத்து வந்து படமெடுக்க வைத்தான். வந்த எல்லோரும் நொடித்துத் திரும்பிப் போனார்கள்; சாமி மட்டும் பணக்காரனானான். ஆனால் சாமி, புதிதுபுதிதாக நான்கு படங்களை எடுத்துப் பணத்தைக் குவித்தாலும், 'காதலே வா' என்ற 'ஏ'ப் படம் அவனை நன்றாக ஏமாற்றி விட்டது. எல்லாப் பணமும் வந்த வழியிலேயே போயின.

நிலைமையைப் புரிந்து கொண்ட சாமி, உடனே திரைப் படத்துறையிலேயே தரகராக மாறினான். பணத்தரகராக மட்டுமன்றி, நட்சத்திரங்களை அமைத்துக் கொடுப்பது, புதுமுகங்கட்கு வாய்ப்புத் தேடித் தருவது, கதையாசிரி யர்களுக்கும் பாடலாசிரியர்களுக்கும் முதலாளிகளுடன் தொடர்பு ஏற்படுத்தி வைப்பது, பணக்காரர்களையே ஒருவருக்கொருவர் அறிமுகப்படுத்தி இணைத்து விடுவது —இவ்வாறு அவனுடைய தொழில் மேன்மேலும் கிளை விட்டு வளர்ந்தது. சாமி முதன் முதல் அறிமுகப்படுத் திய புதுமுகம் நடிகை வசந்தி, இப்போது அவன் மேற் கொண்ட தொழிலுக்கு மிகவும்உடந்தையாக இருந்தாள். திரைப்படம் எடுத்துக் கடனைத் தேடிக்கொண்ட சாமி,

தரகரான ஏழெட்டு ஆண்டுகளில் பெரும் செல்வராகி விட்டான். இப்போதைய இன்பமாளிகையை அவன் மிகவும் திட்டமிட்டுக் கட்டினான். மாளிகையை ஒட்டிய தோட்டம் மிகப் பரந்தது; கண்ணன்பாடி அணைக்கட்டுப் பிருந்தாவனம் போல அது விளங்கியது! இங்கு சினிமாப் படம் எடுப்பவர்கள் வருவர்; நட்சத்திரங்கள் நடமாடுவர்; தொழிலதிபர்கள் தங்கிச் செல்வர்; கோடீசுவரர்கள் தங்கள் செல்வத்தைக் கொண்டு வந்து கொட்டுவர்! கல்லூரிக் கன்னியர்களும் திரைப்படத்தில் வாய்ப்புத் தேடித் தருமாறு வேண்டி, வந்து அலைவர்!

அங்கே குற்றங்குறையில் ஈடுபடுபவர்கள் மட்டும் வருகிறார்கள் என்பதில்லை. அக் குற்றங் குறைகளைக் கண்டு பிடித்துத் தண்டிக்க வேண்டியவர்களும் அங்கே வந்து அடக்கமாவர்! வரும்போது பத்தாயிரம் நூறுயிரம் என்று கொண்டு வருபவர்கள் போகும் போது போட்டிருக்கும் சட்டையும் வேட்டியும் தவிரப் பிற எல்லாவற்றையும் இழந்து போவார்கள். சாமியின் இன்ப மாளிகைக்கா? ஆள்பவர்களுக்கே அங்கு ஈடுபாடுண்டு என்பார்கள், அதிகாரிகள். அங்கே அடக்கம் என்பார்கள்! திரைப்பட முதலாளிகள், பெருஞ்செல்வர்களுக்கெல்லாம் அங்கே வந்து போவது ஒரு தனி நாகரிகம்! சாமிக்கு எதிராக யாரேனும் பேசினால், நடந்துகொண்டால், அப்படி நடந்து கொண்டவருக்குத்தான் ஆபத்து! அவ்வளவு செல்வாக்கு அவனுக்கு!

சாமி எப்படிப் பணம் சேர்த்தான் என்று ஊரெல்லாம் அறிந்திருந்தது! ஒவ்வோருள்ளமும் அவ்வுண்மையை அறியும். இருந்தாலும் பணம் சேரச்சேர, அவன் மதிப்புக் கூடிக் கொண்டுதான் இருந்ததே தவிரக் குறையவில்லை. அவனே கெடிலாக்குக் காரில் புழுதியைக் கிளப்பிக்கொண்டு அங்குமிங்கும் பறந்து கொண்டிருந்தான். அது பட்டினத்து மக்கள் முகத்தில் புழுதியை அள்ளித் தெளித்து விட்டுப் பறப்பது போல இருந்தது! என்றாலும் கார்போகுமிடமெல்லாம் புழுதியும் பின்னாலேயே பறப்பது

போல, அவனை முன்னே போக விட்டுப் பின்னே பலர் தம்முள் பழி பாவங்களைப் பற்றிப் பேசிக்கொள்ளத்தான் செய்தனர். இதனால் அவனுக்கென்ன கவலை?

புதுமுகமாக அவன் கூட்டிவந்த வசந்தி நடிகை, பூம்புகார்ப் பாவை மன்றத்துச் சிற்பம் போல் பொலிவுடன் திகழ்ந்தாள். நாட்டுப்புறக் கட்டழகும் நாகரிக மெருகும் அவளிடம் ஒரு சேர விளங்கின. அவள் நடப்பதும் சிரிப்பதும்கூட ஓர் அழகோடு காணப்பட்டன. அவள் குரல் குயிலினும் இனியதாக இருந்தது. இப்படி ஒரு பெண்ணைச் சாமி எவ்வாறு தேர்ந்தெடுத்து அழைத்து வந்தான் என ஒவ்வொருவரும் வியந்தனர். அவள் எக் காரணத்திற்காகவும் தன்னை விட்டுப் பிரிந்து விடாமலும் திரைப்படத்தில் நடிப்பதாகக் கூறி யார் பின்னாலேயும் ஓடிவிடாமலும், அவளைப் பாதுகாத்து, ஒரு குறையுமில்லாமல் 'அரசி' போலப் பேணினான் அவன்!

சமுதாயத்தின் மேல்நிலையில் உள்ளவர் எவரையேனும் சாமி விருந்துக்கு அழைக்கிறான் என்றால், அதில் ஏதேனும் ஓர் உட்பொருளிருக்கும். அன்று இன்ப மாளிகையில் விருந்து நடக்கும். விளக்குகள் சுடர்விட்டு ஒளி வீசும். வசந்தியின் நடனமும் உண்டு. புதுமுகங்கள், கல்லூரி மாணவிகள். இளம் சிட்டுக்கள் யாரேனும் வந்து, விருந்தினர் முன் ஆடிப்பாடி மகிழ்விப்பர். இங்ஙனம் 'விருந்தினர்களை' எல்லா வகையாலும் மகிழ்வித்துப் பணம் மட்டுமல்லாமல் செல்வாக்கு, புகழ் போன்றவற்றையும் சாமி தேடிக் கொள்வான். ஒரு பெரும் தொழிலதிபருக்கு ஏதேனும் உரிமம், பெர்மிட்டு, அரசு அனுமதி மற்றும் இது போன்ற எது தேவையென்றாலும் அதை வழங்கக் கூடிய 'தேவதை'யை வரவழைத்து விருந்து வைப்பான் சாமி. அனுமதி ஆணை கைமாறும்; சாமிக்குக் காசு சேரும்.

புதிதாகப் படங்களில் நடிக்க ஆசைப்பட்டு வரும் கல்லூரி மாணவியர், இளம் அழகிகள் போன்றவர்களைப் பட முதலாளிகளுக்கும் இயக்குநர்களுக்கும் அறிமுகப்படுத்தி

வைக்கும் நிகழ்ச்சிகளும் இன்ப மாளிகையில் அடிக்கடி நடைபெறும். இவ்வாறு துணிந்து இறங்கியதால் அறுபது வயதை எட்டிவிட்ட சாமிக்கு, இப்போது அறுபது இலட்சத்திற்குமேல் பணம் சேர்ந்துவிட்டது. இன்ப மாளிகையே இருபது இலட்சம் பெறுமென்று பேசிக்கொண்டார்கள். ''பணம் சேர்க்கும்போது நியாய அநியாயம் பார்க்கக் கூடாது; நீதி நேர்மை பார்க்கக் கூடாது. சேர்ந்தபிறகு மேலான இடத்திலிருந்து கொண்டு, பாவ புண்ணியம் பற்றி விரிவாகப் பேசவேண்டும். அறமும் மறமும் பற்றி கேட்பவர் மனம் உருகும்படி அழகாகப் பேச வேண்டும்." இதுதான் இன்று பலரும் பின்பற்றும் நடைமுறைக் கோட்பாடு! அக் கோட்பாட்டைப் பின்பற்றி, நன்கு முன்னேறினான் சாமி!

சாமி தன் மணிவிழாவை மிக விளம்பரப்படுத்தி, மிகச் சிறப்பாகக் கொண்டாடினான். அவன் மனைவி நீண்ட நாட்களுக்கு முன்னதாகவே, அவனை விட்டுப் பிரிந்து, செத்துப் போய்விட்ட படியால், தன் மணிவிழாவை அவன் சடங்கு சாத்திரமின்றிப் பெரும் மாநாடுபோல் நடத்தினான். நாட்டுத் தலைவர்கள், அரசு அமைச்சர்கள், திரைப்பட முதலாளிகள், தொழிலதிபர்கள், பேராசிரியர்கள், கவிஞர்கள் எல்லாம் அவனை வெகுவாகப் பாராட்டிப் பேசினார்கள்! கவிமாலை புனைந்து சார்த்தினார்கள்! ஒருவர் 'சாமி வந்தபிறகுதான் சென்னை நகரமே கலகலப்பாக இருக்கிறது' என்று குறிப்பிட்டார். இதைக் கேட்ட எல்லோரும் கைதட்டி ஆரவாரம் செய்தார்கள்! அன்று கோடம்பாக்கமே புத்தெழுச்சி பெற்று விளங்கியது. எத்தனை வரவேற்பு வளைவுகள்! ஒவ்வொன்றிலும் "உழைப்பால் உயர்ந்த உத்தமர்'', ''தன் முயற்சியால் பொன் பெருக்கிய செம்மல்'', "ஏழையாயிருந்து ஏழடுக்கு மாளிகை கண்டவர்'' என்று இவ்வாறு அழகழகான தொடர்கள். கண்ணை உறுத்தின. நல்லவர்களும் சான்றோர்களும் கூட அவ் விழாவிற் கலந்து கொண்டார்கள். ஒவ்வொருவருக்கும் உள்ளூற ஓர் அருவருப்பு இருக்கத்

தான் செய்தது. ஆனாலும் 'செல்வாக்குள்ளவர்கள் எல்லோருமே கலந்து கொள்ளும்போது நமக்கெதற்கு வம்பு' என்று ஒவ்வொருவரும் 'சிறப்பா'கக் கலந்துகொண்டார்கள்.

நாளிதழ்கள் 'அணிவிழாக் கண்ட மணிவிழா மன்னரு'க்குச் சிறப்பு மலர்கள் வெளியிட்டன. அத்தனையும் விளம்பரம்; எத்தனையோ படக் கம்பெனிகள் பங்கிட்டுக் கொடுத்தன. எழுத்தாளர்கள் பாராட்டுக் கட்டுரைகள் எழுதினர்; பாவலர்கள் பாமாலை புனைந்து வானளாவப் புகழ்ந்தனர்! முப்பத்திரண்டு பக்க மலர் முப்பதே காசு என்றதால், இந்த நாட்டு மக்களிடையே மலர் உடனே விற்பனையாகித் தீர்ந்தது. சாமி கோடம்பாக்கம் கோடியிற் குடியிருந்த குடிசை வாழ் மக்களுக்கு உதவியதும், பெட்டிக் கடைக்காரர்களுக்கு பணம் கொடுத்ததும் கைத்தறி நெசவாளர்களின் கண்ணீரைத் துடைத்ததும் தம் தோட்டத்தில் தாமே ஏர் கொண்டு உழுது பாடுபட்டதும் புயலால் நாடு பாதிக்கப் பட்டபோது நிதியுதவி வாரி வழங்கியதும்—படம் போட்டுப் பக்கம் பக்கமாக எழுதப்பட்டிருந்தன. இப்படி 'வள்ளன்மையை', 'விளம்பரம்' மூலமே தனக்கு உரித்தாக்கிக் கொண்டதால், இப்போது கோடம்பாக்கம் 'தொகுதி'யே சாமி கையில்தான் இருந்தது. ஒருவருக்கும் காற்காசு கொடுக்காமல், விளம்பர யுகத்தின் மாயை காரணமாக, அவன் 'ஏழைபங்காளர்' என்று சுவரொட்டிகளில் போற்றப்பட்டான்! இதனைத் தடுப்பாரோ, தட்டிக் கேட்பாரோ எவருமிலர்.

சாமியின் பழைய வாழ்க்கையைப் பற்றி எவரும் பேசுவதில்லை. அவனைக் கண்டாலே அனைவரும் ஒதுங்கிநின்று, கையெடுத்துக் கும்பிட்டனர். இப்போது திருச்சியிலிருந்து அவன் காசிச்சாமிகளைக் கூட்டி வரப் போவது பற்றிக் கேள்விப்பட்டவர்களும், விளம்பரங்களைப் பார்த்தவர்களும் ஆயிரக்கணக்கில் வந்து, பாதபூசை செய்வது முதல் தாயத்துப் பெறுவது வரை முன்பணம் கட்டிப் பதிவு செய்யலாயினர். இதற்கான தனி அலுவலகமே

இன்பமாளிகையில் தொடங்கப்பட்டுவிட்டது. சாமி தான் நினைத்தது இவ்வளவு விரைவாக, இவ்வளவு நன்ருகக் கனியும் என்று எதிர்பார்க்கவில்லே. அடிகள் வருவதற்கு இரண்டு நாள் முன்பு மூன்று இலட்சமே வந்திருந்தது, முதல்நாள் ஐந்து இலட்சமாகக் கூடியது. எல்லோருக்குமே நல்வினைப்பயனை நாடுவதில், குறுக்கு வழியில் பணம் சேர்ப்பதில், புண்ணியம் சம்பாதிப்பதில் நாட்டமிருப்பது நன்கு புலனுகிறது. சாமிக்கு இப்போது இரட்டை மகிழ்ச்சி. அவனுக்குப் பணத்திற்குப் பணமும் சேர்ந்தது. எல்லோரும் அவனிடம் தயவை எதிர்பார்த்துத் தயங்கி நிற்குமளவு அவன் இப்போது மிகப் பெரிய மனிதனுகி விட்டான்.

இன்று அச்சடிக்கும் விளம்பரமும் மேடைப்பேச்சும் 'மூளைச் சலவை'க்கு இங்கு மிகவும் பயன்படுகின்றன. அச்சுமேல் அச்சடித்தால் ஒன்றுக்கும் தகுதியற்றவனும் உயர்ந்தவனுகி விடலாம் என்பதைச் சாமி நன்கு தெரிந்து வைத்திருந்தான். முதன் முதலாகச் சாமி மேடையேறிப் பேசியது, அமைச்சர் ஒருவருக்கு வரவேற்பிதழ் படித்தளித்ததுதான்! அன்று அவன் தடுமாறியதைப் பார்த்து அமைச்சரே சிரித்துவிட்டார். அன்று அமைச்சர் தம்முடைய நீண்ட உரையில், ''சாமி செயல் வீரரே தவிரச் சொல்வீரர் அல்லர்'' என்று பாராட்டுவதுபோலக் குறையைக் குத்திக் காட்டவும் தவறவில்லே. ஆனுல் இப்போதெல்லாம் சாமி மேடையேறினுல் கூட்டம் தவித்துப் போகிறது. அவ்வளவு நேரம் அவன் பேசுகிருன். அவன் பேச்சை நிறுத்துவது கடினமாகியிருக்கிறது. அவனுக்காக முன் வரிசையிலிருப்பவர்கள் கட்டாயமாகத் தலேயாட்டுகிருர்கள். நீதி, ஒழுக்கம், நேர்மை—இவற்றை அவன் மிகவும் வற்புறுத்திப் பேசுகிருன். அவற்றை எல்லோரும் ஏற்றுத் தலேயசைப்பதுதான் பெரும் வியப்பாக இருந்தது. "நெறியும் நேர்மையும்'' என்பதுதான் அவனுடைய குறிக்கோள் வாசகம்.

சரவண அடிகளை அவன் அழைத்து வருவதன் 'உட்பொருளும்' இவ்வாறு, உலகமறிந்த மறைபொருளாகவே இருந்தது. அவன் தன் மணிவிழாவைக் கொண்டாடியதற்குச் செலவழித்ததைப் போல் இரண்டுமடங்கு சேர்த்து விட்டான். இப்போது, இவ் வரவேற்பு விழாவை மிகப் பெரிய அளவில் அவன் திட்டமிட்டுக் கொண்டாடி, அதற்காகும் செலவைப் போல் நூறு மடங்கு பணம் சேர்க்கப் போகிறான் என்பதை, அலுவலகத்தில் வந்து குவிந்த முன்பணமே காட்டியது.

○

எழும்பூர் இரயில் நிலையத்தில் வந்திறங்கிய திருப் பெருந்திரு காசிச்சாமிகள் என்ற சரவண அடிகளாரைப் பல்வேறு நிறுவனங்கள், தொழிலதிபர்கள், தலைவர்கள், திரைப்பட முதலாளிகள் கூடி நின்று வரவேற்றார்கள். மாலைகள் மலைபோற் குவிந்தன. பிறகு அவரைக் கோடம்பாக்கம் வரை காரில் அழைத்துச் சென்றனர். வழியில் மிகப் பெரும் செல்வர்கள் எல்லாம் தத்தமது வீட்டில் அழைத்துச் சென்று ரூபாய் ஆயிரத்தொன்று, இரண்டாயிரத்தொன்று எனக் காணிக்கை வைத்துப் பாதபூசை செய்தனர். பிறகு கோடம்பாக்கம் எல்லையிலிருந்து, திறந்த காரில் அடிகளை உட்கார வைத்துக் கொட்டு முழக்கு, அதிர்வேட்டு ஆரவாரத்துடன் நகர்வலமாக அழைத்துச் சென்றனர்.

சரவணருக்கு எதுவுமே பிடிக்கவில்லை. அவர் மிக மௌனமாக, அமைதியாக, ஊமையாக அமர்ந்திருந்தார் என்று தான் சொல்லவேண்டும். தம்மை முழுவதுமாகக் கைப்பாவை ஆக்கிக் கொள்ளத்தான் நல்லுசாமி இந்த நாடக மாடுகிறான் என்பது அடிகளால் நன்கு உணரமுடிந்தது. சென்னையில் வேறு சிலரும் தம்மை இனங்கண்டு கொள்ளக்கூடும் என்ற அச்சமும் அவர் மனத்தை அரித்துக் கொண்டிருந்தது. இதற்கிடையே அவன் காணிக்கைகளைச் சேகரித்த விதமும் அவற்றை மூடி மறைத்து அப்

புறப்படுத்திய வேசமும் மிக்க அருவருப்பைத் தந்தன. இன்று சில திருக்கோயில்களிலும் பெருமடங்களிலும் இவை மிகச் சாதாரணம் என்ருலும், இவற்றிலெதுவும் சரவணருக்கு இப்போது உடன்பாடானதன்று! ஒரு கட்டத்தில் சரவணர் தம் நகர்வலத்தைத் தமது இறுதி ஊர் வலமாகவே கற்பனை செய்து பார்த்து மனம் கசிந்து கொண்டிருந்தார்! அவ்வளவிற்கு அவருக்கு உள் மன வேதனை தாங்கவில்லை.

○

இன்பமாளிகை முன்கூடம் மிக நீளமானது. அதில் அடிகளை அனைவரும் வந்து வணங்க ஏற்பாடாகியிருந்தது. ஆங்காங்கு திருப்பதி உண்டியல்கள் போலப் பெரியபெரிய உண்டியல்கள் வைக்கப்பட்டிருந்தன. எங்கும் சந்தன மணமும் ஊதுபத்தி மணமும் மலர் மணமுமாய் ஒரு தெய்விக உணர்வைப் பரப்பிக் கொண்டிருந்தன. எல்லோரும் அடிகளின் காலில் விழுந்து வணங்கித் திருநீறு பெற்றுக் கொண்டதும், திருநீற்றுத் தட்டில் ஐந்து, பத்து ரூபாய் நோட்டுகளைக் காணிக்கையாகப் போட்டதும் கனிவுமிக்க காட்சியாக இருந்தது.

நடிகை வசந்தியும் மற்றும் பல இளம் பெண்களும் நீண்ட வரிசையில் வந்து, அடிகள் பாதத்தைத் தொட்டு வணங்கி எழுந்தனர். அடிகளின் முன்பாகப் பெரிய வெள்ளித் தட்டில் பல தாயத்துக்கள் போடப்பட்டிருந்தன. அவையனைத்தும் பொன், வெள்ளியாலானவை. இருநூற்றியொன்று, நூற்றியொன்று என்று காணிக்கை செலுத்தி, அதனையும் பலர் பெற்றுக் கொண்டு சென்றனர். சிலர் அடிகளை வெளியில் அழைத்துப் போக விரும்பினர்கள். அதிலும் வருமானம் உண்டு என்பதால், சாமி அதை மிக வற்புறுத்தினன். அன்று இரவு அடிகள் தமக்கென ஒதுக்கப்பட்ட அறையில் தங்கினர். அது ஒரு துறவி தங்கும் அறைபோல அமையவில்லை. பெரும் செல்வர்

களுக்கு எனக் குளிர்தரு கருவிகள் பொருத்தப்பட்ட, எல்லா வசதிகளும் உள்ள அறையாக அது இருந்தது.

தம்மைக் காண வந்த சாமியிடம் அடிகள் கடுமையாகவே பேசினர். ''உன்னிடம் கொண்ட அன்புக்காகவே இங்கு வர இசைந்தேன். முதலில் இந்த அறையை மாத்து, எனக்கு இது ஒத்து வராது. எனக்குத் துறவிக்குத் தருகிற அளவு சவுகரியம் தந்தால் போதும். இதெல்லாம் வேண்டாம். எனக்கு இந்த ஆடம்பரம், ஆரவாரம் எதுவுமே பிடிக்காது.''

சாமி பலமாகச் சிரித்தான். ''ஐயோ சாமீ! உங்க பெருமை உங்களுக்குத் தெரியாது. உங்க முகம் உங்களுக்குத் தெரியுதா? அப்படித்தான். உங்க பெருமைக்கு இதுவும் போதாது; இன்னமும் என்ன வசதி செய்தாலும் போதாது. இந்தக் காலத்துச் சாமியெல்லாம் எவ்வளவு சௌகரியம் செய்தாலும் போதாதுன்னு சண்டை பிடிக்கிது. எனக்கும் ஒண்ணுமே வேண்டாம். தாஜ்மகால் மாதிரி இங்கே ஒரு சரவண மடம் கட்டணும்... அதுதான் என் ஆசை!''

சரவணர் கூடாதென்று தலையசைத்தார். "இதெல்லாம் ஒரு தொண்டாச் செய்யணுமே தவிர...''

''அதெல்லாம் அந்தக்காலம். இப்போ எது நீதி? எது நியாயமுன்னு பேசப்படாது. வெளியே உத்தமரா இருக்கணும். பேசணும். ஆனல் ஏமாளியா இருந்தால் ஒருத்தன் கூடத் திரும்பிப்பார்க்க மாட்டான். நாம என்ன செய்கிறோம் இப்போ? அவங்க புண்ணியம் தேடிக்கிறதுக்கு அவங்களுக்கு வழிகாட்டுறோம். அதுக்கு அவங்க காணிக்கை செலுத்தருங்க. இது தப்பா?''

"தப்பில்லே. ஆனல்..."

''ஆனல், கீனல்னு இழுக்காதீங்க...எல்லாம் நான் கவனிச்சிக்கிறேன். ரெண்டு நாள்லே பாருங்க... நீங்க இங்கே

யிருந்து போகப் பிரியப்படவே மாட்டீங்க... நீங்க அந்தக் காலத்திலே இந்த ஊர்லே அனுபவிச்சதைவிட...''

"அதையெல்லாம் நினைவு படுத்தாதே நல்லுசாமி... இப்போ நான் .."

''எப்படிங்க மாற முடியும்? மாறினமாதிரி இருந்தீங்க. நல்லபேர் சம்பாதிச்சீங்க... இனி அந்தப் பேரை வச்சே... ஏன்னு, உங்க ஆசீர்வாதத்துக்காக உலகமே காத்துக் கிடக்கு...''

அதற்கும் மேலே நல்லுசாமியிடம் பேசி அவனைத் திருத்த முடியும் என்று சரவணருக்குத் தோன்றவில்லை. ஒரு மாதத்தை எப்படியாவது, தலையில் முக்காடு போட்டுக் கொண்டு ஓட்டிவிட்டுத் திருச்சிக்கு ஓடிவிட வேண்டும் என்று அவர் மனம் ஓடியது. இவன் மேன்மேலும் அச் சுறுத்தி, இப்படியே ஏமாற்று வழியைத் தொடர்ந்தால், ஒன்று தம்மை வெளிப்படுத்திக்கொண்டு எந்தப் பழியை யும் ஏற்க ஆயத்தமாக வேண்டும்; அல்லது உயிரை விட்டுவிட வேண்டும் என அவர் மனம் பல முறை தனக்குத் தானே உறுதி பூண்டது. மானமும் பண் பும் பெயரும் கெடுமாறு நேர்ந்தால் 'மயிர் நீப்பின் வாழாக் கவரிமான்' போல ஆகிவிடுவார் என்பது அவர் முகத்தோற்றத்திலேயே புலனாகியது.

சிலநாட்கள் எப்படியோ இன்ப மாளிகையில் பொழுது போயிற்று. ஒவ்வொரு சமயம் நல்லுசாமி தம்மை அணு கும் போதும், கட்டாயப் படுத்திக் காணிக்கைகளை வசூ லிக்கும் போதும், அவனை அப்படியே கட்டிப்பிடித்து, நையப் புடைத்துப் போட்டுவிட்டு, ஓடிவிட வேண்டும் என்று அடிகளுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. ஒரு முறை அடிகளையே வைத்துக்கொண்டு, நல்லுசாமி ஒரு திரைப்பட முதலாளியிடம் தரகு பேசினான். முதன் முத லாகப் படச்சுருளைத் தொட்டுக்கொடுத்தால், 'இருப தாயிரமா? இருபத்தையாயிரமா?' என்று நீண்டநேரம் விவாதம் நடந்தது.

பட முதலாளி போனதும் தனியேயிருந்த நல்லுசாமியிடம் அடிகள் கடுங்கோபம் கொண்டு, இந்த 'வியாபாரத்தை' நிறுத்தும்படி கடிந்துகொண்டார். அவனோ உணர்ச்சி வசப்பட்டான். ''என்ன சாமி! எங்கிட்டேயே நடிக்கி றீங்க! உங்க நிலைமை யாருக்கும் தெரியாதுன்னு நீங்க இப்போ ஊரை எமாத்திக்கிட்டுத் தானே இருக்குறீங்க... நீங்க திருச்சியிலே உண்டியலைத் திறந்து, நாள்தோறும் பணத்தை எண்ணுறது வியாபாரமில்லையா? இது பெரிய ஊரு. இப்படித்தான் நடக்கும். சும்மா வாயை மூடிக் கிட்டு, நான் சொல்றபடி நடிங்க.. ஏதோ கொஞ்சம் விரிவா விளக்கமா விளம்பரப் படுத்தி இலாபத்தைக் கூட்டுறேன். ரெண்டுமே வியாபாரந்தான் சாமி...இது நல்ல இலாபகரமான வியாபாரம்! நம்ம ரெண்டு பேரிலே யாரு சாமி நல்லவன்? நான் பேரிலே சாமி; நீங்க ஊரிலே சாமி! நம்ம ரெண்டு பேருக்கும் ஒருத்தரை ஒருத்தர் தெரி யும். நான் கொஞ்சம் செயற்கையா நடிக்கிறேன். நீங்க மிக இயற்கையா, நடிக்கிறதே தெரியாமே நடிக்கிறீங்க... நாம ரெண்டு பேருமே கெட்டவுங்கதான்! என்ன சாமி யோசிக்கிறீங்க! உங்களை ஊரு இனங்கண்டுக்கிடுச்சுன்னு, நீங்க அதல பாதாளத்துக்குப் போயிடுவீங்க...எச்சரிக் கையா இருங்க!'' என்று படபடவென்று பொழிந்து தள்ளிவிட்டு நல்லுசாமி புறப்பட்டுப் போனான்.

அடிகள் முகம் கருத்துப் போயிற்று. அவர் வாயடைத்துப் போனார். அவருக்குள் அவன் சொல்வதெல்லாம் சரி தானே என்று ஓர் ஒளிக்கீற்றுத் தோன்றி மறைந்தது. தாம் திருச்சியில் மடம் கட்டி 'வாழத்' தொடங்கியதே தவறு என்று அவருக்குப்பட்டது. கண்கள் நீரால் நிறைந் தன. அந்த அழகிய விளக்கொளியின் கீழ், மிகவும் குட்டையாகிவிட்ட தம் நிழலையே அவர் பார்த்தது பார்த்தபடி பார்த்துக்கொண்டிருந்தார்.

○

“ கறிக்கொடிக் கருந்துணர் சாயப் பொறிப்புற
மடநடை மஞ்ஞை பலவுடன் வெரீஇக்
கோழி வயப்பெடை இரியக் கேழலொடு
இரும்பனை வெளிற்றின் புன்சாய் அன்ன
குரூஉமயிர் யாக்கைக் குடாவடி உளியம்
பெருங்கல விடரளைச் செறிய... ”

22

இன்பமாளிகை வாழ்வு சரவணருக்கு என்னவோ போல இருந்தது. திருச்சியில் அவர் வெறுந்தரையில் துணியை விரித்துக் கட்டையைத் தலைக்கு வைத்துக் கொண்டுதான் படுப்பார். இங்கு பஞ்சணை மெத்தையை விட, மிக மென்மையான படுக்கைக் கட்டிலில் அவர் படுக்க வேண்டியிருந்தது. சில சமயங்களில் அவர் படுக்கையை விட்டு விட்டுக் கீழிறங்கிப் பளிங்குத் தரையில் படுத்துக் கொண்டார்.

சுற்றிலும் நறுமண மலர்க் குவியல்கள்; கண்ணிகள்! சந்தனப் புகையும் ஊதுபத்தி மணமும் கலந்த ஒரு சூழல்! இளமையில் சரவணர் அத்தர் மணத்தில் ஈடுபாடு காட்டி, எப்பொழுதும் தம் உடைகளில் அதைத் தடவிக் கொள்வார். ஒவ்வொரு முறை வெளியே புறப்படும்போதும் நறு

மணச்செண்டு தடவாமல் அவர் போவதில்லை. எங்கு தேடியாவது மருக்கொழுந்து அத்தராகப் பார்த்து வாங்கி வருவாரே தவிர, மற்ற வகைகளை அவர் அவ்வளவாக விரும்பமாட்டார். இதனை எப்படியோ நினைவுகொண்டு, சாமிகளின் படுக்கை, உடைகளிலெல்லாம் மலேசியா நாட்டு மருக்கொழுந்து அத்தரின் மணங்கமழச் செய்திருந் தான் நல்லுசாமி! சரவணருக்குப் பழங்கால நினைவுகளை யெல்லாம் இவ் 'வாசனை' கிளப்பிவிட்டது. தம்மை மீண் டும் நிலைதடுமாற வைக்க, பழைய நிலைக்குக் கொண்டு போக நல்லுசாமி திட்டமிடுவது சரவணருக்கு நன்கு புரிந் தது. அடிகள் தாகம் என்று தண்ணீர் கேட்டால், வேலை யாட்கள் 'திராட்சைச் சுவைநீர்' என்று, திராட்சை மது வையே கொண்டுவந்து வைத்தார்கள். சரவணர் முன் பெல்லாம் பிற மதுவகைகளை விட 'ஒயின்' எனப்படும் திராட்சை மதுவையே மிகவும் விரும்புவார். அதனையும் நினைவுகொண்டு இந்த நல்லுசாமி செய்யும் சாகசங்களைக் கண்டு, அடிகள் மனத்தினுள் அருவருப்படைந்தார்.

அடிகள் மனம் படாத பாடுபட்டது. உண்மையில் அவர் தம் வயம் இழந்து, அதிற் சிக்கியிருக்கவே வேண்டும். ஆனாலும் இவற்றை எல்லாம் தாம் ஓர் அன்னியனாக விலகி நின்று, வேடிக்கை பார்க்கும் அளவு அவர் மனம் திண்ணியதாக இருந்தது. இப்போது அவர் உண்மையி லேயே ஒரு நோன்பியாக, தவசியாகக் காணப்பட்டார். தாமரை இலையில் தண்ணீர் எவ்வாறு ஒட்டாமல் இருக்கி றது? எண்ணெய் தடவிய இடத்தில், தண்ணீர் ஒட்டாமல் விலகி எவ்வாறு ஓடுகிறது? சரவணரும் சிறிதும் சலன மின்றிச் சூழ்நிலையில் ஒட்டித்தோய்ந்து விடாமல்விலகியே நின்றார். அந்த அளவு அவர் மனம் பயிற்சி பெற்றிருந் தது. உடற்பயிற்சியால் முறுக்கேறிய உடம்பு எதையும் தாங்குவதுபோல், வழிபாட்டுப் பயிற்சியால் திண்மை யுற்ற மனம் எத்தகைய வெள்ளத்தையும் தாங்கும் கற் போல நின்றது. நறுமணம் முகரப்படும் போதெல்லாம் அதிலுள்ள காற்றையும் மணத்தையும் பிரித்தே அவர்

மனம் சிந்தித்தது. கழிப்பறையோடு கூடிய அறை அது. கழிப்பறையைத்திறந்தால் அதே காற்று மலத்தின் மணத்தைச்சுமந்து வருமென்பது அவர் நினைவிலேயே நின்றது. பூக்களைப் பார்க்கும் போதெல்லாம் அவற்றில்வாடி உதிர்பவை எவ்வாறு மண்ணிற்கலந்து மறு பிறப்பெடுக்கும் என்பதிலேயே அவர் நாட்டம் சென்றது. அவர் தம் கண்ணெதிரேகண்ட உலகத்தை, நுண்கதிர்ப்படமாக எடுத்து, அதன் உள்ளும் புறமும் காணவல்ல மனக் கண்களுடன் திகழ்ந்தார். இது நல்லுசாமிக்குப் புலனாகாததால் இவ்வுலகச் சுழியில் அவரை இழுத்துவிட எல்லா முயற்சியும் செய்துகொண்டே இருந்தான்.

உணவு, உடை, படுக்கை, சுற்றுப்புறம் எல்லாமே சரவணரை நிலைதடுமாற வைக்கவென்று திட்டமிட்டு ஏற்பாடு செய்யப் பெற்றன. அங்கு அந்த இன்ப மாளிகையில் இருந்த மிக விரிந்த பரப்பளவுள்ள, மானும் மயிலும் உலவுகின்ற பூங்காவில் அடிகளை உலவுமாறு அனுப்பி வைப்பான் நல்லுசாமி! அங்கெல்லாம் பல இளம்பெண்களும் உலவுவதை அடிகள் காண நேரும். ஒரு நாள் நடிகை வசந்தி, திடீரென எதிர்ப்படுபவள் போல, அவர் எதிரில் வந்தாள். அவளை அந்த நிலையில், அந்தச் சூழலில் பார்த்தால் எவரும் தம் வசம் இழந்து விடுவர். அவளோ அதற்கும் மேலாக, அடிகளின் அருகில் வந்து, அவர் இருக்கையின் பக்கமாக அவர் உடம்பில் உராய்ந்து கொண்டு அமர்ந்து பேசினாள்.

''சாமிகளுக்குச் சென்னை பிடித்திருக்கிறதா? அடிக்கடி வெளியில் வருவதில்லையே?''

''எனக்கென்னம்மா வெளியில் வேலை? வழிபாடு, பூசை, தியானம் இதிலேயே நேரம் போய்விடுகிறது!''

"அப்படியா, பல சாமிகள் தேவியைத்தானே வழிபடுகிறார்கள். சக்தி வழிபாடு என்றால் அவர்களுக்கு ரொம்பப் பிடிக்கும். உங்களுக்கு?''—அவள் இதைக் கேட்டுவிட்டுக் கன்னங்குழியச் சிரித்தாள். அடிகள் தம் மார்பில் அணிந்

திருந்த அக்குமணி மாலையைத் தொட்டுத் தொட்டுப் பார்த்தாள்!

''எந்தத் தெய்வத்தை வழிபட்டாலும் மன ஒருமைப்பாடு தான் முக்கியம்'' என்றார் அவர்.

"அப்படியானால் உங்களுக்கு என்னைப் பிடித்திருக்கிறதா?"

''நான் சன்னியாசி, துறவி...புரிந்துகொள்!''

அவளிடம் அதே சிரிப்பு, அதே சாகசம். "என்னைச் சன்னியாசிகளுக்கு ரொம்பப் பிடிக்கும். எனக்கும் சன்னியாசிகளென்றால் பிடிக்கும்!"

''அப்போ அப்படிப்பட்ட ஆசாமிகளைத் தேடு!''—சரவணர் ஆத்திரத்தோடு கூறிவிட்டு எழுந்து புறப்பட்டார். வசந்தி துணுக்குற்று விலகி நின்றாள். அவருடைய மன உறுதி அவளுக்கு வியப்பைத் தந்தது. இதுவரை எந்த ஆண் மகனும் எலும்பு கண்ட நாய் போல், தன்னைக் கண்டு குழைந்து போவதையே பார்த்த அவள், இந்தத் துறவியிடம் ஒரு 'மனிதனை'க் கண்டு மதி மயங்கினாள். அவர் போன திசை நோக்கி, அவள் உள்ளம் குவிந்து வணங்கியது.

O

அன்று ஒரு நாள் ஓர் இளம் பெண்ணின் நாட்டிய அரங்கேற்ற நிகழ்ச்சி இன்ப மாளிகையில் நடைபெற்றது. நல்லுசாமி மிகவும் கட்டாயப்படுத்தி அடிகளையும் அழைத்துச் சென்று முன் வரிசையில் உட்கார வைத்தான். கல்லூரியில் படிக்கும் பெண் ஒருத்தி, நாட்டியமும் கற்று அன்று அரங்கேறினாள். முதல் நிகழ்ச்சி துஷியந்தன்—சகுந்தலை பற்றிய நாட்டிய நாடகம். துஷியந்தனாக வசந்தி வேடம் புனைந்து ஆடினாள். சகுந்தலையாக ஆடிய அப்பெண் மிக அழகாக இருந்தாள். அவளை அடிகளுக்கு எங்கோ பார்த்தமாதிரியும் இருந்தது. சகுந்தலை முதலில் தன் கச்சுக்களைத் தளர்த்தி விடுமாறு அனசூயையிடமும் பிரியம்வதையிடமும் கேட்பதிலிருந்து, கண்ணீர் சிந்தி

மறுகுவது வரை ஒவ்வொரு காட்சியிலும் அப்பெண் மிகச் சிறப்பாக ஆடினள். அடிகள் அக்காட்சிகளை மனமொன்றி, ஏதோ ஓர் ஆராய்ச்சியுடன் பார்த்துக் கொண்டிருந்தார். பிறகு விசுவாமித்திரர்—மேனகையாக மாறி அவர்கள் நாட்டியமாடினர். மேனகையாக வந்த அதே பெண், விசுவாமித்திரரை மயங்க வைத்த காட்சி மிகவும் பாலு ணர்வைத் தூண்டியது. பார்வையாளர் மத்தியில் ஒரே மகிழ்ச்சி, ஆரவாரம்! அடிகளோ நிலைகுத்திய கண்களு டன் அப் பெண்ணையே பார்த்துக் கொண்டிருந்தார்.

நல்லுசாமிக்கு ஒரு மகிழ்ச்சி, அடிகள் இந்நாட்டிய நிகழ்ச் சியையேனும் வைத்தகண் வாங்காமல் பார்த்துக் கொண் டிருந்ததற்காக! அவர் மனம் மாறி வருவதாக அவன் நம் பினன். அவன் உள்ளம் ஏதேதோ திட்டம் தீட்டியபடி இருந்தது.

இன்ப மாளிகையில் இரவும் பகலும் ஒரு மாதிரியே இருந் தன. எங்கெங்கு நோக்கினும் அழகிய ஒளி விளக்குகள் கண்ணைப் பறித்தன. பல இளம் பெண்களின் நடமாட் டம் இருந்து கொண்டே இருந்தது. பெரும் பெரும் செல் வர்களின் கார்கள் வரப்போக இருந்தன. ஒவ்வோர் அறையும் பல மறைமுகமான கதைகளைப் பேசுவனபோல் வாயைத் திறந்து திறந்து மூடிக்கொண்டன!

வசந்தி அந்த மாளிகையின் அரசிபோலத் திருவுலாப் போந்தாள். நல்லுசாமி அங்கு தனி உலகத்தையே படைத்து வைத்திருந்தான். இந்த சூழல் முற்றிலும் துறவிக்கு ஏற்றதன்று. ஆனாலும் அங்கு சில துறவியரும் காணப்படவே செய்தனர். இப்போதெல்லாம் துறவிய ரும் கூடத் தாம் இருக்கும் சூழலை இவ்வளவு வசதிகள் உடையதாகத்தான் அமைத்துக் கொள்கின்றனர் என்று நல்லுசாமி அடிக்கடி வாதித்தான். சரவணர் இச் சூழலில் தாமும் நிலை குலைந்து விடக்கூடும் என அஞ்சும் நிலையே உருவாகி இருந்தது. வசந்தி அடிகளின் அறைக்கே அடிக்கடி வரத்தொடங்கினள். ஒருநாள் அவர் குளித்துக்

கொண்டிருக்கும் போது, வசந்தி உள்ளே புகுந்து விட்டாள். தன்னுடைய அறையில் வெந்நீர்க் கருவி வேலை செய்யவில்லையென்றும், அங்கேயே குளிக்க வருவதாகவும் கூறினாள். அவர் சம்மதத்தை எதிர்பாராமலே அவள் அங்கு குளிக்க வந்துவிட்டாள். அடிகள் விரைந்து குளிப்பறையை விட்டு வெளியேறினார். அவள் பிறகு அங்கேயே குளித்துவிட்டு, உள்ளத்தை உலுக்கும் வண்ணம் தளுக்கும் மினுக்கும் செய்து வெளியே வந்தபோது அடிகள் மனமும் காற்றில் அசையும் இலைபோல் சிறிது ஆடியது. நல்ல வேளையாக அடிகளின் வேலையாள் யாரோ ஆர்வலர் ஒருவர் அடிகளைப் பார்க்க வந்திருப்பதாகக் குரல் கொடுத்தான். அவளும் உடை மாற்றிக் கொள்ள ஓடி ஒளிந்தாள்.

அன்று அடிகளுக்கு மிகுந்த மனப் போராட்டமாயிற்று. இனி அங்கிருப்பது தவறென்று அவருக்குப் பட்டது. அன்று இரவு யாரிடமும் சொல்லாமல் புறப்பட்டு விடலாமா என்று அவருள்ளம் திட்டமிட்டது. நல்லுசாமி வேளையறிந்து வந்தவன்போல், அங்கு தோன்றி நின்றான். அடிகள் அவனிடம் நடந்ததைக் கூறி, மிகவும் சினங்கொண்டு பேசி, தாம் உடனே ஊர் போக இருப்பதையும் கூறினார்.

''என்ன சாமி! கோபப்படறீங்க! ஒவ்வொரு சாமியும் இன்றைக்கு இப்படித்தான் வாழறாங்க!''

''அது உன் பார்வையிலே! அதுக்காக நாமும் தவறு செய்யணுமா?''

''என்னமோ நீங்க தப்பே அறியாதவங்க மாதிரி பேசறீங்களே!''

''உண்மைதான்... இப்போ அதையெல்லாம் விட்டுவிலகி நான் ரொம்ப தூரம் போயிட்டேன். நீ இதைப் புரிஞ்சிக்காதது வேடிக்கையா இருக்கு!''

"புரிஞ்சுதான் சாமி பேசறேன். நீங்க இப்போ நினைச்சால் சொர்க்கமே இங்கே வரும் சாமி! இப்ப நீங்க உதறித்

தள்ளப்படாது! காலிலே வந்து விழுகிற சீதேவியை...''

''நல்லுசாமி! இப்போ நான் உண்மையிலேயே மாறிப் போயிட்டேன். என்னை என் போக்கிலேயே விட்டுவிடு!''

''நான் விட்டுடுவேன் சாமி! உங்க சாயம் வெளுத்திட்டா என்ன செய்யிறதுன்னுதான் யோசிக்கிறேன்.''

''பரவாயில்லையப்பா! நான் திருச்சி போயிடறேன்! தயவுசெய்து என்னை விட்டுடு.''

''சும்மா கிடங்க சாமி! கொஞ்சம் வதந்தியைக் கிளப்பி விட்டேனுப் போதும், உங்களை ஊரே காறித் துப்பிடும்!

''திருச்சியிலே நீங்க தலை காட்ட முடியாது!"

''அட பாவி! அப்படியெல்லாம் செய்திடாதே! நான் இன்னும் கொஞ்ச நாளைக்கு மன அமைதியோடே இருந்து சாகணும்!''

"சாகணும் சாகணும்னு பேசாதே சரவணு! நீ வாழணும். என்ன ஆனாலும் நான் உன்னை விடமாட்டேன். என் பேச்சுக்கு மாறு நடந்தே, உன்னை இங்கேயே..''உணர்ச்சி வசப்பட்ட நல்லுசாமி வாயில் வார்த்தை வராமல் மூசுமூசென்று மூச்சு விட்டான். அவனுக்குச் சினம் மிகுந்து விட்டால் அடிகளை ஒருமையில் பேசத் தொடங்கி விடுவான்.

அடிகளுக்குக் கடுங்கோபம் பொங்கியது. அதற்குமேல் அவர் பேசவில்லை. தியானத்தில் ஆழ்பவர்போல் கண்ணை மூடிக்கொண்டார். நல்லுசாமியும் படமெடுத்த நல்ல பாம்பு, கூடைக்குள் அடங்கிப் போவது போல், அங்கிருந்து வெளியேறிப் போனான்.

O

உள்ளுக்குள் அடிகளுடன் இப்படிப் போராட்டம் நடத்திக் கொண்டே நல்லுசாமி வெளியில் காசு சேர்க்கும் வழிகளைப் பெருக்கிக்கொண்டிருந்தான். அடிகளைப் பற்றிய பல வதந்திகளை அவன் மிக எளிதாகப் பரவச் செய்தான். அவர் கொடுக்கும் ரோஜாப்பூவின் இதழைத் தின்றால், பிள்ளையில்லாத பெண்களுக்குப் பிள்ளை கிடைக்குமாம்!

ஒருவர் வீட்டில் பத்தாயிரம் பணமும் நகைகளும் காணு மற் போயினவாம். அவர்கள் அடிகளிடம் வந்து முறை யிட்டார்களாம். அவர்கள் வைத்த வெற்றிலேயில் ஒன்றை அடிகள் இரண்டாக ஒடித்துக் கசக்கி எறிந்தாராம். அவர் கள் வீட்டிற்குத் திரும்பிப் போகுமுன் திருடியவன் தான் திருடியதைக் கொண்டுவந்து அதே இடத்தில் போட்டு விட்டு ஓடுகையில் துடிதுடித்துச் செத்துப்போனுனும். இதையெல்லாம் கேட்டுச் சென்னை நகரின் நான்கு மூலே களிலிருந்தும் மக்கள் வரத்தொடங்கினர்கள். பிள்ளைவரங் கேட்டு வந்தவர்கள் பலர்! முன்பு எப்போதோ ஒரு காலத் தில் திருடு போனதாகக்கூடச் சிலர் வந்து கூறித் திருப்பி வரவழைத்துத்தர வேண்டினர்கள். ஒருவன் தன் மாடுகள் காணுமற் போனதாகக் கூறி அடிகளிடம் விவரம் கேட்க வந்தது வேடிக்கையாக இருந்தது!

நாள் ஆக ஆக, அடிகளை எப்படியாவது சென்னையில் மேலும் சில நாட்களாவது தங்க வைக்க வேண்டும் என்று நல்லுசாமிக்குப் பேராசையாக இருந்தது. ஏனெனில் ஒவ் வொருநாளும் பத்தாயிரத்திற்குக் குறையாமல் வசூலாகிக் கொண்டிருந்ததால், அதை இழக்க நல்லுசாமி மனம் ஒருப்படவே இல்லை.

O

அடிகள் இத் துன்பத்தையும் வேடிக்கைகளையும் வேதனை யையும் மறக்க தேவார திருவாசகங்களைப் படிக்கத் தொடங்கினர். "பகவத் கீதையை" சமஸ்கிருதத்திலேயே சிலசமயம் ஓதினர். சிலசமயம் தமிழில் மொழிபெயர்த்துப் படித்தார். செயல்களின் பயனை விளைவித்துச் செய்தவர் களுக்கு ஊட்டும் இறைவன் தன் பணியைச் செய்யத் தவறுவதேயில்லை. உயிர்கள் பயனைப் பற்றிக் கவலைப்படா மல், பயனில் பற்று வைக்காமல் கரும யோகத்தில் ஈடுபட வேண்டும் என்ற கருத்து அவரை ஈர்த்தது. கோளறு பதி கம் அடிக்கடி பாடப்பட்டது. அவருடன் வந்த மடத்து

வேலையாட்களும் அவருடன் கூடவே பாடினர். அவர்கள் மூவரும் வாய்விட்டுச் சந்தம் தவருமல், ஒரே மாதிரிபடித்த ஒலிகேட்டு இன்பமாளிகையே செவி சாய்த்தது; திசை திரும்பியது!

ஒரு நாள் நல்ல மழை பெய்தது! மிகப்பெரிய புயல் மழை அது! ஒருமணி நேரம் பெய்திருக்கும். மழையோடு மழையாக அடிகள் மிக உரத்த குரலில் திருமுறைப் பாட்டுக்களையும் திரு அருட்பாவையும் திருப்புகழையும் ஓதினர். இன்பமாளிகையில் இருந்த அனைவரும் அடிகளின் அறைநோக்கி வந்தனர்; வராதவர்களும் தங்கள் தங்கள் அறையைவிட்டு வெளியில் வந்து, அவ் ஒலியில் ஈடுபட்டு நின்றனர். நடிகை வசந்தி, அடிகள் அறைக்கே வந்து, தன்னை மறந்து கேட்டுக் கொண்டிருந்தாள். அடிகள் பகவானின் கீதையை மனம் தோய, அறிவு ஒளிரப் பாடத் தொடங்கினர்:

செயல்களைச் செய்கநீ செய்கையின் பயன்களைச்
சிறிதும்நீ சிந்தியாதே
செயல்செயப் பிறந்தனை; செய்கையின் பயன்களைத்
தெய்வமே நிச்சயிக்கும்!

பயன்களைச் சிறிதுநீ எண்ணினும் வீழ்ச்சியாம்
பயனிலே பற்றுவைத்தால்
அயர்வையே அடைவைகாண்! அயராமல் உழைப்பவர்க்கு
அவைதாமே வந்து சேரும்!

அயர்விலா ஐம்பொறி பொருள்களில் தோய்ந்திடும்
அவற்றில்நீ தோய வேண்டாம்!!
செயல்களில் ஒன்ருமல் செயல்செய வேண்டும்! அத்
திண்மைதான் உனக்குமுண்டோ?

செயலதைப் பிரம்மத்தின் செயலென்று பற்றின்றிச்
செய்தொழிலில் ஈடுபட்டால்
வயங்கிடும் நீரினில் தாமரை இலைபோலப்
பாவங்கள் விலகிநிற்கும்!

கருமத்தைத் துறப்பதால் பயனில்லை; பற்றின்றிக்
கருமத்தைச் செய்துகொண்டே
கருமத்தின் பயனதைக் கருதாத யோகத்தில்
கடமையைச் செய்க நீயே!

கருமத்தில் கலந்தும்நீ கலக்காமல் இருப்பதே,
கருமத்தில் பற்றிலாமை,
கருமயோகம் என்றதைக் கழறுவர்! பார்த்தனே!!
கடைப்பிடி! கழறினேனே!

மழைநீர் தாரைதாரையாக எங்கும் பெய்து, பிறகு ஒன்று கலந்து பற்பல கால்களாக எங்கு நோக்கினும் ஓடிக் கொண்டிருந்தது! அங்கு இன்ப மாளிகையில் அப்போது இருந்தவர்கள் உள்ளமெல்லாம் மழைநீரோடு மழை நீராகி, உருகி ஓடிக்கொண்டிருந்தன. அம்மழைநீர் எங்கு விழுந்ததோ, அந்த இடத்தின் நிறமும் சுவையும் அதிற் படிவதுபோல் அவர்கள் அனைவரும் அடிகளின் வசப்பட்டு தெய்வ உலகிற் குடியேறிக் கொண்டிருந்தார்கள்!

நல்லுசாமியே ஒரு கணம் ''ஏது? சாமிகளை நாம் மாற்றுமுன் அவர் நம் மாளிகையையே மடமாக்கிவிடுவாரோ?'' என அஞ்சினன். மழை நின்ற பிறகும் அடிகள் பாடிக் கொண்டே இருந்தார். நல்லுசாமியும் அதை உன்னிப் பாகக் கேட்டுக்கொண்டேயிருந்தான். இப்படியே நான்கு நாட்கள் விட்டாலும், காவியாடையும் அக்குணிமாலையுமாய்—வசந்தி உட்பட அனைவரும் தன்னைவிட்டுப் போய் விடக்கூடும் என நல்லுசாமி எண்ணியபோது, அவனையும் அறியாமல் அடிகள் மீது அவனுக்கோர் 'மதிப்புணர்வு' அரும்பியது!

○

" கருங்கோட்டு
ஆமா நல்லேறு சிலைப்பச் சேணின்று
இழுமென இழிதரும் அருவி "

23

அடிகள் சென்னை வந்து இருபத்தேழு நாட்கள் ஓடிவிட்டதை அவர் எண்ணியெண்ணி மகிழ்ந்து கொண்டிருந்தார். இன்னும் மூன்றே நாட்களில் திருச்சிக்குப் போய் விடலாம் என்ற நினைவே அவருக்குப் பெரும் ஆறுதலாக இருந்தது. திருச்சியில் அவர் தமக்காக வழக்கப்படுத்திக் கொண்ட நடைமுறைகள் எல்லாம் எளியவை. மேலும் அவருக்குப் பிடித்தமானவை. சென்னையிலிருந்த ஆடம்பரம், விளம்பரம், சுகபோகம் எல்லாம் அவருக்குப் பொருந்தவில்லை.

நல்லுசாமி அவரை மடக்கி, எப்படியாவது சென்னையில் இன்னும் கொஞ்சநாள் தங்க வைப்பதிலும், அவரை அடிக்கடி சென்னை வருமாறு ஓர் ஈடுபாட்டை அவரிடம் ஏற்படுத்தி வைப்பதிலுமே நாட்டமாய் இருந்தான். அவன் இன்னும் பழைய நிலையிலேயே இருந்தான். இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பிருந்த நிலையிலிருந்து ஓர் இம்மி அளவு கூட அவன் மாறவில்லை. ஆனால் தம்

மிடம் ஏற்பட்டிருந்த பெரும் மாற்றத்தை அடிகள் நன்கு உணர்ந்தார். இங்ஙனம் தாங்கள் இருவரும் இருதுருவங்களாக இருக்கும்பொழுது, எவ்வாறு ஒத்துப்போக முடியும் என்று அவர் சிந்தித்தார்!

ஒரு கோடீசுவரர் தம் படத்துவக்க விழாவில் அடிகள் வந்து 'ஒளிப்படக்' கருவியை முதன்முறையாக முடுக்கி வைக்கவேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். அவ்விழாவிற்காக ஒரு இலட்சம் கூடச் செலவழிக்க அவர் ஆயத்தமாக இருந்தார். பெரும்பணம் தனக்குக் கிடைக்கும் என்ற நைப்பாசையில் நல்லுசாமி அதை மிகவும் வற்புறுத்தினன். ஆனால் அடிகளுக்கு அதிற் சற்றும் விருப்பமில்லை. கண்டிப்பாக வரமுடியாதென மறுத்தார். நல்லுசாமி அவரைத் தன் விருப்பத்திற்கு இசைய வைப்பதற்காகக் கீழிறங்கிப் பேசவும் தயங்கவில்லை.

''என்னப்பா சரவணு, பெரிய உத்தமன் வேசம் போடறே? நீயும் உன் பெண்டாட்டியும் இந்த ஊர்லே அலேஞ்சது தெரியாதா? அந்த வைத்திகூட இங்கேதான் இருக்கிருன்? பெருநோய் பிடித்துச் சித்திரவதைப்படுருன். கூட்டி வரட்டுமா? உன்னேவிட மோசமாவா நான் அலேயிறேன். நான் இதைத் தொழிலாச் செய்யிறேன். இது தப்பா? இன்னேக்கும் உன் பேரும் விவரமும் தெரிஞ்சாக் காறித் துப்புவாங்க! காசிச்சாமிகள் என்கிற போர்வையில நீ நடமாடிக்கிட்டு, ஊரையே ஏமாத்திக்கிட்டு இருக்கிறே. எனக்குச் செல்வாக்கு வரக்கூடாதா? எனக்கு நீ உதவக் கூடாதா?''

''நல்லுசாமி! நீ என்ன வேண்டுமானுலும் பேசிக்க. நான் ரொம்ப மாறிப் போயிட்டேன் .....இப்போ இந்த சுக போகம், ஏமாத்து, வெளிவேடம் எதுவுமே எனக்குப் பிடிக்கவில்லே.''

''அப்போ முடியைச் சிரைச்சிட்டு, வெள்ளேவேட்டியைக் கட்டிக்கிட்டு வெளியே புறப்படலாமே. எங்கே குட்டு வெளிப்பட்டுப் போகுமோன்னுதானே பயப்படுறே? இல்

லேயா? இன்னும் உம்மேலே கொலேக்கேசு இருக்கு. தெரியுமா?''

''நீ எதை எப்படி டமாரம் அடிச்சாலும் நான் இன்றைக்குப் பழைய சரவணன் இல்லே. எந்த விளேவுக்கும் அஞ்சப் போறதில்லே.''

''இப்படிச் சொன்னல் உன்னேப் போலீசிலே விடுவாளுக்கும்? நான் ஒண்ணும் உன்னேக் காட்டிக் கொடுக்கல்லே. ஏதோ, இரண்டொரு உதவிக்காகக் கூப்பிட்டால், என் கிட்டேயே ரொம்ப பிகு பண்ணிக்கிறியே, நல்ல ஆளப்பா நீ''...இவ்வாறு பேசிக் கொண்டே வந்தவன் சரவணர் முகம் மாறுவதையும் ஒரு கலவர நிலே அவர் முகத்தில் தேங்கி நிற்பதையும் கண்டு, 'எங்கே காரியம் விஞ்சி விடுமோ' என அஞ்சிப் பேச்சை மாற்றினன். இப்போது அடிகள் தயவால் தனக்கு இரண்டு மூன்று இலட்சம் குவிந்திருப்பதை அவன் மனம் எண்ணிக் கொண்டிருந்தது. உடனே சிரித்துக் கொண்டே, ''சும்மா விளேயாட்டுக்குச் சண்டைபோட்டேன். மன்னிச்சுக்க சரவணசாமி! பிரியமில்லேனு வரவேண்டாம்'' என்று கூறிவிட்டு, அங்கிருந்து நல்லவன்போல் நகர்ந்தான்.

சரவணர் உள்ளம் பெருங்குழப்பத்தில் ஆழ்ந்தது. உலகமே அவர் முன் நின்று எள்ளி நகையாடுவதுபோல் இருந்தது. தாம் கைதாகிக் கையில் விலங்குடன் நடப்பது போலவும் தம்மை வேடிக்கை பார்க்கும் மக்கள் கூட்டத்தைக் காவலர்கள் இடித்துத் தள்ளுவது போலவும் ஒரு நினேவலே தோன்றி மறைந்தது. அவர் குடல் நடுங்கியது; உடல் வியர்த்தது. பாம்பு படமெடுத்து வருகிறது; அவரைக் கொத்த வருகிறது; பிறகு பின்வாங்கிக் கொத்தாமல் சுற்றிச் சுற்றி வருகிறது.

இப்படி அலேபாய்ந்த மனத்தோடு அவர் சன்னல் வழியே எட்டிப் பார்த்தபோது, அன்று சகுந்தலேயாக, மேனகையாகவெல்லாம் நாட்டியமாடிய பெண் அங்கே போவது

தெரிந்தது. அவர் நினைவுகளனைத்தும் மாறின. அவளைப் பற்றிய நினைவிலே அவர் ஆழ்ந்தார்.

○

அடிகளுக்கு ஓர் ஐயப்பாடு. அன்று கற்பகவல்லி வீட்டுத் திருமணத்தில் பார்த்த மலர்க்கொடிதான் அப்பெண்ணோ என்று அவர் மனம் படாதபாடுபட்டது. கடவுள் அருளால் அவள் மலர்க்கொடியாக இருக்கக் கூடாது என்று அவர் மனம் வேண்டிக்கொண்டது. அவள் தன்னை மிக விரசமாக ஒப்பனை செய்துகொண்டு அங்குமிங்கும் நடந்து கொண்டிருந்தாள். ஒரு சமயம் நல்லுசாமி அவள் காதில் ஏதோ ஓதிக் கொண்டிருந்தான். பிறகு அவள் ஓர் அறைக்குள் ஓடினாள்; பிறகு சிரித்துக் கொண்டே வெளியில் ஓடிவந்தாள். அவளைத் தொடர்ந்து, ஒரு பெரிய உருவம்—படமுதலாளி போல் தெரிந்தது-நகர்ந்து வருவதையும் பார்க்க முடிந்தது.

அடிகள் தம் கூடவந்த ஒரு வேலையாளை அழைத்து, அந்தப் பெண் யாரென்று விசாரித்துக்கொண்டு வருமாறு சொல்லியனுப்பினார். அவ் வேலையாள் சற்று நேரத்திற்கெல்லாம் திரும்பிவந்து, அடிகளிடம் அவளைப் பற்றிய விவரங்களைக் கூறினான். அவள் கல்லூரியில் படிக்கும் மாணவி என்றும் திரைப்படத்தில் நடிக்கும் ஆசையால் முதலாளி ஒருவரை அறிமுகப்படுத்திக் கொள்ள வந்திருக்கிறாள் என்றும் பெயர் கலாஸ்ரீ என்றும் அவன் கூறியதைக் கேட்கக் கேட்க அடிகளுக்கு மயக்கமாக வந்தது.

அடிகள் தம் பேர்த்தியாக இருக்குமோ என்ற ஐயத்தில் மீண்டும் மீண்டும் குழம்பினார். அதைத் தெளிவு படுத்திக் கொள்ள அவளை அருகிற் பார்த்துப் பேசவேண்டும்போல இருந்தது. திருச்சிக்குத் திரும்ப இன்னும் ஒருநாள் இடைவெளிதான் இருந்தது. ''சரி சரி. அவள் யாரோ ஒருத்தியாக இருந்தால் நமக்கு என்ன? சேசே! ஒருவேளை அவள் மலர்க்கொடியாக — கனகசபை மகளாக இருந்துவிட்

டால்...'' தெளிவுபடுத்திக்கொள்ள அவர் மனம் துடியாய்த் துடித்தது.

மருத்துவக் கல்லூரி மாணவியை அடிகள் யாரென்று அக்கறையோடு விசாரிக்கிருர் என்ற செய்தி எப்படியோ, நல்லுசாமி காதுக்கும் எட்டியது. கடைசியாகத் தன் இன்ப மாளிகையில் இவள் ஒருத்தியாவது அவர் உள்ளத்தை மாற்றியிருக்கிருளே என்று அவன் வியப்படைந்தான்! உண்மையில் அப் பெண்ணைப் பற்றி நல்லுசாமிக்குப் பெருமையாக இருந்தது. வசந்தியுட்பட அத்தனை பெண்களின் அழகு மயக்கத்தையும் கடந்து நின்ற அடிகளை, இப்பருவச் சிறுமி பக்குவமாய்க் கவர்ந்துவிட்டாளே என்று அவன் பெருமிதப்பட்டான். அவளுக்குத் திரைப்பட வாய்ப்புக் கிடைக்கிறதோ, இல்லையோ... அதைப் பற்றிக் கவலை இல்லை. அவளைக்கொண்டு அடிகளை வீழ்த்திவிடவேண்டும் என்று அவன் திட்டமிட்டான். பிறகு தான் சொல்லுகிறபடியெல்லாம் அவர் ஆடுவாரல்லவா? ஏன்? அவளுக்கும்தான் என்ன குறையப் போகிறது? அடிகளின் வருமானத்தைக் கொண்டு, சொந்தப்படமே ஐந்தாறு எடுக்கலாமே? எதற்குப் பிறரிடம் போய், ஆடிப்பாடிக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டிருக்கவேண்டும்?

○

அடிகளின் அறைக்குத் தற்செயலாகச் செல்பவன்போற் சென்ற நல்லுசாமி, அவரை மிகவும் அன்புடனே விசாரித்தான். ஒருநாளில் பிரியப் போகிருேமே என்று மிகப்பரிவோடு பேசுபவன் போலக் காணப்பட்டான். ''உங்களை நான் புரிந்து கொள்ளாமற் பேசியதற்கு என்னை மன்னிக்கவேண்டும்! என்னுல் எதுவும் உதவி தேவைப்பட்டால் கூறுங்கள்!" என்ருன் அவன். அடிகள் கனைத்துத் தொண்டையைச் சரிசெய்துகொண்டு ''நான் போகுமுன் அந்தப்பெண்ணைச் சந்தித்து விட்டால் நல்லது" என்ருர். நல்லுசாமி ஒன்றுமறியாதவன்போல், ''எந்தப்பொண்ணு சாமி?'' என்ருன். தெரிந்துகொண்டேதான் அவன் அவ்

வாறு கேட்டான். அவன் உள்ளம் சிலந்திக் கூட்டில் விழுந்துவிட்ட பூச்சியைக் கண்டு துள்ளிக் குதித்தது. ''அன்று மேனகையாக நடித்தாளே, அவள்தான். இன்றுகூட அவள் இங்கு வந்திருப்பதைப் பார்த்தேன்'' என்றார் அடிகள்.

''அந்தப் பெண்ணையா? அடடே, இப்பொழுதுதான் புறப்பட்டுப் போனாள். அவங்க வீட்டிலே ஒரு முரண்டு பிடிச்சவங்க. அதனாலே நேரத்துக்கு வந்துட்டு உடனே ஓடிப்போயிடுவாள். நாளை மாலை அவளைத் தாங்கள் சந்திக்க ஏற்பாடு செய்யிறேன். நாளை மறுநாள்தானே தாங்கள் புறப்படுகிறீர்கள்?'' என்று கூறினான். அவளிடம் மட்டும் இவர் மயங்கி விழுந்துவிட்டால், பிறகு கதை முடிந்த மாதிரிதான் என்று, தன் திட்டம் இறுதியாகவேனும் வெற்றிபெறப்போவதை நினைத்து, மனப் பால் குடித்துக்கொண்டே, நல்லுசாமி என்ற நாகம் அங்கிருந்து அகன்றது.

○

இன்பமாளிகை இரண்டு மாடியுள்ள கட்டிடம். அது ஒரு பெரிய தங்கும் விடுதிபோல, ஒரு வளைவாக—வட்டமாகக் கட்டப்பட்டிருந்தது. நடுவில் கார்கள் நிறுத்த வசதி இருந்தது. எல்லோரும் அமர்ந்து கலந்துரையாடக் கூடிய முற்றமொன்றும் இருந்தது. இரண்டாவது மாடியில் சரவணர் அப்பெண்ணைச் சந்திக்க ஏற்பாடாகியிருந்தது. மாலை நேரம். நல்லுசாமி அடிகளை அழைத்துச் சென்று, உள்ளே அனுப்பிவிட்டு, 'அவள் விரைவில் வருவாள்' என்று கூறிவிட்டு அங்கிருந்து நழுவினான். அடிகள் உள்ளே சென்றதும் கதவு தானே தாழிட்டுக் கொண்டது. அங்கு தந்தத்தாற் செய்யப்பட்டுப் புலித்தோல் போர்த்திய—புலிக்கால் வைத்த அழகிய இருக்கையொன்று முன்னே கிடந்தது. வெளிச்சம் மிக மங்கலாக இருந்ததால் அடிகள் ஒரு பட்டனை அழுத்தினார். அக்கணமே அந் நீண்ட கூடத்தின் மேற்கூரை முழுவதும் நீலவானம்

போலவும், விளக்குகள் அதில் நாள் மீன்களும் பிறைமதியும் போலவும் ஒளியுமிழ்ந்தன. கூடம் முழுவதுமே குளிர் பொறி அமைக்கப்பட்டுக் குளுகுளுவென்றிருந்தது. அடிகள் கூடத்தைச் சுற்றிப் பார்க்கத் தொடங்கினர். பட்டிக்காட்டான் யானையைப் பார்ப்பது போலவும் சிறு குழந்தை வேடிக்கை பார்ப்பது போலவும் அது இருந்தது. குளியல் தொட்டி ஒன்று, பளிங்கினுற் செய்யப்பட்டு மிகப்பெரிய படகு போல, அடுத்த கூடத்தில் இருந்தது. மலைச்சாரல், அருவி, ஆற்றங்கரை போன்ற அழகிய பின்புல அமைப்போவியங்களைப் பார்த்துக்கொண்டே சென்ற சரவணர், இறுதியில் தாம் புறப்பட்ட இடத்திற்கே வந்து நின்றுர். அப்போதுதான் அது வளைத்துக் கட்டப்பட்டிருப்பது அவருக்குப் புலனாகியது. எங்கும் ஒரு நறுமணம் இழையோடியது. அங்கு கிடந்த படுக்கையில் பலவகை மலர்கள் பரப்பப்பட்டிருந்தன! மருக்கொழுந்து அத்தர் வாசனை! சந்தன மணம்......சரவணர் புன்னகை பூத்தார். அவர் அப்பெண்ணைப் பார்க்கவேண்டும் என்றதை நல்லுசாமி தவருகப் புரிந்து கொண்டுவிட்டான். அட பாவமே! அவனவனுக்கு அவனவன் நினைப்பு!

தாம் விரைவில் அங்கிருந்து விடுபட நினைத்த சரவணர் அப்பெண் எங்கே என்று வாயிலை நோக்கினர். அவர் எதிர்பாராத விதத்தில், அக்கூடத்தினுள்ளிருந்தே ஒரு திரையை விலக்கிக் கொண்டு அவள் வந்தாள். அழகே வடிவாகப் புனைந்து கொண்டு வந்து நின்ற அவள் சரவணரை நோக்கிக் கும்பிடுபோட்டாள். சரவணர் முகம் கடுகடுவென்று இருந்தது; அவர் கண்கள் சிவந்திருந்தன; நெற்றிச் சுருக்கம் வில் வளைவது போல் காணப்பட்டது.

அவளை அணுகிச் சரவணர் "நீ யார்?'' என்று, கொஞ்சம் அதட்டியே கேட்டார். அவள் சிரித்து மழுப்பினுள். இவ்வாறு அவளை அனுப்பும்போது, "மிக எச்சரிக்கையாக இருக்கவேண்டும். ஆபத்தில் மாட்டிக்காதே" என்றுதான் சொல்லியனுப்புவது வழக்கம். அவளும் தன்னை யாரிடத்திலும் இன்னரென முழுவதும் வெளிப்படுத்திக் கொள்வ

தில்லை. அதனால் ''ஏன்? என்னைப் பிடிக்கவில்லையா?'' என்று குழைந்தாள். சரவணர் மிக வெறுப்போடு அவளை நோக்கி, ''முதலில் நீ யாரென்பதைச் சொல். அதுதான் எனக்கு வேண்டும். அதற்காகத்தான் உன்னைச் சந்திக்க எண்ணினேன். உன் அருவருப்பைக் கண்டு களிக்க அல்ல'' என்று முழங்கினார்.

"ஊஹூம்! அது அவ்வளவு முக்கியமா? நான் ஒரு இளம் நடிகை. என் அண்ணன் ஒரு சினிமா புரட்யூசர். என் பெயர் கலாஸ்ரீ......போதுமா?''

அந்தப் பதிலில் சரவணர் மனநிறைவடையவில்லை. அவளை மிகவும் உன்னிப்பாக உற்றுப்பார்த்தார். அந்தப் பார்வை நெருப்பில் அவள் துவண்டாள். ''நீ பொய் சொல்கிறாய்! உன் சினிமாப் பெயர்தான் கலாஸ்ரீ...... சொந்தப் பெயர் வேறே. பொய் சொன்னால் கொன்று விடுவேன். ஆமா!'' என அவர் மிரட்டத்தொடங்கினார். ''நீங்கள் என்ன சொன்னாலும் நான் சொன்னதுதான் உண்மை. ஏன்? உங்களுக்குப் பிடிக்கவில்லையானால் என்னை விட்டுவிடுங்கள்!'' என்று கூறிக்கொண்டே, அவள் கதவருகே சென்று, மெள்ள நழுவப் பார்த்தாள். அவரோ பாய்ந்து சென்று, அவளை உட்புறமாகத் தள்ளி விட்டுக் கதவைத் தாழிட்டுப் பூட்டிவிட்டார். அவள் நடு நடுங்கிப் போனாள். இந்த மாதிரி இக்கட்டு ஏதும் நேர்ந் தால், மிரட்டித் தப்பிப்பதற்காகப் படுக்கையின் கீழே, சிறு இழுப்பறையாக இணைத்துள்ள பகுதியில் ஒரு கைத் துப்பாக்கி வைக்கப்பட்டிருக்கும். படுக்கையில் மயங்கி விழுவதுபோல் விழுந்து, மெதுவாக அவள் அத்துப்பாக் கியை எடுத்துக் கொண்டாள். அதனை அவரை நோக்கிக் காட்டி, ''என்னை வெளியே போகவிட்டு விடுங்கள். சாவியைத் தந்துவிடுங்கள்......இல்லையென்றால்.........'' என்று படபடத்தாள். அடிகளும் ஒரு கணம் மிரண்டு போனார்.

அடிகள் எதிர்பாராத இந்நிகழ்ச்சியைக் கண்டதும் சட் டென்று தம் போக்கை மாற்றிக்கொண்டார். ''நீ மிகவும்

தைரியமானவள்தான். உனக்கு அழகு மட்டும்தான் இருக்கிறதென்று நினைத்தேன்...உன் அறிவுக்கூர்மை ஆழமானது. உன்னைப் போன்றவர்கள் படத்தில் நடித்தால், முதற்படமே வெற்றிப்படமாக ஓடும். அதுதான் சோதனை செய்துபார்த்தேன்'' என்றார் அவர். அவள் குழப்பமடைந்தாள். அவளிடம் திறவுகோலை நீட்டினார். அதை அவள் வாங்க இடது கையை நீட்டியபோது, அதை அப்படியே பிடித்து, அவளைத் தலைகுப்புறப் படுக்கையில் தள்ளிவிட்டுத் துப்பாக்கியைப் பறித்துக்கொண்டார் அடிகள். அவள் அஞ்சி நடுங்கி எழுந்தபோது, அவள் நெஞ்சுக்கு நேரே துப்பாக்கியைக் காட்டி, "உண்மையைச் சொல்? நீ யார்? உன் அப்பா பேரென்ன? அம்மா பேரென்ன? சொந்தவூர் எது? எப்படி இந்தப் பழக்கம் வந்தது?" என்று கேள்விகளைத் தொடுத்தார். "நீ உண்மை சொல்லும்வரை உன்னை விடமாட்டேன்'' என்று கண்டிப்பாகக் கூறினார்.

''ஐயோ! அப்பா! நான் சொன்னதுதான் உண்மை...!"

''இல்லை''—அடிகள் குரல் அதிர்ந்தது. "நீ ஒரு இளம் நடிகை என்பது பொய். நீ ஒரு மருத்துவக் கல்லூரி மாணவி'' என்றார் அவர்.

அவள் 'ஆமாம்' என்று தலையாட்டினாள். அவள் குரல் தளும்பியது. கண்ணீர் பெருகியது.

''உன்பெயர் கலாஸ்ரீ அல்ல... அது இந்த இன்பமாளிகையில் வைத்த பெயர். உன் உண்மையான பெயர் மலர்க்கொடி—இல்லையா மலர்க்கொடி?''

'மலர்க்கொடி!' என்ற தன் பெயரை அவர் ஒலிக்கக் கேட்டதும் அவள் திடுக்கிட்டாள். இந்தச் சாமியார் திருட்டுப் போனசொத்தைக்கூட, யார் திருடினார் என்று கண்டுபிடித்துக் கூறக்கூடியவர் என்று அவள் கேள்விப்பட்டிருந்தாள். இப்போது அவர் தம் தெய்வத்தன்மையால், தன்னைப் பற்றியெல்லாம் தெரிந்து வைத்திருக்கிறார் என்பது அவளுக்குத் தெளிவாகியது. அதனால் இனி அவரிடம் எப்

பொய்யைக் கூறியும் பயனில்லை என அவள் மனம் முடிவு செய்தது.

''நான் சொல்வது சரிதானே! இனிமேலாவது உண்மையை ஒப்புக்கொள். உன் பெயர் மலர்க்கொடிதானடி?"

''ஆம்''

''உன் அப்பா பெயர்!''

''கனகசபை''

''அம்மா?''

''மலர்விழி''

''ஊர்?''

''திருச்சி''

''மருத்துவக் கல்லூரியில் படிக்கும் உனக்கு இங்கென்ன வேலை?''

''கலை ஆசை...நாட்டியம்...சினிமா!'' —அவள் மென்று விழுங்கினாள்.

''இங்கே என்ன வேலையென்று கேட்கிறேன்?''—அடிகள் இடியோசைபோல் கூடமே அதிருமாறு கேட்டார். அவள் அங்கு வந்ததில் அவருக்கு அவ்வளவு ஆத்திரம்.

"சினிமாவில் நடிக்க வாய்ப்பு வாங்கித் தருவதாகச் சாமி சொன்னார்."

''உன்னைப் படிக்கவைக்கிறது யார்? உங்க அப்பாவா?''

''இல்லை. அவர் சிறைக்குள்ளே இருக்கிறார்!''

''அப்போ படிக்க வைக்கிறது?''

''சொன்னால் உங்களுக்குத் தெரியாதுங்க!''

''தெரியும். சொல்!''

''பூவண்ணர்.''

''அவருக்கு என்ன வந்தது, உன்னைப்படிக்க வைக்க...?"

''என் தாத்தாவோட நண்பர் அவர். அதனாலே...''

"அதோடே வேறே என்ன காரணம்? அதையும் சொல்லு...!"

''அவருக்குக் கண்ணன்னு ஒரு பையன். அவரும் மருத்துவப் படிப்புப் படிச்சு முடிக்கிருரு. அவருக்கு என்னைத் திருமணம் செய்ய நினைக்கிருரு.''

''இந்த நல்ல வாய்ப்பை விட்டுட்டு நீ இப்படி அலையலாமா?''

''எனக்குக் கட்டுப்பட்டு, அடிமையா வாழப் பிடிக்கலே. சினிமாவிலே நடிச்சுப் பேரும் புகழும் வாங்கணும்கிறது தான் எனக்குச் சின்னப் பிள்ளையிலேயிருந்து ஆசை."

''சீச்சீ! இது எல்லாம் அவுங்களுக்குத் தெரியுமா?''

''தெரியாது.''

''தெரிஞ்சா உன்னை மதிப்பாங்களா?''

அவள் பேசவில்லை. அவளுடைய திரைப்பட ஆசை அவளை இப்படி எல்லை கடந்து வர வைத்திருக்கிறது என்பது நன்கு புரிந்தது.

''இப்பவே உன் வீட்டுக்கு ஓடு. இனிமேல் இந்தப் பக்கமே தலை காட்டக்கூடாது. நல்ல குடும்பத்திலே சேர்ந்து குடியும் குடித்தனமுமா வாழுறதை விட்டுட்டு..."

''நல்ல குடும்பத்திலே பிறந்திருந்தா நான் ஏனுங்க இப்படி அலையிறேன். எங்கம்மா கண்டவுங்ககூட ஊர்ஊராச் சுத்துரு. எங்க அப்பா பொய்க் கையெழுத்துப் போட்டுட்டுச் சிறையிலே கிடக்கிருரு, எங்க பாட்டியே இப்படி அலைஞ்சவதானும்! என் அண்ணன் மேக்—அப்...மேனு வேலை பார்க்கிருரு ..நான் இப்படி ஆகிறது ஒண்ணும் தப்பில்லே சாமி...ஒருத்தர் வீட்டிலே கட்டுப்பட்டுக் கிடக்கவே எனக்குப் பிரியம் இல்லே. அதனாலே...''

''அதனாலே நீயும் அலையப் போறியா? உங்க தாத்தா

வுக்கு நண்பர்னியே, அவருக்குத் தெரிஞ்சா அவரு மனம் எவ்வளவு பாடுபடும்?''

''எங்க தாத்தாவைப் பத்தியே பேச்செடுக்காதீங்க சாமி! அவராலேதான் இந்தக் குடும்பமே கெட்டுதாம்...!"

''பழையவங்களைப் பத்தியே பேசாதே அம்மா...நீ திருந்தி வாழக்கூடாதா? நீ மட்டுமாவது இதிலேயிருந்து தப்பிச்சு பூவண்ணர் குடும்பத்திலே சேர்ந்து நல்லபடியா வாழக் கூடாதா? போ, போ...இங்கிருந்து போய்விடு...இனி மேல் இந்தக்கெட்ட ஆசை எல்லாம் வேண்டாம்...'' கதவைத் திறந்து சரவணர் அவளை வெளியே அனுப்பிவிட்டு, மீண்டும் கதவை மூடித் தாழிட்டார். ''எங்க தாத்தாவைப் பத்தியே பேச்செடுக்காதீங்க'' என்ற அவள் குரல், அவருள்ளத்தில் எதிரொலித்தது! கண்ணீர் பெருகியது. தோட்டத்தில் ஒரு மூலையில் விழுந்த இலைப்புழு, தோட்டம் முழுவதையுமே அழித்துவிட்டது. ஒரு பசுந்தளிர் மட்டும் மேலே நீட்டிக்கொண்டிருந்தது. இப்போது அதுவும் சுருளத் தொடங்கிவிட்டது. குளத்தில் விழுந்த நச்சுக் கிருமி, அருகே பறந்துபோன சிட்டுக் குருவியைக்கூட விடவில்லை!

ஒரே ஒரு கான்முளை...ஒரே ஒரு பசுந்தளிர்...ஒரே ஒரு கொடிமுனை... அதாவது தப்பித்ததே என ஆறுதலடைந்திருந்த சரவணர் பெரும் அதிர்ச்சிக்குள்ளானார். மேலும் தம் பேர்த்தியே தம்மை மயக்க வரும் ஒரு மோசமான சூழ்நிலையை...தாங்கள் இருவரும் சந்திக்க நேர்ந்த அந்த நிகழ்ச்சியை நினைக்க நினைக்க அருவருப்பு ஒன்று பத்தாகப் பெருகியது. ''மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்'' என்ற குறள்வரி ஆழ் மனத்தில் ஓங்கி ஒலித்தது. சட்டென்று நல்லுசாமி மலர்க்கொடி, பூவண்ணர் யாவரும் நினைவிலோடினர். திருச்சி, சென்னை, காசி என்று அவர் மனம் இடம் விட்டு இடம் பறந்தது. இனி அவருக்கு யார் முகத்தில் விழிக்கவும் கூச்சமாயிருந்தது. திடீரென ஒரு முடிவுக்கு வந்தார். நெற்றிக்கு நேரே

கைத் துப்பாக்கியை நீட்டினர். 'டுமீல்'.... 'டுமீல்'.... 'டுமீல்'!

சரவணர் குருதி வெள்ளத்தில் புரண்டுகொண்டு கிடந்ததைக் கதவைத் திறந்துகொண்டு ஓடி வந்த நல்லுசாமி பார்த்தான்; மலர்க்கொடி பார்த்தாள்; அங்கிருந்த அனைவரும் பார்த்தார்கள்! பெரிய அரசு மருத்துவமனைக்கு உடனே அறிவிக்கப்பட்டு, அங்கிருந்து மருத்துவ வண்டி ஒன்று விரைந்து வந்து சேர்ந்தது.

○

''மணங்கமழ் தெய்வத்து இளநலம் காட்டி
அஞ்சல் ஓம்புமதி அறிவல்நின் வரவு என
அன்புடை நன்மொழி அளைஇ, விளிவின்று
இருள்நிற முந்நீர் வளைஇய உலகத்து
ஒருநீ ஆகத் தோன்ற விழுமிய
பெறலரும் பரிசில் நல்குமதி!''

24

சரவணருக்கு உடனடியாக நல்ல மருத்துவ உதவி தரப் பட்டது. பூவண்ணர் மகன் கண்ணன் முயற்சியால், மருத் துவர்கள் அடிகள் உயிரைக் காக்க எல்லா முயற்சியும் எடுத்துக் கொண்டார்கள். அவருக்கு நிறைய இரத்தம் செலுத்தப்பட்டது. அவர் தொண்டைக்குள்ளிருந்த குண் டொன்று அறுவை மருத்துவம் மூலம் வெளியில் எடுக்கப் பட்டது. அவர் பேசமுடியாமற் போகுமென்றும் ஆனாலும் அவர் உயிருக்கொன்றும் ஆபத்தில்லை என்றும் மருத்து வர்கள் உறுதி கூறினார்கள். நான்கைந்து நாள்களுக்குப் பிறகுதான் அவர் கண்விழித்துப் பார்க்குமளவு முன்னே றினார்.

மலர்க்கொடி மூலம் யாவற்றையும் கேட்டறிந்த நல்லு சாமி, உண்மையறிந்தான். தான் அவர் மலர்க்கொடியைப்

பார்க்க விரும்பியதைத் தவருகப் புரிந்து கொண்டது பற்றி வருந்தினன். ''இருந்திருந்து பாட்டனை மயக்கப் பேர்த்தியை அனுப்பினேமே...'' என்று தனக்குள் வெட் கப்பட்டான். மலர்க்கொடியும் யாவற்றையும் கேட்டு அறிந்தாள். அவள் நெஞ்சமும் ஆருத்துயரத்தில் ஆழ்ந் தது. சவுக்கால் அடிபட்ட உடல் துவள்வது போல, அவள் மனம் துடியாய்த் துடித்தது. அவள் தன் தாத்தாவுக்காக மனமுருகினுள். அவர் அருகிலேயிருந்து கண்ணுங்கருத்து மாகப் பேணினுள்.

சரவணரை அறிந்த உலகம் அவருக்குத் தலை வணங்கவே செய்தது. ஊழின் சுழற்சியைப் பற்றித்தான் ஒவ்வொரு வரும் நொந்துகொண்டார்கள். இந்த நாட்டில் அப்படி ஒரு பழக்கமிருப்பதும் நல்லது என்றுதான் சொல்லவேண் டும். தனிமனிதர்களை நோவதை விட, விதியை நோபவர் கள் உண்மையுணர்ந்த மெய்ஞ்ஞானிகள் என்றுதான் போற்றவேண்டும். திருச்சியிலிருந்து மடத்திலுள்ள எல் லோரும் வந்திருந்தார்கள். காசியிலிருந்து ஊருக்குத் திரும்பிய ஆண்டியும் கணக்கப்பிள்ளையும் கூடச் சரவண ரைப் பார்க்க வந்திருந்தார்கள்.

உலகமே அடிகளுக்காக இரக்கப்பட்டது. "மனிதன் எந்த அளவு திருந்தி வாழ முடியும் என்பதற்கு இவர் ஓர் எடுத் துக்காட்டு'' என்று சிலர் பாராட்டினுர்கள். ''செய்தவினை விடாமல் பற்றித் தொடரும் என்பதை இவர் வாழ்க்கை யிலிருந்து கற்றுக் கொள்வதைப்போல, வேறு எந்த வாழ்க்கையிலிருந்தும் கற்றுக் கொள்ள முடியாது'' என்று ஒரு பேராசிரியர் தான் கண்ட உண்மையை விளக்கினுர். ''இன்றைய உலகமே இதை அறியவேண்டும் ஐயா! ஒவ் வொருத்தரும் 'அதனுல் என்ன' என்று எவ்வளவு தப்புச் செய்யிருன். செய்யிறதை மறைச்சுப்பிடலாம்; அப்படியே அமுக்கிப்பிடலாமுன்னு உலகமே இன்றைக்குத் தப்புத் தவறுகளையே அடுக்கிக்கிட்டுப் போகுது. ஒவ்வொரு குர லுக்கும் எதிரொலி கேட்பதுபோல், ஒவ்வொரு செயலுக்

கும் ஒவ்வொரு நினைவுக்கும் விளைவுண்டுங்கிற இந்த உண்மை இவராலே நல்லா விளங்குதையா!" என்று ஓர் உளவியல் ஆராய்ச்சியாளர் உரத்துப்பேசினர். 'மறுநாள் திருச்சிக்குப் புறப்பட இருந்தவருக்கு, முதல்நாள் இப்படி நேரவேண்டுமா?' எனச் சிலர் வருந்தினார்கள். ''எல்லாம் இந்தச் சாமியால் வந்த வினை. இவன் யாரை உருப்படியாக வாழவிட்டான்?'' என்று சிலர் அலுத்துக்கொண்டார்கள். ''இந்தக் காலத்திலே சினிமா சினிமான்னு இப்படித் தானுங்க பெண்ணுக கெட்டுப் போவுதுக'' என்றார் கோவைக்காரர் ஒருவர். ''எனக்குத் தெரிஞ்சவரை சாமியாரு ரொம்ப நல்லவருங்க'' என்றார் செட்டிநாட்டுக்காரர் ஒருவர். எல்லோருமே அடிகள் பிழைத்து எழவேண்டும் என்றுதான் இறைவனை வேண்டினார்கள். ஆண்டி தேம்பித் தேம்பி அழுதான். "எப்போதோ காசியிலே அம்மையில் போயிருக்கவேண்டிய இந்த உசிரை நான் காப்பாத்தினேன். இங்கே இப்படிச் சாகவா நான் பாடுபட்டேன்...'' என்று அவன் உருகினன்.

மலர்க்கொடி இரவும் பகலும் தாத்தாவின் அருகிலேயே இருந்தாள். அவள் உள்ளம் முற்றிலும் மாறிப்போயிருந்தது; கண்ணனும் இப்பால் அப்பால் போகாமல் அவர்களுக்குத் துணையாக இருந்தான்.

○

மருத்துவ மனைக்கு வந்த பூவண்ணர் கண்கள் கலங்க நண்பரைப் பார்த்துக்கொண்டு நின்றார். மலர்க்கொடி அவர் காலில் விழுந்து வணங்கினாள். அது அவரிடம் மன்னிப்புக் கேட்பது போல் இருந்தது. அவரும் பெருந்தன்மையோடு, கையமர்த்தி அவளை வாழ்த்தினார்.

பூவண்ணர் மிகவும் நன்றியுள்ளவர். முன்பு ஒருகாலத்தில் அவர் பள்ளிப் பிள்ளையாக இருந்தபோது, காவிரியில் குளிக்கும்போது மூழ்கிவிட்டார். ஒருவரும் அவரைக் காப்பாற்ற முயலவில்லை; எல்லோரும் கரையிலிருந்து

வேடிக்கைதான் பார்த்துக்கொண்டிருந்தார்கள். உடன் படித்துக்கொண்டிருந்த சரவணன்தான், ஆற்றில்குதித்து, நீண்ட தூரம் நீந்தித் தன் உயிரையும் ஒருபொருட்படுத் தாமல், பூவண்ணரைக் காப்பாற்றி ஒரு படிக்கட்டில் கொண்டுபோய்ச் சேர்த்தான். 'அன்று போயிருந்தால் நம் உயிர் போனதுதானே?' என்று எண்ணும் போதெல்லாம் நெஞ்சம் நெகிழ்ந்துவிடும்.

அவர் போகும்போது தம் மகனிடம் 'மலர்க்கொடிக்கு எதுவும் உடம்புக்கு வந்துவிடாமல் நன்கு கவனித்துக் கொள்ளும்படி' கூறிவிட்டுப் போனார்.

○

நல்லுசாமி மனமோ படாதபாடுபட்டது. சரவணர் மீண் டும் பெற்ற நல்வாழ்வு, தன் பண ஆசையால் சிதறுண் டதே என அவன், மிகவும் வருந்தினன். அவர் வருகை யால் கிடைத்த சுமார் மூன்று இலட்சத்தையும் கொண்டு சென்னையிலும் ஓர் 'ஏழைகள் இல்லம்' தொடங்க அவன் திட்டமிட்டான். வசந்தி முழுவதும் மாறிவிட்டது பலருக் கும் வியப்பை அளித்தது. அவள் வாழ்க்கையில் இந் நிகழ்ச்சி ஒரு திருப்பு மையத்தை ஏற்படுத்தியது. சரவ ணரின் அறிவுரைகளை—சமய நுட்ப விளக்கங்களைப் படிப்ப தில் அவள் எழுச்சி கண்டாள். அவள் நன்கு இசைபாடப் பயின்றவளாதலின், சரவணர் பாடுவது போலவே திரு முறைகளையும் பகவத்கீதையையும் பாடிப்பாடி, இன்ப மாளிகையில் ஒரு புனிதக் கலையை ஏற்படுத்திக் கொண்டி ருந்தாள்!

திருச்சியிலிருந்து வந்த பலரும் அடிகள் ஊமையாகி விடு வார் என்பதைக் கேட்டு, மனம் வெதும்பினர்கள். அடி கள் திருச்சியில் தமது சரவண மடத்தில், கணீரென்ற குரலுடன் மாலைதோறும் செய்த சொற்பொழிவுகளை இனிக் கேட்கவே முடியாது என்று எண்ணியபோது, சிலர் வாய்விட்டுப் புலம்பவே தொடங்கினர்கள். சரவணர்

அவ்வளவு அழகாக பேசினர்; எத்தனையோ புறச் சமயத்த வர்களும் வந்து ஈடுபாட்டோடு அவருடைய சொற்பொழி வுகளைக் கேட்டது கண்ணுக்கினிய காட்சியாக இருந்தது. 'அவர் ஒவ்வொரு கருத்தையும் தெளிவாக, நடைமுறைக் கண்ணோட்டத்தோடு, ஒவ்வொருவருக்கும் விளங்கும்படி பேசியதால், கண்ணேறுபட்டுப் போயிற்று' எனச் சிலர் தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள். ''அதனுல்தான் அது அவரை ஊமையாக்கிவிட்டது, இல்லையென்ருல் வேறு காயம் ஏதும் படக்கூடாதா? காலிலோ, கையிலோ காயம் என்ருல் அடிகள் ஓரிடத்தில் உட்கார்ந்துகொண்டு பேசலாமே! இப்பொழுது பேசவே முடியாதபடியல்லவா விதி ஊமையாக்கிவிட்டது!'' என்று ஒருவர் அதை மேலும் விளக்கினர்.

○

பத்து நாளில் சரவணருக்கு நினைவு நன்கு திரும்பியது. அவரால் பேச முடியவில்லை. கண் அங்குமிங்கும் அலைந் தது; அவர் முகம் ஏதேதோ பேசியது. அவர் முன் ஒவ் வொருவராக வந்து நின்ருர்கள். அவர்களையெல்லாம் அவர் இனங்கண்டுகொண்டார் என்று தெரிந்தது. அவர் முகம் மலர்ச்சி கொண்டது. சில சமயம் அயர்வு காரண மாகக் கண்களை மூடி நீண்ட நேரம் உறங்கிப் போனர்.

மருத்துவர்களும் நர்சுகளும் 'அடிக்கடி வந்து அவருக்குத் தொந்தரவு கொடுக்காதீர்கள்' என்று எச்சரித்த வண்ண மிருந்தனர்.

○

அன்று பதினேராவது நாள்! நல்லுசாமி வந்து கையைப் பிசைந்துகொண்டு நின்றபோது, சரவணர் முகம் அருளு ணர்வோடு கனிந்துகாட்டி, அவனை மன்னித்ததாக அறி வித்தது!

ஆண்டியைப் பார்க்க நேர்ந்தபோது அவருடைய கடைக் கண்களில் கசிந்த நீர், துளிகளாக உருண்டு விழுந்தது.

அருகிலிருந்த மலர்க்கொடி அதைத் துடைத்துவிட்டாள். அவன் தம் கையைப் பற்றிக்கொண்டு விம்மிவிம்மி அழுத போது, சரவணர் அவனுக்கு ஆறுதல் சொல்பவர்போல் உதடுகளை அசைத்தார்.

திருச்சியிலிருந்து வந்த ஒவ்வொருவரையும் அவர் இனம் கண்டுகொண்டு முகம் மலர்ந்தார். கற்பகத்தின் குடும் பத்தைக் கண்டு மகிழ்ச்சி இழையோடியது. சரவண மடத்து அலுவலர்களையும் தம்மீது அன்புமிக்க பெருமக் களையும் கண்டபோது, அவர் கண்ணின் கடை துடித்து, நன்றியையும் அன்பையும் வெளியிட்டது. மாணிக்கம் வந்து நின்றபோது அவர் பரவசமடைந்ததைப் பார்த்து எல்லோரும் இரக்கப்பட்டார்கள். மாணிக்கம் இப்போது முழுவதும் தன்னிலையடைந்து விட்டான் என்பதை அவ னுடைய தெளிந்த முகமே காட்டியது. 'ஏழைகள் இல் லம்' இவ்வாறு பலரையும் பேணி, மறுவாழ்வு அளித் திருப்பதைச் சரவணர் உணர்ந்தவர்போல் மனம் மகிழ்ந்தார்.

பூவண்ணர் தம் குடும்பத்தோடு வந்தபோது, சரவணர் மிகவும் அழுதுவிட்டார். மலர்க்கொடி கண்களைத் துடைக்கத் துடைக்க அது மடைகடந்த வெள்ளமெனப் பெருகி வழிந்தது. பூவண்ணர் தம் நண்பரின் உள் மனத்தை நன்கறிந்தவர்போல், கண்ணனையும் மலர்க் கொடியையும் தம் அருகில் அழைத்து இருவர் கையையும் ஒருசேரப் பிடித்து, இணைத்துக் காட்டியபோது சரவண ரின் இரு கைகளும் வயிற்றின் மேலேறிக் குவிந்தன. அதைக் கண்டு எல்லோருமே கண் பனித்து நின்றார்கள்!

மருத்துவர் இருவர் உள்நுழைந்து அவருக்குத் தொந்த ரவு கொடுக்கக் கூடாது என்று எச்சரித்ததும், அனைவரும் வெளியேறினர். அவர்கள் அவரை முற்றிலும் சோதனை செய்துவிட்டு, ''எல்லாம் சரியாக இருக்கிறது. ஒன்றும் ஆபத்தில்லை. கழுத்துக்கடியில் அறுவை செய்த இடத்தில் மட்டும் சிறு வீக்கம் இருக்கிறது. அதுவும் வற்றிவிட்டால்

பிறகு எல்லாம் நலமாகிவிடும்'' என்று கூறிப் போயினர். அதைக் கேட்ட அனைவருக்கும் மகிழ்ச்சியாக இருந்தது.

○

ஆனால் அன்று இரவு சரவணர் உறக்கமின்றித் தவித்தார். கண்கள் ஒருபக்கமாகச் செருகிக் கொண்டே போயின. முகம் கண்டத்திற்குமேல் வாட்டமுற்றது. இரவு முழுவதும் அவர் படாதபாடு பட்டார். மறுநாட் காலையில் மருத்துவர்கள் வந்து பார்த்தபோது, இவ் விவரம் முழுவதும் கூறப்பட்டது.

அவர்கள் அறுவை மருத்துவம் செய்த இடத்தைக் கட்டினை அவிழ்த்துக் கவனித்தபோது, அங்கு கழுத்துக் கடியில் தோன்றிய வீக்கம் மேலும் பெரிதாகி இருப்பது தெரிந்தது. நீண்ட பரிசோதனைக்குப் பிறகு, அவர்கள் முன்பு குண்டை எடுத்து மருத்துவம் செய்த அதே இடத்தில், மீண்டும் அறுத்துச் சிறிது சீர் செய்ய வேண்டியிருப்பது தெரிந்தது. முன்பு உள்ளே தைத்த இடத்தில், தையல் சரியாக விழாமல் சிறு இருப்புத் துகள் படிந்து, இரத்த நாளத்தின் வழி வரும் குருதி உறைந்து, கழுத்துக்குமேல் உள்ள பகுதிக்கும் கீழுள்ள பகுதிக்கும் ஒரு பக்கமாக இரத்த ஓட்டம் சரிவர ஓடவில்லை என்று கண்டனர். இனிச் சற்றுக் காலம் தாழ்ந்தாலும் உயிர் போய் விடும் என அஞ்சும் நிலை வந்துற்றது. உடனே அவர்கள் மீண்டும் அறுவை மருத்துவம் தொடங்கினர்; உறைந்த இரத்தத்தை அப்புறப்படுத்தினர். அந்த இடத்தைச் சரி செய்து, துகளை எடுத்துவிட்டு, ஒழுங்காகத் தைத்து மூடினர். இப்போதும் சில போத்தல்கள் புதிய இரத்தம் செலுத்தப்பட்டது.

ஒருநாள்—24 மணிநேரம்—முழுவதும் நல்ல ஓய்விலிருந்தால் சரவணர் பிழைத்துக் கொள்வார் என்று அவர்கள் கூறிவிட்டுச் சென்றனர். சரவணரின் தலைமாட்டிலேயே, அவருடைய உயிர்ப்பாதுகாவலன்போல் கண்ணன் இருந்

நான். தாத்தாவின் காலடியருகில் மலர்க்கொடி அவர் எப்போது எழுந்திருப்பார் என்று காத்திருப்பவள்போல் கண்ணிமைக்காது காத்திருந்தாள்!

○

அன்று பதின்மூன்ருவது நாள்.

சரவணருக்குப் பனிரெண்டு மணி நேரம் கழித்துத் தெளிவேற்பட்டது. அவர் சிறிது அசைந்தார். எல்லோருக்கும் உயிர் வந்தது! ''அப்பாடா! இன்னும் ஒரு பன்னிரண்டு மணி நேரமல்லவா போகவேண்டும்!'' என்று எல்லோரும் தவமிருந்தனர். இருட்டிவிட்டதால் கண்ணனையும் மலர்க்கொடியையும் தவிர அனைவரும் போய்விட்டனர்.

இரவு பத்துப்பதினேரு மணியாகியது. கடிகாரத்தையே பார்த்துக் கொண்டிருந்த மலர்க்கொடி, அப்படியே கண்ணன் மடியில் உறங்கிப் போனுள். கண்ணனும் சுவரில் சாய்ந்து அயர்ந்து தூங்கிப் போனுன்.

இரவு பனிரெண்டாகியது. நர்சு வந்து, காய்ச்சல் அளவு பார்த்துக் குறித்து வைத்துவிட்டுப் போனதை யாரும் கவனிக்கவில்லை. அவள் சோதனை செய்தபோது அசைவேற்பட்டுச் சரவணரின் உள் மனம் விழித்துக்கொண்டது. அவர் தம் அடிமனத்தில் ஏதேதோ கனவுகளில் மிதந்து கொண்டிருந்தார்.

இலைப்புழு தோட்டத்தை அழித்தாலும், ஒரே ஒரு 'ரோஜாப்பூ' அந்தத் தோட்டத்திற்கும் மேலே தலைதூக்கி நின்றது. இலைப் புழுவுக்கு அகப்படாமல், கெடாமல் தப்பித்து அழகாக விளங்கியது. அப்பனி மலரின் அழகில் தம் குடும்ப மலர்ச்சியே தெரிவதுபோல் இருந்தது, சரவணருக்கு!

ஒரு சமயம் அவர் தாமே நல்லுசாமியாகித் தந்திரங்களில் ஈடுபட்டார். உடனே தாமே நல்லபாப்பாக ஊர்வது

போல் உணர்ந்தார். அடுத்த கணம் அவரே மலர்க்கொடியாகி விடுகிறார்! கண்ணன் அவளை எற்றி உதைக்கிறான். அவன் கால்களைத் தொட்டுக் கும்பிட்டு, அழுது அரற்றி, அவள் மன்னிப்புக்கோருகிறாள். அவன் அவளை ஏற்று அரவணைக்கிறான். அடுத்த கணம் அவர் தாமே பூவண்ணராகி மணமக்களைக் கையமர்த்தி வாழ்த்துகிறார்!

மறுசமயம் அவர் தாமே ஆண்டியாக மாறிவிடுகிறார். அப்போது சரவணர் எங்கோ கண்காணாத நாட்டுக்கு—கயிலை மலைப்பகுதிக்கு—இமயமலை அடிவாரத்திற்குப் புறப்படும் காட்சியைக் கண்டு, தாம் ஆண்டியாக நின்று கையசைத்து வழியனுப்புகிறார்! சரவணர் இப்படித்தாமே எல்லோராகவும் மாறிவிட்டதாக ஒரு நினைவோட்டத்தில் மூழ்குகிறார்! ஆள் அசைவற்றுக் கிடந்தார்-அடி மனமோ அலைபாய்ந்த வண்ணம் இருந்தது, இவ்வாறு!

○

காலை மூன்று மணி ஆகிறது ..!

சரவணரின் ஆழ்மனம் சலனமுற்றது; இன்னும் நினைவலைகளிலிருந்து அது ஓயவில்லை.

தாமே ஒரு ஊதுபத்தியாகி விடுகிறார் அவர். எரிந்தெரிந்து சாம்பலாகிறார். எங்கும் நறுமணத்தை ஊட்டுகிறார். திடீரென்று தாமே சுடுகாட்டில் எரியும் வரட்டியாகி, புலால் நாற்றத்தைப் பரப்புகிறார்! மெல்லக் காற்றோடு காற்றாய் மேலெழுகிறார்! கடைசியில் வானவெளிக்கு மேலே மேலே போய்க்கொண்டேயிருக்கிறார்!!

அடுத்த விநாடி அவர் ஓடுகிற தண்ணீரில் தாமும் நீராகி ஓடுவது அவருக்கு நன்றாகத் தெரிகிறது! தாமே உருண்டுருண்டு ஓடிக் கொண்டேயிருக்கிறபோது, குளு குளு தள தள ஓசை கேட்ட வண்ணம் இருக்கிறது. தாம் எத்தனை எத்தனையோ இடங்களில் தத்தித் தத்தி ஓடுவதாகவும், வயல்களிற் பாய்ந்து பயிர்களை வளர்ப்பதாகவும், பூங்காக்களிற் பாய்ந்து மலர்க்கொடி செடிகளைக் குலுங்கவைப்பதாகவும் அவர் மனக்கண்ணிற்குள் தெரிகிறது.

தாமே 'ரோஜாப்' பூவாகிருர்! கத்தரிக்காயாகச் செடியில் காய்த்துத் தொங்குகிருர்! மாவிலையாக மாறுகிருர்! பிறகு அவ்விலை காற்றில் அசைந்து பாத்தியில் உதிர்கிறது! மக்கி மண்ணுகிறது! மாறி மற்ருெரு செடியாகப் பிறப்பெடுக்கிறது!

மழைமேகமாகிப் பின் அவரே மழையாகிப் பொழிகிருர்! ஆருகக் கடலில் கலக்கிருர்! ஆவியாகி மேலெழுகிருர்!

மணி நான்கு, ஐந்து, ஐந்தரை...! நேரம் ஓடிக்கொண்டிருக்கிறது! அவர் நினைவு மேலும் மேலும் ஆழமாகக் கிணற்றுக்குள்—பாதாளத்திற்குள் போவதுபோல் கீழே கீழேபோய்க் கொண்டே இருக்கிறது! இறுதியில் அங்கே சலனமற்ற அமைதி சூழ்கிறது!

விழித்துக் கொண்ட மலர்க்கொடி அவரைத் தலையிலும், நெற்றியிலும், மார்பிலும் காலிலும் தொட்டுத்தொட்டுப் பார்த்துவிட்டு, 'அய்யய்யோ! தாத்தா!' என்று அரற்றுகிருள். ஓசைகேட்டு ஓடிவந்த கண்ணனும் நிலைமையை அறிந்து, துவராடையை இழுத்துச் சரவணரின் முகத்தை மட்டும் விட்டுவிட்டு முழுவதுமாகப் போர்த்துவிடுகிருன். தேம்பித்துவளும் மலர்க்கொடியை ஆறுதலாகத் தாங்கிக் கொள்கிருன்!

மருத்துவமனையின் கிழக்குப்பக்கத்துத் தோட்டம், புலர்காலைப்பொழுதின் பொன்னங்கதிர்களால் ஒளிபெறத் தொடங்குகிறது. வானமெங்கும் பொன்னிறக் கதிர்கள் ஊடுருவி உச்சியை நோக்கி வட்டமாக விரிகின்றன. தலை நீட்டி நிமிர்ந்து நிற்கும் மரங்களெல்லாம் மலர்களைத் தூவி வரவேற்கின்றன. பறவைகளின் வாழ்த்தொலி எங்கும் இசைக்கிறது! சுற்றுப்புறமனைத்தும் சிறிதுசிறிதாகத் தெளிந்து வருகிறது!! விடிவெள்ளி சிரிக்கிறது; கிழக்கு வெளுக்கிறது!

○

வாழ்வரசி

செட்டி நாட்டு வட்டாரப் புதினம். நகரத்தார் சமூகத்தில் பிறந்த பெண்ணொருத்தியின் கண்ணீர்க் காப்பியம்.

கருத்துரைகள்

மரபுவழிப் புலமையில் ஊறித்திளைக்கும் தமிழண்ணலுக்குள் அருமையாகக் கதை சொல்லும் திறன் ஒளிந்து கொண்டிருக்கும் என்று நான் சிறிதும் நினைக்கவில்லை. பல இடங்களில் என் விழிகள் பனித்தன. என் விழிகளைப் பனிக்கவைக்கும் எந்த ஒரு படைப்பும் எனக்கு அற்புதமான படைப்பே.

அந்தக் காலத்தில் அமெரிக்க நீக்ரோக்கள் அடிமைகளாய்க் கிடந்து அல்லற்பட்ட நிலையினை UNCLE TOM'S CABIN என்ற ஆங்கிலப் புதினம் நெஞ்சம் நெக்குருகும் வண்ணம் புனைந்து காட்டுகிறது. அமெரிக்க நீக்ரோக்களின் அடிமை வாழ்வுநிலை நீங்குவதற்கு இந்தப் புதினமும் துணைபுரிந்ததாகக் கூறுவதுண்டு. வாழ்வரசி என்னும் புதினத்தைப் படிக்கையில் எனக்கு இந்த ஆங்கிலப் புதினம்தான் நினைவில் நிழலாடிற்று. மலரினும் மெல்லிய பெண்ணுள்ளத்தைப் பதை பதைக்கச் செய்து அவளை அவலத்துக்கு உள்ளாக்கும் ஒரு சமூதாய

அமைப்பினை வாழ்வரசி மிகச்சிறப்பாகவே படம்பிடித்துக் காட்டுகின்றது. இந்தச் சமுதாயத்தில் பெண்கள் படும் அவல நிலையை இத்தனைத் துணிச்சலுடன் வெளிப் படுத்தியுள்ள தமிழண்ணலை எவ்வளவு பாராட்டினாலும் தகும். இந்தப் புதினம் செட்டிநாட்டு இளைஞர்களின் பேராதரவைப் பெறுமாயின் வாழ்வரசியின் கதைத் தலை விக்கு நேர்ந்த கதி எந்தச் செட்டிநாட்டு வாழ்வரசிக்கும் நேராது என்பது திண்ணம்.

வாழ்வரசியில் அமைந்த ஒரு பலவீனமான பாத்திரம் அதில் வரும் கதைத்தலைவன்தான். ஒரு குறிப்பிட்ட சிறு தொகைக்காகக் கதைத்தலைவி கணவனை விட்டுப் பிரிய நேர்கையில்,அவள் மீது அன்பு கொண்ட அந்தக் கணவனே அந்தத் தொகையை அவளுக்கு மறைமுக மாகக் கொடுத்துதவி, அந்த அன்பரசியின் உயிரைக் காத்திருக்கலாம். ஆயினும் அந்தக் கணவன் இதற்குத் துணியாமல் போனது வியப்புக்குரியதே. இப்படியும் சில இரண்டுங்கெட்டான் இளைஞர்கள் சமுதாயத்தில் உலவுவதைச் சுட்டிக்காட்டவே இந்தப் பாத்திரம் அமைந்திருப்பதாகக் கருதுகிறேன்.

யதார்த்தத் தன்மையுள்ள இத்தகைய புதினங்களை மேலும் படைத்துத் தமிழ்ப் புதின உலகைச் செழிக்க வைப்பாராக!

டாக்டர் இரா. கோதண்டராமன்

□

வாழ்வரசி என்னும் இந் நாவல் செட்டிநாட்டு வாழ்வைப் படம் பிடித்துக் காட்டுவதாக அமைந்துள்ளது. செட்டி நாட்டு வாழ்வில் காணப்படும் போலி கௌரவங்கள். வீண் ஆடம்பரங்கள் ஆகியவற்றைத்தெளிவுற எடுத்துக் காட்டி அவற்றைச் சாடும் தமிழண்ணல் அவர்களின் துணிவைப் பெரிதும் பாராட்டவேண்டும். இந் நூலின் நடை ஒரு செட்டியார் குடும்பத்தினருடன் ஒன்றிக் கலந்து பழகுவதைப் போன்ற உணர்வை அளிக்கிறது.

கதைப் போக்கு விறுவிறுப்புடன் ஆர்வத்தைத் தூண்டுவதாக அமைந்துளது.

திருமதி. நிர்மலா மோகன்

□

பொதுவாக நாவல்கள் உண்மைச் சம்பவங்களின் அடிப்படையில் பிறப்பதால், அவை நிகழ்வு ஆய்விற்கு (Case Study) ஏற்ற தகவுகளாக (datas) அமைய வல்லன. இந்நாவல் ஒரு முழுமையான நிகழ்வு ஆய்வின் வெளிப்பாடு.

திருமணம் என்பதை அன்பு மனப் பிணைப்பாக அன்றி, கொடுக்கல்வாங்கல் நடத்தும் வாணிகமாக்கிய சமுதாய நிலையை அவலப் பின்னணியில் காட்டுகிறார். பணத்தை மிகுதியாக வைத்துக்கொண்டே வீண் பெருமையால் அழியும் இனத்தின் போக்கை அழகுறக் காட்டுகிறார்.

நாவலின் அமைப்பும் கதைகூறும் திறனும் செறிவாக உள்ளன. பொதுவாக ஆசிரியர் கதைகூறும் உணர்வேயின்றி, கதை சுவைபடச் சொல்லப்படுகிறது. இத்தகு நாவல்களில் கதைகூறும் நாவலாசிரியரின் இடையீடு, "அஹோ கேளும் பிள்ளாய்!'' என்று வந்துவிடும். அதனைக் கவனமுற ஆசிரியர் நீக்கியிருப்பது நாவலின் கலைத் திறனை ஆளும் நுட்பமான கைவண்ணத்தைக் காட்டுகிறது.

'டாம் மாமாவின் குடில்' என்ற நாவல் மேனாடுகளில் பெரும் புரட்சிகரமான மாற்றத்தைஏற்படுத்தியது என்பர். ஆசிரியர் தமிழண்ணலின் வாழ்வரசியும் செட்டியார் இனத்தில், அத்தகு மாற்றத்தை ஏற்படுத்தும் ஆயின், தலையாய வெற்றியாக அது அமையும்.

டாக்டர் சு. வேங்கடராமன்

தமிழண்ணல் எழுதிய கதை நூல்கள்

வாழ்வரசி: நகரத்தார் சமூகத்தில் பிறந்த பெண்ணொருத்தியின் கண்ணீர்க் காப்பியம். (ரூ. 7—00)

○

ஒரு நீதிபதியின் நினைவலைகள்: இக்கால 'இரட்டை வாழ்க்கை' முறையை உள்ளும் புறமும் ஊடுருவித் தாக்கும் சமுதாய அங்கதக் கதை. (அச்சில்)

○

இருதலைப் பறவை: படிப்பவர்களைச் சங்ககாலச் சமுதாய வாழ்வில் ஒன்றித் திளைக்க வைக்கும் சுவைமிக்க காதற் கதை. (அச்சில்)

○

நரக வளையம்: ஒரு தத்துவ விளக்கத்திற்காகவே சுவை குன்றாமல் சொல்லப்பட்ட கதை இது. புதின உலகில் ஒரு புதுமை படைக்கத் தோன்றிய புதினம் இது. (ரூ. 10—00)

சோலை நூலகம்
சதாசிவ நகர், மதுரை—625020